ARAIYUM KURAIYUM

3 *Plays by*

MOHAN RAKESH

Transl. by

SARASWATHI RAMNATH

அரையும்
குறையும்

மோகன் ராகேஷ்

எழுதிய

மூன்று நாடகங்கள்

தமிழில்

ஸரஸ்வதி ராம்நாத்

வாசகர் வட்டம்

சென்னை-17

வாசகர் வட்டப் பிரசுரம் – 36

இப்பதிப்பு "வாசகர் வட்டம்" – சிறந்த தமிழ்ப் புத்தகச் சங்கத்தின்—அங்கத்தினர்களுக்கென அதன் பதிப்பாளரான "புக்வென்சர்" (Bookventure) நிறுவனத்தினரால் நெ. 14, தணிகாசலம் செட்டி ரோடு, தியாகராய நகர், சென்னை–17 என்ற முகவரியில் வெளியிடப்பட்டது.

அச்சிட்டவர்கள் :
கபீர் பிரிண்டிங் ஒர்க்ஸ்
193, ஹைரோடு, சென்னை–5.

தனிப்பிரதி விலை ரூ. 8·75 ஜனவரி 1974

1. அரையும் குறையும்

சென்ற ஆறு ஆண்டுகளில்
இந்திய மொழியில் வெளியான
சிறந்த நாடகத்திற்கான,
கலா மந்திர் பரிசு (ரூ. 10,000)
பெற்ற ஹிந்தி நாடகம்.

அரையும் குறையும்

பாத்திரங்கள்

ஆண் 1
ஆண் 2
ஆண் 3
ஆண் 4

} சுமார் ஐம்பது வயது மதிக்கக்கூடிய ஒரே நடிகரால் இந்த நான்கு பாத்திரங்களும் நடிக்கப்படவேண்டும். நாகரிகமான தோற்றத்தில் ஒரு பரிகாசம்—கிண்டல் மிளிருகிறது.

மகேந்திரன்-ஆண் 1: [உடை மாற்றம்]......பாண்ட்டும் ஷர்ட்டும். வாழ்க்கைப் போராட்டத்திலே போராடி களைத்துவிட்ட, தோற்றுப் போய் விட்டதொரு பாவம் முகத்தில்.

சிங்கானியா-ஆண் 2: [உடை]—பாண்ட், கழுத்துமூடிய கோட், முகத்தில் தன்நிறைவான திருப்தி. இருந்தாலும் இடையிடையே ஒரு திகில். சந்தேகத்தின் சாயல் முகத்தில்.

ஜகன்மோகன்-ஆண் 3: பாண்ட், டீ ஷர்ட், கையிலே சிகரெட் டப்பா. இடைவிடாமல் சிகரெட் பிடிக்கிறான். தன் சௌகரியத்திற்காகவே வாழ்வது போன்றதொரு உல்லாச பாவம் முகத்தில், நடையுடை பாவனையில்.

ஜுனேஜா-ஆண் 4: பாண்ட், பழைய காலத்து முறையில் தைத்த நீண்ட கோட்டு. முகத்திலே அநுபவ முதிர்ச்சியின் தெளிவான பாவம். கெட்டிக்காரத்தனம்.

குடும்பத் தலைவி : [சாவித்திரி] நாற்பதை எட்டும் வயது. முகத்தில் இன்னமும் யௌவனத்தின் செழுமை. ஆசைகளின் சுவடு தெரிகின்றது. சாதாரணமான புடவையும் சோளியும் அணிந்திருந்தாலும் அதிலொரு நாசுக்கும் ரசனையும் தெரிகின்றது. [இரண்டாவது முறை மாற்றிக் கொள்ளும் புடவை விலையுயர்ந்தது.]

மூத்த பெண் : [பின்னி] இருபது வயதுகூட இல்லை. துவக்கத்தில் மனப் போராட்டத்தின் இறுக்கம். துயரத்தின் சாயை. நிகழ்ச்சிகள் நடக்க நடக்க......மாறுதல். பரபரப்பு, கவலை......சில சமயம் வயதுக்கு மீறின முதிர்ச்சி.....புடவை.....அம்மாவினுடையதைவிட எளிமையானது.

சின்னவள் : [கின்னி] 12...13 வயதிற்குள். குரல், நடையுடை பாவனை யாவற்றிலும் ஒரு அடங்காத்கனம். நல்லஃபிராக்...ஆனால் கால் சாக்ஸ் ஒன்றில் பொத்தல்.

இளைஞன்–பிள்ளை : [அசோக்] கிட்டத்தட்ட 21 வயது. பாண்ட். விலையுயர்ந்த ஷர்ட். ஆனாலும் தோய்த்துத் தோய்த்து மலினமடைந்திருக்கிறது. முகத்தில்—ஏன் சிரிப்பில் கூட ஒரு விரக்தி.

மேடை அமைப்பு

நடுத்தர வர்க்கத்தின் நிலையிலிருந்து இறங்கி, கீழ் மட்ட வர்க்கத்தின் நிலையை அடைந்து விட்ட ஒரு வீடு.

எல்லா நிலைகளிலும் பயன்படக் கூடிய ஒரு அறை. அந்த இல்லத்தின் தற்போதிய நிலையை உணர்த்தக்கூடிய சூழல். அக் குடும்பத்தின் கடந்த கால வாழ்வின் தற்போதைய சின்னங்களான சாமான்கள். உயர்ந்த ஆனல் பழசாகிப்போன, ஒடிந்த சாமான்கள். சோபா செட், டைனிங் டேபிள், பீரோ, புத்தக அலமாரி, டிரசிங் டேபிள் என ஒவ்வொன்றும் தனக்கென ஒரு இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. அறையிலுள்ள ஒவ்வொன்றும் அதற்குரிய இடத்திலில்லாது அறையிலுள்ள இடத்தையொட்டி வைக்கப்பட்டுள்ளன. ஒரு சாமானுக்கும் இன்னொரு சாமானுக்கும் உள்ள தொடர்பு, தற்போதைய சௌகரியத்தை ஒட்டி தேவைக்கேற்ப... துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது. அந்த சௌகரியமே...பலவித அசௌகரியங்களிடையே ஏற்பட்டுள்ள ஒரு உடன்பாடுபோல் தெரிகின்றது. அசௌகரியங்களிடையே வசதியை ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு முயற்சி...எங்கேயோ ஒரு டீப்பாய். இங்கு மங்கும் இரண்டொரு மோடா. கிழிந்த பழைய புத்தகங்கள் நிறைந்த ஷெல்ப். ஒருபுறம் படிக்கும் மேஜை, நாற்காலிகள். திண்டு, விரிப்பு, மேஜை விரிப்பு. எல்லாம் உள்ளன என்றாலும்—பழையதாகி, கிழிந்து, ஒட்டுப் போட்ட நிலையில் உள்ளன. இவைகளெல்லாம் இருப்பதைவிட இல்லாமலேயே இருக்கலாம் என்ற எண்ணம் தோன்றும்படியான நிலைமை.

அறையின் மூன்று புறமும் மூன்று கதவுகள். ஒரு கதவு வலது புறமாய் வாயிலை நோக்கி. இன்னொன்று இடது புறமாய் உட்புற அறைக்கு. பின்னால் இன்னொரு கதவு....முற்றத்தில். முற்றத்தின் வழியாக சமையலறைக்கும்...பின் பக்கத்து கதவுக்கும் செல்லவேண்டும்.

திரை உயர்ந்ததும் முதன் முதலில் தெரிவது டைனிங் டேபிளின் மீது இறைந்து கிடக்கும் தேநீர் பாத்திரங்கள். முதலில் ஒளி தேநீர் பாத்திரங்களின் மீது விழுகின்றது. பின்னர் புத்தக ஷெல்ப். பிறகு உடைந்த நாற்காலி. இப்படி ஒன்றன்பின் ஒன்றாக அறையிலுள்ள சாமான்கள் ஒளி வட்டத்திற்குள் வருகின்றன. சில விநாடிகளுக்குப் பின் சோபாவில் சாய்ந்து சிகரெட் குடித்துக்கொண்டிருக்கும், கறுப்பு சூட் அணிந்தவரின் மீது ஒளி விழுகின்றது. அவர் மீதே நிலைக்கின்றது. இடையிடையே இந்த மூலை...அந்த மூலை யென ஒளி பிரகாசிக்கின்றது.

அரையும் குறையும்

அங்கம் 1

கறுப்பு நிறத்தில் சூட் அணிந்த ஒருவன் :—(*ஆழ்ந்த சிந்தனையில் லயித்து விட்டவனாய்க் கையிலிருந்த சிகரெட்டின் சாம்பலை நுனி விரலால் தட்டியவாறே*) ஹூம் பழையபடி.......ஒரு தரம் அதே ஆரம்பம்......மீண்டுமொரு முறை...... அதே......

(*பிரயாசைப்பட்டுத் தன்னை இதற்குத் தயார் செய்து கொள்ளும் பாவத்துடன் சோபாவிலிருந்து எழுந்திருக்கிறான்*).

என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. நான் யாரென்பது பற்றி நீங்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்களென்பதெல்லாம் எனக்குத் தெரியாது. நானென்ன சொல்லப் போகிறேன், என நீங்கள் எதிர்பார்க்கிறீர்களென்பதும் எனக்குத் தெரியாது. இந்த நாடகத்தில் நானொரு முக்கியமான, அதாவது குறிப்பிடத் தக்க பாத்திரம். நடிகனோ, டைரெக்டரோ, தயாரிப்பாளரோ, அல்லது யாரோ ஒரு முக்கிய நபரோ என்றெல்லாம் ஒருக்கால் நீங்கள் நினைக்கலாம். ஆனால் என்னைப் பற்றி நிச்சயமாக எதுவும் கூறுவதற்கில்லை. இது போலவே இந்த நாடகத்தைப் பற்றியும் எதுவும் கூற இயலாது. ஏன் என்றால், இந்த நாடகம்கூட என்னைப் போன்றே ஒரு முடிவானதோ, நிலையானதோ இல்லை. நிச்சயமற்ற இந்நிலைக்குக் காரணம் ! ! ! ...ஆனால் அந்தக் காரணத்தைப் பற்றியெல்லாம் பேசுவது அர்த்த

மற்றது. ஒவ்வொரு விஷயத்திற்கும் செய்கைக்கும் ஒரு காரணமுண்டு. காரணம் இருக்கும். இதில்லாமல், கூறப் படும் காரணம்தான் உண்மையாக இருக்கவேண்டு மென்ற அவசியமோ கட்டாயமோயில்லைதான். என்னைப் பற்றியே எனக்கொரு நிச்சயமில்லாத நிலையில், வேறென்றின் காரணம் அல்லது காரணமின்மை பற்றி நானெப்படி உறுதியாகக் கூறமுடியும் ?

(சிகரெட் புகைத்தவாறே கணநேரம் சிந்தனையி லாழ்ந்தவனாய் நிற்கிறான்). உண்மையில் நான் யார் ! இங்கு வந்தபிறகு இந்தக் கேள்வியுடன் மோதுவதை நான் விட்டுவிட்டேன். இந்த மேடையிலிருக்கும் ' நான் ', மேடைக்கு வெளியே யுள்ள 'நான்' அல்ல. வெளியேயுள்ள 'நான்' வந்து...... சரி......சரி......மேடைக்கு வெளியேயுள்ள நான் எப்படிப் பட்டவன் என்பது பற்றி உங்களுக்கு என்ன அக்கறை இருக்கப் போகிறது ? தெருவில், நடைபாதையில், நடந்துகொண்டிருக்கும்போது எதிர்பாராது யாரோ ஒருவன்மீது மோதிக்கொள்கிறீர்களே......அந்த யாரோ ஒருவன்தான் ' நான் ', என்று நான் சொல்லிக்கொள்வது ஒருக்கால் போதுமானதாக இருக்கலாம். நீங்கள் திரும்பி என்னை முறைத்துப் பார்ப்பீர்கள். அவ்வளவுதான். இதற்குமேல் உங்களுக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பு மில்லை. நான் யார் ? எங்கிருக்கிறேன் ? என்ன வேலை செய்கிறேன் ? யார் யாரைச் சந்திக்கிறேன் ? எத்தகைய சூழ்நிலையில் வாழ்கின்றேன்.....என்பதையெல்லாம்பற்றி உங்களுக்கு அக்கறையிருக்க நியாயமில்லை. அதாவது நீங்கள் இதையெல்லாம் பற்றிக் கவலைப்படப் போவ தில்லை. இதைப்பற்றியெல்லாம் யாரும் கவனிப்பதில்லை. நாம் மோதிக்கொள்கிறோமே அக்கணத்தில் உங்களுக்கு நானெப்படித் தோற்றமளிக்கின்றேனே அப்படித்தான் நீங்களும் எனக்குத் தென்படுகிறீர்கள். இதனால்தான், நான் நிற்கும் இந்த இடத்தில் எனக்குப் பதிலாக நீங்கள் இருக்கலாம். இருக்கவும் கூடும். அது நன்றாகத்தான்

இருக்கவேண்டுமென்பதில்லை. மோதிக்கொள்கின்ற இருவர் என்ற முறையில் நம்மிருவருக்கும், அதாவது உங்களுக்கும் எனக்கும் மிகுந்த ஒற்றுமையுண்டு. இதே ஒற்றுமை உங்களுக்கும், இன்னொருவனுக்கும், அவனுக்கும், இன்னொருவனுக்கும், அந்த அவனுக்கும் எனக்கும் ......ஹூம்.....இப்படிக் கணக்குப் போட்டுக்கொண்டே புதிர் விடுப்பதில் பயன் ஏதுமில்லை. விஷயம் இவ்வளவுதான். நானென்ற ஒருவன் தனித்து வேறாகி நிற்கும் நிலையிலும், ஏதோ வொரு அம்சத்தில் உங்கள் ஒவ்வொருவரிலும் நானிருக்கிறேன். இதனால்தான் மேடையின் உள்ளே இருந்தாலும் வெளியே இருந்தாலும் எனக்கென்றுஒரு தனிப்பட்ட நிச்சயமான......

(அறையின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரை உலாவுகிறான்.)

இந்த நாடகமும் என்னைப்போலவே நிலையற்றது எனக் கூறினேன் அல்லவா? இதற்குக் காரணம் நான் இதிலொரு பாத்திரமாக இருப்பதுதான். நான் இதிலிருப்பதால் யாவுமே நிச்சயமற்றதாய், நிலையற்றதாய் இருக்கிறது. அலாதியானதொரு குடும்பம். அதன் விசித்திரமான சூழ்நிலைகள். இந்தக் குடும்பம் இதுவாக இல்லாமல் வேறொன்றாக இருந்தால் சூழ்நிலைகள் மாறி விடும். ஆனால் நான்? நான் மட்டும் என்றும் இந்த நானாகத்தான் இருந்திருப்பேன். இதுபோலவே...... மற்ற விஷயங்கள்கூட வரையறுக்கப்பட்டிருந்திருக்கும். இந்தக் குடும்பத் தலைவிக்குப் பதிலாக இன்னொருத்தி, இன்னொரு விதமாக என்னைச் சகித்துக் கொண்டு, சமாளித்துக் கொண்டிருப்பாள். அல்லது அந்தப் பெண் என்னிடத்தை எடுத்துக்கொள்ள நான் அவளிடத்தை ஏற்றுக்கொண்டு அவளையும் ஏற்றுக் கொண்டிருந்திருப்பேன். அவ்வளவுதான். இந்த நாடகமும் முடிவு வரை இப்படியேதான் நிச்சயமற்றதாய், நிலையற்றதாய்

இருந்திருக்கும். இந்த நாடகத்தின் பிரதான பாத்திரம் யார்? நானா? அப்பெண்ணா? சூழ்நிலைகளா? அல்லது இம்மூன்றினிடையே எழுந்துள்ள சில பிரச்சனைகளா? என்று முடிவு செய்வதும் இதைப் போலவே கடினமானதாக, ஒரு முடிவிற்கு வர இயலாததாக இருந்திருக்கும்.

(மீண்டும் பார்வையாளர்களின் முன்வந்து நிற்கிறான். உதட்டில் சிகரெட்டுடன் ஒரு கணம் மேலே அண்ணாந்து பார்க்கிறான். பின்னர்—ஹூம் என்று கனைத்தவாறே சிகரெட்டை உதட்டிலிருந்து எடுத்து நுனிவிரலால் சாம்பலைத் தட்டுகிறான்.)

எதுவுமே வரையறுக்கப்படாத ஒரு நாடகத்தில், நிச்சயமற்ற ஒரு பாத்திரம் என்ற முறையில் நான் இந்த விளக்கம் தருவதாகவும் எண்ணலாம். ஒருக்கால் இந்த நாடகம் ஒரு குறிப்பிட்ட நிச்சயமான உருவத்தைப் பெறவும் கூடும். அதாவது இரண்டொரு புதிய பாத்திரங்களைச் சேர்ப்பதினாலோ, ஒருசில பாத்திரங்களை மாற்றி அமைப்பதினாலோ, சில வரிகளை நீக்கி விடுவதாலோ, அல்லது புதிய சில வரிகளை உரையாடலில் சேர்ப்பதினாலோ, சூழ்நிலையைக் கொஞ்சம் இப்படி அப்படி மாற்றி அமைப்பதாலோ இது சாத்தியமாகவும் கூடும். நாடகம் முழுவதையும் பார்த்த பின்னரோ, அல்லது அதற்கு முன்னரோ கூட இதுபற்றி நீங்கள் ஒருசில ஆலோசனைகளைச் சொல்லக்கூடும்......இதற்கிடையே இந்தக் கதாபாத்திரத்தை நீங்கள் இடையிடையே பலமுறை சந்திக்கவும் நேரலாம்.

(லேசாகக் குனிந்து வணக்கம் தெரிவிப்பதுபோல் தலையை அசைக்கிறான். அவனது உருவம் மெல்ல மெல்ல மறைந்து இருளுடன் ஒன்றிவிடுகிறது. இதன் பின் அறையின் ஒவ்வொரு மூலையும் ஒன்றன்பின் ஒன்றாக ஒளி பெறுகின்றன. ஒளிவட்டங்கள் சுழன்று பின்னர் ஒரே வெளிச்சமாக ஒளிக்கலவையாகின்றன. அறை காலியாக வெறிச்சென்றிருக்கிறது. டீப்பாயின்மீது

பள்ளிக்கு எடுத்துச் செல்லும் புத்தகப் பையொன்று திறந்து கிடக்கிறது. அதிலிருந்த நோட்டுகள், புத்த கங்கள் யாவும் சிதறிக் கிடக்கின்றன. சோபாவின் மீது இரண்டொரு பழைய பத்திரிகைகள், ஒரு கத்தரிக்கோல், கத்தரிக்கப்பட்ட, கத்தரிக்கப்படாத படங்கள் இருக்கின்றன. ஒரு நாற்காலியின் முதுகுப் புறத்தில் பைஜாமா ஒன்று ஊசலாடிக்கொண்டிருக் கிறது.

ஒரு பெண்மணி, கைநிறைய எதையெல்லாமோ நிறைய சுமந்துகொண்டு வருகிருள். குடும்பத்திற்குத் தேவை யான சில சாமான்கள், காரியாலய சம்பந்தப்பட்ட ஃபைல்கள். அவளுக்கு வேண்டிய ஒருசில பொருள் கள். நாள் முழுவதும் வேலை செய்ததின் களைப்பு முகத்தில் மேலிட்டு நிற்கிறது. இத்தனை சாமான் களையும் சுமந்துகொண்டு வந்த சிரமம் வேறு. உள்ளே நுழைந்ததும் கையிலிருப்பதையெல்லாம் நாற்காலியின்மீது வைத்துவிட்டு அறை முழுவதையும் ஒருமுறை பார்க்கிருள்).

குடும்பத் தலைவி :—(அயர்ச்சியை நீக்கிக்கொள்ளும் பாவத்தில்) ஹா...ஓ...ஹா...ஹூம்... (சற்றே நிராசையுடன்) இன் றைக்கும் வீட்டில் ஒரு பிராணி இல்லை. (உட்புறக் கதவின் வழியாக எட்டிப் பார்க்கிருள்.) கின்னி ! கின்னி ! கின்னி இருந்தால்தானே பதில் சொல்ல ? (டீப்பாயின் மீது கிடக்கும் பையைப் பார்த்தவாறே) எப்படி கிடக்கிறது இது ? (பையிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து) மறுபடியும் ஒரு புத்தகத்தைக் கிழித்தாகிவிட்டது. கொஞ்ச மாவது வெட்கம் இருந்தால்தானே ? எங்கே இருக் கிறது பணம், தினம் தினம் புதிய புத்தகம் வாங்க ! (சோபாவின் அருகே வந்து) நாள் முழுவதும் மிஸ்டர் அசோக் பாபுவின் சம்பாத்தியமா இது ? (படங்களை எடுத்துப் பார்க்கிருள்) எலிசபெத் டெயிலர், ஆட்ரே ஹெபர்ன், ஷர்லி மெக்லின்...ஹூம்...இந்தப் படங் களுடன் துரை வாழ்க்கையை ஹாயாகக் கழித்துக் கொண்டிருக்கிருர்.

(படங்களைப் போட்டுவிட்டு உட்காரப் போனவளின் பார்வை, ஊசலாடும் பைஜாமாவின் மீது விழுகின்றது. அதை நோக்கி நடந்தவாறே)

—பெரிய துரையும் இங்கே தன் வேலையைக் காட்டி விட்டுப் போயிருக்கிருர்.

(பைஜாமாவை செத்த பிராணியின் சடலத்தை அகற்றுவது போன்ற பாவத்துடன் எடுக்கிருள். மூலையில் சுருட்டி எறியப்போனவள் என்ன தோன்றியதோ, எறியாது ஒருதரம் உதறிவிட்டு மடிக்கிருள்)

—நாள்முழுவதும் வீட்டிலே உட்கார்ந்திருக்கும் மனிதர் வேருென்றுமில்லாவிட்டாலும் தன் துணி மணியையாவது மடித்து வைத்துக்கொள்ளக் கூடாதா?

(பைஜாமாவை அலமாரியில் வைக்கும் முன்னர் சாப்பாட்டு மேஜையின் மீது தாறுமாருய்க் கிடக்கும் தேநீர் பாத்தி ரங்களைக் கண்டதும் எரிச்சலாய் வருகிறது. பைஜா மாவை நாற்காலியிலேயே போட்டுவிட்டு கோப்பை கள், தட்டுகளை எடுத்து டிரேயில் அடுக்குகிருள்.)

தேநீர் குடித்தால் பாத்திரங்களை சமையல் அறை யில் கொண்டுபோய் வைப்போம் என்ற உணர்வு கூட கிடையாது. நான் வந்து எடுத்தால்தான் எடுத்தது...

(டிரேயை எடுத்துக்கொண்டு முற்றத்துக் கதவின் பக்கம் செல்லும்போது ஆண் 1 எதிரே வருகிருன். அவள் சட்டென நின்று அவனை நேருக்கு நேர் பார்க்கிருள். ஆனல் அவனே அவளிடமிருந்து நழுவிச் செல்ல நினைப்பதுபோல் பக்கவாட்டில் நகர்ந்து சற்று முன்னே போகிருன்.)

ஆண் 1:—காரியாலயத்திலிருந்து வந்துவிட்டாயா? பஸ் இன்று சீக்கிரம் கிடைத்துவிட்டது போலிருக் கிறது.

குடும்பத் தலைவி :—(டிரேயை மேஜையின்மீது வைத்தவாறே) காரியாலயத்திலிருந்து வீட்டிற்கு வந்தால் இங்கு ஒருவரையுமே காணோம். திறந்து கிடக்கிறது. எத்தனை நன்றாக இருக்கிறது இது! ஆமாம்! நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்?

ஆண் 1 :—எங்குமில்லை. சும்மா—வெளியே கடை வரைக்கும் போய்விட்டு வந்தேன்.

குடும்பத் தலைவி :—(பைஜாமாவைக் கையிலெடுத்துக்கொண்டு) இந்த வீட்டில் இதெல்லாம் என்னதான் வழக்கமோ ஒன்றும் புரியவில்லை. தினம் தினம் வீட்டிற்குள் நுழைந்தால் இந்த நிலைதான். நூறு சாமான் இங்குமங்கும் தாறுமாறாய்...

ஆண் 1 :—கொடு...என்னிடம் கொடுத்துவிடு (கையை நீட்டுகிறான்.)

குடும்பத் தலைவி :—(உதறி மடித்தவாறே) இனி கொடுப்பதில் என்ன இருக்கிறது! முன்னரே இதையெல்லாம் கவனித்திருக்க வேண்டும்—(கோபத்துடன் அலமாரியைத் திறந்து கையிலிருந்த பைஜாமாவை அதில் திணிக்கின்றாள்.)

(ஆண் 1 இப்படியும் அப்படியும் பார்த்துவிட்டு ஒரு நாற்காலியின் பின்புறத்தைப் பிடித்துக்கொண்டு நிற்கிறான்.)

குடும்பத் தலைவி :—(அலமாரியிலிருந்து நடந்து வந்து டிரேயைக் கரத்திலெடுத்த வண்ணம்)—யார் யார் டீ குடித்தார்கள்?

ஆண் 1 :—(தவறிழைத்துவிட்டது போன்ற குரலில்) ஏன்? நான் மட்டும்தான் குடித்தேன்!

குடும்பத் தலைவி :—ஒருத்தர் டீ சாப்பிட டிரே முழுவதும் அவசியமா? கின்னிக்குப் பால் கொடுத்தாகி விட்டதா?

ஆண் 1 :—அவள் என் கண்ணில் படவேயில்லை.

குடும்பத் தலைவி :—(டிரேயுடன் நடந்தவாறே) வீட்டில் யாராவது இருந்தால்தானே கண்ணில் பட!

(முற்றத்து வழியாகப் பின்புறச் சமையல் அறைக்குள் நுழைகின்ருள். ஆண்—ஹூம் என்ற சத்தத்துடன் நீண்ட பெருமூச்செறிந்தவாறே நாற்காலியை முன் னும் பின்னும் ஆட்டுகிருன். குடும்பத் தலைவி தலைப் பில் கையைத் துடைத்துக்கொண்டே சமையலறையி லிருந்து வெளியே வருகிருள்.)

ஆண் 1 :— சற்று நேரம்தான்.........நான் வெளியே போனேன்.

குடும்பத் தலைவி :—(இறைந்து கிடக்கும் சாமான்களை எடுப்பதில் மும்முரமாக ஈடுபட்டவாறே)—எத்தனை நேரம் போயிருந் தீர்களென எனக்கென்னதெரியும்?...இன்று அவர் வரப்போகிருர். இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார். நீங்கள் வீட்டிலிருப்பீர்களல்லவா?

ஆண் 1 :—யார் வருகிருன்? சிங்கானியா?

குடும்பத் தலைவி :— இங்கு பக்கத்தில் யார் வீட்டிலோ விருந்து. ஒரு ஐந்து நிமிடம் இங்கு வந்துபோவார் போலிருக்கிறது.

(ஆண் 1 மீண்டும் முன்போலவே ஹூம்—என்ற முனக லுடன் பெருமூச்செறிந்தவாறே நாற்காலியை ஆட்டு கிருன்.)

குடும்பத் தலைவி :—உங்களுடைய இந்தப் பழக்கம் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிப்பதில்லை. எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்?...

(ஆண் 1 நாற்காலியின் மீதிருந்து தன் கரத்தைச் சட்டென அகற்றிக் கொள்கிருன்.)

ஆண் 1 :—நீதான் அவனை வீட்டிற்கு வரும்படி அழைத்திருப்பாய்.

கு. தலைவி :—அழைப்பது என் கடமையல்லவா? அவர் என் Boss ஆயிற்றே.

ஆண் 1 :—Boss (பாஸ்) என்ருல்...வந்து...இப்படி...?

கு. தலைவி :—உங்களுக்கென்ன தெரியும்? அவர் கீழே வேலை செய்வது நான்தானே!

(ஆண் 1 மீண்டும் நாற்காலியை ஆட்டப்போனவன் சட்டெனக் கையை எடுத்துக்கொள்ளுகிறான்.)

ஆண் 1 :—எப்பொழுது வரப்போகிறான் ?

கு. தலைவி :—தெரியாது. இந்தப் பக்கமாய்ப் போகும் போது வருவார்.

ஆண் 1 :—(உடைந்த குரலில்) அது சரி...

கு. தலைவி :—இரண்டுதரம் நம் வீட்டிற்கு வந்துவிட்டார் என்று அங்கே எல்லோருக்கும் ஒரே பொறுமை. இன்று வரப்போவது மூன்றாம் தடவை.

(கத்திரிக்கோல், படங்கள், பத்திரிகை யாவற்றையும் திரட்டி எடுத்து மேஜை டிராயரை இழுத்து அதில் வைக்கிறாள். புத்தகங்களைப் பையிலே போட்டு அதை நேராக நிமிர்த்தி வைக்கிறாள்.)

ஆண் 1 :—அவன் இங்கே வருகிறானென்று அவர்களுக்கெல்லாம் தெரியுமா ?

கு. தலைவி:—(சினம் பொங்கும் பார்வையை அவன்மீது திருப்பி) ஏன் ? இதிலென்ன தவறு ?

ஆண் 1 :—தவறென்று நான் சொன்னேனா ? இல்லையே ! ரொம்ப நல்லது என்றுதான் சொல்லுகிறேன்.

கு. தலைவி :—நீங்கள் என்ன சொல்லுகிறீர்களென்று எனக்கு நன்றாகவே புரிகிறது.

ஆண் 1:—நான் வாயைத் திறக்காமல் மௌனமாய் இருப்பதுதான் நல்லது. மௌனமாய் இருந்தாலோ?

கு. தலைவி :—நீங்களா ? அதுவும் நீங்களா மௌனமாய் ?

ஆண் 1 :—முன்பு வந்தானே ! அப்பொழுது உன்னிடம் நான் ஏதாவது சொன்னேனா ?

கு. தலைவி :—உங்களுக்கே வெட்கமாய் இருந்திருக்கும். இரண்டு முறை அவர் வந்தபொழுதும் நீங்கள் வீட்டிலா இருந்தீர்கள் ?

ஆண் 1:—அதனாலென்ன? ஒருவனுக்கு வெளியே வேலையே இருக்காதா?

கு. தலைவி:—(மும்முரமாய் வேலை செய்தவாறே) ஒருக்கால் இன்றும் இருக்கலாம்.

ஆண் 1:—(தழைந்த குரலில்) இன்றுகூட நான் வெளியே போக வேண்டியிருக்கிறது.—நான் இருக்கவேண்டியது அவசியமென நீ நினைத்தால்......

கு. தலைவி:—எனக்காக நீங்கள் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. (சாமான்களெல்லாம் அதனதன் இடத்திலிருக்கிறதா என்று பார்க்கிறாள். பார்வையில் இனி செய்யவேண்டிய காரியம் எதுவுமில்லை என்ற திருப்தி பளிச்சிடுகிறது.) உங்களுக்குத் தேநீர் வேண்டுமா? நான் எனக்காகப் போடப் போகிறேன்.

ஆண் 1:—அப்படியென்றால் எனக்கும் ஒரு கப்......... (கு. தலைவி கதவை நோக்கிச் செல்லுகிறாள்) இந்தா......(அவள் நின்று அவனைப் பார்க்கிறாள்) உங்கள் ஆபீஸில் (ஸ்டிரைக்) வேலைநிறுத்தமென்றாயே, என்னவாயிற்று?

கு. தலைவி:—அது நடக்கும்போது உங்களுக்கும் தெரிவிக்கப்படும்.

ஆண் 1:—நடக்குமா?

கு. தலைவி:—நீங்கள் அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா?

(போகிறாள். ஆண் 1 தலையசைத்தவாறே தன்னை எப்படி பிஸியாக வைத்துக்கொள்வது என்று நினைப்பவன் போல் சுற்றும் முற்றும் பார்க்கிறான். பின்னர் திடீரென ஏதோ நினைவு வந்தவன்போல் தன் ஜேபியிலிருக்கும் மாலைப் பத்திரிகையை உருவிப் பிரித்து வைத்துக்கொள்கிறான். செய்திகளைப் படிக்கப் படிக்க முகத்தில், வியப்பு, உற்சாகம், ஆத்திரம், பரிகாசம், நிராசையென பாவங்கள் கணத்திற்குக் கணம் தோன்றி மறைகின்றன. கூடவே—'பிரமாதம்!' 'பஹுத் அச்சா' 'கொன்னுட்டான்' 'ஓ......இனி

மேல்' என்பதுபோன்ற சொற்களும் வெளிவருகின்றன. குடும்பத் தலைவி சமையலறையிலிருந்து வெளியே வருகிருள்.)

ஆண் 1 :—(பேப்பரை அகற்றிவிட்டு அவளை நோக்கி) இப்பொழுதெல்லாம் எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தம். ஸ்டிரைக். இதில் பாரேன்.........வந்து......

கு. தலைவி :—(அதைக் காதில் வாங்கிக்கொள்ளாதவளாய்) நீங்கள் நிஜமாகவே எங்கேயாவது போகவேண்டுமா? ஆமாம் எங்கே போகவேண்டுமென்று சொன்னீர்கள்?

ஆண் 1 :—ஜுனேஜா வீட்டிற்குப் போய்வரலாமென்ற எண்ணம்.

கு. தலைவி :—ஓகோ! ஜுனேஜா வீட்டிற்கா? போங்க! கட்டாயம் போய்விட்டு வாருங்கள்.

ஆண் 1 :—அவனுக்குக் கொடுக்க தற்சமயம் கையில் பணமில்லை. போய் முகத்தையாவது காட்டிவிட்டு வர வேண்டுமல்லவா?

கு. தலைவி :—ஆமாம் ஆமாம்......போய் முகத்தைக் காட்டிவிட்டு வாங்க.

ஆண் 1 :—வெளிநாட்டில் ஆறு மாதம் இருந்துவிட்டுத் திரும்பி வந்திருக்கிருன். புதிதாக ஏதாவது தொழில் ஆரம்பிக்கலாம் என்று நினைத்தாலும் நினைக்கலாம். அதிலே எனக்கேதாவது!

கு. தலைவி :—உங்களுக்காக அவர் என்னென்ன செய்வாரோ தெரியாது. இதுவரை கொஞ்சமாகவா செய்திருக்கிருர்? (நாற்காலி, டீப்பாய் முதலியவைகளை தூசி தட்ட ஆரம்பிக்கிருள்.) எப்பொழுது பார், இந்த வீட்டில் என்னதான் தூசியோ! எங்கிருந்துதான் வருகிறதோ!

ஆண் 1 :—நீ அனுவசியமாய் அவன் மீது ஆத்திரப்படு கிருய். எப்பொழுதும் அவன் எனக்கு உதவிதான் செய்திருக்கிருன்.

கு. தலைவி :—உதவி செய்யாமலே இருந்திருந்தால் நன்ருக இருந்திருக்கும். அவருடைய உதவியினுல் இத்தனை நஷ்டமும் ஏற்பட்டிருக்காது. அவ்வளவு தான்.

ஆண் 1 :—(ஆத்திரத்துடன் சோபாவில் அமர்ந்தவாறே) அப்படி யென்ருல் நான் போகவில்லை. நான் எனக்காகவா போகிறேன்? இத்தனை நாளாய் அதிர்ஷ்டம் எனக் குக் கை கொடுக்கவில்லை என்ருல் இதன் அர்த்தம் வந்து.........

கு. தலைவி :—எழுந்திருங்கள் இங்கிருந்து. நான் கொஞ்சம் தூசி தட்டவேண்டும்.

(ஆண் 1 எழுந்திருந்து மீண்டும் உட்காரக் காத்திருப் பதுபோல் நிற்கிருன்.)

கு. தலைவி :—அதோ—அந்த நாற்காலியில் போய் உட் கார்ந்து கொள்ளுங்கள். அதைத் துடைத்தாகி விட்டது.

(ஆண் 1 பார்வையால் அவளைக் கடிந்தவாறே அந்த நாற்காலியில் போய் அமருகிருன்.)

கு. தலைவி :—(முணுமுணுக்கிருள்) முதல் தடவை பிரஸ் விஷயத்தில் என்னவோ அப்படியாகி விட்டது. இரண்டாம் தடவை என்னவாயிற்று? ஜுனேஜா எத்தனை பணம் போட்டாரோ அதே பணம்தான் நீங்களும் போட்டீர்கள். இரண்டு பேருக்கும் ஒரு ஃபாக்டரி......வரவு, செலவு எல்லாம் ஒன்றுதான். இருந்தாலும் அதிர்ஷ்டம் அவருக்குக் கைகொடுத் தது; உங்களுக்குக் கை கொடுக்கவில்லை. அப்படித் தானே!

ஆண் 1 :—(கோபத்துடன் எழுந்து) நீ சொல்வதைப் பார்த்தால் வந்து......

கு. தலைவி :—ஏன் நிற்கிறீர்கள்?

ஆண் 1 :—ஏன்? என்னுல் நிற்க முடியாதா?

கு. தலைவி (அலட்சியம் தொனிக்கும் குரலில்) :—
ஓ! நிற்க முடியுமே! ஆனுல் வீட்டிற்குள்ளே தான்.

ஆண் 1 :—(சிரமத்துடன் கோபத்தை விழுங்கிக்கொண்டு) எனக்குப் பதிலாகத் தொழிற்சாலையில் நீ பங்குதாரராக இருந்திருந்தால் அப்பொழுது உனக்குத் தெரிந்திருக்கும்....

கு. தலைவி :—இப்பொழுதும் எனக்குத் தெரிந்துதானே இருக்கிறது. தெரியவில்லையா?

ஆண் 1 :—(படபடப்புடன்) தொழிற்சாலையிலிருந்து அப்பொழுதெல்லாம் நான் எத்தனை பணத்தை எடுத்துக் கொண்டேன்! போட்ட முதலையெல்லாம் ஆரம்பத்திலேயே எடுத்தெடுத்துச் சாப்பிட்டாயிற்று...... அப்புறம்......

கு. தலைவி :—யார் சாப்பிட்டார்கள்? நானு?

ஆண் 1 :—இல்லையில்லை......நான்தான். அந்நாட்களில் இந்த வீட்டில் என்ன செலவு தெரியுமல்லவா? வீட்டு வாடகை நானூறு, வெளியே போகவர டாக்ஸி, தவணை முறையில் குளிர்சாதனப் பெட்டி, குழந்தைகளுக்கு கான்வெண்ட் படிப்பு.

கு. தலைவி :—மது வகைகள் வந்தன. பார்ட்டிகள், விருந்துகள் அமர்க்களப்பட்டன. இதற்கெல்லாம் பணம் தாராளமாய் ஓடியது.

ஆண் 1 :—நீ சண்டை போட விரும்புகிறுயா?

கு. தலைவி:—உங்களால், அதுவும் இப்பொழுது, சண்டை போட முடியும். அதே சாக்கில் வீட்டைவிட்டு

வெளியே போய்விடலாம் அல்லவா? அவர் வந்தால் இதென்ன? நான் வருகிற பொழுதெல்லாம் ஒவ்வொரு முறையும் இந்த மனிதருக்கு வெளியே வேலை இருக்கிறதே என, என்ன நினைக்கிருரோ! ஒரு வேளை, நான்தான் வேண்டுமென்றே வெளியே அனுப்பி விட்டதாகவும் நினைக்கலாம்.

ஆண் 1 :—நான் அவனுக்காக வீட்டில் காத்திருக்க அவன் என்னிடமா fix செய்துகொண்டுவருகிருன்?

கு. தலைவி :—இனிமேல் உங்களிடம் fix செய்துகொண்டு வரும்படி சொல்லிவிடுகிறேன். நீங்கள் ரொம்பவும் பிஸியான மனிதர் பாருங்கள்! எப்பொழுது எந்தெந்த போர்ட் மீட்டிங்குக்குப் போகவேண்டுமோ, வெளியே போகவேண்டுமோ தெரியாதே.

ஆண் 1 :—(சற்றே தணிந்து, தோல்வியுற்ற குரலில்) நீ வந்து எப்பொழுது பார்த்தாலும் சண்டைக்கே தயாராய் நிற்கிருய்.

கு. தலைவி :—ஜுனேஜா வந்துவிட்டார் அல்லவா? இனியென்ன? போய் இருங்கள் அங்கே! இரண்டு, மூன்று நாட்கள் வீட்டுப் பக்கமே தலைகாட்ட வேண்டாம்.

ஆண் 1 :—(முழுபலத்தையும் திரட்டிக்கொண்டு ஆக்ரோஷத்துடன்) நீ மீண்டும் அந்தப் பேச்சுக்கேதானே வருகிருய்? நான் வீட்டைவிட்டுப் போய்விடுகிறேன்; இரண்டு, மூன்று நாள் வருவதேயில்லை என்ருல் அதற்குக் காரணமென்ன? எதனுல் போகிறேன்?

கு. தலைவி :—காரணம், உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும்தான் தெரியும். அவனும்கூடத்தான் நாள் கணக்காய் வீட்டின் பக்கமே வருவதில்லை.

ஆண் 1 :—என்னை நீ அவனுடன் ஒப்பிடுகிருயா?

கு. தலைவி :—இல்லை—அவனை உங்களுடன் ஒப்பிடு கிறேன். எப்படி உங்கள் வாழ்க்கையை வீணடித் துக்கொண்டீர்களோ, அதுபோல அவனும்......

ஆண் 1 :—உன்னுடைய பெண்? அவள் தன் வாழ்க்கை யைப் பாழாக்கிக் கொள்ளும் பாடத்தை யாரிடம் கற்றுக்கொண்டிருக்கிருள்? நான் யார் கூடவாவது வீட்டை விட்டு ஓட ஒரு நாளும் நினைத்ததில்லை.

கு. தலைவி :—(உற்றுப் பார்த்து) நீங்கள் என்னதான் சொல்ல விரும்புகிறீர்கள்?

ஆண் 1 :—என்னத்தை சொல்வது? போய் தேநீர் போடு. நீர்த்துப் போயிருக்கும் இதற்குள்.

(சோபாவில் அமர்ந்து மீண்டும் பத்திரிகையை கையில் எடுத்துக்கொள்கிருன். ஆனல் படிப்பதில் மனம் செல்லவில்லை.)

கு. தலைவி :—நீர்த்துப் போயிருக்குமென எனக்குத் தெரியும். நான் யாரையாவது வீட்டிற்கு அழைத்தால் நீங்கள் இப்படியெல்லாம் பேசுவீர்களென்பதும் தெரிகிறது.

ஆண் 1 :—(பத்திரிகையில் ஏதோ படித்தவாறே) ஹும்—ஹும்.

கு. தலைவி :—பிள்ளைக்கு வேலைக்கு யாரிடமாவது சொல்லக்கூடாதா என்று ஆயிரம் முறை சொல்லு வீர்கள். அதற்காகச் சமயம் பார்த்துக்கொண்டிருக் கும்போது......

ஆண் 1 :—ஆமாம் ஆமாம்......சிங்கானியா கட்டாயம் வேலை போட்டு வைத்துவிடுவான். அதற்காகத் தானே பாவம்...இங்கே வருகிருன்.

கு. தலைவி :—நன்றி இருக்கிறதா? இத்தனை பெரிய மனிதன் சும்மா...மேலுக்கு ஒருமுறை சொல்லியதற் காக இவ்வளவு தூரம் வருகிருனே என்றில்லாமல்...

ஆண் 1: நானு நன்றியுடன் இல்லே? இங்கே புதிய புதிய மனிதர்களின் வரத்துப் போக்கு, பழக்கம் ஏற்படும் போதெல்லாம், நான் எப்பொழுதும் நன்றியுடன் தானிருக்கிறேன். முதலில் ஜகன்மோகன் வந்து கொண்டிருந்தான். அப்புறம் மஞேஜ் வர ஆரம்பித்தான்.—

கு. தலைவி :—(நிலை குத்திய பார்வையுடன்) சொல்வதற்கு இன்னும் என்னென்ன பாக்கியிருக்கிறது? அதையும் சீக்கிரம் சொல்லிவிடுங்கள்.

ஆண் 1 :—ஏன்? ஜகன்மோகன் பெயரை நான் உச்சரித்ததுமே உனக்குப் பதட்டம் வந்துவிட்டதா?

கு. தலைவி :—(ஆழ்ந்த வெறுப்புடன்) எத்தனை நன்றி கெட்ட மனிதர் நீங்கள். இதையெல்லாம் பார்த்தால்...... நான் இன்றே (எனக் கூறிக்கொண்டே முன் வாசல் கதவின் பக்கம் திரும்புகிருள். இதற்குள் வெளியே மூத்த மகளின் குரல் கேட்கிறது.)

மூ. மகள் :—மம்மி.

(கு. தலைவி நின்று குரல் வந்த திசையில் பார்க்கிருள். முகம் லேசாக வெளிறி விடுகிறது.)

கு. தலைவி......வெளியே பீனு வந்திருக்கிருள்.

(ஆண் 1 மனமின்றி பத்திரிகையை மடித்துவிட்டு எழுந்திருக்கிருன்.)

ஆண் 1 :—பழையபடி வந்துவிட்டாள் போலிருக்கிறது.

கு. தலைவி :—போய் அவளுக்கு என்ன வேண்டுமென்று பாருங்கள்.

(மூத்த மகளின் குரல் மீண்டும் கேட்கிறது.)

மூ. மகள் :—மம்மி ஐம்பது பைசா சில்லரை கொடேன் கொஞ்சம்......

(ஆண் 1 விரும்பாத ஒரு சந்திப்பை எதிர்கொண்டழைக்க நேர்ந்ததுபோல் கதவை நோக்கிச் செல்லுகிருன்.)

கு. தலைவி :—உங்கள் பாக்கெட்டில் ஐம்பது பைசா இல்லையா என்ன? பாலுக்குக் கொடுத்த காசில் மீதி இருக்குமே!

ஆண் 1 :—எனக்காக நான் செலவு செய்துகொண்டது ஐந்து பைசாதான். அதுவும் இந்த பத்திரிகை வாங்க.

(வெளியே செல்லுகிறான். கு. தலைவி ஒருகணம் அவன் செல்லுவதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு கதவின் வழியாக சமையலறைக்குள் செல்லுகிறாள். மூத்த மகள் வெளியிலிருந்து உள்ளே வருகிறாள். ஆண் 1 அவள் பின்னாலேயே வருகிறான். அவனது பார்வை அறை முழுவதும் ஒருமுறை சுழல்கிறது. தன் மனைவி அங்கில்லாதது கண்டதும் தவறான இடத்தில் தான் தனித்து விடப்பட்டுவிட்டது போன்ற தவிப்புடன் நிற்கிறான்.)

ஆண் 1 :—(தன் தவிப்பை மறைக்க இயலாமல் பெண்ணை நோக்கி) உட்காரேன்.

மூ. பெண் :—மம்மி எங்கே?

ஆண் 1 :—சமையலறையில் இருப்பாள்.

மூ. பெண் :—(கூப்பிடுகிறாள்) மம்மி......

(இரு கரங்களிலும் தேநீர் கோப்பையை ஏந்தியவாறு குடும்பத் தலைவி வருகிறாள்.)

கு. தலைவி :—எப்படி இருக்கிறாய் பீனா?

மூ. பெண் :—சௌக்கியமாயிருக்கிறேன்.

(ஆண் 1 ஜாடை மூலம் பெண் தன்னுடன் சாமான் ஏதும் கொண்டுவரவில்லை என்பதை மனைவிக்கு உணர்த்த முயல்கிறான்.)

கு. தலைவி :—தேநீர் குடிக்கிறாயா?

மூ. பெண் :—இப்போ வேண்டாம். முதலில் குளியலறைக்குப் போய் கை கால், முகமெல்லாம் கழுவிக் கொள்ள வேண்டும் உடம்பெல்லாம் கசகச வென்று......

கு. தலைவி :—உன் கண் ஏனிப்படி இருக்கு ?

மூ. பெண் :—எப்படி இருக்கு ?

கு. தலைவி :—சொல்லத் தெரியவில்லை. ஆனால் எப்படியோ இருக்கிறது.

மூ. பெண் :—உனக்குத் தோன்றும் அப்படியெல்லாம். இரு, முகம் கழுவிக்கொண்டு வருகிறேன்.

(கதவின் வழியாகச் செல்லுகிறாள். ஆண் 1 அர்த்த புஷ்டியுடன் மனைவியைப் பார்க்கிறான். பிறகு நெருங்கி வருகிறான்.)

ஆண் 1 :—எனக்கென்னவோ அவள் போன தடவையைப் போல்தான் வந்திருப்பதாகத் தோன்றுகிறது.

(குடும்பத் தலைவி தேநீர் கோப்பையை நீட்டுகிறாள்.)

கு. தலைவி :—இந்தாருங்கள் தேநீர்.

ஆண் 1 :—(கோப்பையைக் கரத்தில் வாங்கியவாறே)—இந்தத் தடவை கூட ஒரு சாமானும் கொண்டு வரவில்லை......

கு. தலைவி :—சற்று நேரம் இருந்துவிட்டு போகலாம் என்று வந்திருப்பாள்.

ஆண் 1 :—பர்ஸில் ஒரே ஒரு ரூபாய்தானிருந்தது. ஸ்கூட்டருக்குக் கொடுக்கக்கூட முழுச் சில்லரையில்லை.

கு. தலைவி :—வேறெங்காவது போய் விட்டு வருகிறாளோ என்னமோ, யார் கண்டது ?

ஆண் 1 :—எப்பவும் நீ விஷயத்தை ஏன் மூடி மறைக்கப் பார்க்கிறாய்? ஒரு தரமாவது பளிச்சென்று விஷயத்தை உடைத்து அவளிடம் கேட்டாலென்ன ?

கு. தலைவி :—என்ன கேட்பது ?

ஆண் 1 :—உனக்கு நான் அதைச் சொல்லவேண்டுமா ?

(கு. தலைவி தேநீரை ஒரு வாய் பருகியவாறே நாற்காலி யில் அமருகிருள்.)

ஆண் 1 :—(ஒரு கணம் பதிலை எதிர்பார்த்தபின் தொடருகிருன்)— எனக்கு அந்த மனிதனைப் பற்றி என்றுமே நல்ல அபிப்பிராயம் இல்லை. நீ தான் மனோஜ் அப்படி இப்படி என்று பிரமாதப்படுத்தினுய். அப்படி அவன் என்னதானே? நீ கொடுத்த இடத்தில், அவன் இந்த வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிராம லிருந்தால், இந்தப் பெண் அவனேடு போய்விட்டு இன்று இப்படி வந்து நிற்க நேரிட்டிருக்குமா ?

கு. தலைவி :—(சலிப்புடன்) என்னென்ன கேட்கவேண்டுமோ அதை நீங்களே அவளிடம் கேட்பதுதானே ?

ஆண் 1 :—நானெப்படி கேட்க முடியும் ?

கு. தலைவி :—ஏன் கேட்க முடியாது ?

ஆண் 1 :—நான் கேட்பது தவறு. ஏன் என்ருல்......

கு. தலைவி :—நீங்கள் எது செய்வதும் ஏதாவதொரு காரணமாய் தவருகிவிடும். எனக்கு இது தெரியாதா என்ன ?

(ஒரே மடக்கில் தேநீர் கோப்பையைக் காலி செய்கிருள்.)

ஆண் 1 :—உனக்குத் தெரியாதது என்ன இருக்கிறது? எல்லாம் தெரிந்தவள். இந்த வீட்டில் எல்லாம் நான் செய்து நடப்பதென்றிருந்தால்......

கு. தலைவி :—(எழுந்தவாறே) இன்னும் என்னென்ன நாசமாகிப் போயிருக்குமோ ! இன்று நாம் வேளைக்கு ஏதோ இரண்டு வாய் சாப்பிடுகிருேமே அதுவும் கிடைத்திருக்காது. பெண்ணும் வீட்டி லேயே அடைந்து கிடந்து கிழவியாகி விட்டிருப் பாள்.

ஆண் 1 :—(வெளிப்புறத்துக் கதவைச் சுட்டிக்காட்டி) அதோ அவள் வருகிருள்—(மடக் மடக்கென்று தேநீரைக் குடித்து

கோப்பையைக் காலிசெய்து மனைவியிடம் தருகிறான்.) மூத்த மகள் முன்னைவிடத் தெளிவுடன் தன்னைச் சமாளித்துக் கொண்ட நிலையில் வருகிறாள்.

மூ. மகள் :—(வந்துகொண்டே) குளிர்ந்த ஜலத்தை முகத்தில் வாரிவாரித் தெளித்துக்கொண்ட பின்தான் கொஞ்சம் தெம்பு வந்தது. இந்த நாட்களில்......அப்பப்பா...... (இருவரும் தன்னையே பார்ப்பதைக் கண்டு) என்ன விஷயம்? மம்மி......நீங்களிருவரும் ஏனிப்படி என்னையே பார்க்கிறீர்கள்!

கு. தலைவி :—நான் போய் கோப்பையெல்லாம் உள்ளே வைத்துவிட்டு வருகிறேன்.—(செல்லுகிறாள். ஆண் 1 தன் பார்வையை வேறுபுறம் திருப்பிக்கொண்டு தன்னை மும்முரமாய் எதிலேனும் ஈடுபடுத்திக்கொள்ளக் காரணம் தேடுகிறான்.)

மூ. மகள் :—டாடி! என்ன விஷயம்?

ஆண் 1 :—விஷயமா? ஒன்றுமில்லையே!

மூ. மகள் :—இல்லையில்லை...ஏதோ விஷயம் இருக்கிறது.

ஆண் 1 :—உன் அம்மா இப்போ ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள்......

மூ. மகள் :—என்ன சொல்லிக் கொண்டிருந்தாள்?

ஆண் 1 :—அதாவது அவளொன்றும் சொல்லவில்லை. நான்தான் சொல்லிக் கொண்டிருந்தேன்.

மூ. மகள் :—என்ன சொல்லிக் கொண்டிருந்தீர்கள்?

(குடும்பத் தலைவி திரும்பிவருகிறாள்.)

ஆண் 1 :—இதோ அவளே வந்துவிட்டாள். அவளே உனக்கு எல்லாம் சொல்லுவாள்......

(தன்னை இக்கட்டான இந்நிலையிலிருந்து அகற்றிக்கொள்ள விரும்புபவள்போல் சற்றே நகர்ந்து செல்லுகிறாள்.)

மூ. மகள் :—மம்மி...என்னைப் பற்றி டாடி என்ன சொல்லிக் கொண்டிருந்தார்?

கு. தலைவி :—அவரிடமே கேட்பதுதானே!

மூ. மகள் —அவரென்னமோ நீ சொல்லுவாய் என்கிறார். நீயோ அவரிடமே கேட்பதுதானே என்கிறாய்?

கு. தலைவி :—உன் டாடிக்கு உன்னைப்பற்றி......

ஆண் 1 :—(இடைமறித்து) உனக்கு இந்த எண்ணம் இல்லை என்றால் விஷயத்தை விட்டுவிடு இதோடு......

மூ. மகள் :—அப்படித் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம்தான் என்ன?

கு. தலைவி :—விஷயம் ஒன்றுமில்லை. இப்பொழுதெல்லாம் நீ அங்கிருந்து வருகிறதையும், உன்னையும் பார்த்து இவருக்குத் தோன்றுகிறதாம்...வந்து...

ஆண் 1 :—உனக்கு ஒன்றுமே தோன்றவில்லையாக்கும்.

மூ. மகள் :—(குற்றவாளிக் கூண்டில் நிற்பதுபோல்) என்ன தோன்றுகிறது?

கு. தலைவி :—வந்து...மனத்தில் எதையோ மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறாய். எங்களிடம் சொல்வதில்லை...

மூ. மகள் :—எதனால் உங்களுக்கு அப்படித் தோன்றுகிறது?

கு. தலைவி :—(ஆண் 1 டம்) என்னிடம் சொன்னீர்களே அதையெல்லாம் இப்பொழுது இவளிடம் கூறுங்கள்.

ஆண் 1 :—நீதானே ஆரம்பித்திருக்கிறாய்! நீயே முடித்துவிடு.

கு. தலைவி :—(பெண்ணிடம்) உன்னிடம் நேரிடையாக ஒரு கேள்வி கேட்கலாமா?

மூ. மகள் :—ஓ! கேட்கலாம்.

கு. தலைவி :—நீ அங்கே சந்தோஷமாக இருக்கிறாயா?

மூ. மகள் :—(மெல்லிய குரலில்) ஆமா...ம்......ரொம்பவும் சந்தோஷமாக இருக்கிறேன்.

கு. தலைவி :—நிஜமாகவே சந்தோஷமாக இருக்கிருயா?

மூ. மகள் :—வேறென்ன? அப்படித்தானே சொல்லு கிறேன்.

ஆண் 1 :—(முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டு) இது சரி யான பதிலில்லை.

மூ. மகள் :—(வெகுண்டவளாய்) நான் சந்தோஷமாக இல்லை, ரொம்பவும் கஷ்டப்படுகிறேன் என்று சொன்னுல்தான் சரியான பதிலா?

ஆண் 1 :—ஒருவர் எதைக் கூறினுலும் அது அவர்கள் முகத்தில் தெரியவேண்டுமே!

மூ. மகள் :—என் முகத்திலென்ன தெரிகிறது? எனக்கு க்ஷயரோகம் வந்துவிட்டதா? நான் அணு அணுவாக உருகிச் செத்துக்கொண்டிருக்கிறேனு?

ஆண் 1 :—மனிதர்களுக்கு க்ஷயரோகம் ஒன்றுதானு வரும்?

மூ. மகள் :—இன்னும் என்னென்ன வருமாம்? கண் தெரியாமல் போய்விடுமா? காது, மூக்கு கோணிக் கொண்டு போகுமா? உதடுகள் அழுகி விழுந்து விடுமா? என் முகத்தில் அப்படியென்ன தெரிகிறது உங்களுக்கு?

ஆண் 1 :—(எரிச்சலுடன் திரும்பியவாறு) உன் அம்மாதான் உன்னிடம் கேட்டாள். நீ அவளிடமே பதில் சொல்லு. இதற்காகத்தான் நான் எந்த விஷயத் திலும் தலையிடுவதே யில்லையே!

(சோபாவில் அமர்ந்து பத்திரிகையைப் பிரிக்கின்ருன். ஒரு விஞடிக்குப் பின்தான் தான் பத்திரிகையைத் தலை கீழாக வைத்துக்கொண்டிருக்கிருேம் என்ற உணர்வு வருகிறது. உடனே அதைத் திருப்பி வைத்துக் கொள் கிருன்)

கு. தலைவி :—(பெண்ணிடம்) சரி.........விஷயத்தை விடு. இதோடு—இனிமேல் இந்தக் கேள்வியை உன்னிடம் கேட்கமாட்டேன், சரியா ?

(மூ. மகளின் விழிகள் நீரால் நிறைகின்றன.)

மூ. மகள் :—கேட்பதற்கு என்ன இருக்கிறது மம்மி? ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் எப்படியெப்படியோ கழிந்துகொண்டிருக்கிறது...

ஆண் 1 :—(பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டியவாறே) பதிலென்றால் இதுதான் ஏதோ கொஞ்சம் பதில்......

கு. தலைவி :—(ஆண் 1டம்) கொஞ்ச நேரம் வாயை மூடிக் கொண்டிருக்கமாட்டீர்களா ?

ஆண் 1 :—நானென்ன சொல்லுகிறேன்? வாயை மூடிக் கொண்டுதானே உட்கார்ந்திருக்கிறேன்.—(பத்திரிகைச் செய்தியை உரக்கப் படிக்கிறான்)–' கால்வாய் அணைத்திட்டம் பூர்த்தியாக 12 வயது சிறுவன் பலி '—(பத்திரிகைத் தாளிலிருந்து முகத்தை வெளியே காட்டி)—நீங்கள் என்னவேண்டுமென்றாலும் பேசிக்கொள்ளுங்கள். இனி என் வாயிலிருந்து ஒரு வார்த்தை வெளியேவராது. (மீண்டும் பத்திரிகை செய்தியைப் படிக்கிறான்.) 'உதயபூரில் மட்டா கிராமத்தின் அணைக்கட்டு கண்டிராக்டரின் மனிதத் தன்மையற்ற குரூரமான செயல்'–(பத்திரிகைக்கு வெளியே தலையை நீட்டி) எதற்கும் ஒரு எல்லை இருக்கிறது.

(கு. தலைவி மகளின் தோளைப்பற்றி மேஜையினருகே அழைத்துச் செல்லுகிறாள்.)

கு. தலைவி :—உட்காரு இங்கே. (மூ. மகள் இமைகளைத் தாழ்த்தியவண்ணம், பார்வை நிலத்தில் பதிய அமருகிறாள்.) உண்மையைச் சொல்—உனக்கு அங்கு என்ன குறை—என்ன கஷ்டம் ? சொல்லு.

மூ. மகள் :—குறையென்று ஒன்றுமில்லை......

கு. தலைவி :—அப்படியென்றால் ?

மூ. மகள் :—......ஒவ்வொன்றிலும்தான்.

கு. தலைவி :—குறிப்பாக ஏதாவது?

மூ. மகள் :—குறிப்பாக எதுவுமில்லை.

கு. தலைவி :—அப்படியென்றால் !

மூ. மகள் :—எல்லாமே குறிப்பிட்டளவு முக்கியமானது தானே.

கு. தலைவி :—அதாவது......

மூ. மகள் :—அதாவது—எல்லாமேதான்.

கு. தலைவி :—நீ சொல்வதின் அர்த்தம்......

மூ. மகள் :—அர்த்தம்........வந்து........திருமணத்திற்கு முன்பு நான் மனோஜை மிக மிக நன்றாய் புரிந்து கொண்டு விட்டதாய், அறிந்திருப்பதாய் எனக்குத் தோன்றியது. ஆனால் இப்பொழுதோ..........இப் பொழுது பார்க்கும்போது நான் அறிந்துகொண்டு விட்டதாக நினைத்ததெல்லாம் ஒன்றுமேயில்லை எனத் தோன்றுகிறது.

கு. தலைவி :—(விஷயத்தைப் பின்னும் அதன் ஆழத்தோடு அறிந்து கொள்ளும் முயற்சியில்) அப்படியென்றால் அவன் நடத் தையில் ஏதாவது......

மூ. மகள் :—இல்லை. நடத்தையில் அப்படி ஏதுமில்லை. இந்த விஷயத்தில் பார்க்கப்போனால் அவர் ரொம்ப வும் சுத்தமான மனிதர்.

கு. தலைவி :—பின்னென்ன ? அவன் சுபாவத்தில்....... ஏதாவது......

மூ. மகள் :—இல்லை. எல்லோரையும் போன்ற சுபாவந் தான். பார்க்கப்போனால் சராசரி மனிதனைவிட சந்தோஷமாக, மகிழ்ச்சியாக இருக்கக்கூடியவர் என்றுதான் சொல்லவேண்டும்.

கு. தலைவி :—(காரணத்தைத் துருவி ஆராயும் முனைப்புடன்) அப்படி யென்றால் ?

மூ. மகள் :—இதுதான் எனக்கும் புரியவில்லை. எங்கே, எதிலே தவறு இருக்கிறது என்பதுதான் புரியமாட்டேன் என்கிறது.

கு. தலைவி :—பொருளாதார நிலை சரியாக இருக்கிறதா ?

மூ. மகள் :—சரியாக இருக்கிறது.

கு. தலைவி :—உடல் நிலை ?

மூ. மகள் :—மிக நன்றாயிருக்கிறது.

ஆண் 1 :—(அந்தப் பக்கம் பாராமலேயே) எல்லாம் சரியாக இருக்கிறது; மிக நன்றாயிருக்கிறது. பின் குறை யென்ன ? எதைப் பற்றிக் குறை ?

கு. தலைவி :—(ஆண் 1டம்) விஷயத்தைப் புரிந்து கொள்ள விடமாட்டீர்களே நீங்கள்! (மகளிடம்) இந்த விஷயங்களிலெல்லாம் குறையில்லையென்றால் பின்னர் ஏதோவொரு காரணம்—மிக முக்கியமான காரணம் இருக்க வேண்டும், அல்லது......

மூ. மகள் :—அல்லது ?

கு. தலைவி :—அல்லது........அல்லது.........இப்பொழுது என்னால் அதைக் கூறமுடியாது.

மூ. மகள் :—காரணம்........இதுதான். நம்மிருவருக்கிடையே வீசுகிறதே காற்று—அந்தக் காற்று...... அந்த சூழல்தான் காரணம்.

ஆண் 1 :—(அவள் பக்கம் திரும்பி) என்ன சொன்னாய்? காற்று ?

மூ. மகள் :—ஆம். காற்றுத்தான்.

ஆண் 1 :—(நிராசையுடன் தலை அசைத்தவாறே முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொள்கிறான்.) என்ன காரணம் சொல்லுகிறாள் இவள்—காற்றாம் !

கு. தலைவி :—(தன் கூரிய விழியால் மகளின் முகத்தை ஆராய்ந்த வாறு) நீ சொல்வது எனக்குப் புரியவில்லை.

மூ. மகள் :—(நாற்காலியிலிருந்து எழுந்து) என்றால் புரிய வைக்கமுடியும் என்று தோன்றவில்லை. (குழப்பத்துடன் சில அடிகள் நடந்தவாறே) பிறருக்கென்ன ? என்னை எனக்கே புரியவைக்க முடியவில்லை. (சட்டென நின்று) மம்மி—இப்படிக்கூட இருக்குமா வந்து......

கு. தலைவி :—வந்து......

மூ. மகள் :—வந்து......இரண்டு பேர் எத்தனை நெருக்க மாய், ஒரே காற்றை சுவாசித்துக்கொண்டு இணைந்து வாழ்கிறார்களோ, அத்தனைக்கத்தனை பரஸ்பரம், தங்களை அன்னியமாக, அறிமுகமற்றவர் களாக உணர முடியுமா ?

கு. தலைவி :—நீங்களிருவரும் அப்படித்தான் உணர்கி றீர்களா ?

மூ. மகள் :—என்னைப் பொறுத்தவரையில் நான் இதைக் கூறமுடியும்.

கு. தலைவி :—(ஒரு விநாடி அவளையே பார்த்துவிட்டு) நீ உட் கார்ந்து பேசேன் ! ஏன் நிற்கிறாய் ?

மூ. மகள் :—எனக்கு இது சரியாக இருக்கிறது.

கு. தலைவி :— நீ இப்பொழுது சொன்னாயே......அது உண்மையென்றால் இதற்கெல்லாம் அப்பாற்பட்டு ஏதோ ஒரு தடங்கல், ஒரு நெருடல்......

மூ. மகள் :—அதுதான் என்ன ?.....தேநீர் அவர் கையில் சிந்திவிடுவது ; காரியாலயத்திலிருந்து அவர் வர அரைமணி நேரம் தாமதமாகிவிடுவது......இது போன்ற சின்னச் சின்ன விஷயங்கள் மனத் தாங்கல்கள் அல்ல. ஆனால் மனத்தாங்கலாக மாறி விடுகின்றன. பலூன் மாதிரி ஏதோ ஒன்று என் நெஞ்சத்தில் எப்பொழுதும் ஊதி, உப்பிக் கிடக்

கிறது. ஏதாவதொரு சாக்குக் கிடைக்காதா...... அது வெடிக்க என்று நான் எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறேன்—முடிவில்......

(கு. தலைவி மேலே கூறப்போவதையும் மௌனமாய் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிருள்.)

கடைசியில் அது வெடித்துவிடும் நிலை வந்தே விடு கிறது. அக் கணத்தில் அதுவும் பொங்கி வடிந்து விடுகிறது. அப்பொழுதெல்லாம் அவர் அதையே தான் திருப்பித் திருப்பிச் சொல்லுகிருர்.

கு. தலைவி :—என்ன சொல்லுகிருன் ?

மூ. மகள் :—இந்த வீட்டிலிருந்து நான் என்னுடன் எதை எடுத்துச் சென்றிருக்கிறேனே அது என்னை எந்த நிலையிலும் இயற்கையாக, இயல்பாக வாழ விடுவ தில்லையாம்.

கு. தலைவி :—(யாரோ முகத்திலறைந்துவிட்டாற்போல்) அந்த அது என்னவாம் ?

மூ. மகள் :—அது என்ன என்று நான் கேட்டால் அதற் கும் ஒரே பதில்தான்.

கு. தலைவி :—என்ன பதில் ?

மூ. மகள் :—அதை நான் எனக்குள்ளேயே...இந்த வீட்டிலிருந்துதான் அறிந்துகொள்ள முடியுமாம். அவரால் ஒன்றும் சொல்ல முடியாதாம்.

ஆண் 1 :—(அவள் பக்கம் திரும்பி) இப்படியெல்லாமா சொல்லு கிருன் அவன் ? இன்னும் என்னென்ன சொல்லு கிருன் ?

கு. தலைவி : அவள் இப்பொழுது என்னிடம் பேசு கிருள் ; உங்களுடன் இல்லை.

ஆண் 1 :—ஆனுல் பேச்சு...என் வீட்டைப் பற்றித் தானே ?

கு. தலைவி :—உங்கள் வீடு! ஹூம்...

ஆண் 1 :—அப்படியானால் இது என் வீடு இல்லையா? இல்லையென்றால் சொல்லிவிடு!

கு. தலைவி :—உண்மையாகவே இதை உங்கள் வீடு என்றுதான் நினைக்கிறீர்களா? அப்படியானால்!...

ஆண் 1 :—சொல்லு! சொல்லிவிடு! என்னவெல்லாம் சொல்ல விரும்புகிறாயோ...சொல்லிவிடு.

கு. தலைவி :—நான் சொல்ல விரும்புவதை இப்பொழுது அல்ல, பத்து வருடங்களுக்குமுன் சொல்லி இருக்க வேண்டும்.

ஆண் 1 :—அப்போ பத்து வருடம் பதினோராவது வருடமாவதற்குள் சொல்லிவிடு.

கு. தலைவி :—எல்லாம் இப்படியே நடந்துகொண்டிருந்தால் அந்த பதினோராம் வருடம் நடக்காது.

ஆண் 1 :—(உற்றுப் பார்த்தவண்ணம்) நடக்காதா? உண்மையாகவா? ஜகன்மோகன் நல்லவன். அவனுக்கு மீண்டும் தில்லிக்கே மாற்றலாகிவிட்டது. அன்று கனட் ப்ளேசில் பார்த்தேன். ஒருநாள் வீட்டிற்கு வருவதாகச் சொன்னான்.

மூ. மகள் :—(பொறுமை இழந்து) டாடி!

ஆண் 1 :—இப்பொழுது நானென்ன சொல்லிவிட்டேன்? அந்த மனிதனைப் புகழ்ந்தேன். அவ்வளவுதான்.

கு. தலைவி :—நன்றாகப் புகழ்ந்து பாராட்டுங்கள். இன்னும் யார் யாரைப் புகழ முடியுமோ...புகழ்ந்து பாராட்டுங்கள்! (மூ. மகளிடம்) மனோஜ் இப்பொழுது உன்னிடம் என்னவெல்லாம் சொன்னானே அது அவன் முன்பெல்லாம் இங்கு வந்துபோய்க்கொண்டிருந்தபோது, இரவு பகலாய் இங்கு பழியாய்க் கிடந்தபோது தெரியவில்லையா?

மூ. மகள் :—இதை நான் அவரிடம் கேட்கவில்லை.

கு. தலைவி :—ஏன் கேட்கவில்லை?

மூ. மகள் :—ஏன் என்றால்; எனக்குத் தோன்றுகிறது... வந்து...என்ன தோன்றுகிறது என்பதை எப்படிச் சொல்ல? அத்தனை உறுதியாக அவர் சொல்லும் போது, அவரிடம்...அவரிடம்...ஏன்? எனக்கு என்மீதே எரிச்சலாய் வருகிறது. சுற்றும் முற்றும் இருப்பதையெல்லாம் உடைத்துத் தகர்த்துவிடலாம் போல் வெறியாய் மண்டுகிறது. ஏதாவதொன்றைச் செய்துவிடமாட்டோமா, அதனால்...

கு. தலைவி :—அதனால்...

மூ. மகள் :—அவருடைய மனத்தில் பயங்கரமான, பலத்த அடி விழாதா என்ற வெறி. என்னுடைய நீண்ட கூந்தல் அவருக்கு ரொம்பவும் பிடிக்கும். இதனால் இதைக் குட்டையாக வெட்டிக்கொண்டுவிட வேண்டும் என்ற ஆத்திரம் வருகிறது. நான் வேலைக்குப்போவது அவருக்குப் பிடிக்காது. அதனால் எங்கேயாவது, எந்த வேலையானாலும் சரி, சிறிய வேலையானால்கூடப் பரவாயில்லை; வேலை தேடிக்கொண்டுவிட வேண்டும் என ஆவேசம் எனக்கு. எதுவானாலும் சரி. அவர் மனம் உள்ளூர நொந்துபோய் துடிக்கவேண்டும், தவிக்கவேண்டும் என்றெல்லாம் தோன்றுகிறது. ஆனால் மம்மி...... என்னால் இதில் எதையுமே செய்ய முடியவில்லை. கையாலாகாத இந்த நிலையில் வெறுத்துப்போய்...

கு. தலைவி :—இங்கே வந்துவிடுகிறாயா?

மூ. மகள் :—இல்லை.

கு. தலைவி :—அப்படியென்றால்!

மூ. மகள் :—பல நாட்கள் அவரிடமிருந்து விலகி நிற்கிறேன். என்னை அவரிடமிருந்து துண்டித்துக் கொள்கிறேன். ஆனால் மெல்ல மெல்ல ஒவ்வொன்றும் அந்தப் பழைய தடத்திற்கே திரும்பிவிடுகின்றன.

சகஜமான கதியில் யாவுமே இயங்குகிறது...... மீண்டும் நாங்கள் முரண்பட்டு அந்த குகைக்குள் நுழைந்துகொள்ளாத வரையில் எவ்வித சலனமு மில்லை. நான் இங்கே வருவது...இங்கே வருவது... எதற்கென்றால் ?

கு. தலைவி :—இது உன் சொந்த வீடல்லவா ?

மூ. மகள் :—என்னுடைய சொந்த வீடு!...... ஆமாம். நான் இங்கு எதற்காக வருகிறேன் தெரியுமா? இந்த வீட்டிலுள்ள அந்த ஏதோ ஒன்றைக் குறித்து நான் அடிக்கடி, தாழ்மைப்படுத்தப்படுகிறேனே அந்த 'அது' என்னவென்று தேடிப் பார்க்கத்தான் இங்கு வருகிறேன். (உடைந்த குரலில்) மம்மி......அது என்னவென்று உன்னால் கூற இயலுமா? அது இங்கே எங்கே இருக்கிறது மம்மி! இந்த வீட்டின் ஜன்னல்களிலா? கதவுகளிலா? மாடியிலா? சுவர் களிலா? உன்னிடமா? டாடியிடமா? கின்னியிடமா? அசோக்கிடமா? அந்தப் பாழாய்ப்போன அது யாரிடம் எங்கே மறைந்து கொண்டிருக்கிறது? துரதிர்ஷ்டம் பிடித்த அதை இந்த வீட்டிலிருந்து நான் என்னுடன் கொண்டுவந்திருப்பதாக அவர் கூறுகிறாரே! அது எங்கே ஒளிந்துகொண்டிருக் கிறது? (தாயின் இரு தோள்களையும் பற்றி) சொல்லு மம்மி! அது என்ன? இந்த வீட்டில் அது எங்கே இருக் கிறது?

(சில நிமிடங்கள் வரை பெண்ணின் கரங்கள் தாயின் தோளின் மீதேயிருக்கின்றன. இருவர் விழிகளும் ஒன்றையொன்று நோக்குகின்றன. ஆண் 1ன் கழுத்து மெதுவாக அவர்கள் பக்கம் திரும்புகிறது. அப் பொழுதுதான் தாய் தன் தோளின்மீதிருந்து மகளின் கரத்தை விலக்குகிறாள். அவன் விழிகள் ஆண் 1ன் பார்வையைச் சந்திக்கின்றன. ஏதோ சொல்ல விரும்பு வதுபோல், சில அடிகள் அவனை நோக்கி எடுத்து

வைக்கிருள். மூத்த மகள் இன்னமும் தன் கேள்விக்குப் பதிலை எதிர்பார்ப்பவள்போல் அங்கேயே நின்றவண்ணம் இருவரையும் பார்த்துக்கொண்டிருக்கிருள். ஆண் 1 மனைவி தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் பார்வையை வேறுபுறம் திருப்பிக் கொள்கிருன். இரண்டொரு நிமிடம் என்ன செய்வதென்றறியாத நிலையில் தன்னையறியாமலேயே பத்திரிகையைச் சுருட்டி இரு கரத்தாலும் கயிருகத் திரிக்கவாரம்பிக்கிருன். பாதி தூரம் வந்த மனைவி தான் ஏதோ கூறவந்த தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு கண நேரத்தில் தன்னைச் சுதாரித்துக் கொண்டவளாய், திரும்பி மகளை நெருங்கி மெல்ல அவள் தோளைத் தொடுகிருள். மூத்த மகள் ஒரு கணம் தன் விழிகளை மூடி தன் மன எழுச்சியை அடக்க முயல்கிருள். பின்னர் தன் தோளின்மீதிருந்த தாயின் கரத்தை அகற்றிவிட்டு ஒரு நாற்காலியை ஆதரவாகப் பற்றிக்கொண்டு அதில் உட்கார்ந்துவிடுகிருள். என்ன செய்வதெனத் தோன்ருத நிலையில், தாய் கணநேரம் குழம்பியவளாய் கைகளைப் பிசைந்தவாறு நிற்கிருள். அவள் விழிகள் மீண்டுமொருமுறை ஆண் 1ன் பார்வையைச் சந்திக்கின்றன. தன் பார்வையாலேயே அவனைத் திரஸ்கரித்தவளாய் அங்கிருக்கும் மோடாவை சரிப்படுத்துவதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிருள். ஆண் 1 எழுந்து நிற்கிருன். திரியாகப்போன பத்திரிகையைத் தன் கரத்தில் பார்த்ததும் துணுக்குற்றவனுய், என்ன செய்வதென்று புரியாத நிலையில் சில நிமிடம் நின்றபின் மீண்டும் உட்கார்ந்து, அந்தத் திரியான காகிதத்தைத் துண்டு துண்டாகப் பிய்க்கவாரம்பிக்கிருன். இச்சமயத்தில் சின்னப்பெண் வெளிப்புறக் கதவின் வழியாக உள்ளே வருகிருள். மூவரையும் இந்நிலையில் பார்த்ததும் சட்டெனத் திகைத்து நிற்கிருள்.)

சின்னி :—இங்கு என்ன நடக்கிறது? புரியலையே.

(மூவரில் தாய் மட்டும்தான் அவள் பக்கம் பார்க்கிருள்.)

கு. தலைவி :—என்ன சொல்லுகிருயடி நீ!

சின்னி :—தெரியுமா உனக்கு? பள்ளிக்கூடத்திலிருந்து வந்தேனு? வீட்டிலே ஒருத்தரும் இல்லை. இப்போ

வந்தேனு—நீ இருக்கிருய்—டாடி இருக்கிருர். பின்னி அக்காகூட இருக்கிருள்—ஆனுல் ஏன் எல்லோரும் பேசாம இருக்கிறீங்க? ஏதோ......

கு. தலைவி :—(அவளை நோக்கி வந்தவண்ணம்) முதலில் உன் விஷயத்தைச் சொல்லு; வந்ததுமே நீ எங்கே போனே?

கின்னி :—எங்கேயோ போனேன்? வீட்டிலே யாராவது இருந்தால்தானே, நான் வீட்டிலிருக்க?......எனக்குப் பால் காய்ச்சியாச்சா!

கு. தலைவி :—இதோ காய்ச்சுகிறேன்.

கின்னி :—ஹாம்! இனிமேல்தான்காய்ச்சப்போகிருய்—பள்ளிக்கூடத்தில் பசியெடுத்தா சாப்பிடக் கையிலே காசு கிடையாது. வீட்டிற்கு வந்தால் பால் காய்ச்சித் தர மணிக் கணக்காகும்.

கு. தலைவி :—இதோ! இப்பத்தரேன்னு சொன்னேன் அல்லவா? (ஆண் 1ஐ நோக்கி) நீங்கள் போகிறீர்களா? நான் போகட்டுமா?

(கிழித்துப்போட்ட காகிதத்துண்டுகளை இரு கரங்களாலும் திரட்டி எடுத்துக்கொண்டு எழுந்து நிற்கிருன்.)

ஆண் 1 :—(கசப்பாக எதையோ விழுங்குவதுபோல்) நானே போகிறேன்—(கையிலிருக்கும் காகிதத் துண்டுகளை அவன் பார்க்கும் பார்வையில் ஏதோ முக்கியமான தஸ்தாவேஜைத் துண்டு துண்டாக்கிவிட்டது போன்றதொரு பாவம் மிளிருகிறது.)

கு. தலைவி :—நீ இன்று திரும்பவும் ஒரு புத்தகத்தைக் கிழித்துக்கொண்டு வந்திருக்கிருய் அல்லவா?

(நடந்து சென்று கொண்டிருந்த ஆண் 1 இன்னுமொரு முக்கியமான அத்தியாயத்தின் முடிவையும் காண விரும்புபவன்போல் நின்றுவிடுகிருன்.)

கின்னி :—அது தானுகவே கிழிந்துவிட்டது; நானென்ன செய்ய? இன்று தையல் கிளாஸிலே மிஸ் வந்து.....

கு. தலைவி :—மிஸ்ஸெல்லாம் இருக்கட்டும், முதலில் இதைச் சொல்லு.

கின்னி :—தினமும் இப்படித்தான் சொல்லுகிறாய். இன்றைக்காவது நீங்கள் வாங்கித்தராவிட்டால் நாளை ஸ்கூலுக்குபோகமாட்டேன். மிஸ் வந்து கிளாஸிலே எல்லோர் முன்னாலேயும் வந்து......

கு. தலைவி :—நீயும் உன் மிஸ்ஸும், உயிரை வாங்குகிறீர்களே !

கின்னி :—அப்போ என்னை ஸ்கூலிலிருந்து நிறுத்திவிடு—இந்த அசோக்கு சுத்தறானே நாள் முழுவதும்; அப்படி நானும் சுத்தறேன் ஊரை.

மூ. மகள் :—(மிக்க பதட்டமடைந்தவளாய், தங்கையை முறைத்துப் பார்த்த வண்ணமிருக்கிறாள். தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதவளாய்)

ஏய்?......உனக்கு மரியாதையாகப் பேசவராதா? அவன் உன் அண்ணன் தெரியுமா ?

கின்னி :—அவன் நாள் முழுவதும் ஊர் சுற்றவில்லையா ?

மூ. மகள் :—கின்னி !

கின்னி :—நீ இங்கே இருந்தபொழுது என்ன சொன்னாயாம் அவனைப்பற்றி? உனக்கும் அவன் அண்ணன் தான். ஒரு வயசுதான் பெரியவன் என்றாலும் பெரியவன் தானே !

மூ. மகள் :—மம்மி ! நீ இந்தப் பெண்ணின் வாயை நல்லா வளர்த்தி வைத்திருக்கிறாய்.

ஆண் 1 :—இதே வார்த்தையை நான் சொல்லி இருந்தால்!

கு. தலைவி :—முதலில் என்னென்ன சொல்லவேண்டுமோ சொல்லிவிடுங்கள்...அப்புறம் பாருங்கள், நான் வந்து....

ஆண் 1 :—(கதவை நோக்கிச் சென்றவாறே) சொல்ல என்ன இருக்கிறது? அதுதான் எப்பவும் சொல்வதே யில்லையே...... போய் இவளுக்குப் பாலைக் காய்ச்சு கிறேன்.

(கதவின் வழியே வெளியேறுகிருன்.)

கின்னி :—நாளைக்கு எனக்கு ரீல்கள் கட்டாயம் வேண்டும். மிஸ் பானர்ஜி சொல்லிவிட்டாள்—எல்லாப் பெண் களிடமும் இன்று சொன்ருள்—ஃபவுண்டர்ஸ்டே பி. டி.க்கு மூன்று புதிய கிட் வாங்கவேண்டுமாம்.

கு. தலைவி :—எத்தனை !

கின்னி :—மூன்று. எல்லாப் பெண்களும் தைத்துக் கொள்ளப்போகிருர்கள். கிளிப், சாக்ஸ் எல்லாம் இந்த வாரம் வாங்கித்தருகிறேன் என்று நீ சொன்ன யல்லவா? வாங்கித்தந்தாயா? கிழிந்த சாக்ஸைப் போட்டுக்கொண்டு ஸ்கூலுக்குப்போக எனக்கு எத்தனை அவமானமாயிருக்கிறது தெரியுமா?

(ஒரு கணம் ஆழ்ந்த மௌனம் நிலவுகிறது.)

கு. தலைவி :—(இக்கட்டான இந்நிலையிலிருந்து தப்பிக்கும் முயற்சியில்) இதோ பார்! பள்ளியிலிருந்து வந்ததும் பையை இப்படியே திறந்து போட்டுவிட்டுப் போய் விட்டாயே! நான் வந்து மூடி வைத்தேன். இந்தா! முதலில் இதைக் கொண்டுபோய் உள்ளே வைத்து விட்டு வா.

கின்னி :—நான் சொன்னது காதில் வீழ்ந்ததா?

கு. தலைவி :—ஒ, விழுந்தது.

கின்னி :—அப்போ...அதற்கு ஏன் பதில் சொல்லவில்லை? (மூலையிலிருந்த பையை வெடுக்கென்று எடுத்துக்கொண்டு நடந்த வாறே) கிளிப்பு, சாக்ஸு...என்று நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன்; நீ வந்து பையைக்

கொண்டுபோய் உள்ளே வைத்துவிட்டு வா என்கிருயே !

(போகிருள். மூ. மகள் நாற்காலியிலிருந்து எழுந்திருக்கிருள்.)

மூ. மகள் :—இந்த மாதிரி நாங்கள் பேசியிருக்க முடியுமா? இதில் பாதி பேசியிருந்தால்கூட...

கு. தலைவி :—(கண நேரம் தன் வசமிழந்தவளாய், சிந்தனையிலாழ்ந்திருக்கிருள். பின்னர் சிரமப்பட்டுத் தன்னைச் சமாளித்துக்கொண்டு) என்ன சொன்ஞய் ?

மூ. மகள் :—நான் சொன்னேன். வந்து...(சட்டென தாயின் முகபாவத்தைக் கண்டு எச்சரிக்கையடைந்தவளாய்) நீ ஏதாவது யோசித்துக்கொண்டிருந்தாயா மம்மி ?

கு. தலைவி :—இல்லையே.........யோசனையொன்றுமில்லை. (இங்குமங்கும் பார்த்தவாறே) இன்னும் இங்கு ஒழுங்கு படுத்த ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கிறேன். இப்பொழுது யாரோ வரப்போகிருர்கள், நம் வீட்டிற்கு.

மூ. மகள் :—யார் வரப்போகிருர்கள் ?

(ஆண் 1 டம்ப்ளரில் உள்ள பாலில்......ஸ்பூனுல் சர்க்கரையைக் கலந்தவாறே கதவின் வழியாக வருகிருன்.)

ஆண் 1 :—சிங்கானியா. இவளுடைய பாஸ் (Boss) இப்பொழுது வரத்துவங்கியிருக்கும் புதிய உருப்படி.

(டம்ப்ளரை சாப்பாட்டு மேஜையின்மீது வைத்துவிட்டு எவர் பக்கமும் திரும்பாது போகிருன். கு. தலைவி ஆத்திரம் பொங்க அவன் போவதைப் பார்க்கிருள். மூ. மகள் அவளருகே வருகிருள்.)

மூ. மகள் :—மம்மி...(தாயின் விழிகள் சுழன்று மகளின் முகத்தில் நிலைக்கின்றன. அவளால் எதுவும் பேச இயலவில்லை) என்ன மம்மி ?

கு. தலைவி :—ஒன்றுமில்லை.

மூ. மகள் :—ஆனால்...வந்து...

கு. தலைவி :—ஒன்றுமில்லை என்று சொன்னேன் அல்லவா?

(அங்கிருந்து அலமாரியிடம் செல்லுகிறாள். அதைத் திறந்து உள்ளே எதையோ தேடுகிறாள்.)

மூ. மகள் :—(அவள் பின்னாலேயே சென்று) மம்மி...(கு. தலைவி பதிலேதும் கூறாமல் அலமாரியிலிருந்து ஒரு மேஜை விரிப்பை எடுத்துக்கொண்டு அலமாரியை மூடுகிறாள்.) தினம் தினம் பொழுது விடிந்தால் இப்படிப்பட்ட பேச்சுக்களைக் கேட்டு உனக்கு வழக்கமாகிவிட்டது. ஹூம்... இன்னும் எத்தனை நாள் நீ இதையெல்லாம் சகித்துக் கொண்டிருக்கப் போகிறாய்?

(அவள் பேசி முடிக்கும்வரை நின்ற கு. தலைவி மீண்டும் டீப்பாயிடம் சென்று அதன் விரிப்பை மாற்றுகிறாள்.)

மூ. மகள் :—(தாயை நோக்கி வந்தவண்ணம்) இந்த வீட்டிற்கு பாடுபடுவதெல்லாம் நீ ஒருத்திதான்......நீயே...... (தாயின் முகமாற்றத்தைக் கண்டதும் பேச்சு பாதியிலேயே நின்று விடுகிறது.)

(கு. தலைவி, மேஜை விரிப்பைக் கையில் எடுத்துக் கொண்டு ஒரு முறை ஏறிட்டுப் பார்க்கிறாள். பின்னர் பொங்கிவரும் உணர்ச்சி வேகத்தை அடக்கும் முயற்சியில் அந்த மேஜை விரிப்பால் முகத்தை மூடிக்கொள்கிறாள்.)

மூ. மகள் :—(மெதுவான தாழ்ந்த குரலில்) மம்மி.

(கு. தலைவி மெதுவாக மோடாவின் மீதமர்ந்த வண்ணம் மேஜை விரிப்பை முகத்திலிருந்து அகற்றுகிறாள்.)

கு. தலைவி :—இனி என்னால் தாளமுடியாது பின்னி; என்னால் முடியவே முடியாது.

(ஆண் 1 கதவின் வழியாக கருகிப்போன இரண்டு (டோஸ்ட்) ரொட்டித் துண்டுகளை ஒரு பிளேட்டில் எடுத்துக்கொண்டு வருகிறுன். மனைவி கூறுவது அவன் காதில் விழுகின்றது. ஆனுல் இதன் எதிரொலி யைத் தன் முகத்தில் காட்டாமல், வேண்டுமென்றே நிச்சலனமான பாவனையுடன் பால் டம்ப்ளருக்கருகே பிளேட்டை வைக்கிறுன். பின்னர் புத்தக அலமாரியை நோக்கிச் செல்கிறுன். அதன் கீழ் தட்டில் அடுக்கப்பட் டிருக்கும் ஃபைல்களில் எதையோ தேடுகிறுன். மூ. மகள் பேச வாயெடுத்தவள், கணநேர இடை வெளிக்குப் பின் அவனையே உற்றுப் பார்க்கிறுள்.)

மூ. மகள் :—(ஆண் 1 ன் காதில் படவேண்டும் என்ற நினைப்புடன் தாயை நோக்கி) உன்னுல் முடியவில்லையென்றுல் இந்த வீட்டில் வேறு யாரால் முடியும், மம்மி !

(ஆண் 1 ஃபைல் மீது படிந்திருக்கும் தூசியைத் தட்டுவது போல் இரண்டொரு முறை கையால் ஓங்கி ஓங்கித் தட்டுகிறுன்.)

மூ. மகள் :—நானும் விவரம் தெரிந்ததிலிருந்து பார்த் துக்கொண்டு தானிருக்கிறேன். யாவரையும் சகித்துக்கொண்டு, இரவு பகலாய் இந்தக் குடும்பத் திற்காக நீ உன்னையே அழித்துக் கொண்டிருக் கிறுய்......அப்படியிருந்தும்......

(ஆண் 1 இன்னொரு ஃபைலை உருவி இன்னும் சத்தமாய் ஓங்கிப் பலமுறை தட்டுகிறுன்.)

கு. தலைவி :—(பொறுமை இழந்தவளாய் ஆண் 1ன் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு மோடாவைவிட்டு எழுந்திருக்கிறுள். ஆண் 1 இரண்டு ஃபைல்களையும் ஒன்றோடொன்று தட்டுகிறுன்.)

(திடீரென டப்-டப் என்ற ஓசையில் எரிச்சல் அடைந்த வளாய்)

இந்த சமயம் பார்த்துத்தானு வீடெல்லாம் தூசி யைப் பரப்பவேண்டும், உங்களுக்கு ?

ஆண் 1 :—ஜுனேஜா...வின் ஃபைலேத் தேடினேன். இனி தேடவில்லை.

(கைக்கு வந்த இடத்தில் ஃபைல்களைத் திரும்பவும் திணிக்க வாரம்பிக்கிறான். தப்-தப் என காலை ஒசைப்படுத்திக் கொண்டு கின்னி உள்ளே வருகிறாள்.)

கின்னி :—மம்மி பாரேன்.....இவன் என்னைத் தொந்தரவு செய்கிறான்.

மூ. பெண் :—(அதட்டுவதுபோல்) நீ ஏன் இப்படி கத்துகிறாய்?

கின்னி :—கத்துகிறேன்......ஆமாம்......சோக்கு வந்து என்னை.......

மூ. மகள் :—சோக்கு என்ன சோக்கு? அசோக் அண்ணு என்று கூப்பிட முடியாதா உனக்கு?

கின்னி :—அசோக் அண்ணு!......அவனு?......

(கிண்டலாய் சிரிக்கிறாள்)

கு. தலைவி :—இந்த நேரத்தில் அசோக் உள்ளே என்ன செய்கிறான்? நான் நினைத்தேன் அவன் வந்து......

கின்னி :—படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிறான் இன்னமும். நான் போய் எழுப்பினேன். அதற்கு என் தலை மயிரைப் பிடித்திழுக்கிறான்.

(மகன் உள்ளேயிருந்து வருகிறான். முகத்தைப் பார்த்தால் இரண்டு மூன்று நாளாய் ஷேவ் செய்து கொள்ளவில்லை எனத் தோன்றுகிறது.)

பிள்ளை :—யார் தூங்கினது! சுத்தப் பொய்!

மூ. மகள் :—ஷேவ் செய்துகொள்வதையே நீ விட்டுவிட்டாயா?

பிள்ளை :—(மோவாயை வருடியவாறே) பிரஞ்ச் கட் வைத்துக் கொள்ளலாமா என்ற யோசனை......என் முகத்திற்கு எப்படி இருக்கும்? நன்றாக இருக்குமா?

கின்னி :—(பொறுமையிழந்து) என் பேச்சை யாருமே காதில் போட்டுக்கொள்ள மாட்டீர்களா? உள்ளே என் தலைமயிரைப் பிடித்திழுத்தவன் இங்கே வந்து பிரஞ்ச் கட் பத்தி பேசுகிறான்......ஹூம்......

(டைனிங் டேபிளின் மீதிருக்கும் பாலை எடுத்துக் கடகட வெனக் குடிக்கிறாள். ஆண் 1 இன்னமும் ஃபைல்க ளுடன்தான் போராடிக்கொண்டிருக்கிறான். ஒரு ஃபைலைத் திணித்தால் நாலு வெளியே வந்து விழு கின்றன. அவற்றை எடுத்துவைத்தால் முன்னால் வைத்தது பின்னால் விழுந்துவிடுகின்றது.)

கு. தலைவி :—(பிள்ளையை நெருங்கி) உன்னிடம் ஒன்று கேட்கலாமா ?

பிள்ளை :—கேளேன் !

கு. தலைவி :—இந்தப் பெண்ணுக்கு எத்தனை வயசு ?

பிள்ளை :—இதையேதான் மம்மி நான் உன்னிடம் கேட்க விரும்புகிறேன்......பன்னிரண்டு வயதில் இந்தப் பெண்......?

மூ. பெண் :—வயது பதிமூன்று !

கு. தலைவி :—பதிமூன்று வயதுப் பெண் எத்தனை பெரிய வளாக இருப்பாள்?

பிள்ளை:—பதிமூன்று வயதுப் பெண் பதிமூன்று வயதுக்கு ஏற்ப பெரியவளாக இருப்பாள். அப்படித்தானிருக் கவும் வேண்டும். ஆனால் இந்தப் பெண்?...

கு. தலைவி :—அவள் குழந்தையல்ல...... நீ மயிரைப் பிடித்திழுப்பதற்கு......

(சின்னவள் அசோக்கின் முன்னே வந்து நாக்கை நீட்டி கோணங்கி காட்டுகிறாள். ஆண் 1 ஃபைல்களை ஒரு வாறு அடுக்கிவிட்டு எழுந்திருக்கிறான்.)

பிள்ளை :—அப்படியென்றால் நான் செய்தது தவறு என்று நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படித்தானே ?

கு. தலைவி :—ஆமாம். கட்டாயமாக.

பிள்ளை :—உண்மையில் நான் அவள் கையிலிருந்து இந்தப் புத்தகத்தைத்தான் பிடுங்கினேன்.

ஆண் 1 :—(எதிலும் பட்டுக்கொள்ளாமல் இருக்கவேண்டுமென்ற உறுதியை நிறைவேற்ற இயலாது இரண்டடி முன்னே வந்து) என்ன புத்தகம் ?

கின்னி :—இவன் பொய் சொல்கிறன். நான் இவனுடைய புத்தகத்தை எடுக்கவே இல்லை......

(டோஸ்ட் இருக்கும் பிளேட்டை கையில் எடுத்துக்கொண்டு மேஜையின் முன்னே அமருகிறுள்.)

ஆண் 1 .—(பிள்ளைக்கு மிக அருகில் சென்று) என்ன புத்தகம் அது ?

பிள்ளை :—(புஷ் ஷர்ட்டின் உள்ளேயிருந்து புத்தகத்தை எடுத்துக் காண்பித்து) இந்தப் புத்தகம் தான்.

கின்னி :—பொய்...... சுத்தப் பொய்...... நான் இந்தப் புத்தகத்தைக் கண்ணுல்கூடப் பார்க்கவில்லை.

பிள்ளை :—(முழித்துப் பார்த்து) பார்க்கவில்லை ?

கின்னி :—(சற்றே அடங்கி பிடிவாதம் நிறைந்த குரலில்) நீ தலைகாணிக்குக் கீழே வைத்துக்கொண்டு தூங்கினுல்கூட ஒன்றுமில்லை......நான் கொஞ்சம் எடுத்துப் புரட்டினுல்கூட......

ஆண் 1 :—(கரத்தை நீட்டி) நான் பார்க்கலாமா ?

பிள்ளை :—(புத்தகத்தை மீண்டும் புஷ்ஷர்ட்டுக்குள் வைத்துக்கொண்டு) இல்லை......நீங்கள் பார்க்கக்கூடியதல்ல. (அம்மாவிடம்) இப்பொழுது என்னிடம் கேளுங்கள் மம்மி—இவளுக்கு எத்தனை வயதென்று ?

மூ. பெண் :—அசோக் ! இது காஸனேவா பற்றிய புத்தகமல்ல ?

ஆண் 1 :—(உரத்த குரலில்) நிறுத்துங்கள் (ஒவ்வொருவராக எல்லோரையும் பார்த்தபின்) இங்குள்ள யாரிடமிருந்

தாவது என் வயதென்ன என நான் அறிந்து கொள்ளலாமா ?

(சில நிமிடம் மௌனம். சின்னப் பெண்ணின் வாயும், கால்களும்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன.)

கு. தலைவி :—இப்பொழுது யார் என்ன சொல்லிவிட்டார் களென்று...... ?

ஆண் 1 :—(ஒவ்வொரு சொல்லுக்கும் அழுத்தம் கொடுத்து) என் வயது என்னவென்று கேட்கிறேன் ? எனக்கென்ன வயது ?

கு. தலைவி :—(நிலைமையைச் சமாளிக்கத் தன்னை தயார் செய்து கொண்டு) இதை நீங்கள் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமா ?

ஆண் 1 :—ஆமாம். இன்று கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த வாழ்க்கையெனும் சுமையைச் சுமக்க ஆரம்பித்து எத்தனை ஆண்டு களாகிவிட்டன ? இதில் எத்தனை ஆண்டுகள் இந்தக் குடும்பத்தைக் கவனிப்பதில் கழிந்திருக்கின்றன ? இதற்கெல்லாம் அப்புறம் இன்று நான் எங்கே ? எந்த இடத்தில் வந்து நிற்கிறேன் ? என் நிலைதான் என்ன ? யாராலும் சரி...... என்னிடம் ஏன் ஏறு மாருகப் பேசுகிருர்கள் ? ஒவ்வொருவரும் என் னிடம் ஏன் மரியாதையில்லாமல் நடந்துகொள் கிருர்கள் ?

பிள்ளை :—(தன் செயலுக்கு விளக்கம் தரும் முயற்சியில்) டாடி !.... நானெதற்காகச் சொன்னேன் என்ருல், வந்து...... இது......

ஆண் 1 :—(இடைமறித்து) ஒவ்வொருவரிடமும் இதற்கொரு காரணம் தயாராக இருக்கிறது, இருக்கும். இவள் இதற்காகச் சொன்ருள், அவன் இதற்காகச் சொன்ருன்...... என்ற காரணம் இருக்கும். இந்த

வீட்டிலுள்ள யார் வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும், எந்தக் காரணத்திற்காகவும், என்ன வேண்டுமானாலும் கூறினாலும் அதை வாயைத் திறக்காமல் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். அதுதான் இந்த வீட்டில் எனக்குள்ள ஸ்தானமா? எப்பொழுது பார் அதட்டல், அலட்சியம்......இதுதான் இத்தனை வருடங்களாக நான் சம்பாதித்தது! அப்படித்தானே!

கு. தலைவி :—(வெறுப்புடன் அவனை நோக்கியவளாய்) இதையெல்லாம் யாரிடம் சொல்லுகிறீர்கள்?

ஆண் 1 :—யாரிடம் சொல்லமுடியும்? கேட்க யாரிருக்கிறார்கள்? யார் கேட்கவேண்டுமோ அவர்கள் என்னையொரு ரப்பர் ஸ்டாம்பாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவசியம் ஏற்பட்டால் இந்த ரப்பர் ஸ்டாம்பின் முத்திரையைக் குத்தி...

கு. தலைவி :—நீங்கள்...நீங்கள் மிகப் பெரிய வார்த்தையைச் சொல்லிவிட்டீர்கள்!

பிள்ளை :—(தாயை அடக்க நினைத்தவனாய்) மம்மி...

கு. தலைவி :—இரு. இதைமட்டும் கேட்கவிடு.....ரப்பர் ஸ்டாம்ப் என்றால் என்ன அர்த்தம்? ஒரு அதிகாரம், ஒரு மரியாதை, ஒரு அந்தஸ்து...இதுதானே.

பிள்ளை :—(மீண்டும் முயற்சிக்கிறான்) மம்மி! கொஞ்சம் கேளேன்!

கு. தலைவி :—(அவனைப் பொருட்படுத்தாது) இதெல்லாம் இந்த வீட்டில் உள்ளவர்களுக்கு இவரிடமிருந்து எப்பொழுதெல்லாம் கிடைத்திருக்கிறது? எந்த அர்த்தத்தில் இவர் இப்படிச் சொல்லலாம்? வந்து...

ஆண் 1 :—எந்த அர்த்தத்திலும் இல்லை. இந்த வீட்டில் நானொரு ரப்பர் ஸ்டாம்ப்கூட இல்லை. போதுமா? வெறும் ரப்பர்த் துண்டு—தேய்த்துத் தேய்த்து

அழிக்கிறுர்களே ரப்பர்! அதுதான்! இப்படிப்பட்ட நிலையிலும் இந்த வீட்டிலிருக்கவேண்டும் என்பதற்கு ஒரு காரணம், ஒரே ஒரு காரணம் யாரேனும் கூற முடியுமா ?

(யாவரும் மௌனமாயிருக்கின்றனர்.)

கூறமுடியவில்லை யல்லவா ?

கு. தலைவி :—நான் உங்களிடம் கேட்டது ஒரு சின்ன விஷயம்...

ஆண் 1 :—ஆமாம் ஆமாம்......இது ரொம்பவும் சின்ன விஷயம்தான். அதிகாரம், அந்தஸ்து, மரியாதை யெல்லாம் வெளியாரிடமிருந்துதான் இந்த வீட்டிற்கு கிடைக்கும். இந்தவீட்டில் இன்றுவரை நடந்த தெல்லாம், இனி நடக்கப்போவது எல்லாமே வெளியாரை மட்டும்தான் நம்பி இருக்கிறது. என்னை நம்பி இதுவரை எல்லாமே குட்டிச்சுவராகப் போய் விட்டது. இனியும் போய்விடும். (பிள்ளையைச் சுட்டிக் காட்டி) இவன் இன்று வேலைவெட்டி இல்லாமல் ஏன் திரிந்துகொண்டிருக்கிறுன் ? என்றுல்தான். (மூத்த மகளைச் சுட்டிக் காட்டி) இவள் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் ஏன் வீட்டிலிருந்து ஓடிப் போனுள் ?— என்றுல்தான்.

(மனைவியின் முகத்திற்கு நேரேவந்து நின்று)

நீ........நீயும் இத்தனை வருடங்களாக எதற்காக... ...வந்து ?

கு. தலைவி :—(ஆத்திரத்துடன் மற்றவர்களை நோக்கி) கேட்டுக் கொண்டுதானே இருக்கிறீர்கள் ?

ஆண் 1 :—என்னுடைய வாழ்க்கையை வீணடித்துக் கொண்டதற்கு நான்தான் பொறுப்பு. உன் வாழ்க்கையை நாசமாக்கியதற்கும் நான்தான் பொறுப்பு. இவர்களெல்லோருடைய வாழ்க்கையையும் நாச-

மாக்கிய குற்றமும் என்னுடையதுதான். அப்படியும் இந்த வீட்டில் நான் ஏன் ஒட்டிக்கொண்டு இருக்கிறேன் தெரியுமா? எனக்குள்ளே இருக்கும் மனிதன் சோம்பேறி, கையாலாகாதவன், சுகவாசி. என் எலும்பெல்லாம் துருப்பிடித்துக் கிடக்கிறது.

கு. தலைவி :—உண்மையில் நீங்கள் இப்படி உணருவதாக எனக்குத் தெரியாது......

ஆண் 1 :—உண்மையாகவே நான் இப்படித்தான் உணர்கின்றேன். நான் ஒரு செல்லுப்பூச்சி. இந்த வீட்டை உள்ளூர செல்லரித்துச் சாப்பிட்டுவிட்டேன் என்பது எனக்குத் தெரியும். (வெளிக் கதவை நோக்கி சென்றவாறே) ஆனால் இப்பொழுது வயிறு நிரம்பி விட்டது. எனக்கு என்றென்றைக்குமாய் நிறைந்து விட்டது. (கதவருகில் நின்று) இன்னும் அரித்துச்சாப்பிட இங்கே என்ன இருக்கிறது? நான் இங்கே இனி ஏன் இருக்கவேண்டும்?

(போய்விடுகிறான். சில நிமிடம்வரை யாவரும் பிரமித்து ஜடமாக நிற்கின்றனர். பின்னர் சின்னவள், டோஸ்டை எடுத்து வாயில் வைத்துக்கொள்கிறாள்.)

மூ. மகள் :—மம்மி, நீ என்ன நினைக்கிறாய்?

கு. தலைவி :—ராத்திரிக்குள் வந்துவிடுவார். செவ்வாய், வெள்ளி அடுத்தடுத்து இந்த வீட்டில் இதெல்லாம் நடந்துகொண்டுதானே இருக்கிறது!

கின்னி :—(வாயிலிருந்த டோஸ்டை பிளேட்டில் எறிந்து) தூ... தூத்தூ......

மூ. மகள் :—(மிகுந்த கோபத்துடன்) உனக்கென்ன வந்து விட்டது?

கின்னி :—எனக்கென்னவா? இது டோஸ்டா, கரித் துண்டா?

கு. தலைவி :—(பற்களைக் கடித்துக் கொண்டு) இங்கே வா!

கின்னி :—வரமாட்டேன்.

மூ. பெண் :—வரமாட்டாய்?

கின்னி :—வரமுடியாது. (சட்டென வெளியே சென்றவாறு) உள்ளே போனால் மயிரைப் பிடித்திழுக்கின்றான். வெளியே வந்தால் தாட்பூட் என்ற மிரட்டல்...பசித்தால் கருகிக் கிடக்கும் ரொட்டித் துண்டு—இன்னும் அங்கே வந்து கன்னத்தில் அறை வாங்கிக்கொள்ள வேண்டுமா?

(போய்விடுகிறாள்)

பிள்ளை :—(அவளைப் பின்னால் தொடர விரும்பியவனாய்) பார்த்துக் கொள்கிறேன் இவளை! எப்படியாவது இந்தப் பெண்ணை......நான். (கதவை நோக்கிச் செல்பவனை தாயின் குரல் தடுக்கிறது.)

கு. தலைவி :—இந்தா......

பிள்ளை :—(எப்படியும் அங்கிருந்து சென்றுவிட விரும்பியவனாய்) முதலில் நான் போய் அவளை......

கு. தலைவி :—முதலில் இங்கே வா; நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் போ.

(ஏதோ மிக முக்கியமான காரியத்திற்குச் செல்பவனைத் தடுத்துவிட்டது போன்றதொரு முகபாவத்துடன் அவன் திரும்பி வருகிறான்.)

பிள்ளை :—சொல்லு.

கு. தலைவி :—இந்த சமயம் நீ எங்கும் வெளியே போக வேண்டாம். இன்னும் சற்றுநேரத்தில் அவர் வரப் போகிறார். வந்து......

பிள்ளை :—(யார் வந்தால் எனக்கென்ன என்ற முகபாவத்துடன்) யார் வரப்போகிறார்?

மூ. பெண் :—மம்மியின் Boss......ஆமாம் அவர் பெயரென்ன?

பிள்ளை :—ஓகோ அந்த மனிதனு?

மூ. பெண் :—நீ அவரைச் சந்தித்திருக்கிருயா?

பிள்ளை :—இரண்டு தடவை.

மூ. பெண் :—எங்கே?

பிள்ளை :—ஏன்? இங்கேதான். இந்த வீட்டில்.

கு. தலைவி :—(மூத்த மகளிடம்) இரண்டு தடவையும் இவனுக்காகத்தான் அவரை அழைத்திருந்தேன். இன்றும் இவனுக்காகத்தான்...

பிள்ளை :—(சற்று காரமாக) எனக்காகவா? எனக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்?

மூ. பெண் :—மம்மி அவர் மூலமாக உனக்கு வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிருள் இல்லையா?

பிள்ளை :—எனக்கு வேண்டாம் அந்த வேலை...அதிலும் அந்த மனிதன் மூலமாக வேண்டவே வேண்டாம்.

மூ. பெண் :—ஏன்? அந்த மனிதனுக்கென்ன?

பிள்ளை :—அவன் மனிதனு? பீட்ருட்டா? நாகரிகமாய் உட்கார, பேசத் தெரியவில்லை அவனுக்கு.

கு. தலைவி :—அவருக்கு ஐயாயிரம் ரூபாய் சம்பளம். ஒரு காரியாலயத்தையே நிர்வகிக்கிருர்.

பிள்ளை :—ஐயாயிரம் சம்பளம். காரியாலயத்தையே கட்டி மேய்க்கிருர். ஆனுல் பாண்ட் பட்டனைக்கூட சரியாக......

கு. தலைவி :—அசோக்!

பிள்ளை :—உன் Boss ஆக மட்டும் இருந்திராவிட்டால், அன்றைக்கே காதைப் பிடித்து இந்த வீட்டைவிட்டு வெளியேற்றி இருப்பேன். சோபாவிலே காலைப் பரப்பிக்கொண்டு என்னவோ யோசனை...தொடையை சொரிந்துகொண்டு பார்வை வேறெங்கேயோ...... இங்கே பேசுகிறது என்னிடம். (அவரைப்போல் நடித்துக் காட்டுகிருன்.) உங்கள் அரசியல் கொள்கைகள் என்ன

வென்று சொல்லமுடியுமா? அதாவது என்னுடைய அரசியல் கொள்கைகள்......சொறியும் அதற்கு ஆயின்ட்மெண்ட்டுதான்.

கு. தலைவி :—(நெற்றியைப் பிடித்துக்கொண்டு மூத்தமகளிடம்)...... இப்படி இருக்கிறார்கள் இவர்கள். நானோ இவர்களுக் காக இரவு பகலாய் பாடுபட்டுக் கொண்டிருக் கிறேன்.

பிள்ளை :—முதலில் ஐந்து செகண்ட் கண்ணையே பார்த்துக் கொண்டிருப்பான். பிறகு உதட்டை வலப் பக்கமாக லேசாய் அழுத்தி ஒரு புன்னகை. பின்னர் ஒவ்வொரு வார்த்தையாகக் கடித்து மென்று—(அதே குரலில் பேசுகிறான்) 'இன்றைய இளைஞர்களிடையே அராஜகம் மிகுந்திருப்பதைப்பற்றித் தங்கள் கருத் தென்ன?......தேடித் துருவி அப்படியே அரசினரின் மொழி...தூய தமிழ்'—ஹூம் இளைஞர்களிடையே! அராஜகம்!......

கு. தலைவி :—ஹூம்......அப்புறம்!

பிள்ளை :—அப்புறமென்ன?

கு. தலைவி :—நீ......நீ என்னதான் நினைத்துக்கொண் டிருக்கிறாய்?

பிள்ளை :—எதைப்பற்றி?

கு. தலைவி :—உன்னைப் பற்றித்தான்.

பிள்ளை :—எனக்கென்ன வந்துவிட்டது?

கு. தலைவி :—வாழ்க்கையில் நீ உருப்படியாக ஏதாவது செய்ய வேண்டாமா? அல்லது அப்பாவைப் போலவே......

பிள்ளை :—(சீற்றத்துடன்) ஒவ்வொரு பேச்சிலும் வேண்டு மென்றே அவரை ஏன் இழுக்கிறாய்?

கு. தலைவி :—படிப்பு...அதையும் நீ...பூராவாக முடிக்க வில்லை. (Air Freeze) ஏர் ப்ரீஸில் வேலை வாங்கித்

தந்தேன். ஆறு வாரத்தில் அதையும் விட்டுவிட்டாய். இப்பொழுது மீண்டும் முயற்சியைத் துவங்கலாமா என்ற எண்ணம்...ஆனால்...

பிள்ளை :—எதற்காக முயற்சிக்கிறாய்? உன்னை நான் கேட்டேனா?

மூ. பெண் :—அப்படியென்றால்......இதன் அர்த்தம்...... நீ வாழ்க்கை முழுவதும் ஒன்றுமே செய்ய விரும்பவில்லை—அப்படித்தானே?

பிள்ளை :—அப்படி நான் சொன்னேனா?

மூ. பெண் :—வேலை பார்ப்பதைத் தவிர உன்னால் வேறு என்ன......

பிள்ளை :—அதை என்னால் கூற முடியாது......என்னால் இதை மட்டும்தான் கூற முடியும்......எனக்கு மனதார எதில் இன்டிரஸ்ட் இல்லையோ...அதை...

கு. தலைவி :—உனக்கு இன்டிரஸ்ட் வந்து...

மூ. மகள் :—மம்மி...கொஞ்சம் இரேன்.

கு. தலைவி :—நீ சும்மாயிரு. நான் பேசுகிறேன். (பிள்ளையிடம்) உனக்கு இன்டிரஸ்ட் மூன்றே மூன்று விஷயங்களில்தான். நாள் முழுவதும் தூங்க, படங்களைக் கத்தரிக்க. அப்புறம்......வீட்டிலிருந்து அது இது எதையாவது எடுத்துச்சென்று .....

பிள்ளை :—(கடுமையான கசப்பு நிறைந்த பார்வையுடன்) இதை வீடென்றா சொல்லுகிறாய்?

கு. தலைவி :—பின்னென்னவென்று நினைத்துக்கொண்டு இங்கே இருக்கிறாய் நீ!

பிள்ளை :—நான் இதை......

மூ. மகள் :—(அவனைப் பேசவிடாமல் தடுக்க) இதோ பார் அசோக். மம்மி எதற்காக சொல்லுகிறாள் என்றால்...

பிள்ளை :—எனக்குத் தெரியாதா? நீ போய்விட்டாய் இங்கேயிருந்து. நான் போகவில்லை. இன்னமும் இங்கேயே இருக்கிறேன்.

கு. தலைவி :—(நிராசையுடன்) பின் நீயும் ஏன் போக......

மூ. மகள் :—(இடைமறித்துக் கண்டிக்கும் குரலில்) என்ன மம்மி இது இப்படியெல்லாம் பேசிக்கொண்டு......

கு. தலைவி :—என்ன பேசுகிறேன் நான். நீங்களெல்லோரும் என்னை என்னவென்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? மாவை அரைத்து அரைத்துத் தள்ளுகிறதே இயந்திரம், அந்த மாதிரி இரவு பகலாய் உழைத்து உழைத்து ஓடாகிக்கொண்டிருக்கிறேனே? உங்களில் யாருக்கேனும் கிஞ்சித்தாவது இந்த எண்ணம் இருக்கா? நான் வந்து எப்படி...

(இதற்கிடையே வெளிக் கதவருகில் ஆண் 2 உருவம் தெரிகிறது. கதவை லேசாக டொக் டொக்கென்று தட்டுகிறான். திடுக்கிட்ட கு. தலைவி அந்தப் பக்கம் திரும்புகிறவள் தான் கூற வந்த வார்த்தைகளை அப்படியே விழுங்கிக் கொள்கிறாள். எப்படியோ சமாளித்து குரலை மாற்றிக்கொண்டு)—

நீங்களா? ஓ! வந்துவிட்டீர்களா? வாருங்கள் உள்ளே வாருங்கள்.

மூ. பெண் :—(உரிமையுடன் கதவருகில் நடந்தவளாய்) வாருங்கள்.

(ஆண் 2 தனக்குரிய தோரணையுடன் பதில் வணக்கம் செலுத்திவிட்டு உள்ளே வருகிறான்.)

கு. தலைவி :—இவள்தான் என் மூத்த பெண்—பின்னி. அசோக்கைதான் நீங்கள் முன்பே பார்த்திருக்கிறீர்கள்.

ஆண் 2 :—அச்சா......அச்சா......இவள்தான் அந்தப் பெண்ணா! இவளைப்பற்றி நீ கூறினாய் அல்லவா? போன வருடம்தானே இவளுக்கு ஆபரேஷன்? அரேரே, சாரி......அது மிஸஸ் மாதுரின் பெண்

அல்லவா?...(கண்களைச் சுருக்கிக்கொண்டு) மிஸஸ் மாதுரின் பெண்ணிற்கா? இல்லையே!...ஹூம்...வேறு யாரோ ஒரு பெண் என்று நினைக்கிறேன்.

கு. தலைவி :—இப்படி சோபாவில் வந்து உட்கார்ந்து கொள்ளுங்கள்.

(சோபாவை நோக்கி வந்துகொண்டிருக்கும் ஆண் 2-ன் விழிகள் இளைஞனின் பார்வையைச் சந்திக்கின்றன. இளைஞன் அநாயாசமாகக் கரம் குவித்து வணக்கம் தெரிவிக்கிறான். ஆண் 2 மீண்டும் அதே பாணியில் பதில் வணக்கம் தெரிவிக்கிறான்.)

ஆண் 2 :—(உட்கார்ந்தவாறே) எத்தனையோ பேர்களைச் சந்திக்கிறேனா அதனால். (கைகடிகாரத்தைப் பார்த்து) ஏழடிக்க ஐந்து நிமிடம் இருக்கிறது. ஏழு மணிக்குள் வந்து விடவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். விசேஷமான சந்திப்பிற்காக...இன்னும் பலரை அழைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது. (மூத்த பெண்ணை உற்றுப் பார்த்தவாறே) இவளைப்பற்றி நீ ஏதோ சொல்லி இருக்கிறாய்......எந்தக் காலேஜில் படிக்கிறாள் இவள்?

கு. தலைவி :—இப்பொழுது படிக்கவில்லை.

ஆண் 2 :—ஆமாம். ஆமாம். நீதான் சொன்னாயே! (மூ. பெண்ணை) உட்காரம்மா......(கு. தலைவியிடம்) நீயும் உட்காரேன்?

(கு. தலைவி சோபாவின் அருகே நாற்காலியில் அமருகின்றாள். மூ. பெண் குழம்பியவளாய் நிற்கிறாள்.)

கு. தலைவி :—உட்காரேன்! ஏன் நிற்கிறாய்?

மூ. பெண் :—இவர் சீக்கிரம் கிளம்பிவிடுவாரே! அதனால் தேநீர் ஏதாவது போடலாமா என்று...

ஆண் 2 :—வேண்டாம்.....வேண்டாம். தேநீர் கீநீரெல்லாம் இந்த நேரத்திலே வேண்டாம். நான் அதிகமாக

தேநீர் குடிக்கிறதில்லே. ஒரு கட்டுரை படித்தேன்! எங்கே படித்தேன்! ரீடர்ஸ் டைஜஸ்ட் என்றுதான் நினைக்கிறேன்......அதிகமாக தேநீர் குடித்தால்... (தொடையைச் சொரிந்து கொள்கிருன்.) இந்த ரீடர்ஸ் டைஜஸ்ட்டில் என்னமாதான் வெளியிடுகிருன்! இங்கேயும் பத்திரிகை போடுகிருர்களே...கதையாம் கதை. ஒரு நல்ல பத்திரிகை கிடைக்கிறதா பார்க்க! கொஞ்ச நாட்களுக்கு முன்னே ஒரு அமெரிக்கன் வந்தான். அவன் சொன்னுன்...

(இவ்வளவு நேரம் ஒரு புறமாய் தள்ளி நின்றுகொண்டிருந்த இளேஞன் இப்பொழுது அவனருகில் நெருங்கி வந்து விடுகிருன்.)

பிள்ளை :—(அம்மாவிடம்) மம்மி...வந்து...

கு. தலைவி :—கொஞ்சம் இரு. (ஆண் 2-டம்) ஒரே ஒரு கப் கூட சாப்பிடமாட்டீர்களா?

ஆண் 2 :—ஊஹூம். வேண்டாம்...நம்ப கம்பெனிக்கு இன்டர்நேஷனல் தொடர்பு இருக்கிறதல்லவா? இதனுல் எல்லா நாட்டினரும் என்னைச் சந்திக்க வருகிருர்கள். சமீபத்தில் ஜப்பானிலிருந்து ஒரு பிரதிநிதி கோஷ்டியே வந்திருந்தது......என்ன வேண்டுமென்றுலும் சொல்லிக்கொள்ளுங்கள்...... ஜப்பான் இவங்க எல்லாரையும் மூக்கணுங் கயிறு போட்டுக் கட்டி வைத்திருக்கிறது இப்போ. நான் சமீபத்தில் போன வருடம் ஜப்பானின் தொழில் துறை முன்னேற்றம் பற்றிய புள்ளி விவரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன்...வந்து...

பிள்ளை :—மன்னியுங்கள்...நான் வந்து...

கு. தலைவி :—கொஞ்சம் இரு என்று சொன்னேன் அல் லவா?...(ஆண் 2-டம்) உங்களுக்கு காப்பி பிடிக்கு மென்றுல்......

ஆண் 2 :—காப்பியும் வேண்டாம், தேநீரும் வேண்டாம். காப்பி குடிப்பதைப்பற்றி ஒரு சம்பவம் சொல்லட்டுமா! இப்ப நடந்ததன்று. எத்தனேயோ வருடங்களுக்கு முந்திய சம்பவம். அப்போ நான் எங்கள் கல்லூரியின் இலக்கிய சங்கத்தின் மந்திரியாக இருந்தேன். (மனதிற்குள் அந்நிகழ்ச்சியை ரசித்துக் கொண்டு) ஹாம்...ஹாம்...ஹா...ஹா...ஹா...இலக்கிய சம்பந்தப்பட்ட விஷயங்களில் அந்தக் காலத்திலிருந்தே எனக்கு மிகுந்த ஆர்வமுண்டு...அதனுல் (மூத்த பெண்ணேயும் பிள்ளேயையும் பார்த்து) நீங்களும் உட்காருங்க...இப்படி...

(மூத்த பெண் உட்காருகிருள்.)

பிள்ளே :—வந்து...நான்...

கு. தலேவி :—(எழுந்து) உட்காரு...நான் போய் ஏதாவது சாப்பிடக் கொண்டு வருகிறேன்.

(பிள்ளேயை உட்காரச் சொல்லிவிட்டு முன்புறக் கதவு வழியாகச் செல்லுகிருள். இளேஞன் அதிருப்தி முகத்தில் படர அவளேயே பார்க்கிருன். பின்னர் நடந்தவாறே மேஜையினருகே போய் நிற்கிருன். மூத்த பெண்ணின் பார்வையைச் சந்திக்க நேரிடுகையில் முகத்தைச் சுளிக்கிருன். பின்னர் நாற்காலியைச் சோபாவின் பக்கம் திருப்பிப் போட்டுக்கொண்டு உட்காருகிருன்.)

ஆண் 2 :—(மூ. பெண்ணிடம்) உன்னே எங்கேயோ பார்த்திருக்கிறேன்...இல்லேயா ?

மூ. பெண் :—என்னேயா ? நீங்களா ?

ஆண் 2 :—ஏதாவது இன்டர்வ்யூவில்!

மூ. பெண் :—இல்லேயே.

ஆண் 2 :—ஆனுல் எங்கேயோ பார்த்த மாதிரியே இருக்கிறது...வேறு யாராவது பெண்ணுகை இருக்கலாம்.

அப்படியே உன்னைப் போலவே இருந்தாள்......இது ரொம்பவும் விசித்திரமான விஷயம் இல்லையா ?

மூ. பெண் :—எது ?

ஆண் 2 :—ரொம்ப பேர்—ஒரே மாதிரி...ஒரே ஜாடை யாக இருப்பது ! என் அங்கிள் ஒருத்தர் இருக்கிருர். பின்னுலிருந்து பார்த்தால் அப்படியே மொரார்ஜி பாய் மாதிரியே இருக்கும்.

(இதற்கிடையே இளைஞன் மேஜை டிராயரைத் திறந்து படங்களை எடுத்து மேஜையின்மீது பரப்புகிருன்.)

பிள்ளை :—எங்கள் ஆன்ட்டி ஒருத்தி இருக்கிருள். கழுத்தை வெட்டிவிட்டுப் பார்த்தால் "ஜீனு லோலோ பிரிஜ்டா" மாதிரியே இருப்பாள்.

மூ. பெண் :—வாழ்க்கையின் இந்த விசித்திரங்களையெல்லாம் பார்த்தால்...

பிள்ளை :—ஜப்பானின் தொழில்துறை......என்ன அது ? ஏதோ கூறிக்கொண்டிருந்தீர்களே !

(கு. தலைவி தின்பண்டங்களை ஒரு தட்டில் நிரப்பி கதவின் வழியாக வருகிருள்.)

கு. தலைவி :—காப்பி குடிப்பதுபற்றி ஏதோ கூறிக் கொண்டிருந்தீர்களே !

ஆண் 2 :—ஆமாம்...வந்து...வந்து...அதுதான்.

கு. தலைவி :—கொஞ்சம் எடுத்துக்கொள்ளுங்கள்.

ஆண் 2 :—ஓ...சரி...சரி...கட்டாயம் எடுத்துக்கொள் கிறேன். (மூ. பெண்ணிடம்) நீயும் எடுத்துக்கொள். (கு. தலைவியிடம்) உட்கார்ந்துகொள்ளலாமே இனி !

கு. தலைவி :—(மோடாவின்மீதமருகிருள்.) அந்த விஷயத்தைப் பற்றிக் கொஞ்சம் கவனித்தீர்களா ?

ஆண் 2 :—எந்த விஷயம் ?

கு. தலைவி :—அதுதான் உங்களிடம் சொல்லியிருந்தேனே! உங்களுக்குத் தெரிந்தது, ஒரு நல்ல இடமாக இருந்தால்.

ஆண் 2 :—(தின்றுகொண்டே) ரொம்ப ருசியாக இருக்கிறது.

கு. தலைவி :—உங்களுக்கு நினைவிருக்கிறதல்லவா?

ஆண் 2 :—நினைவிருக்கிறது. நீ ஒரு தடவை ஏதோ சொன்னுய்! உன் கசின் யாருக்காகவோ...சொல்லியிருந்தாய் அல்லவா? இல்லையில்லை......அது வந்து மிஸஸ் மல்ஹோத்திரா அல்லவா சொன்னுள். ஆமாம், நீ யாருக்காகச் சொன்னுய்?

கு. தலைவி :—(பிள்ளையின் பக்கம் திரும்பி) இவனுக்குத்தான்.

(ஆண் 2 திரும்பி இளைஞனைப் பார்க்கிறுன். இளைஞன் ஒரு செயற்கைப் புன்னகையை வலிய வழியவிடுகிறுன்.)

ஆண் 2 :—ஓ...கோ...இவன் என்ன பாஸ் பண்ணியிருக்கிறுன்? B.Com.மா?

கு. தலைவி :—நான் சொல்லியிருந்தேனே! B.Sc. படித்துக்கொண்டிருந்தான்...மூன்றும் வருடத்தில் உடம்பிற்கு வந்துவிட்டது...அதனுல்...

ஆண் 2 :—அச்சா...அச்சா......ஆமாம்......நீ சொல்லியிருந்தாய்...கொஞ்ச நாள் ஏர்-இண்டியாவில்...

கு. தலைவி :—ஏர்...ப்ரீஸில்.

ஆண் 2 :—எஸ்...ஏர்........ல் ஹோ...ஹோ...ஹூம்...

(மீண்டும் திரும்பி இளைஞனைப் பார்க்கிறுன். இளைஞன் மீண்டும் முன்மாதிரியே புன்னகைக்கிறுன்.)

இங்கே வாப்பா! ஏன் அங்கே உட்கார்ந்திருக்கிறுய்?

பிள்ளை :—(மூக்கின் பக்கம் ஜாடைகாட்டி) எனக்குக் கொஞ்சம்..

ஆண் 2 :—ஓகோ...சரி...சரி...அச்சா...இந்த நாட்டின் க்ளைமேட்டே இப்படி இருக்கிறது. என்ன செய்ய!

க்ளேமேட்டைப் பொறுத்த வரையில் எனக்கு மிகவும் பிடித்த நாடு...இத்தாலிதான். போன வருடம் பெரும்பாலும் வெளிநாட்டு சுற்றுப் பிரயாணம் தான். ஐரோப்பா முழுவதும் சுற்றினேன். இத்தாலியில் கிடைத்த அந்த சுகம் வேறே எங்குமே கிட்டவில்லை. இத்தாலியில் சிறப்பு என்ன தெரியுமோ ?......ரொம்ப ருசியாய் இருக்கிறது. எங்கே வாங்கினுய்? (கடிகாரத்தைப் பார்த்து) இங்கேயே ஏழு-ஐந்தாகிவிட்டதே.........

கு. தலைவி :—இங்கேதான் தெரு முனையில் ஒரு கடையிருக்கிறது.

ஆண் 2 :—நல்ல கடையா ? நான் அடிக்கடி சொல்லுவதுண்டு. சாப்பாடு...உடை...இந்த இரண்டு விஷயங்களிலும்......அந்த அமெரிக்கன்கூட இதைத்தான் சொன்னுன். எத்தனை வேறுபாடுகள் இந்த நாட்டில் ? உடையில், உணவில், நடையுடை பாவனையில்......அவன் மட்டுமென்ன ? ஒவ்வொருவரும்......வெளிநாட்டுக்காரனும் இதை ஒப்புக் கொள்ளுகிருனே......ரஷியன், ஜர்மன் யாராணுலென்ன ?......உலகத்தில் கெடுபிடி யுத்தத்தின் (cold war) அழுத்தத்தைக் குறைப்பதில்...நமக்கு உண்மையான பங்கு இருக்கிறது என்றுல்......இது தான்.........உன் புடவையையே எடுத்துக்கொள்வோமே! எத்தனை சாதாரணமாய் இருக்கிறது ! ஆனுலும்கூட.........இந்த ஹர்த்தால் கதவடைப்பு இதெல்லாம் இல்லாமலிருந்தால் துணி உற்பத்தித் தொழிலில் இதற்குள் எத்தனையோ........அச்சா...... மானேஜ்மெண்டிற்கு.........யூனியன் கொடுத்திருக்கிறதே நோட்டீஸ்...அதைப் பார்த்தாயா நீ ?

(கு. தலைவி—ஆம் என்பதற்கு அடையாளமாகத் தலை அசைக்கிருள்.)

எத்தனை அர்த்தமற்றது பார்த்தாயா? நாம் கொடுக்கும் D.A. ஏற்கனவே ரொம்ப அதிகம்.

(இளைஞன் டிராயரை இழுத்து அதிலிருந்து ஒரு Pad-ஐ எடுத்துக்கொண்டு டிராயரை சாத்துகிறுன். ஆண் 2 மீண்டும் திரும்பி அந்தப் பக்கம் பார்க்கிறுன். இளைஞனின் முகத்தில் மீண்டும் அதே சிரிப்பு. ஆண் 2 இந்தப் பக்கம் திரும்பியதும் Pad-ல் பென்சிலால் ஏதோ கோடுகளை வரையத் துவங்குகிறுன்.)

ஆமாம்! நானென்ன சொல்லிக் கொண்டிருந்தேன்?

கு. தலைவி :—நீங்கள் வந்து......

மூ. பெண் :—பல விஷயங்களைச் சொல்லிக்கொண்டிருந்தீர்கள்...

ஆண் 2 :—ஆமாம்......நான் எதிலிருந்து பேச்சை ஆரம்பித்தேன்?

இளைஞன் :—இத்தாலியின் மிகச் சிறந்த விஷயத்தைப் பற்றி......

ஆண் 2 :—ஹும்...அப்புறம்?

இளைஞன் :—சாப்பாடு...உடையிலுள்ள வேறுபாடுகள்.. அமெரிக்கன், ஜர்மன், ரஷியன்...கெடுபிடி யுத்தம், ஹர்த்தால்...துணி உற்பத்தி தொழில்...D A.

ஆண் 2 :—பையனுக்கு நல்ல ஞாபக சக்தி. நான் சொல்ல வந்தது...

கு. தலைவி :—இன்னும் கொஞ்சம் எடுத்துக்கொள்ளுங்கள்.

ஆண் 2 :—வேண்டாம். போதும்.

கு. தலைவி :—இன்னும் கொஞ்சம்......எப்படியாவது... இவனுக்காக நீங்கள் கட்டாயம் ஏதாவது செய்து தாருகவேண்டும்.

ஆண் 2 :—ஓ...கட்டாயம்......யாருக்காக என்ன செய்ய வேண்டும்?

கு. தலைவி :—(பிள்ளையின் பக்கம் திரும்பி) இவனுக்காக...... ஏதாவது......

ஆண் 2 :—ஓ....நிச்சயமாகச் செய்கிறேன்...அதுதான் இருக்கவே இருக்கிறதே. (இளைஞனின் பக்கம் பார்த்து) B.Sc.-யில் என்ன டிவிஷன் ?

(இளைஞன் விரலால் சைபர் போட்டுக் காண்பிக்கிறான்.)

என்னது ?

பிள்ளை :—(இரண்டு மூன்று முறை விரலைச் சுற்றி) ஓ......

ஆண் 2 :—(புரிந்துகொண்டு) ஓ......

கு. தலைவி :—அதுதான் இறுதியாண்டில் உடம்பு சரியில்லாமல் போய்விட்டதே ! அதனால்......

ஆண் 2 :—சரி...சரி...அச்சா...கவனிக்கிறேன். (கடிகாரத்தைப் பார்த்து) இனிப் புறப்படவேண்டும். நேரமாகிவிட்டது. (எழுந்தவாறே) ஒருநாள் வீட்டிற்கு வாயேன். வந்து ரொம்ப நாளாயிற்று.

(கு. தலைவியும் மூ. பெண்ணும் கூடவே எழுந்திருக்கின்றனர்.)

கு. தலைவி :— நான்கூட வரவேண்டுமென்றுதான் நினைத்துக்கொண்டிருந்தேன். பேபியைப் பார்த்து வெகு நாளாயிற்று.

ஆண் 2 :—அவள்கூட ஆன்ட்டி வந்து எத்தனை நாளாயிற்று என்று கேட்டுக்கொண்டே இருந்தாள் ! ஆன்ட்டிகளிடமெல்லாம் அவளுக்கு ரொம்பவும் பிரியம். அம்மா இல்லாததால் குழந்தை பாவம்......

கு. தலைவி :—ரொம்பவும் சமர்த்து குழந்தை......உங்களிடம் என்றாவது விசாரித்துக்கொள்கிறேன். ஒரு முறை உங்களை வந்து பார்க்கச் சொல்லட்டுமா ?

ஆண் 2 :—(மூ. பெண்ணைப் பார்த்தவாறே) யாரை ? இவளையா ?

கு. தலைவி :—அசோக்கை.

ஆண் 2 :—ஓ...ஆமாம்...ஆமாம் வந்து பார்க்கட்டுமே! ஆனால் நீதான் வரப்போகிறாயே! உன்னிடமே சொல்லிவிடுகிறேன்.

கு. தலைவி :—அசோக்! இவர் புறப்பட்டுவிட்டார்.

பிள்ளை :—(இதை அறியாதவன்போல்) என்ன? புறப்பட்டு விட்டீர்களா?

(எழுந்து அவரருகே வருகிறான்.)

ஆண் 2 :—(கடிகாரத்தைப் பார்த்து) இவ்வளவு நேரம் இங்கிருப்பேன் என்று நினைக்கவே இல்லை. (வெளிப்புறக் கதவை நோக்கி நடந்தவாறே—மூ. பெண்ணை நோக்கி) நீ எங்கே யாவது வேலை பார்க்கிறாயா?

மூ. மகள் :—இல்லை.

கு. தலைவி :—செய்ய வேண்டுமென்ற விருப்பம்தான்—ஆனால் (மூ. பெண்ணை நோக்கி) இஷ்டம்தானே?

மூ. பெண் :—ஆமாம்......இல்லை......வந்து......

கு. தலைவி :—பயப்படுகிறாள்.

ஆண் 2 :—பயப்படுகிறாளா?

கு. தலைவி :—கணவனிடம்.

ஆண் 2 :—கணவனிடமா?

கு. தலைவி :—ஆமாம். அவருக்கு இஷ்டமில்லை.

ஆண் 2 :—யார்? இந்தப் பெண்ணா?

கு. தலைவி :—இல்லை. இவள் வேலைக்குப் போவது.

ஆண் 2 :—ஓகோ! அச்சா! அச்சா!

கு. தலைவி :—இந்த விஷயம் நினைவு இருக்குமல்லவா?

ஆண் 2 :—இவளுக்கா?

கு. தலைவி :—நான் சொல்லுவது—அவனுக்காக.

ஆண் 2 :—ஓ......ஆமாம்...ஆமாம்......ஆமாம் நீ வீட்டிற்கு வருவாயல்லவா? ஆபீஸ் விஷயமாய் கொஞ்சம் பேசவேண்டியிருக்கிறது. அதுதான் அந்த யூனியன் கீனியன் தகராறு விஷயம்.

கு. தலைவி :—நான்தான் வருவேனே? இவனும் வந்து பார்த்தாலென்ன?

ஆண் 2 :—(கடிகாரத்தைப் பார்க்கிறான்.) ரொம்பவும் நேரமாகிவிட்டது. (இளைஞனிடம்) அச்சா! ஒரு விஷயம் பற்றி உன் அபிப்பிராயத்தைக் கூற முடியுமா? இந்த ஹர்த்தால்—யூனியன் என்று எல்லாத் துறைகளிலும் நடந்துகொண்டிருக்கிறதே.........இதைப் பற்றி என்ன நினைக்கிறாய்!

(இளைஞன் பூச்சி ஏதோ பாண்ட்டிற்குள் புகுந்துவிட்ட மாதிரி ஒரு துள்ளு துள்ளுகிறான்.)

ஆண் 2 :—ஓ......ஓகோ......ஓ......

(வெளிப்புறமாக பூச்சியைப் பிடிக்க முயற்சிக்கிறான்.)

மூ. பெண் :—என்ன ஆயிற்று அசோக்!

கு. தலைவி :—(சற்றே எரிச்சலுடன்) அவர் என்ன கேட்டார் உன்னிடம்?

பிள்ளை :—(மூ. பெண்ணிடம்) ஒன்றுமில்லை......ஏதோ ஒரு பூச்சி!

மூ. பெண் :—பூச்சியா?

ஆண் 2 .—நம் நாட்டிலே......

இளைஞன் :—அகப்பட்டுவிட்டது.

ஆண் 2 :—எத்தனைவித புழுபூச்சி இருக்கிறதென்றால்....

இளைஞன் :—நசுக்கிவிட்டேன்.

ஆண் 2 :—நசுக்கிவிட்டாயா? சிவ! சிவ! சிவ! இந்த இம்சை உணர்வு......

கு. தலைவி :—இவனிடம் நிறைய உண்டு. ஏதாவது புழு பூச்சி கையிலே அகப்பட்டா போச்சு.

இளைஞன் :—பூச்சிமட்டும் எத்தனை தொந்தரவு வேண்டு மானாலும் செய்யலாமா?

ஆண் 2 :—வால்யூஸ் (Values) பற்றிய கேள்வி எழு கின்றது. நான் அடிக்கடி சொல்வதுண்டு.— ஆமாம் நீங்களெல்லாம் எதற்காக!......

கு. தலைவி :—நான் வாசல் வரையில் உங்களுடன் வரு கிறேன்.

ஆண் 2 :—இந்நாட்டின் 'Moral Values' (தார்மீக மதிப்புகளை) உயர்த்துவதற்காக......நீ அந்த பிரசங் கங்களைக் கேட்டாயா?—...இப்பொழுது வந்திருக் கிருரே......ஒரு மகரிஷி......அவர் பெயரென்ன?

இளைஞன் :—நிரோத் மகரிஷியா?

ஆண் 2 :—ஆமாம் ஆமாம்...அதுதானே அவர் பெயர்? என்ன பிரமாதமாக பேசுகிருர்?—ஜாதகங்கள்கூட கணிக்கிருராம்......அந்தப் பிரசங்கமிருக்கிறதே..... அபாரம்......

(பேசிக்கொண்டே கதவைத் தாண்டி விடுகிருன். கு. தலைவியும் தொடர்ந்து செல்லுகிருள்.)

பிள்ளை :—ஹா...ஹா...ஹா......

மூ. பெண் :—எதற்காக இது?

பிள்ளை :—நடிப்பைப் பார்த்தாயா?

மூ. பெண் :—யாருடைய?

பிள்ளை :—என்னுடைய.

மூ. பெண் :—அப்படியென்ருல் நீ......

பிள்ளை :—அவனை முட்டாளாக்கினேன்.

மூ. பெண் :—உண்மையில் முட்டாளானது யாரென்பது தெரியவில்லை.

பிள்ளை :—ஏன் ?

மூ. பெண் :—எப்படியிருந்தாலென்ன. மாதம் அவருக்கு ஐயாயிரம் ரூபாய் சம்பளம்.

பிள்ளை :—ஐயாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறவனின் முகத்தைப் பார்த்தாயா ?

(Pad-ல் வரைந்திருக்கும் சித்திரத்தைக் காட்டுகிறன்.)

மூ. பெண் :—இது அவருடைய முகமா ?

பிள்ளை :—இல்லையா ?

மூ. பெண் :—இதென்ன தலையில் ?

பிள்ளை :—கொம்பு போட்டிருந்தேன். பிறகு அடித்து விட்டேன். சொல்லுவதுண்டு......கொம்பு கிடையாதென்று......அதனுல்தான்......

(மூ. பெண் அவன் கையிலிருந்த அட்டையை வாங்கிப் பார்க்கிறள். குடும்பத் தலைவி திரும்பி வருகிறள்.)

கு. தலைவி :—ஒரு நிமிடம் வெளியே வருகிறயா ?

பிள்ளை :—எதற்கு ?

கு. தலைவி :—வண்டி புறப்படமாட்டேன் என்கிறது ?

பிள்ளை :—என்னவாயிற்ரும் ?

கு. தலைவி :—பாட்டரி டவுன் ஆகிவிட்டது. தள்ள வேண்டும்.

பிள்ளை :—இப்பொழுதிலிருந்தா ? இன்னும் வேலையைப் பற்றியே பேசவில்லையே அந்த மனிதர் !......

கு. தலைவி :—சீக்கிரம் போ ! அவருக்கு ஏற்கனவே நேரமாகிவிட்டது.

பிள்ளை :—உண்மையிலேயே இவர் வேலை வாங்கிக் கொடுத்துவிட்டால் இன்னும் என்னென்ன நடக்குமோ......

(வெளியே போகிறன்.)

கு. தலைவி :—இந்தப் பிள்ளை என்னதான் செய்யப் போகிறானே ஒன்றுமே புரியவில்லை.—ஆமாம்...... உன் கையிலே என்ன இது?

மூ. பெண் :—என் கையிலே......இதுவா......வந்து...... வந்து அவன் போட்டுக்கொண்டிருந்தானே......

கு. தலைவி :—என்ன போட்டுக் கொண்டிருந்தான்?— பார்க்கலாம்......

மூ. பெண் :—(அட்டையை அவள் பக்கம் நீட்டுகிறாள்.) சும்மா இப்படி.........ஏதோ போட்டுக்கொண்டிருந்தான். அப்படியே இதையும்......சும்மா......

(கு. தலைவி கண நேரம் அதை எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.)

கு. தலைவி :—முக ஜாடை கொஞ்சம் கொஞ்சம் அப்படியே இல்லை...

மூ. பெண் :—எப்படியே?

கு. தலைவி :—உன் டாடி மாதிரி!

மூ. பெண் :—டாடி மாதிரியா? இல்லையே!

கு. தலைவி :—கொஞ்சம் அப்படித்தானிருக்கிறது.

மூ. பெண் :—இப்பொழுது வந்துவிட்டுப் போனாரே...... அவரையல்லவா அவன் வரைந்திருக்கிறான்.

கு. தலைவி :—(புருவங்கள் நெறிய) இந்தக் காரியம்தான் செய்துகொண்டிருந்தானா?

(இளைஞன் திரும்பி வருகிறான்.)

பிள்ளை :—(கையில் படிந்திருக்கும் தூசியைத் தட்டுவதுபோல்) என்ன மூஞ்சியோ!......என்ன காரோ?

கு. தலைவி :—இங்கே வா.

பிள்ளை :—(அருகில் வருகிறான்) வண்டி இன்ஜினை ஒரு உதை கொடுத்தால் எப்படியும் ஓடிவிடும். ஆனால்

(மண்டையைச் சுட்டிக்காட்டி) இந்த இன்ஜினைப் பொறுத்த வரையில்......

கு. தலைவி :—(சற்று கடுமையான குரலில்) இது என்ன வரைந்திருக்கிறாய் நீ...

பிள்ளை :—உனக்கென்ன தோன்றுகிறது?

கு. தலைவி :—நீ வரைந்திருப்பது எது?

பிள்ளை :—ஆதி—மனிதக் குரங்கு.

கு. தலைவி :—என்னது?

மகன் :—மனிதக் குரங்கு.

கு. தலைவி :—நாடகமாடாதே!—சரியாகச் சொல்.........

பிள்ளை :—வெளியே தொங்கும் நாக்கு. பாதாளத்தில் புதைந்திருக்கும் கண்கள்......தெரியவில்லை உனக்கு.

கு. தலைவி :—உன்னுடைய இந்தக் காரியங்களெல்லாம் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. காதில் விழுந்ததா?

(பிள்ளை பதிலேதும் கூறாது மேஜையை நோக்கிச் செல்லுகிறான். மேஜையின் மீதிருக்கும் படங்களை எடுத்துப் பார்க்கிறான்.)

காதில் விழுகிறதா இல்லையா?

பிள்ளை :—கேட்டுக் கொண்டுதானிருக்கிறேன்.

கு. தலைவி :—கேட்டுக் கொண்டிருந்தால் அதற்கு பதிலேதும் கூறவேண்டுமல்லவா? (பிள்ளை முன்போலவே படங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.) பதில் கூற வேண்டாமா?

பிள்ளை :—(படங்களை மேஜையின்மீது வைத்தவாறே) என்ன சொல்ல முடியும்?

கு. தலைவி :—சொல்ல முடியாதென்றால்......வேண்டாம். ஆனால் ஒன்று சொல்லுகிறேன். நான் கெஞ்சிக் கூத்தாடி ஒருவரை வீட்டிற்கு வரச் சொல்லுவது...

நீ அவர்களைக் கிண்டல் செய்வது, கார்ட்டூன் போடுவது......இதையெல்லாம் இனியும் என்றால் சகித்துக்கொள்ள முடியாது. காதில் வீழ்ந்ததா?.... இனி இது முடியாது—முடியவே முடியாது.

பிள்ளை :—சகித்துக்கொள்ள முடியாதென்றால் எதற்காக இப்படிப்பட்டவர்களை வீட்டிற்கு வரும்படி அழைக்கிறாய்......இவர்கள் வருவதால்.........?

கு. தலைவி :—ஊம்...ஊம்...சொல்லு..........யார் வருவதினால் என்னவாயிற்று?

பிள்ளை :—வேண்டாம். விட்டுவிடு. இதற்காகத்தான் நான் முதலிலேயே வெளியே போய்விட விரும்பினேன்.

கு. தலைவி :—நீ சொல்ல வந்ததை முழுவதும் சொல்லிவிடு.

பிள்ளை :—தாழ்ந்தவர்களாக இருக்கும் நாம் இதனால் நம் மதிப்பிலேயே இன்னும் தாழ்ந்து விடுகிறோம்.

கு. தலைவி :—*(திகைப்புடன்)* இதன் அர்த்தம்?

பிள்ளை :—அர்த்தம் வந்து...நான் சொன்னேனே அதுதான். இன்றுவரை யார் யாரையெல்லாம் வீட்டிற்கு வரும்படி அழைத்திருக்கிறீர்களோ.........அவர்களை எந்தக் காரணத்திற்காக அழைத்தீர்கள்?

கு. தலைவி :—எதற்காக என்று நீ நினைக்கிறாய்?

பிள்ளை :—ஒவ்வொருவரிடமும் உள்ள ஒரு விசேஷமான சிறப்பிற்காக. ஒருவனை அவன் பெரிய இன்டலெக்சுவல் என்பதற்காக......இன்னொருவனை அவனது கொழுத்த சம்பளம் ஐயாயிரம் ரூபாய்க்காக. இன்னொருவனை அவனது சீப் கமிஷனர் பதவிக்காக நீ...எப்பொழுது, யாரை அழைத்தாலும் மனிதனை அல்ல...அவனது பதவியை, சம்பளத்தை, புகழைத் தான் அழைத்திருக்கிறாய்......

கு. தலைவி :—நீ சொல்ல விரும்புவது...இப்படிப்பட்டவர்களின் வருகையினால் இந்த வீட்டிலுள்ளவர்கள் தம் மதிப்பில் தாமே தாழ்ந்து போய்விடுகின்றனர்...... இல்லையா ?

பிள்ளை :—மிக மிகத் தாழ்ந்து போய்விடுகிறோம்.

கு. தலைவி :—நான் அவர்களை அழைப்பது இதற்காகத் தான் என்று......

பிள்ளை :—எதற்காக அழைக்கிறாயோ தெரியாது...ஆனால் இப்படிப்பட்டவர்களைத்தான் அழைக்கிறாய். சரி நீயே சொல்லேன், எதற்காக அழைக்கிறாய் ?

கு. தலைவி :—எப்படியாவது இந்த வீடு உருப்படியாகட்டுமே என்றுதான். தாளமுடியாத சுமை என் ஒருத்தி மீதேயிருக்கிறதே, அதை யாரேனும் என் கூட பகிர்ந்துகொள்ளட்டும் என்றுதான்! இம்மாதிரியான பெரிய புள்ளிகளோடு நான் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புவது எனக்காக அல்ல. உங்களுக்காகத்தான். ஆனால் நீங்கள் இதனால் சிறுமை அடைகிறீர்களென்றால் இனி இந்த முயற்சியையும் விட்டுவிடுகிறேன்—ஆனால் இதையும் சொல்லிவிடுகிறேன். தனியொருத்தியாக இனி என்னால் இந்த வீட்டின் பொறுப்புகளைச் சுமக்க முடியாது. வீட்டுக்குடையவர், வீட்டிலுள்ள பணத்தை யெல்லாம் தொலைத்துவிட்டு வருடக் கணக்காக கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். இன்னொருத்தனோ தானாக முயற்சி செய்வது கிடக்கட்டும்; நான் முட்டி மோதிக்கொண்டாலும் ஓரிடத்தில் வேலை பார்ப்பது தனக்கு அவமானம் என நினைக்கிறான். இனியும் இதையெல்லாம் என்னால் சகித்துக்கொள்ள முடியாது. வேறு எவருக்கும், இந்த வீட்டில் எதைப்பற்றியும் வருத்தமோ வேதனையோ இல்லையென்றால், நான்மட்டும் ஏன்

இரவு பகலாய் உழைத்து ஓடாகப் போகவேண்டும்? நானும் ஏன் சுகமாய் ஓரிடத்தில் உட்கார்ந்து கொள்ளக்கூடாது...அப்பொழுது நீங்கள் ஒருவரும் சிறுமைப்பட வேண்டிய அவசியமே இராதல்லவா?

(பிள்ளை மௌனமாய் மேஜை டிராயரை இழுப்பதும் மூடுவதுமாயிருக்கிறான்.)

ஏன் வாயைத் திறக்கவில்லை? சொல்லு? பெருமையுடன் வாழ என்ன வழி யோசித்து வைத்திருக்கிறாய்?

பிள்ளை :—சும்மா இரு மம்மி! என் வாயிலிருந்து ஏதாவது சொல் வர...பின்னர்...நீ...இதையெல்லாம் நான் விரும்பவில்லை.

கு. தலைவி :—நான் என்ன? சொல்லு. என்ன சொல்ல வேண்டுமோ சொல்லு!

பிள்ளை :—(நாற்காலியில் உட்கார்ந்து) நான் சொல்லவேண்டியது எதுவுமேயில்லை.........

(மனமின்றி ஒரு பத்திரிகையையும், கத்தரிக்கோலையையும் எடுத்துக்கொண்டு டிராயரை சத்தமாக மூடுகிறான்.)

கு. தலைவி :—ஒன்றும் சொல்லவேண்டாம். உக்காந்துக்கோ, குறிச்சியிலே...வெட்டித் தள்ளு படத்தை, என் செல்லக்குட்டி! இதுவரை எத்தனை படம் வெட்டியிருக்கு? அடேய், நீ சொல்லவேண்டியது எதுவுமில்லையென்றால்—முன்னரே ஏன் வாயை மூடிக்கொண்டு.........?

மூ. பெண் :—(அருகே வந்து தாயின் புஜத்தைப் பற்றி) சும்மா இரு மம்மி. நான் பேசுகிறேன் இவனிடம். (இளைஞனிடம்) ஏய் அசோக்!

பிள்ளை :—இந்த சமயத்தில் நீ பேசவேண்டியது மிகவும் அவசியம்தானே!

மூ. பெண் :—நான் உன்னிடம் கேட்கவேண்டியது ஒன்றே ஒன்றுதான்.

பிள்ளை :—எதற்காக கேட்க விரும்புகிறாய்? இச்சமயம் நான் யாருடைய எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல விரும்பவில்லை.

மூ. பெண் :—(சற்றுத் தயங்கி) உனக்குத் தெரியாதா! இன்று வரை மம்மி எத்தனை.........

பிள்ளை :—அப்படியும் நீ பேசுகிறாய் அல்லவா?

கு. தலைவி :—இவனிடம் எதற்காகப் பேசுகிறாய்? யாரிடமும் பேசவேண்டிய அவசியமில்லை. இன்று ஒரு முடிவிற்கு வர வேளை வந்துவிட்டது. நான் என்னைப்பற்றி ஏதாவதொரு முடிவு.........

பிள்ளை :—கட்டாயம் செய்துகொள்ள வேண்டும்.

மூ. பெண் :—அசோக்!

பிள்ளை :—நான் சொல்ல விரும்பவில்லை...ஆனால்......!

மூ. பெண் :—பின் எதற்காகச் சொல்லுகிறாய்?

பிள்ளை :—ஆனால் சொல்லவேண்டி இருக்கிறது. ஏன் என்றால்?......ஆமாம்......இதையெல்லாம் சகித்துக் கொள்ள முடியவில்லை என்றால் ஏன் சகித்துக்கொண்டிருக்க வேண்டும் இதை?

கு. தலைவி :—நான் சகித்துக் கொண்டிருக்கிறேன்...ஏன் என்றால்?

பிள்ளை :—வேறு எவருமில்லை இப்பொறுப்பை ஏற்க! இந்த வீட்டிலே இந்த வார்த்தையை பலமுறை சொல்லியாகி விட்டது.

மூ. பெண் :—நீ நினைத்துப் பார்த்தாயா? மம்மி இவ்வளவு தூரம்......

பிள்ளை :—யாருக்காக? எதற்காகச் செய்கிறாள்?

மூ. பெண் :—எனக்காகப் பாடுபட்டாள்.

பிள்ளை :—நீதான் வீட்டைவிட்டுப் போய்விட்டாயே!

மூ. பெண் :—கின்னிக்காக......

பிள்ளை :—அவள் நாளுக்கு நாள் ரொம்ப அடங்காப் பிடாரியாகப் போய்க்கொண்டிருக்கிருள்.

மூ. பெண் :—டாடிக்காக?

பிள்ளை :—டாடியின் நிலையைப் பார்த்து உனக்குப் பரிதாபமாக இல்லை?

மூ. பெண் :—எல்லாவற்றையும் விட உனக்காகப் பாடு படுகிருள்.

பிள்ளை :—நான்தான் இந்த வீட்டில் எல்லோரையும் விட அதிகமாகக் கரிக்கப்படுகிறவன்...ஏன்? எதனுல்?

மூ. பெண் :—இதை...இதை நானெப்படிக் கூறமுடியும்!

பிள்ளை :—சரி. உன்னைப் பற்றி சொல்லமுடியுமல்லவா? சொல்லு. நீ ஏன் வீட்டைவிட்டுப் போய்விட்டாய்?

மூ. பெண் :—(அதிர்ந்து போய்) போய்விட்டேன்.....ஆமாம் போய்விட்டேன். ஏன் என்ருல்?

பிள்ளை :—ஏன் என்ருல் நீ மனோஜைக் காதலித்தாய்...... உனக்கே இந்தக் காரணம் பலவீனமாய்த் தோன்ற வில்லை?

மூ. பெண் :—(அழுகை கலந்தகுரலில்)...நீ.....என்னையே...... வந்து என்னிடமே சொல்லுகிருயா....வந்து......

(தளர்ந்துபோய் மோடாவில் அமருகிருள்.)

பிள்ளை :—என்னிடம் வாய் கொடுக்காதே யென்று சொன்னேன் அல்லவா?

கு. தலைவி :—(மெல்ல இரண்டடி நடந்துவந்து பிள்ளையை நெருங்குகிருள்.)

நீ என்ன பேசுகிருய் என்பது உனக்குத் தெரியுமா?

(இளைஞன் ஒன்றும் பேசாமல் பத்திரிகையிலிருந்து ஒரு படத்தைக் கத்தரிக்கிருன்.)

தெரியுமல்லவா ?

(இளைஞன் முன்போலவே வாய் திறவாது படத்தைக் கத்தரித்துக்கொண்டிருக்கிறான்.)

நல்லது. இன்றிலிருந்து நான் என்னை மட்டும் கவனித்துக்கொள்கிறேன். நீங்களெல்லாம் அவரவர் வாழ்க்கைக்கு வழி தேடிக்கொள்ளுங்கள்.

(மூ. பெண் ஒரு கரத்தால் இன்னொரு கைவிரல்களின் நகத்தைக் கிள்ளுகிறாள்.)

இனி வாழ்க்கையில் எனக்கு அதிக வருடங்கள் இல்லை. இருப்பதையும் இனி இப்படிப் பொறுப்பைச் சுமந்துகொண்டு கழிக்கப் போவதில்லை. இன்றுவரை என்னால் இந்த வீட்டிற்காக என்ன முடியுமோ செய்தாகிவிட்டது. என்னைப் பொறுத்த வரையில் இதுதான் முடிவு. உறுதியான முடிவு.

(ஒரு இடி பாழ்வெளியின் ஆத்மாவின் துயரத்தை வெளிப்படுத்தும் மெல்லிய இசை ஒலி. இளைஞன் தான் கத்தரித்த படங்களை கையிலெடுத்துப் பார்க்கிறான். பின்னர் சக் - சக் என்று அவற்றைக் கத்தரித்துத் தள்ளுகிறான். சிறிதும் பெரிதுமாய் காகிதத்துண்டுகள் தரையெங்கும் விழுகின்றன. உருவங்களின் மீதிருந்த ஒளி வட்டங்கள் மங்கலாகி, அறையின் வெவ்வேறு மூலைகளில் படர்ந்து சுருங்கி மறைகின்றன. மேடையில் முழு அந்தகாரம் வியாபித்ததும் இசை நிற்கிறது. ஆனால் சில விநாடி வரை—கத்தரிக்கோலின் சக் - சக் கென்ற ஓசை மட்டும் கேட்கிறது.)

அங்கம் 2

(இரு தனித்தனியான ஒளி வட்டங்களுக்குள் இளைஞனை பிள்ளை, மூ. பெண். சோபாவில் குப்புறப் படுத்துக் கொண்டு இளைஞன் கால்களை ஆட்டிக்கொண்டிருக் கிறன். அவன் முன்னால் சீட்டுக்கட்டு பரப்பி இருக் கிறது. மூ. பெண் மேஜையின் மீது தட்டை வைத்து ரொட்டித் துண்டுகளுக்கு வெண்ணெய் தடவிக் கொண்டிருக்கிருள். அருகே டின் கட்டர் ஒன்றும் சீஸ் டின் (Cheese tin) ஒன்றும் இருக்கிறது. அறை முழுவதும் ஒளி பரவியபின் ஒருநாள் சரிவர கவனிக்கப்படாவிட்டால் ஏற்படும் அலங்கோலம் அறையெங்கும் தெரிகின்றது. காலித் தேநீர் கோப்பைகள், களைந்து போட்ட ஆடைகள் என யாவும் இறைந்து கிடக்கும் கோலம்.)

மூ. பெண் :—இந்த டப்பாவை கொஞ்சம் திறக்க முடியுமா?

பிள்ளை :—(சீட்டாடும் மும்முரத்தில்) முடியாது.

மூ. பெண் :—முடியாதென்றுல் எதற்காக வாங்கி வந்தாய்?

பிள்ளை :—பனியாக் கடையிலே என்னென்ன கடனுகக் கிடைக்குமோ வாங்கிக்கொண்டு வா என்று நீதானே சொன்னுய்? நான் கடனுக ஒரு ஃபோன் கூட செய்துவிட்டு வந்தேன்.

மூ. பெண் :—யாருக்கு?

பிள்ளை :—ஜுனேஜா மாமா வீட்டிற்கு.

மூ. பெண் :—டாடியிடம் பேசினுயா?

பிள்ளை :—இல்லை.

மூ. பெண் :—பின்.

பிள்ளை :—ஜுனேஜா அங்கிளிடம் பேசினேன்.

மூ. பெண் :—அவர் ஏதாவது சொன்னாரா?

பிள்ளை :—பேசினோம் என்றால் இதன் அர்த்தம்...

மூ. பெண் :—அர்த்தம்......டாடி வீட்டிற்கு திரும்புவது பற்றி......

பிள்ளை :—சொன்னார்—வரமாட்டாராம்.

மூ. பெண் :—வரமாட்டாரா?

பிள்ளை :—மாட்டார்.

மூ. பெண் :—இதை நீ ஏன் முன்னரே கூறவில்லை. நான் இந்த சாண்ட்விச் கீண்ட்விச்செல்லாம்......?

பிள்ளை :—உனக்குப் பிடிக்கும். அதனால் வாங்கிக் கொண்டு வரும்படி சொல்லுகிறாய் என நினைத்தேன்.

மூ. பெண் :—மம்மி ஆபீஸிலிருந்து வருவதற்குள் டாடியும் கூட ஒருவேளை வந்துவிடுவார் என்று உன்னிடம் நான் சொல்லவில்லையா? இரண்டு பேருக்குமே சீஸ் சாண்ட்விச் என்றால் ரொம்பவும் பிடிக்கும்.

பிள்ளை :—ஜுனேஜா அங்கிளுக்குக்கூட பிடிக்கும். அவர் வருவார். அவருக்குக் கொடு.

மூ. பெண் :—வருகிறேனென்று சொன்னாரா?

பிள்ளை :—மம்மியிடம் ஏதோ பேசவேண்டுமாம். ஆறு அல்லது ஆறரை மணிக்கு வருவாரென்று நினைக்கிறேன்.

மூ. பெண் :—மம்மியின் மூட் ஏற்கனவே ஆஃப்......அவர் வேறே வந்து பேசப்போகிறாரா?—...காலையிலே ஆபீஸுக்குப் போகும்போது மம்மியின் முகத்தைப் பார்த்தாயா?

பிள்ளை :—நான்தான் எதிரே வரவேயில்லையே?

மூ. பெண் :—ராத்திரியிலிருந்தே வாயைத் திறக்க வில்லை. அதுவும் காலையில்......இவ்வளவு இறுக்க மாக நான் இதுவரை பார்த்ததேயில்லை.

பிள்ளை :—ஏதாவது பேசினாளா......உன்னிடம்?

மூ. பெண் :—ஏதோ தேநீர் - கீநீர் பற்றி இரண்டு வார்த்தை.

பிள்ளை :—ரொம்ப நல்ல புடவை கட்டிக்கொண்டு போறாங்களே! ஏதோ கல்யாணத்திற்குப் போற மாதிரி......

மூ. பெண் :—பார்த்தாயா நீ?

பிள்ளை :—வெளியே போகும்போது........கண்ணில் பட்டது......

மூ. பெண் :—ஆபீஸிலிருந்து வேறே எங்கேயாவது போகப் போறாங்கன்னு நினைத்தேன். ஆனால் போகும்போது தினமும்போல் ஐந்தரை மணிக்கு வந்துவிடுவதாகச் சொன்னாள்.

பிள்ளை :—நீ கேட்டாயா?

மூ. பெண் :—நானும் என் புரோகிராமை அதற்குத் தகுந்தபடி வைத்துக்கொள்ளலாமே என்றுதான் கேட்டேன். ஆனால்......உண்மையைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

பிள்ளை :—எதைப்பற்றி?

மூ. பெண் :—மனசிலே என்ன நினைச்சிருக்காங்கன்னு தான். சொன்னதென்னமோ ஐந்தரைக்கு வந்து விடுவேன் என்றுதான். ஆனால் முகத்தைப் பார்த் தால்......

பிள்ளை :—பார்த்தால்...

மூ. பெண் :—உண்மையிலேயே மனசிலே ஒரு முடி வுக்கு வந்துவிட்ட மாதிரி......

பிள்ளை :—இது நல்லதில்லையா?

மூ. பெண் :—இதை நல்லதென்று சொல்லுகிறாய் ?

பிள்ளை :—இதனால் ஏதாவது நடக்கக்கூடும்......அதனால் தான்.

மூ. பெண் :—என்ன நடக்கும் ?

பிள்ளை :—ஏதாவது நடக்கும். வருடக் கணக்காக ஒரே யிடத்தில் தேங்கிவிட்ட எதுவும்......அப்படியே உறைந்து போய்விடக்கூடாது.

மூ. பெண் :—நிஜமாகவே.....இது உன் விருப்பமா...... அல்லது......?

பிள்ளை :—(தன் ஆட்டத்தின் கடைசிச் சீட்டைக் கீழே போட்டவாறே) இந்த விஷயம் ஏதாவதொரு முடிவிற்கு வரவேண்டும் என்றுதான் நிஜமாகவே விரும்புகிறேன்.........நீ விரும்பவில்லையா ?

(சீட்டுகளை திரட்டிக்கொண்டு எழுந்து நிற்கிறான்.)

மூ. பெண் :—இப்பொழுதெல்லாம் நீ பேசுவதைக் கேட்டால் பயமாக இருக்கிறது எனக்கு.

பிள்ளை :—(அவளை நோக்கி வந்தவாறு) ஆனால் தவறு என்று தோன்றவில்லையே ?

மூ. பெண் :—........வந்து சரியென்றும் படவில்லை.

(டின்னையும், டின் கட்டரையும் கையிலெடுத்துக்கொண்டு)

இந்த டின் ?

பிள்ளை :—இந்த கட்டரால் இது திறக்காது. இதன் கூர் மழுங்கிவிட்டது......

மூ. பெண் :—வேறென்ன செய்வது ?

பிள்ளை :—வேறெதுவுமில்லையா ?

மூ. பெண் :—நானெப்படிச் சொல்ல முடியும்? இப்போ... இந்த வீட்டிலே........நான் ஏதோ ரொம்பவும்...... அன்னியமானவள் போன்றதொரு உணர்ச்சி......

பிள்ளை :—இதற்கு முன் ஏற்படவில்லையா ?

மூ. பெண் :—இதற்கு முன்னேயா? முன்பு வந்து......

பிள்ளை :—உணர்ச்சிகளை உணராத நிலை. கொஞ்சம் உணர்வு உறைக்கவாரம்பித்ததும் முதல் சந்தர்ப்பம் கிடைத்ததுமே வீட்டைவிட்டுப் போய்விட்டாய்.

மூ. பெண் :—(சிற்றத்துடன்) மீண்டும் நேற்று மாதிரி ஆரம் பித்துவிட்டாயா?

பிள்ளை :—ஏன் கோபித்துக் கொள்கிருய்? நானும் இங்கு என்னை அன்னியனுகத்தான் உணருகிறேன்...... அதிலும் நீ வீட்டைவிட்டுப் போன தினத்திலிருந்து தான் எனக்கு இந்த உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

மூ. பெண் :—நான் போனதிலிருந்தா?

பிள்ளை :—அதற்கு முன்னே இதை நான் உணர்ந்திருக்க லாம். ஆனல் சிந்திக்க ஆரம்பித்ததென்னமோ அன்றிலிருந்துதான்.

மூ. பெண் :—சிந்தித்துத் தெரிந்துகொண்டது......

பிள்ளை :—இந்த வீட்டிற்குள் ஏதோ ஒன்று இருக்கிறது. அது வந்து...

மூ. பெண் :—(பதற்றமடைந்து) நீயுமா இப்படிச் சொல்லு கிருய்?

பிள்ளை :—இன்னும் வேறு யார் சொல்லுகிருர்கள்?

மூ. பெண் :—யாரோ!...அந்த அது...என்ன?

பிள்ளை :—(அவளையே உற்றுநோக்கி) உனக்குத் தெரியாது?

மூ. பெண் :—(அவன் பார்வையைத் தவிர்த்தவளாய்) எனக்கா? எனக்கெப்படி?...

பிள்ளை :—உன்னிடமிருந்துதான் நான் தெரிந்துகொண் டேன். ஆனல் எனக்கெப்படித் தெரியுமென்று நீ சொல்லுகிருய்?

மூ. பெண் :—நீ அதை என்னிடமிருந்து அறிந்து கொண்டாயா?......எனக்குப் புரியவில்லை.

பிள்ளை :—சரி சரி...அது தெரிந்திருந்தும் தெரியாம லிருப்பதுதான் ஒரு வேளை சிறந்ததோ...... என்னவோ? பிறரை வேண்டுமானாலும் ஏமாற்ற லாம். ஆனால் தன்னைத் தானே எப்படி ஏமாற்றிக் கொள்வது?

(மூ. பெண் ஒருமாதிரி ஆகிவிடுகிறாள். ரொட்டித் துண்டில் அவளால் வெண்ணெயை சரியாகக்கூடத் தடவ முடிவதில்லை.)

மூ. பெண் :—நீ வந்து...எப்பொழுதுமே...இதோ பார்... வந்து...ஆமாம் உன்னிடம் நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்...இந்தா...முதலில் இந்த டின்னை எங்கேயாவது கொண்டுபோய்த் திறந்துகொண்டு வா. இதைத் திறக்காவிட்டால் .....

பிள்ளை :—உன் கை ஏனிப்படி நடுங்குகிறது! (டின்னை எடுத்துக்கொண்டு) இதோ.....திறந்துகொண்டு வரு கிறேன். கூர்மையான ஆயுதம் வேண்டும். அவ்வளவுதான். ஒரே நிமிடம்.

(வெளிப் பக்கத்துத் கதவின் வழியாகச் செல்லுகிறான். மூ. பெண் தொடர்ந்து தன் வேலையில் ஈடுபட முயற்சிக் கிறாள். ஆனால் கரங்கள் இயங்க மறுக்கின்றன. முயற்சியைக் கைவிட்டு விடுகிறாள்.)

மூ. பெண் :—(நெற்றியை விரல்களால் வருடியவாறே தளர்ந்த குரலில்) இவன் என்ன சொல்லுகிறான்?......எனக்கு நிஜமாகவே...உண்மையாகவே தெரியுமா?...

(தலையை வேகமாய் மண்டைக்குள் ஏதோ புயல் எழும்பி விட்டது போல் உலுக்கிக் கொள்ளுகிறாள். பின்னர் மிகுந்த சிரமத்துடன் தன்னை சமாளித்துக்கொண்டு எழுந்திருக்கிறாள். உட்புறக் கதவருகில் சென்று குரல் கொடுக்கிறாள்.) கின்னி!

(பதில் வருவதில்லை. ஒருமுறை உள்ளே போய் எட்டிப் பார்த்துவிட்டு வருகிறாள்.)

எங்கே போய்விடுகிருள் இவள்? காலையில் ஸ்கூலுக்குப் போகுமுன் ஒரே அழுகை. எல்லாம் வாங்கிக் கொடுத்தால்தான் போவேன், இல்லா விட்டால் மாட்டேன் என்று அடம். அப்புறம் பார்த்தால் கண்ணிலேயே காணும். எப்பொ வீட்டிலே இருக்கா...எப்போ வெளியிலே போரு...ஒன்றுமே தெரியலே......

(பிள்ளை, வெளிப்புறக் கதவின் வழியாக சின்னவளை உள்ளே பிடித்துத் தள்ளுகிருன்.)

பிள்ளை :—ஊம்...போ...போ! உள்ளே!

(சின்னவள் தப்பித்துக்கொண்டு வெளியே ஓடப் பார்க்கிருள். ஆனல் அவன் கையைப் பிடித்துக்கொண்டு விடுகிருன்.)

சொன்னேன் அல்ல? போ! உள்ளே!

மூ. பெண் :—(கோபத்துடன்) இதெல்லாம் என்ன?

சின்னி :—பின்னி அக்கா......பாரேன்......இவன் வந்து என்னை......

(திமிறித் தன்னை விடுவித்துக் கொள்ளப் பார்க்கிருள். ஆனல் இளைஞன் உள்ளே இழுத்துக்கொண்டு வருகிருன் பலவந்தமாக.)

பிள்ளை :—வா இங்கே! இரு உனக்கு...

(மூ. பெண் முன்னேவந்து சின்னவளை விடுவிக்கிருள்.)

மூ. பெண் :—விடு இவளை. இவளென்ன செய்து விட்டாள்? நீ வந்து இப்படி!

பிள்ளை :—(டின்னை நீட்டியவாறு) இந்தா...திறந்தாகிவிட்டது. (சின்னவளை அடிக்க கரத்தை ஓங்கியவாறு) இப்போ இவளை நான்......

மூ. பெண் :—(அவன் கரத்தைப் பற்றித் தடுத்து) உனக்கு மூளை புரண்டுவிட்டதா?

பிள்ளை :—இன்னும் புரளவில்லை...இனிப் புரண்டுவிடும். By Jove!

மூ. பெண் :—என்ன நடந்தது?

பிள்ளை :—அவளையே கேள்! சொல்லுவாள். My God!

மூ. பெண் :—கின்னி! சொல்லு! என்ன நடந்தது? நீ என்ன செய்தாய்?

(சின்னவள் பதில் கூருமல் விம்முகிருள்.)

சொல்லு என்ன செய்துகொண்டிருந்தாய்?

(சின்னவள் விம்மிக்கொண்டே இருக்கிருள்.)

பிள்ளை :—ஒன்றும் செய்யவில்லை...... யாரிடமோ....... எதையோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

மூ. பெண் :—என்ன சொன்ஞள்?

பிள்ளை :—அவளிடமே கேள்!

மூ. பெண் :—(சின்னவளிடம்) சொல்லேன்! நாக்கு தேய்ந்து போச்சா?

பிள்ளை :—தேயவில்லை....களைச்சுப் போச்சு!....ஆணும் பெண்ணும் தங்களுக்குளே எப்படி...என்றெல்லாம் பேசிப் பேசிக் களைத்துவிட்டது.

மூ. பெண் :—என்னது?

பிள்ளை :—கேளேன் அவளையே! எல்லாம் விவரமாய் சொல்லுவாள். வெளியே சுரேகாவிற்கு எல்லாம் விளக்கமாய் சொல்லிக்கொண்டிருந்தாளே!...

கின்னி :—(விம்மலுக்கிடையே) அவள் எனக்குச் சொன்ஞளா, நான் வந்து அவளுக்குச் சொன்னேஞ?

பிள்ளை :— நீ, நீதான் சொல்லிக்கொண்டிருந்தாய்...

கின்னி :—அவதான் சொல்லிக் கொண்டிருந்தாள்.

பிள்ளை :—நீதான் சொல்லிக் கொண்டிருந்தாய். பின்ஞல் நின்று கேட்டுக்கொண்டிருந்த என்னைப் பார்த்ததும்......

கின்னி :—சுரேகா ஓடிஞளா, நான் ஓடிஞேனு?

பிள்ளை :—நீதான் ஓடிஞய்.

கின்னி :—சுரேகாதான் ஓடிஞள்.

பிள்ளை :—நீதான் ஓடிஞய். நான் பின்ஞல் ஓடிவந்து பிடித்ததும்....நீதான் கத்திஞய்! அக்கம் பக்கத்திலிருக்கிறவர்களெல்லாம் கேட்கும்படியாய்......'நான் உன்னைப்பற்றி அம்மாவிடம் சொல்லுகிறேன் என்று அம்மா வீட்டிலில்லாதபோது என்னைப் பிடித்து அடிக்கிருயா' என்றெல்லாம் கூச்சல் போட்டாய்.

மூ. பெண் :—இவன் சொல்வதெல்லாம் உண்மைதானு?

கின்னி :—நான் ஒன்றுமில்லை....சுரேகாதான் ஆரம்பித்தாள். அவதான் சொன்ஞள்......அவங்க மம்மியும் டாடியும் வந்து எப்படி...

மூ. பெண் :—(கடுமை தொனிக்கும் குரலில்) இதையெல்லாம் தெரிஞ்சுக்க உனக்கு ரொம்ப ஆவல். இல்லையா? அவங்க மம்மியும் டாடியும் அவங்களுக்குள்ளே...... எப்படி...

பிள்ளை :—அவங்களுக்குள்ளே இல்லை...அதுதான் இங்க விசேஷம்......

மூ. பெண் :—சும்மா இரு! அசோக்!

கின்னி :—இவன்கிட்ட யாரு பேசிஞ? தினம் தினம் ஏதாவதொரு சாக்கு. என்னைப்போட்டு அடிக்கிருன்.

மூ. பெண் :—ஏன் அடிக்கிருன்?

கின்னி :—ஏஞ? என் சாமான்களை யெல்லாம் அவளுக்குக் கொடுக்க...நான் விடுவதில்லை. அதஞல்தான்.

மூ. பெண் :—எவளுக்கு?

கின்னி :—அதான் இவனுடை அவள்...என்னுடை பர்த்டே பிரசண்டு வளையலைக் கொண்டுபோய் கொடுத்திருக்கான். அப்புறம் ஒருதரம் எனக்கு பிரைஸ் வந்த பேஞ........இதையெல்லாம் மம்மிகிட்ட நான்

சொன்னால்......தனியாயிருக்கும்போது வந்து என் மென்னியைப் பிடிக்கிறான்.

மூ. பெண் :—(இளைஞனிடம்) அசோக்...என்னடா சொல்லு கிறாள் இவள்? அவள் யாரு?

பிள்ளை :—சும்மா உளறுகிறாள்...பொய்...பொய்.

கின்னி :—பொய்யா? என் பேனா உன் வர்ணாகிட்ட இல்லை?

மூ. பெண் :—யாரது வர்ணா?

கின்னி :—அதுதான்......அந்த உத்யோக் சென்டரில் இருக்காளே! இவன்தான் அவள் பின்னாலே சுத்தறான்.

பிள்ளை :—(அவளை எட்டிப்பிடிக்க முயற்சித்தவாறு) இரு...இரு. இன்னிக்கு உன் உயிரை வாங்குகிறேனா இல்லையா... பாரு...

(சின்னவள் அவனிடமிருந்து தப்ப இங்கும் அங்கும் ஓடுகிறாள். இளைஞன் அவளைத் துரத்துகிறான்.)

மூ. பெண் :—அசோக்!

பிள்ளை :—இன்று இவளை விடப்போவதில்லை. இவளுக்கு வாய் ரொம்ப அதிகமாகிவிட்டது...இவளை...

(சின்னவள் தப்பித்துக்கொண்டு வெளிப்புறக் கதவின் வழியாக ஓடிவிடுகிறாள்.)

கின்னி :—(ஓடிக்கொண்டே) உத்யோக் சென்டர் காரி வர்ணா! உத்யோக் சென்டர் காரி வர்ணா!...வர்ணா உத்யோக் சென்டர் காரி!......

(இளைஞன் அவளைத் தொடர விரும்புகிறான். எதிர்பாராத விதமாய் (கு. தலைவி) அம்மா உள்ளே வருவதைக் கண்டு திகைத்து நிற்கிறான். அந்த வீட்டுடன் தனக்கு எந்தவித சம்பந்தமும் இல்லாததுபோல் அவள் உள்ளே நுழைகின்றாள். தனக்கு அந்த வீட்டில் எவ்வித அக்கறையுமில்லாதது போன்ற அலட்சிய

பாவம். முகத்தில் ஒரு முடிவிற்கு வந்துவிட்ட இறுக்கமும்... ..கூடவே குழப்பமான ஒரு தவிப்பும் தெரிகின்றது. அங்கிருப்பவர்களைப் பாராமலேயே கையிலிருக்கும் சாமான்களை எட்டியிருக்கும் ஒரு நாற்காலியின் மீது வைக்கிருள். எக்கச்சக்கமான ஒரு நிலையில் தானிருப்பதை உணருகிறவன்போல் இளைஞன் ஏதோ சாமானை எடுப்பதும் வைப்பதுமாயிருக்கிருன். தட்டு, ரொட்டித் துண்டுகள், டின்...யாவற்றையும் எடுத்துக்கொண்டு மூ. பெண் சமையலறைப் பக்கம் போகிருள்.)

மூ. பெண் :—(அம்மாவைக் கடந்து சென்றவாறே) இதோ! தேநீர் கொண்டு வருகிறேன்.

கு. தலைவி :—எனக்கு வேண்டாம்.

மூ. பெண் :—ஒரே ஒரு கப். (போகிருள். கு. தலைவியின் பார்வை அறையின் அலங்கோலத்தைக் கவனிக்கிறது. தான் கையில் கொணர்ந்திருக்கும் சாமான்களை அதன் அதன் இடத்தில் வைப்பதைத் தவிர வேறெதையும் அவள் தீண்டுவதில்லை......மூ. பெண் திரும்பி வருகிருள். காலி தேயிலைத் தூள் பாக்கெட்டைக் காண்பித்தவாறு) தேயிலை தீர்ந்துபோய்விட்டது......

கு. தலைவி :—எனக்குத் தேநீர் வேண்டாம்.

மூ. பெண் :—எல்லோருக்குமாய்தான் போடுகிறேன். ஆளுக்கொரு கப்......

பிள்ளை :—எனக்கு வேண்டாம்.

மூ. பெண் :—ஏன்? தண்ணீர் வைத்திருக்கிறேன். தூள் தான் வாங்கிக்கொண்டு வரவேண்டும்.

பிள்ளை :—உனக்கு வேண்டுமென்ருல் போட்டுக்கொள்.

மூ. பெண் :—நான்மட்டும் குடிக்கவா? எத்தனை ஆசையாய் சாண்ட்விச் செய்திருக்கிறேன்......

பிள்ளை :—எனக்கு மனது சரியாக இல்லை.

கு. தலைவி :—நான் தேநீர் சாப்பிட யாருடனே வெளியே போகப் போகிறேன்.

மூ. பெண் :—நீ இப்பொழுது வீட்டில் இருக்கப்போவதில்லையா?

கு. தலைவி :—இல்லை...ஜகன்மோகன் வருவான் என்னை அழைத்துப் போக.

மூ. பெண் :—இங்கே வருவாரா?

கு. தலைவி :—அழைத்துப் போக வருவான்! ஏன்?

மூ. பெண் :—அவர்கூட வரப்போகிறாராம். இப்போ... ஜுனேஜா அங்கிள்தான்.

கு. தலைவி :—அவர் வரப்போகிறரென்று எப்படித் தெரியும்?

மூ. பெண் :—அசோக் அவருக்கு போன் பண்ணினுன். உன்னிடம் ஏதோ பேச வேண்டுமாம்.

கு. தலைவி :—எனக்கு அவரிடம் பேச வேண்டியதில்லை.

மூ. பெண் :—அவர் வந்தால்......

கு. தலைவி :—நான் வீட்டிலில்லை....எப்பொழுது வருவேனென்று தெரியாது என்று சொல்லு.

மூ. பெண் :—காத்திருக்கிறேன் என்று சொன்னால்...

கு. தலைவி :—காத்துக்கொண்டிருக்கட்டும்.

(பிரோவிலிருந்து இரண்டு, மூன்று கைப் பைகளை எடுத்து எதை எடுத்துக்கொள்ளலாமென்று பார்க்கிறுள். மூ. பெண் ஒருமுறை இளைஞனைப் பார்க்கிறுள். அவன் அங்கிருந்து வெளியேறிவிட சாக்குத் தேடுவது போல் தோன்றுகிறது.)

மூ. பெண் :—(ஒரு கைப்பையைத் தொட்டு) இவற்றிலே இது நன்றாய் இருக்கிறது மம்மி!......ஆமாம்.....திரும்பி வர எத்தனை நேரமாகுமென நினைக்கிறாய்?

கு. தலைவி :—தெரியவில்லை. (அந்த பர்ஸை வைத்துவிட்டு இன்னொன்றை எடுத்துக்கொள்கிறுள்.) நேரமானாலும் ஆகலாம்.

மூ. பெண் :—(அந்தப் பர்ஸைப் பார்த்து) இது இன்னும் நன்றாய் இருக்கிறது......எங்கே போயிருக்கிறாய், யாருடன் என்று கேட்டால்......

கு. தலைவி :—ஒன்றும் சொல்லவில்லை என்று சொல்...... இல்லேன்னு......ஜகன்மோகன் வந்தான் அழைத்துப் போக என்று சொல்......(ஒருமுறை அறையெங்கும் ஒரு நோட்டம் பார்த்தவாறு) என்ன களேபரமாய் இருக்கு!

மூ. பெண் :—இதோ ஒழுங்குபடுத்துகிறேன். (மும்முரமாய் வேலை செய்துகொண்டே) அவரிடம் அப்படிச் சொல்லுவது சரியாக இருக்குமா மம்மி !

கு. தலைவி :—ஏன் ?

மூ. பெண் :—அவர் வேண்டுமென்றே டாடியிடம் போய் சொல்லுவார்......

கு. தலைவி :—சொன்னுலென்ன ஆகிவிடும் ? (சில சாமான்களைத் தானே எடுத்து அவளிடம் கொடுத்தவாறு) உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டு வா.

மூ. பெண் :—ஆனுல்......வந்து......

கு. தலைவி :—நான் ஒருவருடன் தேநீர் அருந்த வெளியே செல்லுகிறேன். திருடப் போகவில்லையே !

மூ. பெண் :—உனக்குத் தெரிந்ததுதானே......டாடிக்கு ஜகன்மோகன் அங்கிள்......

கு. தலைவி :—உங்க டாடிக்கு யாரைத்தான் பிடிக்கிறது ?

மூ. பெண் :—இருந்தாலும்...கொஞ்சம் சீக்கிரம் வந்து விடேன்......

கு. தலைவி :—நான் ஜகன்மோகனிடம் சில முக்கியமான விஷயங்கள் குறித்துப் பேசவேண்டி இருக்கிறது. அவனுக்கு எத்தனையோ வேலை. எனக்காக எல்லாவற்றையும் கான்சல் செய்துவிட்டு வருகிறுன். வேண்டும்போது வா, வேண்டாதபோது போ என்று சொல்ல வேலையற்ற ஆசாமியில்லை அவன்.

(இளைஞன் சஞ்சலத்துடன் நடந்தவாறே கதவருகில் செல்லுகிறுன்.)

பிள்ளை :—பின்னி! நான் கொஞ்சம் வெளியே போய் விட்டு வருகிறேன்.

மூ. பெண் :—நீயுமா?......நீ எங்கே போகிருய்?

பிள்ளை :—இங்கேதான் பக்கத்தில்.........கொஞ்ச நேரத் தில் வந்துவிடுவேன்.

மூ. பெண் :—ஜுனேஜா அங்கிள் வந்தால்......நான்?

பிள்ளை :—ஒருக்கால் அதற்குள் வந்துவிடுவேன்.

மூ. பெண் :—ஒருக்காலா?

பிள்ளை :—இல்லையில்லை......வந்துவிடுவேன். (போகிருன்.)

மூ. பெண் :—(பின்ஞலிருந்து) இந்தா! (கதவை நோக்கிச் செல்லுகிருள்.) அசோக்! (இளைஞன் நிற்பதில்லை. உதட் டைச் சுளித்தவாறு தாயின் பக்கம் திரும்பி வருகிருள்.) தேயிலையாவது வாங்கிக் கொடுத்துவிட்டுப் போகக் கூடாதா?

கு. தலைவி :—(எதையோ சொல்லத் தன்னைத் தயார் செய்துகொண்டு) உன்னிடத்தில் ஒரு விஷயம் சொல்லவேண்டும்.

மூ. பெண் :—இதையெல்லாம் உள்ளே வைத்துவிட்டு வரட்டுமா? அங்கேயும் எல்லாம் இறைந்து கிடக் கிறது. ஜுனேஜா அங்கிள் வருவதற்குள்......

கு. தலைவி :—நான் ஒரு சின்ன விஷயம்தான் சொல்ல வேண்டும்.

மூ. பெண் :—சொல்லேன்......

கு. தலைவி :—அடுத்த முறை நீ வரும்பொழுது ஒருக் கால் என்னை நீ இங்கு பார்க்க முடியாது.

மூ. பெண் :—என்ன சொல்லுகிருய் மம்மி!......

கு. தலைவி :—இதற்காகத்தான் இன்று ஜகன்மோக னுக்கு போன் செய்தேன்.

மூ. பெண் :—அப்படியென்ருல்?

கு. தலைவி :—இனி என்னவானாலும் சரி. இப்படி ஒரு நாள் வந்து தீரவேண்டுமென்று எனக்குத் தெரியும்.

மூ. பெண் :—நன்றாக யோசித்துவிட்டாயா மம்மி?

கு. தலைவி :—(லேசாக இமைகளை மூடிய வண்ணம்) யோசித்தாகிவிட்டது. (விழிகளைத் திறந்து) இனி நீ போகலாம்.

(மூ. பெண் ஒரு விநாடி மௌனமாய் அவளைப் பார்த்தவாறே நிற்கிறாள். பின்னர் சிந்தனையிலாழ்ந்தவளாய் உள்ளே போகிறாள்.)

மூ. பெண் :—(நடந்தவாறே) இன்னும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். (போய்விடுகிறாள்.)

கு. தலைவி :—இன்னும் எதுவரை?

(கழுத்து மாலையை விரலில் சுற்றி இழுத்ததில் அது பட்டென அறுந்து விடுகின்றது. அமைதி இழந்தவளாய் அந்த மாலையைக் கழற்றிவிட்டு பீரோவிலிருந்து இன்னொரு மாலையை எடுக்கிறாள்.)

—ஒவ்வொரு வருடமும்...சரி. இவனுக்கு இதாகட்டும்...அவளுக்கு அதாகட்டும்...என்று...(மாலைகளிருக்கும் பெட்டியை வைத்து பீரோவின் கதவை மூடுகிறாள். சாமான்கள் ஒழுங்காக வைக்கப்படாததால் பீரோவைச் சரியாக மூட முடியவில்லை.)

—இன்றைக்கு......நாளைக்கு...(மூட முடிவதில்லை. நன்றாகத் திறந்து வேகமாய்ப் படாரென்று சாத்துகிறாள்.)

—இந்த வருஷம்......அடுத்த வருஷம்.

(பீரோவின் அடியில் குவிந்து கிடக்கும் செருப்புகளைக் காலால் துழாவுகிறாள். ஒரு காலுக்குக் கிடைக்கிறது. இன்னொரு காலுக்குக் கிடைப்பதில்லை. முந்தியதையும் உதறி எல்லாவற்றையும் காலால் உதைத்து அடியிலே தள்ளுகிறாள்.)

—இப்பவும் இன்னும் கொஞ்சம் யோசிக்க வேண்டுமாம்.

(டிரஸிங் டேபிளுக்கு எதிரே போய் நிற்கிறாள். எதற்காக வந்தோம் எனப் புரியாது சில விநாடி நிற்கிறாள். பின்னர் தெளிவு வந்ததும் கண்ணாடியைப் பார்த்து கழுத்திலே மாலையை அணிந்துகொள்கிறாள். அணிந்த பின் கண்ணாடியில் தன் உருவத்தை நன்றாகப் பார்த்துக் கொள்ளுகிறாள். கழுத்தை உயர்த்தி கன்னத்தைத் தேய்த்து சுருக்கங்களை நீக்க முயற்சிக்கிறாள்.)

—எதுவரை? எதற்காக வேண்டி?

(மேலே என்ன செய்வதென்று புரிவதில்லை. டிரஸிங் டேபிளின் மீதிருக்கும் சாமான்களை எடுக்கிறாள். வைக்கிறாள். கிரீம் பாட்டிலை எடுப்பவள் ஒருகணம் அதையே பார்த்தவண்ணம் நிற்கிறாள். பிறகு மெல்லத் திறக்கிறாள்.)

—வீடு...ஆபீஸ்...ஆபீஸ்...வீடு......

(கிரீமை முகத்தில் தடவிக்கொண்டபின்தான் இப்பொழுது தடவிக் கொள்ளக்கூடாது என்பது நினைவு வருகிறது. துண்டினால் துடைத்துக்கொண்டு இன்னொரு பாட்டிலை எடுக்கிறாள். அதிலிருக்கும் லோஷனை பஞ்சில் எடுத்துக்கொண்டு எங்கே தடவிக்கொள்வது என்பது போல் யோசிக்கிறாள். எதுவும் தோன்றாத நிலையில் புறங்கையைத் துடைத்துக்கொள்ள வாரம்பிக்கிறாள்.)

—யோசித்துப் பார்! யோசித்துப் பார்!

(கவனம் தலை மயிரின்பால் செல்லுகிறது. ஏதோ சிந்தனையில் கையிலிருந்த பஞ்சை தலையில் தடவிக்கொள்ளப் போகிறவள் சட்டென கையை அகற்றிக்கொள்கிறாள். பஞ்சை தூர வைக்கிறாள். எங்கே நரைத்த முடி அதிகம் தெரிகிறது என்று விரல்களால் கோதிப் பார்க்கிறாள். சீப்பைத் தேடுகிறாள். அது கிடைப்பதில்லை. அவசரத்தில் ஒவ்வொரு டிராயராக திறக்கிறாள். தேடுகிறாள். கடைசியில் சீப்பு மேலேயே துண்டிற்கு அடியில் கிடைக்கிறது.)

—எதைப்பற்றி யோசிப்பது?

(சீப்பினுல் வாரி நரைத்த முடியை மூடிக்கொள்கிருள். கவனம் கண்களைச் சுற்றி வளையமிட்டிருக்கும் கருமையின்மீது செல்லுகிறது. சீப்பை வைத்துவிட்டு, விரல்களால் தேய்த்துவிட்டுக் கொள்கிருள். இச்சமயம் ஆண் 3 வெளிக் கதவின் வழியாக உள்ளே வருகிருன். சிகரெட் புகையை வளைய வளையமாக ஊதிவிட்டவாறே வரும் அவன், அவள் தன் வருகையை யறியாதது கண்டு சிகரெட் சாம்பலைத் தட்ட டீப்பாயின் மீதிருக்கும் பாத்திரத்தினருகே செல்லுகிருன். பவுடர் டப்பாவைத் திறந்து அவள் கண்களுக்குக் கீழே லேசாகப் பூசிக்கொள்கிருள். கை நடுங்குவதால் கொஞ்சம் பவுடர் சிந்திவிடுகிறது.)

(பெருமூச்சுடன்)—எதைப்பற்றியும் யோசிக்காதே.......

(எழுந்து நிற்கிருள். ஒருமுறை கண்ணுடியில் தன்னை நன்ருகப் பார்த்துக்கொள்கிருள். ஆண் 3 முதல் சிகரெட்டிலிருந்து இரண்டாவதைப் பற்ற வைத்துக் கொள்கிருன்.)

—நடப்பது நடக்கட்டும். விடு.

(சோபாவின் பக்கம் திரும்புகிருள். ஆண் 3-மீது பார்வை விழுந்ததும் திகைத்து நிற்கிருள். கண்களில் புதியதொரு ஒளி மின்னுகிறது.)

ஆண் 3 :—(மிக மிக மென்மையான குழைவுடன்) ஹலோ!...... கூக்கூ......

கு. தலைவி :—அரே! நீ வந்ததே தெரியவில்லையே......

ஆண் 3 :—நீ......தனக்குத்தானே ஏதோ பேசிக்கொண்டிருந்தாய்......அதனுல்......

கு. தலைவி :—எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன்—நான். ஆபீஸிலிருந்து நேராக வருகிருயா?

(ஆண் 3...புகையை உள்ளுக்கிழுத்து வளையமாக வெளியே ஊதுகிருன்.)

ஆண் 3 :—அப்படித்தான் வைத்துக்கொள்ளேன்.

கு. தலைவி :—அப்படியென்ருல்......இல்லையென்று அர்த்தம்.

ஆண் 3 :...நோ......நோ !......போல் ஸ்டாரில் சும்மா இரண்டு நிமிடம்தான். அவர்களுடைய டிசைன் ஒன்றைக் கொடுக்க வேண்டியிருந்தது......பிறகு வீட்டிற்குப் போய் குளித்துவிட்டு...நேராக...

கு. தலைவி :—இதுதான் ஆபீஸிலிருந்து......நேராய்..... இல்லையா?

ஆண் 3 :—(புகையை ஊதியவாறே) நீ கொஞ்சம்கூட மாற வில்லை......இப்பொழுதும் அதேமாதிரி அதட்டல்! கூக்கூ டியர்! விஷயம் இதுதான். ஆபீஸ் டிரஸ்ஸில் மாலை வேளையில் ரொம்ப சங்கடமாக இருக்கும். அதனால்தான்......

கு. தலைவி :—நேராக வந்துவிடு என்று நான் சொல்ல வில்லையா? ஒரு நிமிடம்கூட வீணாக்காமல்......

ஆண் 3 :—ஒரு நிமிடமாவது...எங்கே வீணாக்கினேன்? போல் ஸ்டாரில் வந்து......

கு. தலைவி :—போதும் இதெல்லாம். இந்த சாக்குப்போக் கெல்லாம் எனக்கு புதிதல்ல.

ஆண் 3 :—(சோபாவில் அமர்ந்த வண்ணம்) என்ன வேண் டுமோ சொல்லிக்கொள்...காரணமில்லாமல். எனக்கு புதிதல்ல.

கு. தலைவி :—உட்கார்ந்து விட்டாயே! புறப்பட வேண் டாம்?

ஆண் 3 :—ஒரு நிமிடம்......இதோ போகலாம். நீயும் உட்கார்.

கு. தலைவி :—(மனமில்லாமல் அவனருகே அமருகின்றாள்.) இன்று திடீரென்று நீ போன் செய்ததும் எனக்குத் தோன்றி யது......வந்து...

(கு. தலைவியின் கண்களில் நீர் தளும்புகிறது.)

கு. தலைவி :—(அவன் கரத்தின்மீது தன் கரத்தை வைத்து) ஜக்.....

ஆண் 3 :—(அவள் கரத்தை மெல்ல வருடியவாறே...) என்ன விஷயம் கூக்கூ......

கு. தலைவி :—வாழ்க்கை முழுவதும் எந்த கட்டத்தை அடைய பயந்துகொண்டிருந்தேனோ அந்த இடத்திற்குப் போய் சேர்ந்துவிட்டேன் நான். இன்று எனக்குத் தோன்றுகிறது......

ஆண் 3 :—(அவள் கரத்தின்மீது விரல்களால் லேசாகத் தட்டியவாறு) இப்படி மனம் தளரக்கூடாது......

கு. தலைவி :—நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன். இன்று நீ—என்னிடம்......

ஆண் 3 :—(உட்புறம் பார்வையைத் திருப்பி) வீட்டில் ஒருவரும் இல்லையா ?

கு. தலைவி :—பின்னி இருக்கிருள்.

(கரத்தை விலக்கிக் கொள்ளுகிருள்.)

ஆண் 3 :—இங்கேயா இருக்கிருள்......நான் கேள்விப்பட்டது—அவள் வந்து......

கு. தலைவி :—ஆமாம்—...ஆனல் நேற்றுதான் இங்கு வந்திருக்கிருள்.

ஆண் 3 :—எப்பொழுதோ பார்த்தது அவளை...எத்தனை வருடங்களாகிவிட்டன ?

கு. தலைவி :—இப்பொழுது வருவாள் வெளியே...இதோ பார் ஜகன் ! உன்னிடம் நான் நிறைய பேச வேண்டியது இருக்கிறது இன்று.

ஆண் 3 :—கேட்கத்தானே வந்திருக்கிறேன். சொல்லு. போனில் உன் குரலைக் கேட்டதுமே—உன் குரலிலிருந்து விஷயம் ஏதோவென்று எனக்குத் தோன்றியது.

கு. தலைவி :—நான் ரொம்பவும்......குழம்பி...இருந்தேன் அச் சமயத்தில்.

ஆண் 3 :—இப்பொழுதும் அப்படித்தானிருக்கிருய்......

கு. தலைவி :—என்னை எவ்வளவு நன்ருகப் புரிந்து கொள்ளுகிருய். ஓ...எவ்வளவு நன்ருகப் புரிந்து கொள்ள முடிகிறது உன்ருல்...இச்சமயம்...என் மன நிலை...

(குரல் தழுதழுக்கின்றது.)

ஆண் 3 :—ப்ளீஸ்...

கு. தலைவி :—ஜகன்...

ஆண் 3 :—சொல்லு.

கு. தலைவி :—உனக்குத் தெரியும். ....நான்........உன் ஒருவனைத்தான்...நான்...

ஆண் 3 :—எதற்காக இதைச் சொல்லுகிருய்? சொல்ல வேண்டிய விஷயமா இது?

கு. தலைவி :—இருந்தாலும் வாயிலிருந்து வந்துவிடு கிறது...இதோ பார்......என் மனம்......வேண்டாம். வெளியே போனபின் சொல்லுகிறேன்.

ஆண் 3 :—ஒரு suggestion.

கு. தலைவி :—சொல்லு...

ஆண் 3 :—பேச வேண்டியதை யெல்லாம் இங்கேயே பேசிவிடு...அதன்பின்......

கு. தலைவி :—வேண்டாம்...வேண்டாம்.

ஆண் 3 :—ஏன்?

கு. தலைவி :—இங்கு என்ருல் எதையும் மனம்விட்டுப் பேசமுடியாது. என்னேடு வெளியே வருவதற்கு உனக்கு எப்படியோ இருந்தால்......

ஆண் 3 :—ஏனிப்படிப் பேசுகிருய்? எங்கு போகலாம்... சொல்லு..........போகலாம். நான் எதற்காகச் சொன்னேன் என்ருல்......

கு. தலைவி :—எனக்கு எல்லாம் தெரியும். உன் பேச்சை ஒருபோதும் தவருக எடுத்துக் கொள்ளவே மாட்டேன்.

ஆண் 3 :—சொல்லு—எங்கே போகலாம்?

கு. தலைவி :—எங்கே போகலாமென நினைக்கிருயோ அங்கே?

ஆண் 3 :—நினைப்பதா? நானு? எப்பொழுதும் முடிவு செய்வது நீயாகத்தானே இருக்கும்?

கு. தலைவி :—GINZA! சரியா?....அங்கே...அதே மூலை யோர டேபிள் ஒருக்கால் கிடைக்கலாம்.

ஆண் 3 :—கேட்காதே!....GINZA....போகலாம் என்று சொல்லிவிடு...போதும்.

கு. தலைவி :—அல்லது 'யார்க்ஸ்'? இச்சமயம் அங்கே அதிக கூட்டமிராது.

ஆண் 3 :—நான்தான் சொல்லிவிட்டேனே...நீ வந்து...

கு. தலைவி :—சரி...அந்தக் குட்டி ரெஸ்டாரெண்ட்டுக்குப் போகலாம்...அங்கு...'கபாப்' உனக்கு ரொம்பவும் பிடிக்குமல்லவா?....ஹூம்....அந்த நாட்களுக்குப் பிறகு நான் அந்தப் பக்கம் போகவேயில்லை......

ஆண் 3 :—(தயக்கத்துடன்) அங்கேயா? இப்பொழுதெல் லாம் நான் அங்கே போவதேயில்லை. ஆனுல் உனக்கு அங்கு போவதில் விருப்பமென்ருல்...போக லாம்.

கு. தலைவி :—புறப்படும்முன் ஒன்று சொல்லிவிடுகிறேன்.

ஆண் 3 :—(புகையை ஊதியவாறே) என்ன அது?

கு. தலைவி :—நான்...நேற்று மனதிற்குள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டேன்.

ஆண் 3 :—ஹூம்...ஹூம்...

கு. தலைவி :—முன்பு கூட இப்படி நான் சொல்லியதை நீ கேட்டிருக்கலாம்...ஆனால் இந்தமுறை உண்மை யாகவே ஒரு முடிவிற்கு வந்துவிட்டேன்.

ஆண் 3 :—(விஷயத்தைப் புரிந்துகொள்பவன் போல்) ஹூம்.......

(கணநேர மௌனம். அவன் ஏதோ யோசித்தவனாய் இங்குமங்கும் பார்க்கிறான். பின்னர் ஏதோ புத்த கத்தின் மீது பார்வை சென்றதும் எழுந்து புத்தக ஷெல்ப்பை நோக்கி நடக்கிறான்.)

கு. தலைவி :—ஏன் அங்கே போய்விட்டாய்?

ஆண் 3 :—(ஷெல்பிலிருந்து புத்தகத்தை எடுத்து) ஒன்றுமில்லை. சும்மா இந்தப் புத்தகத்தைப் பார்க்கலாம் என்று...

கு. தலைவி :—நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை வரவில்லை போலிருக்கிறது.

ஆண் 3 :—கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன்.

கு. தலைவி :—உனக்கே தெரியும்—அந்த நாளிலேயே இதையெல்லாம் என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை....இப்பொழுது....தாளவே முடியாமற் போய்விட்டது......என்னால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

ஆண் 3 :—(பக்கங்களைப் புரட்டியவாறு) இதன் அர்த்தம்......

கு. தலைவி :...நீ நினைப்பது சரிதான்.

ஆண் 3 :—(புத்தகத்தை அதனிடத்தில் வைத்தவாறே) ஹூம்...

(கு. தலைவி எழுந்து அவனைநோக்கி வருகிறாள்.)

கு. தலைவி :—நான் இதைப்பற்றி எப்பொழுதும் எவ்வளவு வருத்தப்படுகிறேன் என்பதை என்னால் வார்த்தைகளில் கூறவே முடியாது...என்னால்தானே நீயும் இப்படி......வாழ்க்கையில் இவ்வளவு கஷ்டப் படும்படி நேர்ந்திருக்கிறது.

ஆண் 3 :—(கழுத்தைத் தடவியவாறே) இதோ பார்...உண்மையைச் சொல்லப் போனால்......இப்பொழுது நான் இதைப்பற்றி அதிகம் சிந்திப்பதேயில்லை.

(மெல்ல நடந்துவந்து அவளையும் கடந்து மேலே செல்லுகிறான்.)

கு. தலைவி :—'சிந்திப்பதனால் ஏதாவது நடக்குமென்றால் சிந்திப்பதில் பயனுண்டு' என்று முன்பு நீ அடிக்கடி சொல்லுவாய். அது நினைவுக்கு வருகிறது.

ஆண் 3 :—ஆமாம்......

கு. தலைவி :—ஆனால் நேற்று...இன்று...இவ்விரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. இருக்கிறதில்லையா?

ஆண் 3 :—ஆமாம்......ஆமாம் இருக்கிறது......ரொம்ப ரொம்ப.........

கு. தலைவி :—இதனால்தான் உன்னிடம் நான் சொல்ல விரும்புவது......

(மூ. பெண் உள்ளேயிருந்து வருகிறாள்.)

மூ. பெண் :—மம்மி...இஸ்திரிக்காக துணிகள் உள்ளே வைத்திருக்கிறதே......அதை (ஆண் 3-ஐப் பார்த்ததும்) ஹலோ! அங்கிள்.

ஆண் 3 :—ஹலோ! ஹலோ!...நீயா இது? அடேயப்பா!

மூ. பெண் :—உங்களுக்கெப்படித் தோன்றுகிறது?

ஆண் 3 :—எத்தனை சின்னவளாய் இருந்தாய் நீ! (கு. தலைவியிடம்) எவ்வளவு பெரியவளாய் வளர்ந்து விட்டாள்!

கு. தலைவி :—ஆமாம்...

ஆண் 3 :—அப்போ யெல்லாம் ஃப்ராக் அல்ல போட்டிருப்பாள்.

மூ. பெண் :—(வெட்கத்துடன்) அது எப்பவோ......

ஆண் 3 :—இவள் ஒருதரம் என் கையை வெடுக்கென கடித்துவிட்டாள்—நினைவிருக்கிறதா ? குறும்புக்காரி.

கு. தலைவி :—(தலையை அசைத்து) எல்லாம் ஒரு நாள் அடங்கித்தானே போகிறது.

மூ. பெண் :—உட்காருங்கள். இதோ வருகிறேன்.

(உட்புறக் கதவின் வழியாகச் செல்லுகிறாள்.)

ஆண் 3 :—எங்கே ஓடுகிறாய் ?

மூ. பெண் :—இருங்கள்...இதோ வருகிறேன். (போகிறாள்.)

ஆண் 3 :—எப்படி கொழுக் முழுக்கென்று இருப்பாள் ! கன்னமெல்லாம் உப்பி...அப்படியே...இதுமாதிரி.

கு. தலைவி :—கன்னம் கின்னமெல்லாம் தானாக ஒட்டிப் போய்விடுகிறது.

ஆண் 3 :—காதிலே விழுந்தது...இவள் தன்னிஷ்டப்படி யாரையோ......

கு. தலைவி :—ஹூம்......இஷ்டப்படி தான். இஷ்டப்படி நடந்ததின் பலன் தான் இது.

ஆண் 3 :—ரொம்ப அமர்த்தலாகப் பேசுகிறாளே !

கு. தலைவி :—இந்த வயதில்...இத்தனை முதிர்ச்சி...ஹூம் நாம் புறப்படலாமா ?

ஆண் 3 :—உன்னிஷ்டம்.

கு. தலைவி :—(தன் கைப் பையில் கைக்குட்டையைத் தேடுகிறாள்.) எங்கே போய்விட்டது ? (கைக் குட்டை கிடைத்ததால் கைப் பையை மூடியவாறு) இதிலேயே இருக்கிறது......எப் பொழுது திரும்பி வருவோம்? ஏன் கேட்கிறேன் என்றால் இவளிடம் சொல்லிவிட்டுப் போகலாம் அல்லவா ?

ஆண் 3 :—அது உன்னைப் பொறுத்தது. என்ன சொல்ல வேண்டுமோ சொல்லிவிட்டு வா.

கு. தலைவி :—ஒருக்கால் வர நேரமாகலாம் என்று சொல்லி விடுகிறேன். யாரோ வரப்போகிறாராம். அவரிடம் சொல்லிவிடட்டும்.

ஆண் 3 :—இன்னுமொருவர் வரப்போகிறாரா ?

கு. தலைவி :—ஒருவருமில்லை......ஜானோஜா தான். இந்த மனிதரால்தான் எல்லாமே...உனக்குத்தான் எல்லாம் தெரியுமே (உட்புறம் பார்த்து) பின்னி! (பதில் வராதது கண்டு) பின்னி!...எங்கே போய்விட்டாள் இவள் ? (கதவினருகே சென்று உள்ளே எட்டிப் பார்க்கிறாள். சற்றே ஆத்திரத்துடன் திரும்புகிறாள்.) எங்கே போய்விட்டாளோ தெரிய வில்லை. இந்தப் பெண்ணும்...இப்படி !

ஆண் 3 :—சற்றுப் பொறு...

கு. தலைவி :—இல்லை...வேண்டாம். அந்த மனிதர் வந்து விட்டால் அப்புறம் சங்கடமாகிவிடும். உன்னிடம் மிகமிக முக்கியமான விஷயத்தைப் பற்றி நான் பேச வேண்டும். அதுவும் இன்றே...இப்பொழுதே.

ஆண் 3 :—(புதிய சிகரெட்டொன்றைப் பற்றவைத்துக் கொண்டு) ஓ—எஸ்...ஐ ஆம் அட் யுவர் டிஸ்போசல்.

கு. தலைவி :—(எதையும் விட்டுவிடவில்லையே என்பது போல் அறையைச் சுற்றிப் பார்வை சுழல்கின்றது.)—சரி......சரி.......புறப்படலாம்.

ஆண் 3 :—(நடந்துகொண்டே சட்டென நின்று) ஆனால்...வீடு... வீட்டை இப்படியே திறந்து போட்டுவிட்டா வருவாய் ?

கு. தலைவி :—இல்லை....யாராவதொருத்தர் இப்பொழுது வந்துவிடுவார்கள்.

ஆண் 3 :—(புகையை ஊதியவாறு) உன்னிஷ்டம்...உனக்குச் சரியென்றால் சரி.

கு. தலைவி :—(மீண்டுமொரு முறை அறையை ஒரு நோட்டம் பார்த்தவாறு) எனக்கு வந்து...சரி...போகலாம்.

(ஆண் 3 முன்ஞல் போய்விடுகிருன். கு. தலைவி கைப் பையைத் திறந்து எதையோ தேடியவாறே பின்ஞல் செல்லுகிருள். சில விஞடி மேடை காலியாக இருக்கிறது. பின்னர் வெளியிலிருந்து சின்னவள் கின்னி விம்மி விம்மி அழும் குரல் கேட்கிறது. அவள் அழுது கொண்டே உள்ளேவந்து சோபாவின்மீது குப்புறப் படுத்துக்கொள்கிருள். பின்னர் எழுந்து உட்கார்ந்து அறை காலியாகக் கிடப்பதைக் கவனிக்கிருள். அழுது கொண்டே எழுந்து உட்புற அறைக்குள் செல்லு கிருள். மேடை மீண்டும் இரண்டொரு விஞடி காலி யாக இருக்கிறது. இதன்பின் மூ. பெண் தேநீர் டிரேயுடன் உட்புறக் கதவின் வழியாக வருகிருள்.)

மூ. பெண் :—அடடா! போய்விட்டார்களா?

(டிரேயை டைனிங் டேபிளின்மீது வைத்துவிட்டு வெளிப் புறக் கதவுவரை வருகிருள். ஒருமுறை வெளியே எட்டிப் பார்த்துவிட்டு சில கணம் தனக்குள்ளே ஏதோ யோசித்தவாறு அங்கேயே நிற்கிருள். பிறகு தன்னைச் சுதாரித்துக்கொண்டு திரும்பி டைனிங் டேபிள் பக்கம் செல்லுகிருள்.)

அப்...பா...சில சமயம் எப்படித் தலையைச் சுற்று கிறது.

(வழியில் டிரஸிங் டேபிளின் அலங்கோலத்தைக் கண்டு ஒரு விஞடி நிற்கிருள். பின்னர் அவசர அவசரமாக யாவற்றையும் ஒழுங்குபடுத்துகிருள்.)

கொஞ்சம் கவனிக்காவிட்டால் வீடே காடாகப் போய் விடுகிறது.

(அங்கிருந்து நடந்து டைனிங் டேபிளுக்கு வருகிருள். தனக்குமட்டும் தேநீர் தயாரித்துக் கொள்ளுகிருள். சின்னவள் முன்போலவே விம்மியவாறு உள்ளே வருகிருள்.)

கின்னி :—வேண்டாத சமயத்தில் எல்லோரும் கூட்டமா இருப்பா...வேணுங்கிற போது...ஒருத்தரு கூட கண்ணிலே படமாட்டா......

(மூ. பெண் தேநீர் தயாரிப்பதை அப்படியே பாதியில் விட்டு விட்டு அவளை நோக்கி வருகிறாள்.)

மூ. பெண் :—கின்னி! இதென்ன மறுபடியும்! நீ வெளியே யிருந்து எப்போ வந்தே!

கின்னி :—எப்பவோ வந்தேன்! இங்......கே......தான். ஒ...ஒருத்தர் கூட இல்லையே...நீ...கொஞ்ச நேரத் துக்கு...முந்தி நீ...எங்கே போனே?

மூ. பெண் :—பின் கதவுவழியா கடைக்கு...தேயிலை வாங்கிவரப் போனேன். யார் அடித்தா உன்னே? அசோக்கா?

கின்னி :—அவன் எங்கே இருந்தான் அப்போ! என் காதைப் பிடித்துத் திருகுவதற்கு மட்டும் எங் கிருந்தோ வந்துவிடுவான்...ஆனு...சுரேகாவோட மம்மிகிட்ட பேசறத்திற்கு மட்டும் ஒருத்தரும் வரமாட்டா......

மூ. பெண் :—சுரேகாவோட மம்மி உன்னே ஏதாவது சொன்னுளா?

கின்னி :—மம்மி எங்கே? நான் மம்மியைக் கூட்டிக் கொண்டு போகணும் அங்கே.

மூ. பெண் :—எங்கே? சுரேகா வீட்டிற்கா?

கின்னி :—சுரேகாவோட மம்மிதான் கூப்பிடரு...“போ... போய் இப்பவே கூட்டிக்கொண்டு வா” என்கிருள்.

மூ. பெண் :—எதற்காக?

கின்னி :—அசோக் எங்களை மிரட்டுவதை எல்லோரும் பார்த்திண்டு இருந்தா......சுரேகாவோடே மம்மி அவளை வீட்டிற்கு இழுத்துண்டு போய்...அடித்தாள். அடித்ததும் அவள் வந்து எல்லாவற்றையும் என் பேரிலே போட்டுவிட்டாள்.

மூ. பெண் :—என்ன சொன்னுள் அவள்?

கின்னி :—நான்தான் அவளுக்கு இதெல்லாம் சொல்லித் தரேணும்.

மூ. பெண் :—அச்சா...அப்புறம்?

கின்னி :—அப்புறம் அந்த சுரேகாவோட மம்மி என்னைக் கூப்பிட்டு எப்படி திட்டிஞள் தெரியுமா? முதல்லே இதைச் சொல்லு...மம்மி எங்கே? நான் மம்மியை இப்பவே கையோட அழைச்சிண்டு போகப் போறேன். சொல்லருங்க......நான்தான் அவங்க பெண்ணைக் கெடுத்துவிட்டேனும். நம்ம வீட்டைப் பத்தி இன்னும் என்னென்னமோ கண்டபடி—கெட்ட கெட்ட வார்த்தை யெல்லாம் சொல்கிருள்...

மூ. பெண் :—நம்ப வீட்டிலே யாரைப்பற்றி சொன்னுள்?

கின்னி :—எல்லோரையும்தான். உ......உன்னை...... அசோக்கை, டாடியை..... மம்மியை.....சொல்லேன் மம்மி எங்கே போயிட்டான்னு. ஏன் சொல்ல மாட்டேங்கிருய்?

மூ. பெண் :—மம்மி வெளியிலே போயிருக்கா.

கின்னி :—வெளியிலேன்ளு...எங்கே?

மூ. பெண் :—வெளியிலேன்ளு...எங்கே...என்ன இடம் போகலாம் என்றெல்லாம் உனக்கு ரொம்பத் தெரியுமோ.

கின்னி :—(இன்னும் ஆத்திரத்துடன்) நீ...நீயும் என்னை மிரட்டறயா? மம்மி இல்லாட்டா...நீ...நீவா என்னேடு.

மூ. பெண் :—நான் வரமுடியாது.

கின்னி :—(கோபத்துடன்) ஏன் வரமுடியாது?

மூ. பெண் :—சொன்னேன் அல்ல? வரமுடியாது.

கின்னி :—(அவளை எட்டத் தள்ளி) வரவேண்டியதில்லை போ.

மூ. பெண் :—(கோபத்துடன்) கின்னி!

கின்னி:—என்னுடன் பேசவேண்டியதில்லை—கின்னியாம் கின்னி!

மூ. பெண் :—உனக்குக் கொஞ்சம்கூட மரியாதை கிடையாதா?

கின்னி :—கிடையாது.

மூ. பெண் :—பார்த்துக்கொண்டே இரு. இன்று நீ என்னிடம் அடி வாங்கப் போகிருய்.

கின்னி :—அடியேன்...நீயும்...இன்னிக்கு உங்கிட்டேயும் அடி வாங்கிக்கிறேன்.

மூ. பெண் :—நீ இப்போ உன் அழுகையை நிறுத்தப் போருயா இல்லையா?

கின்னி :—முடியாது......

மூ. பெண் :—சரி...உட்கார்ந்து நல்லா அழு.

கின்னி :—அழு......உட்கார்ந்து அழுதுகிட்டே இரு.

(அழகு காட்டுகிருள்.)

(பின்புறத்துக் கதவின் தாழ்ப்பாளை அசைக்கும் ஓசை கேட்கிறது.)

மூ. பெண்:—(அந்தப்பக்கம் பார்த்து) இங்கே...இந்தப் பக்கமா இந்த வேளையிலே யார் வந்திருப்பார்கள்?

(விரைந்து செல்லுகிருள். கின்னி ஆங்காரத்துடன் ஒரு நாற்காலியில் அமருகிருள். மூ. பெண்—ஆண் 4 டன் திரும்பிவருகிருள்.)

மூ. பெண் :—(நடந்து வந்தவாறு) பின்புறத்துக் கதவைத் தட்டக்கூடியவர் யாராக இருக்கலாமென்று யோசித்தேன். நீங்கள் வரப்போகிறீர்களென்று தெரியும். ஆனல் நீங்கள் எப்பொழுதும் முன் பக்கத்து கதவு வழியாகத்தானே வருவீர்கள்......அதனல்......

ஆண் 4 :—நான் அந்தக் கதவு வழியாக வந்திருப்பேன். ஆனல்......(கின்னியைப் பார்த்து) இவளுக்கென்ன! ஏனிப்படி உட்கார்ந்திருக்கிருள்?

மூ. பெண் :—(கின்னியிடம்) ஜானேஜா அங்கிள் வந்திருக்கிருர் பார்......இங்கே வந்து இவரிடம் பேசு.

(கின்னி முகத்தைத் திருப்பிக்கொண்டு நாற்காலியின் முதுகின்மீது இரு கரங்களையும் இரு பக்கமும் விரித்துக் கொள்ளுகின்றாள்.)

ஆண் 4 :—(கின்னியின் அருகே வந்து) அரே! இவள் அழுது கொண்டல்லவா இருக்கிறாள்? (அவள் தலையை வருடிய வாறு) ஏன்? பாப்பாவிற்கு என்ன வந்துவிட்டது? யார் உன்னைக் கோபித்துக்கொண்டார்கள்? (கொஞ்சியவாறு) எழுந்திரம்மா! சேச்சே! இப்படியெல்லாம் அழக் கூடாது! எவ்வளவு பெரியவளாகிவிட்டே....வந்து.

கின்னி :—(வெடுக்கென எழுந்து வெளிப்புறத்தை நோக்கி நடந்த வண்ணம்) ஆமாம்...நான் ரொம்ப பெரியவளாகிவிட்டேன். எப்போ நான் சின்னவளாகிறேன், எப்போ பெரியவளாகிறேன். ஒன்றுமே தெரியலே. (வெளிப் புறத்து கதவினருகே நின்று) மம்மி வருகிற வரைக்கும் நான் திரும்பி வரமாட்டேன்—(போய்விடுகிறாள்.)

ஆண் 4 :— (திரும்பி மூ. பெண்ணை நோக்கி வருகிறார்.)
சாவித்திரி வெளியே போயிருக்கிறாரா?

(மூ. பெண் தலையை மட்டும் அசைக்கிறாள்.)

நான் கொஞ்ச நேரத்திற்கு முன்பே வந்துவிட்டேன். வெளியே நியூ இண்டியா வண்டியைப் பார்த்தேன். சரி உலாவிவிட்டு வரலாமென்று போனேன். உன் டாடி சொன்னான்......ஜகன் மோகன் இப்போ இந்த ஊரிலே இருக்கான்னு. மறுபடியும் டிரான்ஸ்பர் ஆகி வந்திருக்கிறான் போலிருக்கிறது. அவன் சும்மா பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தானா......அல்லது......

மூ. பெண் :—எனக்குத் தெரியாது. மம்மிக்குத்தான் தெரியும்.

ஆண் 4 :—அசோக் இதைப்பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. ஒருக்கால் அவனுக்குத் தெரியாதோ என்னவோ?

மூ. பெண் :—அசோக் உங்களைப் பார்த்தாளு?

ஆண் 4 :—பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்தான். நான் கேட்டதற்கு ''டாடியைப் பார்த்து வர உங்கள் வீட்டிற்குத்தான் போகிறேன்; நீங்களும் என்னுடன் வந்துவிடுங்கள்; பிறகு இருவருமாய் வரலாமெ''ன்றான். இத்தனை தூரம் வந்தாகிவிட்டது. சாவித்திரியைப் பார்த்துவிட்டுப் போனால் போகிறதென்று நான் நினைத்தேன்......அதுவும் அவனை அந்த நிலைமையில் விட்டுவிட்டு வந்திருக்கிறேனு அதனால்......

மூ. பெண் :—யாரைப் பற்றிச் சொல்லுகிறீர்கள்? டாடியா?

ஆண் 4 :—ஆமாம்...மஹேந்திரநாத்தைப் பற்றித்தான் சொல்லுகிறேன். இரவு முழுவதும் அவன் கண்ணை மூடவில்லை......தவிர......

மூ. பெண் :—உடம்பு சரியில்லையா?

ஆண் 4 :—உடம்பும் சரியில்லை...தவிர...ஹூம்...நான் நினைக்கிறேன். இன்று இந்த நிலையிலே தானிருக்கிறதற்கு......அவனேதானே பொறுப்பாளி?

மூ. பெண் :—(இப்பேச்சைத் தவிர்க்க விரும்புகிறவள் போல்) தேநீர் போடட்டுமா உங்களுக்கு?

ஆண் 4 :—(மேஜையின் மீதிருக்கும் தேநீர் சாமான்களைப் பார்த்து) இத்தனையெல்லாம் யாருக்காகத் தயாரித்தாய் நீ...... ஒருவரும் குடிக்கவில்லை போலிருக்கிறதே!

மூ. பெண் :—(குழம்பியவளாய்) இது வந்து...நான்...தான் தயாரித்தேன்......ஏன் என்றால்......நான் நினைத்தேன்......வந்து......

ஆண் 4 :—(விஷயத்தைப் புரிந்துகொண்டு) அவர்கள் அவசரமாய்ப் புறப்பட்டுப் போய்விட்டார்கள் போலிருக்

கிறது........சாவித்திரிக்கு நான் வரப்போகிறே னென்று தெரியாதா?

மூ. பெண் :—(மெதுவாக) தெரியும்.

ஆண் 4 :—அசோக் இதையும் என்னிடம் சொல்லவே யில்லையே!......ஆனல் அவன் பேசிய மாதிரியி லிருந்து......என் மனசிலே ஏதோ பட்டது. (திடீரென நினைவு வந்துவிட்டதுபோல்) அச்சா ...அச்சா.... அச்சா. ரொம்ப கெட்டிக்காரப் பையன்தான்.

மூ. பெண் :—(சர்க்கரை கிண்ணத்தைக் கையில் எடுத்து) சர்க் கரை எத்தனை ஸ்பூன்?

ஆண் 4 :—சர்க்கரையே வேண்டாம்மா! நான் சர்க் கரை சாப்பிடக்கூடாது. ஓகோ......இதனல்தான் அவன் என்னைத் தன்னோடு வந்துவிடும்படி சொன் ஞை? ஜகன்மோகன் விஷயம் அவனுக்குத் தெரிந் திருக்கும்.

மூ. பெண் :—பால்?

ஆண் 4 :—கொஞ்சம். கொஞ்சம் போதும்.

மூ. பெண் :—ஏதாவது தின்பண்டம் தரட்டுமா?

ஆண் 4 :—வேண்டாம்.

மூ. பெண் :—உட்காருங்களேன்.

ஆண் 4 :—ஓ...இதோ.

(அங்கேயே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்காருகிறர். மூ. பெண் ஒரு கோப் பையை அவரிடம் அளித்துவிட்டு, தானென்றை எடுத்துக்கொண்டு உட்காருகிருள். சில விஞடி மௌனம் நிலவுகிறது.)

மூ. பெண் :—வெளிநாடு போயிருந்ததாக கேள்விப்பட் டேன். எங்கெங்கெல்லாம் போய் சுற்றிப் பார்த்து விட்டு வந்தீர்கள்?

ஆண் 4 :—ஆமாம். போயிருந்தேன். புதிதாய் எங்கேயும் போகவில்லை. வழக்கம் போல்தான்.

(மீண்டும் சில விநாடி மௌனம்.)

மூ. பெண் :—சுஷ்மா எப்படி இருக்கிருள்?

ஆண் 4 :—அவள் வீட்டிலே சௌக்கியமாக இருக்கிருள்.

மூ. பெண் :—ஏதாவது குழந்தை...கிழந்தை......

ஆண் 4 :—இன்னுமில்லை.

(மீண்டும் சில விநாடி மௌனம்.)

மூ. பெண் :—மௌனமாய் உட்கார்ந்து விட்டீர்களே! ஏதாவது பேசுங்களேன்!

ஆண் 4 :—(பெருமூச்சுடன்) என்ன பேசுவது?

மூ. பெண் :—எது வேண்டுமானாலும்......

ஆண் 4 :—பேச நிறைய விஷயங்களை யோசித்துக் கொண்டுதான் வந்தேன். சாவித்திரி இருந்திருந்தால் ஏதாவது பேசலாம். இப்பொழுது எல்லாமே வீண் என்று தோன்றுகிறது.

(மறுபடியும் மௌனம் நிலவுகிறது. இருவரும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் தேநீரைப் பருகி முடித்து தங்கள் கோப்பைகளை டைனிங் மேஜையின்மீது வைக்கிருர்கள்.)

மூ. பெண் :—உங்களிடம் ஒன்று கேட்கலாமா? டாடிக்கு மறுபடியும் பிளட் பிரஷர் ஏறிவிட்டதா?

ஆண் 4 :—இது கேட்காமலேயே தெரிந்ததுதானே?

மூ. பெண் :—நீங்கள் அவருக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா? வந்து......

ஆண் 4 :—(எழுந்தவாறு) யார் அவனுக்கு என்ன சொல்ல முடியும்?—அவன் இதய பூர்வமாக......அவளை எவ்வளவு நேசிக்கிருன் தெரியுமா? எவ்வளவு நேசிக்கிருன் என்ருல்......

மூ. பெண் :—இதை எப்படி உங்களால் கூற முடிகிறது?

ஆண் 4 :—நான் சொல்லுவது உண்மையல்ல என்று உனக்குத் தோன்றுகிறதா?

மூ. பெண் :—(நாற்காலியிலிருந்து எழுந்து) எப்படி உண்மையாக இருக்க முடியும்? (மனக் குமுறலுடன்) இந்த வீட்டில் இந்த இரண்டு பேர்களுக்கிடையே என்னவெல்லாம் நடக்கிறது என்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம். அது உங்களுக்குத் தெரியாது.

ஆண் 4 :—எதைப் பார்த்திருந்தாலும்......

மூ. பெண் :—இத்தனை சாதாரணமாக இதைத் தள்ளிவிட முடியாது அங்கிள்! நான் இங்கே இருந்தபோது, பலமுறை.....எனக்கு நான் ஒரு வீட்டில்... ஒரு குடும்பத்தில் வாழவில்லை......மிருகக் காட்சி சாலையில் ஒரு கூண்டில் அடைபட்டிருக்கிறேன் என்பது போன்ற உணர்ச்சி ஏற்படுவது உண்டு... இங்கு என்னவெல்லாம் நடந்தது......நடக்கும் என்பதை உங்களால் யோசித்துக்கூடப் பார்க்க முடியாது......டாடி கூச்சலும் கூப்பாடும் போட்டுக் கொண்டு மம்மியின் உடைகளை தார் தாராய் கிழிப்பது, மம்மியின் வாயைக் கட்டிவிட்டு அறையை மூடிக்கொண்டு அவளை அடிப்பது—தரதரவென்று இழுத்துக் கொண்டுபோய் குளியல் அறையில்...... கமோட்டில் கொண்டுபோய்......(உடல் சிலிர்க்க) ஓ .... அதையெல்லாம் என்னுல் விவரிக்கக்கூட முடியாது அங்கிள். இந்த வீட்டில் நான் எத்தனை எத்தனை பயங்கரமான காட்சிகளைக் கண்டிருக்கிறேன். வெளியார் யாரேனும் பார்த்திருந்தால் அது யாராக இருந்தாலும் சரி...இதைத்தான் சொல்லுவார்கள்... ஏன் இவர்கள் முன்னரே......

ஆண் 4 :—நீ புதிதாக எதுவும் சொல்லிவிடவில்லை. மகேந்திரன் இதையெல்லாம் தானே என்னிடம் சொல்லி இருக்கிருன்.

மூ. பெண் :—சொல்லி இருக்கிறாரா? அப்படியுமா நீங்கள்......

ஆண் 4 :—ஆம். இப்பவும் சொல்லுகிறேன். அவன் அவளை மிகவும் நேசிக்கிறான்.

மூ. பெண் :—இதை எப்படி நீங்கள் கூறுகிறீர்கள்? இரண்டு பேர் ஒருவரையொருவர் இரவு பகலாய் உயிரோடு வதைத்துக்கொண்டு......

ஆண் 4 :—நான் இருவரைப்பற்றிச் சொல்லவில்லை. ஒருவனைப்பற்றி மட்டும்தான் சொல்லுகிறேன்.

மூ. பெண் :—அப்படியென்றால். தாங்கள் உண்மையாகக் கருதுகிறீர்களா......வந்து......

ஆண் 4 :—ஆம்......அப்படியேதான் நினைக்கிறேன். அதனால்தான் சொல்லுகிறேன். தன்னுடைய இன்றைய நிலைமைக்கு மகேந்திரனேதான் பொறுப்பாளி. இல்லாவிட்டால் இன்று பொழுது விடிந்ததிலிருந்தே......எப்படியாவது அவளிடம் போய் பேசி......அவளை...........என்று என்னை நச்சரித்திருக்க மாட்டானே? நான் இப்பொழுது இங்கே வராமலிருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் தெரியுமா?

மூ. பெண் :—என்ன நடந்திருக்கும்?

ஆண் 4 :—மகேந்திரன் தானே வந்திருப்பான். ப்ளட் பிரஷருடன் இங்கே வந்தால் தனக்கு என்ன நேரும் என்பதைப் பொருட்படுத்தாமல் வந்திருப்பான். இப்படி நடப்பது முதல் தடவையல்ல என்பதும் உனக்குத் தெரியும். எத்தனை தூரம் எடுத்துச் சொல்லி அவனை வராமல் தடுத்துவிட்டு வந்திருக்கிறேன் என்பது எனக்குத்தான் தெரியும். இந்நிலையிலும் ஏதாவது செய்ய முடியும் என்ற துளி நம்பிக்கை என்னுள்ளத்தில் எங்கோ ஒட்டிக்கொண்டிருந்தது. புறப்பட்டு வந்தேன். ஆனால் வாச

லில் நியூ இண்டியா காரைப் பார்த்ததும் இனி எதுவும் சாத்தியமில்லை ; அவளிடம் வீணுகப்பேசி... என்னையே......நான்......இனி நான் புறப்பட வேண்டியதுதான். போகும்போது அவனுக்கு மருந்து வாங்கிக்கொண்டு போகவேண்டும்...... அச்சா......

(வெளிப்புறக் கதவை நோக்கிச் செல்லுகிருன். மூ. பெண் தான் நின்ற இடத்திலேயே சிலைபோல் நிற்கிருள். பின்னர் இரண்டொரு அடிகள் அவரை நோக்கி முன்னே வைக்கிருள்.)

மூ. பெண் :—அங்கிள் !

ஆண் 4 :—(நின்று) என்னம்மா !

மூ. பெண் :—நீங்கள் போய் டாடியிடம் இதைச் சொல்லிவிடுவீர்களா ?

ஆண் 4 :—எதை ?

மூ. பெண் :—அதுதான்......ஜகன்மோகன் அங்கிள் வந்தது.

ஆண் 4 :—ஏன் ? சொல்லக்கூடாதா ?

மூ. பெண் :—வந்து......

ஆண் 4 :—(லேசாக விழிகளை மூடித் திறந்து) ஒருக்கால் நான் சொல்லாமலும் இருக்கலாம். ஆனல்......இதனல் பெரிய மாறுதல் ஏதும் ஏற்பட்டுவிடப் போவதில்லையே !...நீ உட்காரம்மா. (வெளியே செல்ல முற்படுகிருர்.)

மூ. பெண் :—அங்கிள் !

ஆண் 4 —(மறுபடியும் நின்று) சொல்லும்மா...

மூ. பெண் :—நிஜமாகவே...இனி எதுவுமே செய்ய முடியாதா ?

ஆண் 4 :—ஒருக்கால் ஒரு நாளைக்கு முடியலாம்...... இரண்டு நாளைக்கு சமாளிக்கலாம்......ஆனல்

என்றென்றும்......ஊஹூம்...ஒன்றுமே முடியாது. சாத்தியமில்லை.

மூ. பெண் :—இப்படிப்பட்ட நிலையில்......இது தேவலை யல்லவா? வந்து...

(வெளியே கு. தலைவியின் குரல் கேட்கிறது.)

கு. தலைவி :—விடு என் கையை......விடு...

மூ. பெண்:—திரும்பி வந்துவிட்டாள் போலிருக்கிறது.

ஆண் 4 :—ஆமாம்.

(வெளியே செல்லுவதற்கு பதிலாய் உதட்டைக் கடித்துக் கொண்டு டைனிங் டேபிளை நோக்கிச் செல்லு கிறான். கு. தலைவி கின்னியுடன் உள்ளே வருகிறாள். கின்னி அவள் கரத்தைப்பற்றி வெளியே இழுக்கிறாள்.)

கின்னி :—என்னோடு வரமாட்டாயா? வா...வாயேன்...

கு. தலைவி :—(கரத்தை விடுவித்துக்கொண்டு) நீ தள்ளிப்போகி றாயா, இல்லையா?

கின்னி :—மாட்டேன். அப்போ வந்து நீ வீட்டிலே இல்லை...இப்போ வந்து...

கு. தலைவி :—விடு என் கையை.

கின்னி :—விட முடியாது.

கு. தலைவி :—விடமாட்டாயா? (கோபத்துடன் தன்னை விடுவித் துக்கொண்டு அவளை தூரத் தள்ளுகிறாள்.) வரவர உனக்கு ஆத்திரம் அதிகமாகிவிட்டது.

கின்னி :—ஆமாம்......அதிகம்தான். எப்போ......யாரு என்னை என்ன சொன்னாலும் அதை ஏனென்று கேட்க இங்கு ஒருவருக்கும் ஒழிவில்லை......

மூ. பெண் :—கொஞ்சம் இரேன்—வந்ததும் வராதது மாய் நீ வந்து...

கின்னி :—நீ ஒன்றும் பேச வேண்டியதில்லை. நான் வந்து சொன்னபோது......களிமண் மொத்தை

மாதிரி இருந்த இடத்தைவிட்டு அசையாமே...இப்ப வந்து...

கு. தலைவி :—(அவள் ஃபிராக்கை பற்றி இழுத்து) எங்கே...... மறுபடியும் சொல்லு பார்க்கலாம்.

கின்னி :—(தன்னை விடுவித்துக்கொள்ள முரண்டியவாறு) நான் என்ன சொன்னேன்? இவளையே கேள்......நான் வந்து சொன்னபோது...இவள்...

கு. தலைவி :—(ஒரு அடி கொடுத்து) எங்கே! சொல்லு! சொல்லு பார்க்கலாம்!......

(கணநேர மௌனம். யாவருடைய பார்வையும் நிலைத்து நிற்கிறது. கின்னியின் பார்வை மம்மியின் மீது. மற்ற யாவருடைய பார்வையும் கின்னியின் மீது.)

கின்னி :—(தன் ஆத்திரத்தின் வெறியில்) களிமண் மொத்தை... ......இந்த வீட்டிலே......எல்லோரும்......களிமண் மொத்தைகள். மண்ணாங்கட்டிகள்.

ஆண் 4 :—(அவர்களை நோக்கி வந்து) சாவித்திரி, விடு. குழந்தை...அவள் ஒரே ஆத்திரத்திலிருக்கிறாள், அதனால்தான்.

கு. தலைவி :—நீங்கள் தலையிடாதீர்கள்!

ஆண் 4 :—இதோ பார்......

கு. தலைவி :—நீங்கள் இதில் தலையிட வேண்டாமென்று சொல்லியாகிவிட்டது. என் வீட்டில் யார் யாரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது பிறரை விட எனக்கு நன்றாய்த் தெரியும். (கின்னிக்கு இன்னொரு அடி விழுகின்றது) வாயை மூடிக்கொண்டு போ உள்ளே! தெரிந்ததா? வாயிலிருந்து ஒரு வார்த்தை வந்தால்...தெரியும் சேதி......

(கின்னியின் உதடுகள் மட்டும் துடிக்கின்றன. வார்த்தைகள் வெளியே வருவதில்லை. அடிபட்ட ஆத்திரத்துடன் தாயை உற்று நோக்கியவாறு நிற்கிறாள்.)

—போ அந்த அறைக்குள். காதில் விழவில்லை?

(கின்னி அப்படியே அசையாது நிற்கிறாள்.)

போகமாட்டாய்?

(கின்னி பல்லைக் கடித்துக்கொண்டு வேகமாய் திரும்பி உள்ளே போகிறாள். கு. தலைவி பின்னாலேயே சென்று அறையின் கதவை வெளியே மூடி தாழிடுகின்றாள்.)

இரு...வந்து உன்னைக் கவனிக்கிறேன்......

மூ. பெண் :—உட்காருங்கள் அங்கிள்.

ஆண் 4 :—இல்லை...நான் புறப்படுகிறேன்.

கு. தலைவி :—(அவரை நோக்கி வந்தவாறு) நீங்கள் என்னிடம் ஏதோ பேசவேண்டுமாமே?—இவள் சொன்னாள்.

ஆண் 4 —ஆமாம். இச்சமயம் நீ சரியான 'மூட்'-ல் இல்லை...அதனால்......

கு. தலைவி :—நான் சரியான 'மூட்'-ல்தானிருக்கிறேன். சொல்லுங்கள்.

மூ. பெண் :—அங்கிள் சொன்னார்...பழையபடி டாடிக்கு உடம்பு சரியில்லையாம்.

கு. தலைவி :—வீட்டை விட்டுப் போனபொழுதெல்லாம் அவருக்கு எப்பொழுது உடம்பு சரியாக இருந்தது? ஒவ்வொரு தரமும் இதே கதைதானே?

மூ. பெண் :—மம்மி...நீ ரொம்பவும் களைத்துப்போயிருக்கிறாய். எதைப் பேச வேண்டுமானாலும் உட்கார்ந்து நிதானமாய் பேசு.

கு. தலைவி :—நான் ரொம்பவும் நிதானமாகத்தானிருக்கிறேன். (ஆண் 4-டம்) சொல்லுங்கள்......

ஆண் 4 :—இப்பொழுது நான் அதிகமாக எதுவும் சொல்ல விரும்பவில்லை. உன்னிடம் ஒன்றே ஒன்றுதான் கேட்க விரும்புகிறேன்.

கு. தலைவி :—(கண நேரம் எதிர்பார்த்தபின்) சொல்லுங்கள்...

ஆண் 4 :—நீ அவனுக்கு விடுதலை தர முடியாதா?

கு. தலைவி :—விடுதலையா? நானா? என்ன விசித்திரமான பேச்சு!

ஆண் 4 :—விசித்திரம் ஏதுமில்லை. நீ அவனை உன்னுடன் பிணைத்து வைத்திருக்கிறாய்.

கு. தலைவி :—பிணைத்தா? நானா? என்னுடனா? நீங்கள் ஒருவர்தான் இப்படிச் சொல்ல முடியும்.

ஆண் 4 :—ஏன் என்றால் என் ஒருவனுக்குத்தான் எல்லா விஷயமும் தெரியும்.

கு. தலைவி :—உங்களுக்கு அதிகம் தெரியுமென்று எப்பொழுதுமே ஒரு எண்ணம் உண்டு. இல்லையா?

ஆண் 4 :—மகேந்திரனைப் பொறுத்த வரையில்...எஸ். நீ அவனைப் பொறியில் சிக்க வைத்திருக்கிறாய்...இப்பொழுது அவன் தனித்து தானாக எதையுமே செய்ய இயலாதவனாகிவிட்டான்.

கு. தலைவி :—என்றாவது அவரால் தனித்து தானாக எதையும் செயலாற்ற முடிந்ததா?

ஆண் 4 :—என்றாவது என்று ஏன் சொல்லுகிறாய். உனக்கு பத்து வருடங்களுக்கு முன்பே அவனை எனக்குத் தெரியும்.

கு. தலைவி —ஒருவேளை இதனால்தான் அவரால் தானாக எதையும் செய்ய முடியவில்லையோ?

ஆண் 4 :—சாவித்திரி! நீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய், பேசுகிறாய் என்பது எனக்குத் தெரியும்.

கு. தலைவி :—நிச்சயம் தெரிந்திருக்கும். ஆனால்...நான் சொல்லாதது இன்னமும் எத்தனையோ இருக்கிறது.

ஆண் 4 :—உதாரணமாக......

கு. தலைவி :—உதாரணமாக...ஆனால்...நீங்கள்தான் என்னிடம் ஏதோ கூறவந்திருக்கிறீர்கள்.

ஆண் 4 :—இல்லே....நீ....சொல்லவந்ததைச் சொல்...... (மூ. பெண்ணிடம்) கொஞ்ச நேரத்திற்கு வெளியே போகிருயா அம்மா ?

(மூ. பெண் எழுந்திருக்கிருள்.)

கு. தலைவி :—நான் சொல்லுவதை அவளும்தான் கேட்கட்டுமே.

ஆண் 4 :—ஓ ..எஸ்...பின்னி, நீ உட்காரம்மா.

மூ. பெண் :—நான் வந்து.........

கு. தலைவி :—நீ இருக்கவேண்டுமென நான் விரும்பினல் அது ஒரு காரணத்திற்காகத்தான்.

(மூ. பெண் சற்று தூரத்தில் டைனிங் டேபிளினருகே ஒரு நாற்காலியில் உட்காருகிருள்.)

ஆண் 4 :—(கு. தலைவியிடம்) நீயும் உட்கார்.

(தானும் ஒரு சோபாவில் அமருகிருர். கு. தலைவி ஒரு மோடாவில் உட்காருகிருள்.)

என்ன சொல்லவேண்டுமோ...சொல்லு!

கு. தலைவி :—அதற்கு முன் நானென்று கேட்க விரும்புகிறேன். ஒரு மனிதனை உண்மையான மனிதனுக்குவது எது ?

ஆண் 4 :—ஒன்றும் கேட்காதே! மனதில் உள்ளதைச் சொல்.

கு. தலைவி :—மனிதனைப்போல் நடந்து, பேசுபவன் தான் மனிதன் என்று பொதுவாகச் சொல்லலாம். ஆனல் உண்மையில் மனிதனுக இருப்பதற்கு ஒருவருக்கு தனக்கென்ற ஒரு தகுதி, தனித்தன்மை, ஒரு உறுதி...அவசியமில்லையா ?

ஆண் 4 :—நீ மகேந்திரனை மனதில் வைத்துக் கொண்டு பேசுகிருய். ஏன் என்ருல்...

கு. தலைவி :—நான் அவரை அறிந்த நாளிலிருந்து, எப்பொழுதும் எதற்கும் யாராவதொருவரின் துணையை, உதவியை சார்ந்து நிற்பதையே பார்த்து வந்திருக்கிறேன். அதிலும் முக்கியமாக.....உங்களைத்தான். உங்களைக் கேட்காமல் அவரால் எதுவுமே செய்ய முடியாது. ஏதாவது வாங்கவேண்டுமா? ஜுனேஜாவைக் கேட்கவேண்டும். நாங்கள் எங்கேயாவது போகலாமா வேண்டாமா என்பதற்கும் உங்களுடைய ஆலோசனை தேவை. சிறிய காரியமோ, பெரிய பொறுப்போ . எதுவானாலும் ஜுனேஜாவின் அபிப்பிராயம் தேவை. என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பியபோது எப்படி முடிவெடுத்தார்? ஜுனேஜா 'எஸ்' என்றபின்தான். உங்களைக் கேட்காமல் அவரால் மூச்சுக்கூட விடமுடியாது.

ஆண் 4 :—நான் அவன் நண்பன். எப்பொழுதும் அவனுக்கு என்மீது நம்பிக்கை...

கு. தலைவி :—இதன் விளைவு என்னவாயிற்று? எந்த விஷயத்திலும் தன்மீது தனக்கே நம்பிக்கையில்லாமல் போய்விட்டதே! வாழ்க்கையின் ஒவ்வொரு பிரச்சனைக்கும், விஷயத்திற்கும் உரைகல் நீங்கள்தான். நீங்கள் நினைப்பது, விரும்புவது, செய்வதைத்தான் அவரும் சிந்திக்க வேண்டும்; செயலாற்ற வேண்டும். ஏன் தெரியுமா? நீங்கள் ஒரு மனிதர். ஆனால் அவர்? அரை மனிதர் கூட இல்லையே!

ஆண் 4 :—நீ இந்தக் கோணத்தில் பார்க்கலாம். ஆனால் உண்மையில்!

கு. தலைவி :—(எழுந்து நின்று) எனக்குத் தெரிந்த உண்மையை சொல்லுகிறேன். ஒரு மனிதன் திருமணம் செய்துகொள்வது எதற்காக? ஒரு தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள; தன்னுள்ளே உணரும்

வெறுமையை நிரப்ப. முழுமை பெருத ஒன்றிற்கு முழுமை தரவேண்டி தன்னுள்ளே, தனக்காக, தன்னிலே ஒரு நிறைவைத் தேடுகிருன். ஆனல் உங்கள் மகேந்திரன் இதற்காகத் திருமணம் செய்து கொள்ளவில்லை...அவரது வாழ்வின் லட்சியமே, பிறருடைய வாழ்வில் காலியான கட்டங்களை நிரப்புவதுதான். பிறர் அவரிடமிருந்து எதை எதிர் பார்க்கிருர்களோ, விரும்புகிருர்களோ, அல்லது தங்களுடைய வாழ்க்கையில் அவரை எந்தவிதமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிருர்களோ.

ஆண் 4 :—பயன்படுத்திக் கொள்வதா ?

கு. தலைவி :—இல்லையா ! வேறு யாராலும் முடியாத காரியமா ? மகேந்திரன் அதைச் செய்வான். சிக்க லான பிரச்சனையா ? மகேந்திரன் தீர்த்து வைப்பான். பிரஸ் ஆரம்பித்ததும்......நடந்தது இதுதான். ஃபாக்டரி விஷயத்திலும் இதுவேதான் நடந்தது. காலி இடத்தை நிரப்ப மகேந்திரன் தேவை. இடம் நிரம்பியதும் மகேந்திரனுக்கு ஏது இடம் ? மகேந் திரன் முன்னரே தன் பங்கை வாங்கி சாப்பிட்டு விட்டான். செலவழித்து விட்டான். அவனுடைய பங்கு எது ? (அறையிலுள்ள சாமான்களைக் காட்டி) இது... அது...இது...இரண்டாம்தர, மூன்ரும்தர, நாலாந் தர...ஓட்டை உடைசல் சாமான்கள். இதைப் பார்த்து...அவருக்கு தன் குடும்பம் நிறைவு பெற்று விட்டதாக நினைப்பு.

ஆண் 4 :—எதிலும் மகேந்திரன் கொஞ்சம் அவசரப் பட்டுவிடுவான்...எனக்குத் தெரியும்...ஆனல் இதன் காரணம்...

கு. தலைவி :—நானக இருந்தேன். இல்லையா ? என்னை சந்தோஷப்படுத்த அவர் இந்த இரும்பு, மரச்சாமான் களால் வீட்டை நிரப்ப அவசரப்பட்டு ஒவ்வொரு

முறையும் தன்னையே நாசப்படுத்திக் கொண்டு விட்டார் என்றுதானே சொல்ல விரும்புகிறீர்கள்! ஆனால் அவரது அழிவிற்கு எது குழிதோண்டிக் கொண்டிருந்தது? அது என்ன? யார் அது? இது உங்களுக்கே நன்ருகத் தெரியும்.

ஆண் 4 :—நீ பாட்டில் சொல்லிக்கொண்டே போ! நான் தவருக எடுத்துக்கொள்ளப் போவதில்லை. என்ன இருந்தாலும் நீ மகேந்திரனின் மனைவி......

கு. தலைவி :—(ஆவேசத்துடன் எழுந்து) என்னை மகேந் திரனின் மனைவி என்று சொல்லாதீர்கள். மகேந்திர னும் ஒரு மனிதன். அவருக்கும் குடும்பம், மனைவி மக்கள் இருக்கிருர்கள் என்பது அவருக்கு மிக நெருக்கமானவர்கள் என்று சொல்லிக் கொள்பவர் களுக்கு முதலிலிருந்தே பிடிக்கவில்லையே! அவர் திருமணம் செய்துகொண்டது, உங்களிடமிருந்து எதையோ பறித்துக் கொண்டுவிட்டது போலல்லவா ஆகிவிட்டது? மகேந்திரன் முன்னைப்போல் சிரிப்ப தில்லை. நண்பர்களிடையே முன்னைப்போல் ஜாலி யாக இருப்பதில்லை...பழைய மகேந்திரனே இல்லை... ஆனால் மகேந்திரன்...தான் பழைய மகேந்திரனுக இருக்கவே முழுமுயற்சியும் செய்தான். தான் பழைய மகேந்திரன் இல்லையென யாரும் சொல்லிவிடக் கூடாதே என்ற தவிப்பில் இரவு பகல் வீட்டில் குமை கிருன்; சுவற்றிலே மோதிக்கொள்கிருன். குழந்தை களை மிரட்டுகிருன்; மனைவியை அடிக்கிருன். அவன் நண்பர்களின் ஓய்வுநேரம் உல்லாசமாகக் கழிய அவன் தேவை. எந்தப் பார்ட்டியும் மகேந் திரன் இல்லாமல் களைகட்டாது. நண்பர்களை மகிழ்ச் சிகரமாக வைத்திருப்பதுதான் மகேந்திரனின் வாழ் வின் லட்சியம். அவனது லட்சியம் மட்டுமல்ல; அவனது குடும்பத்தினரின் லட்சியமும் இதுவாகத்

தானிருக்கவேண்டும். "நீ எப்படி அங்கே வர மறுக்கலாம்? உன்னைப் படித்தவள் என்று சொல்லிக் கொள்கிருயே......எப்படி இங்கிதமாய் நடந்து கொள்ள வேண்டுமென்றுகூட தெரியவில்லையே! ஒரு பெண், இப்படித்தான் நடக்கவேண்டும், பேச வேண்டும், இப்படித்தான் சிரிக்கவேண்டும்......நீ பிறர் முன்னிலையில் என் அந்தஸ்தை ஏன் குலைக்கிருய்?" ......இப்படி எத்தனையோ? நண்பர்களிடையே சாதுவாய் புன்னகை புரியும் மகேந்திரன் வீட்டிற்கு வந்ததும், வெறி பிடித்த மிருகமாகிவிடுகிருன். எப்பொழுது யார்மீது பாய்வான், யாரைக் குதறி எடுப்பானே தெரியாது. ஒருநாள் கோப வெறியில் தன் துணிகளைக் கொளுத்துகிருன். இன்னொரு நாள் என்நெஞ்சிலே ஏறி அமர்ந்து என் தலையைத் தரையிலே மோதுகிருன். "சொல்லு .....சொல்லு.....என்னுடன் வருவாயா மாட்டாயா? நான் சொல்வதைக் கேட்பாயா மாட்டாயா?"

ஆனால், நான் அப்படியும் அவர் கூறுவதை ஏற்பதில்லை. அதன்படி நடப்பதுமில்லை. அவர் விரும்பியதைச் செய்வதுமில்லை. இதையெல்லாம் நான் வெறுக்கிறேன்......நான் வெறுக்கிறேன்...... நான் விரும்புவது ஒரு மனிதனை......முழுமையான, பூரணமான மனிதனை...பரிதாபகரமாக, பிறரைச் சார்ந்து நிற்பவனை அல்ல. இதை நான் உரக்கவே கூறுகிறேன்.

ஒரு சமயம் அவரைப் பூரணமான மனிதனுக்க நான் முயன்றதுண்டு. சில சமயம் வேதனை மிகுந்து அவரிடமிருந்து விலகிவிடத் துடித்ததுமுண்டு. ஆனல்......எனது முயற்சிகளால் அவரிடம் சிறிதளவு மாறுதல் ஏற்பட்டுவிட்டாலும் போதும். நண்பர்கள் குழாம் இதற்காகப் பரிதாபப்பட வாரம்

பித்துவிடும். "சாவித்திரி மகேந்திரனுக்கு மூக்க ணாங் கயிறு போட்டுவிட்டாள்", "தன்னிஷ்டப்படி ஆட்டுகிருள்", "சாவித்திரி அவன் முது கெலும்பை ஒடித்துவிட்டாள்", "அவனை எதற்கும் லாயக்கற்றவனுக்கி விட்டாள்", "பாவம் மகேந் திரன்"......"சாவித்திரியின் கைப்பாவையாகிவிட் டான், பாவம் மகேந்திரன்".

(மூச்சிறைக்க மௌனமாகிருள். மூ. பெண் முழங்கைகளை மேஜையின்மீது ஊன்றி உள்ளங்கைகளால் முகத் தைத் தாங்கியவளாய் அவர்களையே வெறித்து நோக் கியவண்ண மிருக்கிருள்.)

ஆண் 4 :—(எழுந்து) அவன் யாருடைய கைப் பாவையு மல்ல. நீ கூறப்போகும் எதுவுமல்ல. அவனும் எல்லோரையும் போல் ஒரு மனிதன். அவனிட முள்ள ஒரே ஒரு குறை......

கு. தலைவி :—இதை என்னிடம்...என்னிடமா சொல்லு கிறீர்கள்? அவரை அறிந்தவள்......அவருடன் 22 வருடமாக வாழ்கிறவளிடமா சொல்லுகிறீர்கள்?

ஆண் 4 :—ஆம்...நீ அவனுடன் வாழ்ந்திருக்கிருய். ஓரளவு...ஓரளவு அவனை அறிந்தும் இருக்கிருய்... ஆனல்...

கு. தலைவி :—ஓ......ஓ......ஓ......கோ...

(நிராசையுடன் தலை அசைக்கிருள்.)

ஆண் 4 :—நீ கூறியவையெல்லாம் தவறென்று நான் கூறவில்லை. ஆனல்......இருபத்திரண்டு ஆண்டு களாய் அவனுடனேயே வாழ்ந்து நீ அறிந்து கொண்டிருப்பது இவை அல்லவே அல்ல. நினை விருக்கிறதா? இருபது வருடங்களுக்கு முன் உன் வாயிலிருந்து இதே வார்த்தைகளை நான் கேட்டிருக் கிறேன்.

கு. தலைவி :—இருபது வருடங்களுக்கு முன்?......உங்களால் இன்றைய விஷயம்பற்றிப் பேச முடியாதா?

ஆண் 4 :—என் வீட்டில்தான் நடந்தது அது. முக்கியமாக இதைப்பற்றிப் பேசவே நீ என் வீட்டிற்கு வந்தாய் என் தோளில் முகம் பதித்து நெடுநேரம் அழுதுகொண்டிருந்தாய். அப்பொழுது நீ என்ன சொன்னாய் தெரியுமா?

கு. தலைவி :—இதோ பாருங்கள்! நீங்கள் அதையெல்லெல்லாம் பற்றிப் பேசுவதாக இருந்தால்......நான் இந்தப் பெண்ணை......

ஆண் 4 :—அவள் இங்கிருப்பதாலென்ன வந்தது? பாதிப்பேச்சு அவள் முன்னே நடந்திருக்கும்போது மறு பாதியையும் அவள் கேட்டுவிட்டுப் போகட்டுமே?

மூ. பெண் :—(எழுந்து) ஆனால்...அங்கிள்...

ஆண் 4 :—(கு. தலைவியிடம்) நான் இந்த விஷயத்தைப் பற்றி இவள் முன்னால் பேசக்கூடாதென்று நினைக்கிறாயா?

கு. தலைவி :—நான் எனக்காகச் சொல்லவில்லை....சரி.... நீங்கள் பேசலாம்......

ஆண் 4 :—(மூ. பெண்ணிடம்) உட்காரம்மா பின்னி.

(மூ. பெண் பழையபடி தன்னிடத்தில் உட்காருகிறாள்.)

(கு. தலைவியிடம்)—அன்றுதான் முதன் முறையாக...... நீ மனம் கலங்கிப் போயிருந்ததைப் பார்த்தேன். நீ...சொன்னாய்......

கு. தலைவி :—அப்பொழுது நான் குழந்தையாக இருந்தேன்.

ஆண் 4 :—குழந்தையாக இருந்தாயோ, எப்படி இருந்தாயோ, இன்று பேசுவதைப் போல்தான் அன்றும் பேசினாய். அன்றும் நீ மகேந்திரனை என் முன்

னிலையில் தரக்குறைவாய்ப் பேசினாய். தைரியமற்றவன், அக்கறையில்லாதவன், முதுகெலும்பற்றவன் என்றெல்லாம் சொன்னாய்......ஆனால் அன்று மகேந்திரனை இந்நிலைக்கு ஆளாக்கியவர்களின் பட்டியல் வேறாக இருந்தது. நீ அவன் தாயையும், தந்தையையும் குறை கூறினாய்.

கு. தலைவி :—அது உண்மைதான். அவரை அப்படி உருவாக்கியதில் அவர்கள் பங்கும் இல்லாமலில்லை.

ஆண் 4 :—ஆனால் அப்பொழுது......என் பெயர் அதிலில்லை. ஏனில்லை என்பதைக் கூறட்டுமா ?

கு. தலைவி :—இதோ பாருங்கள் !

ஆண் 4 :—அது கடந்துபோன விஷயம். இப்பொழுது சொல்லுவதனால் தவறேதுமில்லை......என் பெயர் அதிலில்லை...ஏன் என்றால்......

கு. தலைவி :—எனக்கு உங்களிடம் மதிப்பிருந்தது. அவ்வளவுதான்.

ஆண் 4 :—நீ விரும்பினால் அதை மதிப்பு என்றே கூறிக்கொள். ஆனால் எதற்காக? உன் பார்வையில் நான் எந்த விதத்திலும் மகேந்திரனுக்கு மேம்பட்டவனாகத் தென்பட்டேன் என்பதால் அல்ல. ஒன்றே ஒன்றிற்காக. அதாவது......

கு. தலைவி :—உங்களிடம் நிறையப் பணமிருந்தது; செல்வாக்கிருந்தது...அப்படித்தானே !

ஆண் 4 :—இல்லை......நான் மகேந்திரனாக இல்லை...... அவ்வளவுதான்.

கு. தலைவி :—(சட்டென எழுந்து) தாங்கள் என்ன...... சொல்ல......

ஆண் 4 :—ஏன் பரபரப்படைகிறாய்? என்னைப் பேசவிடு. அச்சமயம் நீ என்னிடமிருந்து என்ன விரும்பினாய் என்பது பற்றி எனக்கு நிச்சயமாகத் தெரிய

வில்லே. ஆனால்......உன் பேச்சிலிருந்து உன்னுடன் வாழ்க்கை நடத்தக்கூடிய மனிதனாக அன்றும் நீ மகேந்திரனைக் கருதவில்லை என்பது நிச்சயமாகத் தெரிந்தது.

கு. தலைவி :—இதற்குப் பின்னும் இன்றுவரை நான் அவருடன் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.

ஆண் 4 :—இரண்டொரு ஆண்டுகளுக் கொருமுறை நீ அவனிடமிருந்து பிரிந்துவிட முயற்சி செய்து கொண்டுதானிருந்தாய். என்ன காரணம்...... எந்த ஆதாரம் கிட்டும்...இவனிடமிருந்து விலகிவிட என்று நீ நாலாபக்கமும் தேடிக்கொண்டுதானிருந்தாய்! முதலில் நீ தேடியவர்களில் ஒருவனாக நானிருந்தேன். அப்பொழுது...நீ என்னை மதிப்பதாக என்னிடம் கூறினாய். இப்பொழுது என்ன நினைக்கிறாய் என்பதை......இதோ சற்று முன் கூறிவிட்டாய்! எனக்குப் பின் உன்னைக் கவர்ந்தவன், 'ஷிவஜீத்'. பெரிய பட்டம், பிரமாதமான பேச்சு, வெளிநாடுகளில் சுற்றிய அனுபவம். ஆனால் உண்மையில்...அவன் யாராக இருந்தாலும் — எதுவாக இருந்தாலும் — அவன் மகேந்திரன் அல்ல என்பதுதான் இக் கவர்ச்சிக்குக் காரணம். ஆனால் விரைவிலேயே நீ அவனது உண்மை சொரூபத்தை, உள்ளொன்றும் புறமொன்றும் பேசுகிறவன் என்பதை இனம் கண்டுகொண்டாய்.........இதன் பின் நீ ஜகன் மோகனை சந்தித்தாய். மேல்தட்டு வர்க்கத்தின் தொடர்புகள், நாகரிக வாழ்க்கை, இனிய பேச்சு, தாராளமான கை உன்னைக் கவர்ந்தது. ஆனால்... இங்கும் உண்மைக் காரணம் அதேதான். அவன் யாராக இருந்தாலும், எதுவாக இருந்தாலும், அவன் ஜகன்மோகன். மகேந்திரன் அல்ல......

அவ்வளவுதான். ஆனால் நீ அவனிடமும் குறை காண ஆரம்பித்தாய்!...அவன் எதற்காக இப்படிப் பணத்தை எல்லோருக்கும் வாரி விடவேண்டும்? செலவழிக்க வேண்டும்? பிறருடைய கடுமையான வார்த்தைகளைக்கூட மௌனமான புன்னகையுடன் ஏன் விழுங்கி விடுகிறான்?—நல்ல வேளை. அவன் இங்கிருந்து மாற்றலாகிப் போய்விட்டான். இல்லா விட்டால்......

கு. தலைவி :—எதற்காக இதையெல்லாம் பேசுகிறீர்கள்! நேரிடையாக விஷயத்திற்கு வாருங்கள்.

ஆண் 4 :—நான் சொல்ல விரும்புவது இதுதான். மகேந்திரனுக்குப் பதிலாக இவர்களில் யார் உன் வாழ்க்கையில் இடம் பெற்றிருந்தாலும், நீ தவறான வனை திருமணம் செய்துகொண்டு விட்டேன் என்று தான் உணர்ந்திருப்பாய். அந்த வாழ்க்கையிலும் இப்படியொரு ஜுனேஜா, மகேந்திரன், ஷிவஜீத், அல்லது ஜகன்மோகன் எதிர்ப்பட்டிருப்பார்கள். இதேபோல்தான் நீ நினைத்தும் எதிரொலித்து மிருப்பாய். ஏன் என்றால்...உன்னைப் பொறுத்த வரையில் வாழ்க்கையின் அர்த்தம் எத்தனை முடியுமோ, அத்தனை, பல்வேறுபட்ட பலவற்றையும் ஒன்றாக, ஒரே சமயத்தில் அடைய வேண்டும்—அநு பவிக்க வேண்டும் என்பதுதான். நீ யாரைத் திருமணம் செய்து கொண்டிருந்தாலும் அந்த ஒருவனால் இதையெல்லாம் உனக்கு அளித்திருக்க முடியாது. அதனால்தான். நீ இன்றிருப்பதுபோல் என்றுமே வெறுமையாக அமைதியற்றவளாக இருப் பாய். அந்த அவனும் இதேபோல சுவற்றில் மோதிக்கொள்பவனாக, துணியைக் கிழித்துக்கொள்ப வனாக உனக்குத் தென்படுவான்—நீ வந்து...

(கு. தலைவி புடவைத் தலைப்பைப் பற்களால் கடித்த வண்ணம் அழுகையும் சிரிப்பும் கலந்த குரலில் சிரிக்கிறாள்.)

ஹ ..ஹ...ஹா...ஹ...ஹா...

ஆண் 4 :—(திகைப்புற்று) சிரிக்கிறாயா நீ ?

கு. தலைவி :—ஆம்...தெரியவில்லை....சிரிக்கிறேன் என்று தான் நினைக்கிறேன். ஊம்.......நீங்கள் பேசுங்கள்.

ஆண் 4 :—இன்று மகேந்திரன் கோபமும் ஆத்திரமும் கொண்ட மனிதன். ஆனால் ஒரு காலத்தில் அவன் சிரித்த முகமும் இனிமையான இயல்பும் கொண்டவனாக இருந்தான். அது உள்ளத்திலிருந்து பொங்கி வரும் சிரிப்பு. அது எப்பொழுது தெரியுமா? அவன் உள்ளத்தில் தாழ்மை உணர்ச்சியை விதைக்காதிருந்த காலத்தில். ஒவ்வொரு விஷயத்திலும் நீ—அவனைவிட, இவனைவிட, என்னைவிட தாழ்ந்தவன், மோசமானவன் என்று சுட்டிக்காட்டிச் சிறுமைப் படுத்தாத காலத்தில், நீ எதுவாக இல்லை, எதுவாக இருந்திருக்க வேண்டும் என்று கூறுபவர்கள் இல்லாதிருந்த காலத்தில்.

கு. தலைவி :—அவர் ஒருவர்தான் உங்களுக்கு முக்கியமாகப் பட்டிருக்கிறார். அவரைச் சுற்றியுள்ளவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைப்பற்றி கவலைப் பட்டிருப்பீர்களா ?

ஆண் 4 :—அதையும் பார்த்திருக்கிறேன். உனக்குக் கிட்டாதவற்றை யெல்லாம் ஒரேயடியாக பெற்றுவிட விழைந்த நீ, உன்னிடமிருந்தவற்றையும் மெல்ல மெல்ல இழந்துவிட்டதையும் நான் பார்த்தேன். உள் நெஞ்சிலே ஒரு பயம், ஒரு திகில் ஏறிக்கொண்டே போயிற்று. இதனால் ஒரு சமயம் நீ வீட்டையும், இன்னொரு சமயம் வெளியையும் இறுகப் பற்றிக் கொள்ள விழைந்தாய். ஒரு நாள் உனக்கொரு பயங்

கரமான தோல்வி ஏற்பட்ட சமயம் நான் பார்த்தேன். உன் பயம் அச்சுறுத்தலாக...அதிர்ச்சியாக மாறி விட்டது. அதுவும்...உன் கடைசி முயற்சியில்.

கு. தலைவி :—எந்த முயற்சியில்?

ஆண் 4 :—மனோஜை கவருவதற்காக நீ செய்த முயற்சி. அவனுக்கு நல்ல பெயர், புகழ். அந்த புகழெனும் நூலேணியைப் பற்றிக்கொண்டு எந்த உயரத்தையோ நீ அடைந்துவிட முயன்றாய். ஆனால் இதில் நீ பெரும் அதிர்ச்சி அடைந்தாய். அத்தனை புகழ்பெற்ற மனிதன் உன் பெண்ணைக் கூட்டிக் கொண்டு வீட்டைவிட்டு இரவோடிரவாக......

மூ. பெண் :—(சட்டென எழுந்து) அங்கிள்!

ஆண் 4 :—மன்னித்துவிடு பின்னி! நான் இதைச் சொல்லவேண்டியதாக இருக்கிறது. மனோஜைப் பற்றி உனக்கு அதிகம் தெரியாது. உனக்குத் தெரிந்ததைவிட இவளுக்கு......

மூ. பெண் :—(முகத்தை மூடிக்கொண்டு உட்காருகிறாள்.) ஓ...

ஆண் 4 :—அதிகம் தெரியும். அதனால்தான் இவளால் அவனைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. (குடும்பத் தலைவியிடம்) அப்படித்தானே?—பின்னி மனோஜுடன் வீட்டைவிட்டுப் போனபின், கண்மூடித்தனமான வெறி வந்துவிட்டது உனக்கு. சில சமயம் மகேந்திரனிடம் குற்றம் கண்டுபிடித்து அவனை ஆட்டுவித்தாய். சில சமயம் அசோக்கை கசையடி கொடுப்பதுபோல் மூர்க்கத்தனமாய் தாக்கினாய். இருவரிடமும் பொறுமை இழந்தபொழுதெல்லாம், தன்வசமிழந்தவளாய் இதிலிருந்து வெளியேற வழிதேடினாய். இந்நிலையில்தான் ஜகன் மோகன் திரும்பி வந்துவிட்டான் என்று உனக்குத் தெரிந்தது. உன் எதிரேயுள்ள வழிகள் யாவும் அடைபட்டுக் கிடப்பதைக் கண்டதும்...நீ...

மீண்டும் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்க விழைந்தாய். இப்பொழுதுதான் அவனுடன் வெளியே போய்விட்டு வந்திருக்கிருய்......என்ன நடந்தது?

கு. தலைவி :—என்னிடம் எதை வேண்டுமாளுலும் கேட்க எதையும் அறிந்துகொள்ள உங்களுக்கு அதிகாரம் உள்ளது என்று நினைக்கிறீர்களா?

ஆண் 4 :—நீ கூறவேண்டிய அவசியமில்லை. உன்னிடம் கேட்காமலேயே என்ன நடந்திருக்கும் என்பதை என்னுல் கூறமுடியும். நீ மிகுந்த துயரத்திலிருப்பதாகக் கூறி இருப்பாய். அவன் தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்திருப்பான். இந்த வீட்டைவிட்டு வெளியேற விரும்புவதாய் நீ கூறினுய்; அதற்கு அவன்சில ஆண்டுகளுக்கு முன் நீ இந்த முடிவிற்கு வந்திருந்தால் எவ்வளவு நன்ருக இருந்திருக்கும் என்று கூறினுன். அதற்கு நீ... அன்று நடக்காதது இன்று நடக்கலாமே...என்ருய். நான் விரும்புவதும் இதுவேதான்; ஆனுல் தற்சமயம் இதில் பல தடங்கல்கள் இருக்கின்றனவே என்ருன் அவன். அவனது பதவி, உன் குழந்தைகள், இது அது...எவ்வளவோ! தற்போது இருந்துவரும் வேலையில் அவனுக்கு விருப்பமில்லை. எப்பொழுது இதை விட்டுவிடுவானே தெரியாது. இதனுல்...இந்த சமயத்தில் அவன் இதுபற்றி ஒரு முடிவு எடுக்க முடியாமலிருக்கிறது......இதையெல்லாம் நீ மௌனமாகக் கண்ணீரைத் துடைத்தவாறே கேட்டுக்கொண்டிருந்தாய். கடைசியில் புறப்படலாமா, உனக்கு நேரமாகிவிட்டதே என்ருன். நீ எழுந்து நின்ருய். மௌனமாய் நடந்துவந்து காரில் ஏறிக்கொண்டாய். வழியில்...அவன் சொன்னுன். உனக்கு பணம் ஏதாவது தேவையாக இருந்தால் அவன்......

கு. தலைவி :— நிறுத்துங்கள். போதும். உங்களிடமிருந்து அளவிற்கு அதிகமாகவே கேட்டுக் கொண்டாகி விட்டது. நீங்கள் போகலாம்.

ஆண் 4 :—ஜகன்மோகனும் உன்னிடம் என்ன கூறி யிருப்பான் என்பதை என்னுல் சரியாகக் கணிக்க முடியும். ஏன் தெரியுமா? இன்று அவனது இடத் தில் நானிருந்தாலும் இதே பதிலைத்தான் கூறி இருப் பேன். உன்னை வாசலிலேயே இறக்கி விட்டுவிட்டு, நாளை, மறுநாள் போன் செய்வதாகக் கூறிவிட்டு அவன் போய்விட்டான். நீ...ஆத்திரம், ஏமாற்றத் தின் வெறியோடு உள்ளே நுழைந்தாய்...நீ செய்த முதல் காரியம் — குழந்தையை அடித்தாய் — நீ வீட்டைவிட்டுப் புறப்பட்டு சென்ற சமயத்தில்...... ஒரு புதிய வாழ்க்கை முழுவதுமே உன் முன்னு லிருந்தது. ஆனுல் திரும்பிய சமயம்...என்ன இருந்தது? வியர்த்து பிசுபிசுத்த கரங்கள்......

கு. தலைவி :—போதும் என்று நான் சொல்லவில்லையா? நீங்கள் எல்லோரும்...யாவரும் ஒரே மாதிரிதான். நீங்கள் ஒவ்வொருவரும் அப்படியே ஒரே அச்சு... முகமூடிதான் வெவ்வேறு......ஆனுல் முகம்...அதே தான்......எல்லார் முகமும் ஒன்றேதான்.

ஆண் 4 :—இருந்தும்......இதில் உன்னுல் பொறுக்கி எடுக்க முடியுமென நீ நினைத்தாய். இடமிருந்து வலம், வலமிருந்து இடம், முன்னுலிருந்து பின் னுல். இந்த மூலையில் நகர்ந்து...அந்த மூலைக்குப் போனுலும்...உண்மையில் தேர்ந்தெடுக்கத் தக்க தொன்று எங்கேனும் தென்பட்டதா? சொல்லு! முடிந்ததா?

(சில நிமிடம் மௌனம். மூத்த பெண், முகத்திலிருந்த கரத்தை அகற்றி இருவரையும் மலங்க மலங்கப் பார்க்கிருள். அறைக்குள்ளேயிருந்து கதவைத் தட்டும் ஓசை கேட்கிறது.)

கின்னி :—(உள்ளேயிருந்து)–கதவைத் திற! கதவைத் திற!

மூ. பெண் :—திறக்கட்டுமா மம்மி?

கு. தலைவி :—வேண்டாம். இருக்கட்டும்.

ஆண் 4 :—இந்த மாதிரி அவளைப்போட்டு அடைத்து வைத்தால்......

கு. தலைவி :—முன்பே ஒருதரம் சொன்னேன் அல்லவா? இது என் வீடு; அவள் என் மகள். உங்களைவிட எனக்கு அதிகம் தெரியும்.

கின்னி :—(கதவை உடைக்கிறாள்.) திற கதவை. திறக்கமாட்டாயா? திறக்காவிட்டால் போ.........(கதவை உட்புறம் தாழிடும் ஓசை.)

ஆண் 4 :—இது உன் வீடு; அவள் உன் மகள்; என்னைவிட உனக்கு அதிகம் தெரியும். இதுதான் உன் நினைப்பு. இதனால்தான் எல்லாம் மாறிவிட வேண்டும், சரியாகிவிட வேண்டும் என்று நான் எவ்வளவோ விரும்பினாலும், இனி நம்பிக்கைக்கு இடமேயில்லை என எனக்குத் தோன்றுகிறது. இதனால்தான் நான் உன்னை மீண்டும் கேட்கிறேன்...அந்த மனிதனுக்கு உன்னால் விடுதலை தரமுடியாதா?

கு. தலைவி :—நீங்கள் மீண்டும் மீண்டும் எதற்காக இதைச் சொல்லுகிறீர்கள்?

ஆண் 4 :—ஏன் என்றால்...இன்று அவன் தன்னை முற்றிலும் நிராதவராய் உணர்ந்துகொண்டிருக்கிறான். இந்தச் சூழ்நிலையில், அவனுக்கு வாழ்க்கையில் வேறெந்த வழியுமில்லை. நாதியுமில்லை. உன்னோடு வாழ்வதைத் தவிர அவனுக்கு கதியேயில்லை என்றதொரு உணர்வை நீ அவன் உள்ளத்திலே மிகமிக ஆழமாகப் பதித்துவிட்டிருக்கிறாய். எதற்காக இப்படி யொரு பிரமையைத் தோற்றுவித்திருக்கிறாய் தெரியுமா? வாழ்க்கையில் நீ வேறெதை அடைந்தாலும் அடையாவிட்டாலும் இந்த வெற்றுச் சொக்

கட்டான் காயாவது கையிலிருந்துவிட்டுப் போகட்டுமே என்றுதான்.

கு. தலைவி :—ஏன்......ஏன் இப்படிப் பேசிக்கொண்டே போகிறீர்கள்......போய்விடுங்கள்......உங்கள் நண்பரை என்றென்றைக்கும் உங்களுடனேயே வைத்துக் கொள்ளுங்கள். அவர் இங்கு வரவேண்டாம். எங்களுடன் வாழவேண்டாம். எனக்கு......எனக்குக் கூட...வெற்று சொக்கட்டான் காய் என்றீர்களே... அது இனித் தேவையில்லை. தானும் வாழாது பிறரையும் வாழவிடாத அந்த மனிதன் இனித் தேவையில்லை.

ஆண் 4 :—(கண நேரம் அவளையே உற்று நோக்கிய பின் நிராசை தொனிக்கும் குரலில்)—ரொம்ப நல்லது. அவன் இனித் திரும்பி வரமாட்டான். அவன் பலவீனமானவன் தான். ஆனல் இத்தனை பலவீனமானவன் அல்ல. உன்னுடன் அவனது வாழ்வு பிணைந்திருந்தாலும் பிரிக்க முடியாத பிணைப்பல்ல. அவன் நினைப்பது போல் அத்தனை நிராதரவான நிலை அவனுக்கில்லை. அவன் மட்டும் துணிவுடன் நிமிர்ந்தால் இந்த உலகமே தன்முன் விரிந்து கிடப்பதை உணரலாம். அவன் கண்களைத் திறக்க...நிமிர்ந்து நிற்கச் செய்ய நான் முயல்வேன்.

கு. தலைவி :—தயவு செய்து இதைச் செய்யுங்கள். இதனுல் அவருக்கு மட்டுமல்ல...எனக்கும் உபகாரமாக இருக்கும்.

ஆண் 4 :—என்னுல் உனக்கு என்ன செய்யமுடியும் என்பதைச் சொல்லியாகிவிட்டது. நான் வருகிறேன். இனி போய் அவனிடம் பேசவேண்டும். இது எவ்வளவு கடினமானதென்பதை நான் அறிவேன். ஆனல் இம்முறை எப்படியாவது அவனுக்குப் புரிய வைக்கவேண்டும். அதாவது......

(இளைஞன் முன் வாசல் வழியாக வருகிறான். அவன் முகம் வெளுத்திருக்கிறது.)

ஆண் 4 :—அசோக்...என்ன விஷயம்? நீ ஏன் அங்கிருந்து வந்துவிட்டாய்?

பிள்ளை :—ஆண் 4-ஐக் கடந்து மூ. பெண்ணை நோக்கி விரைகிறான்.) எழுந்திரு பின்னி!......உள்ளேயிருந்து கைத் தடியை கொஞ்சம் எடுத்துக்கொண்டு வா.

மூ. பெண் :—(எழுந்தவாறே) தடியா...அது எதற்கு?

பிள்ளை :—டாடியை ஸ்கூட்டரிலிருந்து இறக்கிக் கூட்டிக் கொண்டு வரவேண்டும். அவரது உடம்பு ரொம்ப மோசமாக இருக்கிறது.

மூ. பெண் :—டாடி வந்துவிட்டாரா?

ஆண் 4 :—அவன்......அவன் திரும்பவும் வந்துவிட்டானா?

பிள்ளை :—(உற்சாகமற்ற குரலில் அவரை நோக்கி) ஆம்...... வந்துவிட்டார்—(மூ. பெண்ணை நோக்கி) சீக்கிரம் கைத் தடியைக் கொண்டு வா!

(ஆண் 4-ன் முகத்தில் வியாகூலம் படர்கின்றது. கு. தலைவியின் பார்வையைச் சந்தித்த அவர் விழிகள் தாழ்கின்றன. அவள் ஒரு நாற்காலியின் பின்புறத்தைப் பிடித்துக்கொண்டு மௌனமாய் நிற்கிறாள். உடலில் எவ்வித சலனமும் இல்லை. மூச்சு விடுவது மட்டும் தெரிகின்றது.)

பிள்ளை :—சீக்கிரம் கொண்டு வா தடியை......

மூ. பெண் :—(உட்புறக் கதவை நோக்கி விரைந்து) இதோ கொண்டு வருகிறேன். (கதவைத் தட்டுகிறாள்.) கின்னி... ஏய் கின்னி! கதவைத் திற...சீக்கிரம்.

கின்னி :—(உள்ளேயிருந்து) கதவு திறக்காது.

மூ. பெண் :—உனக்கு கேடுகாலம் வந்துவிட்டது. திறடி கதவை—சீக்கிரம். (கதவை ஓங்கி ஓங்கித் தட்டுகிறுள்.)

கின்னி :—கேடுகாலம் வரட்டும்...கதவு திறக்காது.

மூ. பெண் :—(பலமாகத் தட்டி) கின்னி...கின்னி...

(திடீரென அவள் கரம் நின்றுவிடுகிறது. தெரு வாசலில் ஏதோ விழும் ஓசை. கால் தடுமாறுவதால் கதவைப் பிடித்துக்கொள்ளும் ஓசை.)

ஆண் 4 :—(வாசற்புறக் கதவை நோக்கிச் சென்றவண்ணம்) யாரோ வாசலில் விழுந்துவிட்டார்களே!

பிள்ளை :—(அவரைத் தாண்டி விரைந்தவனுய்) டாடியாகத்தா னிருக்கும். தானே இறங்கி வந்திருப்பார். (கதவைத் தாண்டி) மெல்ல...டாடி...மெதுவாக......

ஆண் 4 :—(கு. தலைவியை ஒருமுறை பார்த்துவிட்டு கதவின் வழியே வெளியேறியவாறு) மகேந்திரா...மெதுவாக...மெல்ல... ஜாக்கிரதை......

(ஒளி துண்டாகச் சிதறி மூ. பெண், கு. தலைவி இருவர் மீது மட்டும் நிலைக்கிறது. கு. தலைவி நிலைத்த பார்வையுடன் வெளிப்புறம் பார்த்தவாறே மெதுவாக நாற்காலியில் அமருகிருள். மூத்த பெண் தாயை ஒருமுறை நோக்கிவிட்டு வெளிப்புறம் பார்க்கிருள். இலேசான சோகம் நிரம்பிய இசை பரவுகிறது. அத்துடன் அவ்விருவரின்மீது படிந்துள்ள ஒளியும் மெல்ல மெல்ல மலினமடைந்து கிட்டத்தட்ட இருள் சூழும் சமயத்தில் இளைஞுன மகன், கைத்தாங்க லாக ஆண் 1-ஐ அரங்கத்துள் அழைத்து வருகிருன். வரிவடிவமாய் உருவங்கள் வருகின்றன.)

பிள்ளை :—(தழுதழுத்த அடங்கிய குரலில்)—மெள்ள..பார்த்து.. டாடி...பார்த்து...

(அவர்கள் இருவரும் முன்னே வரவர, இசை உரத்து ஒலிக்க இருள் சூழ்கின்றது.)

(திரை)

2. அலைகளிலே அன்னம்

அலைகளிலே அன்னம்

பாத்திரங்கள்

நந்தன்—	கௌதம புத்தரின் மாற்றாந்தாயின் மகன்.
சுந்தரி—	நந்தனின் மனைவி.
மைத்திரேயன்—	நந்தனின் நண்பன்.
பிக்ஷு ஆனந்தன்—	புத்தரின் சீடன்.
நீஹாரிகா—	சுந்தரியின் சேடி.
சசாங்கன்—	அரண்மனை மேற்பார்வையாளன்.
அலகா—	சுந்தரியின் சேடி.
சுவேதாங்கன், சியாமாங்கன்—	அரண்மனை ஊழியர்கள்.

இடம்

முதலாவது அங்கம் :	கபில வஸ்து இளவரசன் நந்தனின் அரண்மனை சுந்தரியின் அறை. மாலைக்குப் பின்.
இரண்டாவது அங்கம் :	அதே அறை. விடி வேளைக்கு முந்திய நேரம்.
மூன்றாவது அங்கம் :	அதே அறை. மறுநாள் இரவு.

அலைகளிலே அன்னம்

அங்கம் 1

[திரை உயர்ந்ததும் பலரின் ஒருமித்த குரலொலி]

தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
புத்தம் சரணம் கச்சாமி

[ஒளி பரவுகிறது. அரச குமாரன் நந்தனின் மாளிகை. சுந்தரியின் அறை. மாலை மங்கி இருள் பரவும் நேரம்.

மேடையின் பின்பகுதியில் இடதுபுறம் சற்றே உயர்ந்த ஒரு மேடை. வலதுபுறம் ஊஞ்சல். மீனின் உருவத்தில் அமைந்ததொரு ஆசனம். இடதுபுறம் பூஜை அறை. வலதுபுறம் பெண்கள் ஒப்பனை, அலங்காரம் செய்துகொள்ளும் அறை. முன்னும் பின்னுமாய், இரு பகுதிகளாக பிரிந்திருக்கும் அரங்கத்தில் இரு தீபத் தண்டுகள். ஒரு தீபம் ஆணுருவத்தில் விரித்த கரமும், மேல்நோக்கி உயர்ந்த விழிகளையுமுடையதாய் உள்ளது. இன்னொன்று பாவை விளக்கு. பூமியை நோக்கித் தாழ்ந்திருக்கும் விழிகள். இணைந்த கரங்கள்.

இடதுபுறம் மலர் வனத்திற்குச் செல்லும் வழி. எதிரே ஒரு வாசல். பின்புறம் சாளரம். அறையின் ஏனைய பகுதிகளுக்குச் செல்ல வலது புறம் ஒரு வழி.

அலங்காரங்கள், ஜோடனைகளில், காம விழாவின் கோலாகலம். பல பணியாட்கள், பணி மகளிர், மலர்களால் அலங்கரிப்பது, தோரணம் கட்டுவது, அறைகளை ஒழுங்குபடுத்துவது, கோலமிடுவது போன்ற பல்வேறு பணிகளில் முனைந்திருக்கின்றனர். சியாமாங்கன், தோரணத்தின் சிக்கலை விடுவிப்பதில் உழன்றுகொண்டிருக்கிறான். சுவேதாங்கன் தீவர்த்தியினால் தீபங்களை ஏற்றிக்கொண்டிருக்கிறான். பிரதான பணிமகன் என்ற முறையில் சுவேதாங்கன், பல்வேறு பணிகளையும் விழிப்புடன் மேற்பார்வையிடுகிறான்.

இரண்டொரு பணியாட்களின் இளக்காரமான சிரிப்பின் ஒலி.

சுவேதாங்கன் :—நாகதாஸ்! என்ன விஷயம்? ஏன்? எதற்காக இந்தச் சிரிப்பு! இந்தாருங்கள், எல்லோரும் ஒருவரைவிட்டு ஒருவர் விலகி நின்று அவரவர் வேலையை கவனியுங்கள்! நீஹாரிகா! நீ வேலை செய்துகொண்டிருக்கிருயா, அல்லது கையிலிருக்கும் மருதாணியை அகற்றிக் கொண்டிருக்கிருயா? உன் பார்வை உன் கரங்களின் மீதிருக்கட்டும். ஆனல் கரங்கள் வேலையைச் செய்துகொண்டிருக்கட்டும். ஓ! ஷேபாலிகா! இன்று உனக்கு இவ்வளவு மலர்கள்தான் கிடைத்தனவா? இன்றைய காமவிழா தான் இந்த மாளிகையின் மிகப் பெரிய விழாவாக இருக்கப் போகிறதென்று கூறியுமா உன்னல் புரிந்து கொள்ள முடியவில்லை? இன்று சுந்தரி தேவியார், தானே ஒவ்வொரு காரியத்தையும் மேற்பார்வை யிடப் போகிருர் என்பதைக் கூறியபின்னுமா உனக்கு அக்கறையோ, உற்சாகமோ ஏற்படவில்லை? ....பீஜகுப்தா! நுழைவுவாயிலில் முத்திரைக் கோலங்கள் இடப்படுவதில்லை என்பதை உனக்குச் சொல்லவேண்டுமா என்ன? இவ்வழியே வரும் அதிதிகளின் உடைகளிலே இவை பதிந்துவிடுமே! என்னையே ஏன் பார்த்துக்கொண்டு நிற்கிருய் மந்தாரகா? ஊஹூம்......என்னிடம் எதையும் கேட்காதே; இப்பொழுது என்னல் உன்னிடம் எதுவும் பேசிக்கொண்டிருக்க முடியாது. இங்கு இப்பகுதியில் யார் யாருடைய வேலை முடிகின்றதோ அவர்கள் இன்னொரு பகுதிக்குச் சென்று அவரவர் வேலையை கவனிக்க வேண்டும். நான் ஒவ்வொருவரிடமும் கூறிய பின்தான் போகவேண்டு மென்பதில்லை.

(ஷேபாலிகா, பீஜகுப்தன், நாகதாஸ் என, ஒவ்வொருவராய் சென்றுவிடுகின்றனர்.)

இன்னமும் என்னையே பார்த்துக் கொண்டு நிற்கிருயா மந்தாரகா? வேலை செய்வதிலிருந்து தப்பித்துக்கொள்ள நல்ல உபாயம் தேடிவைத்திருக் கிருய் நீ. யார் உன்னைப் பார்த்தாலும், நீ அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதைத்தான் காணமுடியும். போ...போ...அங்கே போய் யாரையாவது பார்த்துக் கொண்டு நில். எந்தக் காரியத்தையும் உன்ருல் ஒழுங்காகச் செய்யமுடியாது. ஆமாம்...ஆமாம். எனக்குத் தெரியும். இந்த மாளிகையில் உன்னைப் போல வேலை செய்பவனே கிடையாது. தற்சமயம் இங்கிருந்து போய்விடேன். என்னையாவது என் வேலையைச் செய்யவிடு.

(மந்தாரகன் அதிருப்தியுடன் தலை அசைத்தவாறே செல்லு கிருன்.)

சியாமாங்கா? உன் சிக்கல் இன்னும் தீரவில்லையா?

சியாமாங்கன் :—(இலைகளை ஒடிப்பதிலும், கோப்பதிலும் முனைந்த வனுய்) எனக்கு உன்னிடம் பொருமையாக இருக்கிறது.

சுவேதாங்கன் :—(நீஹாரிகாவை நோக்கி) நீ எதற்காக நிற் கிருய்? போய் உன் வேலையைக் கவனி.

(நீஹாரிகா அவ்விருவரையும் திரும்பிப் பார்த்தவாறே செல்ல மனமின்றி அவ்விடம் விட்டு அகலுகிருள்.)

(சியாமாங்கனை நோக்கி)—உனக்கு என்னிடம் பொருமை யாக இருக்கிறதா? ஏன்?

சியாமாங்கன் :—இதோ பார்! தீபங்கள் ஒன்றன்பின் ஒன்ருய் எரியவாரம்பித்து விட்டன. எதிலும் குழப்பமுமில்லை, சிக்கலுமில்லை.

சுவேதாங்கன் :—இதற்குக் காரணமுண்டு.

சியாமாங்கன் :—என்ன காரணம்? நான் செய்யும் காரியம்மட்டும் ஏன் சிக்கலாகி, குழம்பிவிடுகிறது?

சுவேதாங்கன் :—அதாவது நீ அதிகமாய் சிந்திக்கிருய்.

சியாமாங்கன் :—எனது சிந்தனைக்கும் இதற்குமென்ன சம்பந்தம்?

சுவேதாங்கன் :—எல்லா சம்பந்தமும் இருக்கின்றது. கைகள் வேலை செய்வதில்லை. பார்வை தெளிவற்றுப் போகிறது.

சியாமாங்கன் :—அப்படியென்ருல் நீ.........நீ எப்பொழுதுமே எதைப் பற்றியும் சிந்திப்பதில்லையா?

சுவேதாங்கன் :—இப்பொழுது சிந்திப்பதில்லை. முன்பு சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

சியாமாங்கன் :—முன்பு சிந்தித்துக் கொண்டிருந்தாய்... அதன் பலன் வந்து.........

சுவேதாங்கன் :—சிந்திப்பதையே விட்டுவிட்டேன்.

(ஏதாவது வேலை விட்டுப் போய்விட்டதா என்பதை நாற்புறமும் பார்வையைச் சுழலவிட்டவாறே கவனிக்கிருன்.)

மனிதன் வேலை செய்யவேண்டும் என்று விரும்பினுல் அதற்கு இதுதான் ஒரே வழி. அதிலும் முக்கியமாக ஒரு அரண்மனை ஊழியனுக்கு......

சியாமாங்கன் :—நீ கூறவிரும்புவது...நானும் சிந்திப்பதையே விட்டுவிடவேண்டும் என்பதுதான்...... இல்லையா? (நெற்றியை விரல்களால் வருடியவாறே) சிந்திக்க வேண்டுமென நாளுகவே எப்பொழுதாவது விரும்புகிறேஞ என்ன?....நான் விரும்பாவிட்டாலும் மூளை ஓயாமல் சிந்தித்துக்கொண்டே யிருந்தால் ஒருவன் என்னதான் செய்ய முடியும்?

சுவேதாங்கன் :—விரும்பாவிடினும் மூளை யோசித்துக் கொண்டே இருக்கிறது. சிந்தனையைக் கட்டுப் படுத்தும் விருப்பம் வேண்டும். அதற்காக முயற்சி செய்யவேண்டும்.

சியாமாங்கன் :—முயற்சி செய்யவேண்டுமா? (ஆற்றுமை யுடன்) அது ஒருவனால் இயலவில்லை என்றால்?

சுவேதாங்கன் :—எல்லாமே குழம்பித்தான் போகும். (கணநேரம் அவனையே உற்று நோக்கியபின்) கொண்டு வா.... இந்த இலக்குவியலை என்னிடம் கொடு. நான் சிக்கலைப் பிரிக்கிறேன். (தீவர்த்தியை அவனிடம் நீட்டிய வாறே) நீ தீபங்களை ஏற்று.

(அவன் கரத்தில் சிக்கல் மளமளவென்று பிரிந்துகொண்டே போகிறது. கையில் தீவர்த்தியுடன் சியாமாங்கன் சில கணம் அவனையே பார்த்துக்கொண்டு நிற்கிறான். பின்னர் விழிகளை மூடிக்கொண்டு தன்னை ஒரு நிலைக்குக் கொணர்ந்து சுதாரித்துக்கொள்ள முயலு கின்றான்.)

உனக்கென்ன வந்துவிட்டது? ஏனிப்படி நிற்கின் றாய்?

சியாமாங்கன் :—எனக்கென்ன நேர்ந்துவிட்டதென்றே புரியவில்லை. அடிக்கடி கண்முன்னே இருள்போல் ஏதோ கவிழ்ந்துகொள்கின்றது. அதென்னவென்று எனக்குப் புரியவேயில்லை.

சுவேதாங்கன் :—புரிந்துகொள்ளென்று உன்னிடம் யார் சொன்னார்கள்? சுந்தரி தேவியார் இப்பொழுது இங்கே வரப்போகிறார்கள். தீபங்களை ஏற்று. தீபங்கள் இன்னும் ஏற்றப்படவில்லை என்பதைப் பார்த்தால் சினம் கொள்ளுவார்கள். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றுதான் காம விழா விற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

சியாமாங்கன் :—இதைப்பற்றியேதான் நேற்றிலிருந்து யோசித்துக் கொண்டிருக்கிறேன் சுவேதாங்கா! நான் மட்டுமல்ல, யாவருமே, ஏன் அரச குமாரர் கூட நேற்றிலிருந்து, இதைப்பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருப்பதாய் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் யாராலும் வாய் திறந்து இதைப்பற்றி ஒரு வார்த்தைகூட பேச முடியவில்லை. நாமெல்லோருமே! ஏன்? எதனால்...... ஓ......நான் ஏன் இதையெல்லாம் சொல்லுகிறேனென்றே எனக்குப் புரியவில்லை......மூளைக்குள் பாய்ந்து வரும் எண்ணங்கள்......அப்படியே...... அங்கேயே சிதறிவிடுகின்றன. அது சரி......நீயே சொல்......இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் இங்கு காம விழாவிற்கான ஏற்பாடுகள் இன்று ஏன் நடக்கின்றன என்பதுபற்றி நீ சிந்திக்கவே இல்லையா?

சுவேதாங்கன் :—(ஆழ்ந்த அமைதியுடன்) நீ மீண்டும் சள சளவென்று பேசவாரம்பித்துவிட்டாய். தீபங்களை ஏற்று என்று உன்னிடம் கூறினேன் அல்லவா?

சியாமாங்கன் :—ம்...கூறினாய்......ஆனால் நான் என்ன செய்ய?...இன்று என் மண்டைக்குள் ஏனிப்படி இந்த இருள் கனத்துக்கொண்டே போகிறதோ தெரியவில்லை......யாவற்றையுமே விட்டுவிட்டு எங்கேயாவது போய்விடலாமா என்று தோன்றுகிறது. வந்து......

(அலகாவுடன் பேசியவாறே சுந்தரி இடதுபுறமிருந்து வருகிறாள். சுவேதாங்கன் சிரம் தாழ்த்தி வணங்குகிறான். பின்னர் சியாமாங்கன் மிகுந்த முயற்சியுடன் தானும் வணங்குகிறான்.)

சுந்தரி :—(முன்னால் வந்தவாறே) ஆமாம். பின்னிரவு வரைதான்! விருந்து, மதுவகைகள், ஆடல் பாடல்

எல்லாம்தான்! மக்களின் மனத்திலே பல ஆண்டு கள்வரை இன்றைய இரவின் நினைவு நீங்காம லிருக்கவேண்டும்.

அலகா :—நினைவு—பல வருடங்கள்வரை...ஆம் தேவி! ஆனல்......ஏதேதோ நிகழப்போவது போன்ற எண்ணங்கள் என் உள்ளத்தில் ஏனே தோன்றிக் கொண்டே யிருக்கின்றன.

சுந்தரி :—இரவு கழியட்டும். பிறகு உன் மனத்திடம் கேள். இரவு முழுவதும் இந்நகரத்து ஆடலழகி சந்திரிகையின் மென்பாதங்களின் துரிதகால அசை விற்கேற்ப, இம்மாளிகையில் விரவி நிற்கும் காற்று மகிழ்ச்சிப் பெருக்குடன் அசைந்தாடும். ஆம். காற்று சலசலக்க, அவளது விழிக்கடையிலிருந்து, அவளது சிவந்த உடலின் ஒவ்வொரு அங்கத்தின் அசைவிலிருந்தும், மதுரச, தேன் துளிகள் தெறிக் கும். நீ இதையெல்லாம் காணத்தான் போகிருய். ஆனல் உன்னல் நம்பவே முடியாது. இதைக் கண் ணுல் காணுதவர்களால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது.

(இதற்கிடையில் அலகா, சியாமாங்கனை ஒருமுறை பார்க் கிருள். பிறகு சுந்தரியின் பேச்சிலே தனது கவனத் தைச் செலுத்த முழு முயற்சியும் செய்கிருள்.)

அலகா :—இரவு நெடுநேரம் எனக்கு உறக்கமே வர வில்லை. உறக்கம் வந்தபோது......

சுந்தரி :—பொறு. நான் என்ன நினைத்துக்கொண்டிருந் தேன்?......ஆமாம், இன்றைய இரவிற்காக சில விசேஷமான மதுவகைகளை தயாரிக்க வேண்டு மென சசாங்கனிடம் நீ கூறிவிட்டாய் அல்லவா?

அலகா :—இதுவரை தாங்கள் உத்தரவு ஏதும் தரவில்லை தேவி! நீங்கள் உத்தரவிட்டால் நான் இப்பொழுதே சென்று......

சுந்தரி :—நான் இதுவரை இதுபற்றி எதுவுமே உத்தர விடவில்லையா? அப்படி என்றால்...உத்தரவு பிறப்பித்துவிட்டதாக நான் எப்படி நினைத்துக்கொண்டேன்? உண்மையிலேயே, எனக்குத் தன்னம்பிக்கை அதிகம்தான். மனத்திலே ஒரு எண்ணம் தோன்றியதுமே அது முடிந்துவிட்டதாக நினைத்துக்கொண்டு விடுகிறேன். (இடதுபுறம் பார்வையைத் திருப்பி) இன்னும் வாசனை திரவியங்களைக்கூட தயாரிக்கவில்லையே! சரி...நீ...போய் முதலில் சசாங்கனிடம் கூறிவிட்டு வா! அவகாசம் மிகவும் குறைவாக இருக்கிறது. இருந்தாலும், பழரசங்களையும், மதுவகைகளையும் கலந்து, பற்பல புதுவகை கலவை பானங்களை அவனால் தயாரித்துவிட முடியும். இதோ பார்! இன்று விருந்து, மதுபானங்கள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் எல்லாம் நந்தவனத்திலே செய்யப்பட வேண்டுமென்பதைக் கூறிவிடு.

அலகா :—இதோ......இப்பொழுதே சென்று கூறிவிடுகிறேன் தேவி!

(வலதுபுறமாகச் செல்லுகிறாள். சுந்தரி சில அடிகள் முன்னே வந்து சுவேதாங்கனைப் பார்க்கிறாள்.)

சுந்தரி :—இங்கு இன்னமும் வேலை முடியவில்லையா சுவேதாங்கா?

சுவேதாங்கன் :—கிட்டத்தட்ட முடிந்துவிட்டது தேவியாரே! தோரணம் கட்டுவதற்காக இந்த இலைகளை...

சுந்தரி :—இலைகளை சியாமாங்கனிடம் விட்டுவிட்டு நீ என்னுடன் வா! சியாமாங்கா...நீ வந்து...

(சியாமாங்கனை நோக்குகின்றாள். அவனோ உள்ளத்தில் மூண்டிருக்கும் இருளுடன் போராடியவாறே கரத்திலிருக்கும் தீவர்த்தியை வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்கிறான்.)

நின்றுகொண்டே என்ன யோசித்துக்கொண்டிருக்கிருய்! நெருப்பு, தீவர்த்தியின் உள்ளே இருக்கிறதா, வெளியிலே இருக்கிறதா என்று யோசிக்கிருயா? இதோ பார்! யோசிப்பது அப்புறமாகட்டும். முதலில் தீபங்களை ஏற்றிவிட்டு, தோரணங்களைக் கட்டிவிடு. அதிதிகள் வரும் வேளை நெருங்கி விட்டது. சுவேதாங்கா...நீ போகலாம்.

(வலதுபுறம் சென்றுவிடுகிருள். அவளுடன் செல்லும் சுவேதாங்கன், ஒருமுறை சியாமாங்களை ஆழ்ந்து நோக்குகிருன். தன் கையில் இந்த தீவர்த்தி எப்படி வந்தது என நினைப்பவன்போல் அதையே வெறித்துப் பார்த்தவண்ணம் நிற்கிருன் சியாமாங்கன்.)

சியாமாங்கன் :—(தன் வசமிழந்த நிலையில்) தோரணத்தை சியாமாங்கனிடம் விட்டுவிடு. சியாமாங்களுல் தோரணத்தைச் சிக்கெடுத்து சீர்படுத்த இயலா விட்டாலென்ன? இன்று காமவிழா திட்டமிட்டபடி நடைபெருதா என்ன? எதைப்பற்றியும் சிந்திக்காதே என்கிருன் சுவேதாங்கன். ஆனல் சிந்திப்பதும் சிந்திக்காமலிருப்பதும் நம் வசத்திலா இருக்கிறது?......கடந்த வசந்த காலத்தில் மாமரங்கள் எப்படிப் பூத்துக் குலுங்கின? கிளைகளெல்லாம் கைக்கெட்டும்படியாக தழைத்துத் தொங்கினவே! ஆனல் அப்பொழுது காம விழா கொண்டாட ஏற்பாடுகள் நடக்கவில்லை. ஆனல் இம்முறை மாமரங்களெல்லாம் பிக்ஷுவின் வேடமிட்டு நிற்கும் பொழுது காம விழாவிற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. நாளை பொழுது புலர்ந்ததும் யசோதரா தேவியார் பிக்ஷுணியாக தீக்ஷை பெறப்போகிருர்... இங்கேயோ, இரவு முழுவதும் ஆடல் பாடல்கள் நடைபெறப் போகின்றன. மது விருந்தும் நடக்கும்.

(சில விளுடிகள் இருளிஞல் சூழப்பட்டு விட்டவன்போல் நிற்கிருன். தீவர்த்தியைக் கண்களுக்கு அருகே

(கொணர்ந்து, அதிலிருந்து ஒளியைப் பெற விரும்புகிறவன்போல அதை அசைக்கின்ருன்.)

எனக்கென்ன நேர்ந்துவிட்டது? இன்று எனக்கு என்னதான் வந்துவிட்டதென்றே எனக்குப் புரியவில்லை. நான்......நான் இப்பொழுது என்ன செய்யவேண்டும்? (தீவர்த்தியை நோக்கி) இதை வெளியே வைத்துவிட வேண்டும். பிறகு உள்ளே வந்து இலைகளைப் பிரித்தெடுக்கவேண்டும். அப்படித்தானே?

(தடுமாற்றத்துடன் இடதுபுறக் கதவின் வழியே செல்லுகிருன். தீவர்த்தியை வெளியே வைத்துவிட்டு வந்து இலைக் குவியலின் முன்னே அமருகின்ருன்.)

இதன் முனை எங்கிருக்கிறதோ தெரியவில்லை. ஒரு முறை கையிலிருந்து நழுவிவிட்டால் பிறகு கையில் சிக்குவதேயில்லை.

(ஆத்திரத்துடன் இங்குமங்குமாய் நூலை அறுக்கின்ருன். வலது புறத்திலிருந்து சுந்தரியும் அலகாவும் பிரவேசிக்கிருர்கள்.)

சுந்தரி :—(லேசான சிரிப்புடன்) நீ கனவு கண்டாலும் அதுவும் இப்படித்தான். வரண்ட குளம், இலையுயர்ந்த மரம், தூசிப் படலம் சூழ்ந்த வானம். இதன் அர்த்தம்......(சட்டெனப் பார்வை சியாமாங்கனின் மீது படிய) இதுதான் வேலை செய்யும் முறையா சியாமாங்கா? இவற்றை இப்படி அறுத்து, அறுத்து என்ன பார்க்கிருய்? நூல் இலைகளில் சிக்கிக்கொண்டிருக்கிறதா, இலைகள் நூலில் சிக்கிக் கொண்டிருக்கிறதா என்று பார்க்கிருய்?

சியாமாங்கன் :—(தன் உள்ளத்தின் இருளோடு போராடியவாறே)— இல்லை...இவற்றை நான் அறுக்கவில்லை. எப்படியாவது இந்தச் சிக்கலை விடுவித்துவிட வேண்டும் என்றுதான் முயற்சி செய்கிறேன்...

சுந்தரி :—ஆமாம்...இந்த முயற்சியில்...இந்த சிக்க லெல்லாம் விடுபட்டே விடும்...போ...போய் இந்த வேலையை இன்னும் யாரிடமாவது ஒப்படைத்து விட்டு, எங்கேயாவது தனியாகப் போய் உட்கார்ந்து கொண்டு, கைகளுக்கு ஒரு வேலையும் இல்லாத பொழுது கைகளை என்ன செய்வது என்பது பற்றி யோசி. போ.

(சியாமாங்கன் இமைகள் படபடக்க கண நேரம் அவளையே பார்த்துக்கொண்டு நிற்கிறான்).

(சற்று உரக்க ஆவேசத்துடன்) போ.

(எப்படியோ இலைகளைத் திரட்டிக் கொண்டு சியாமாங்கன், திகைப்புடன், சுந்தரியையும், அலகாவையும் ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தவனாய், தடுமாறியவனாய், இடதுபுற வாசல் வழியாக வெளியேறுகின்றான். சுந்தரி, கண நேரம் தனது ஒப்பனைக் கூடத்தினருகே நிற்கின்றாள். பின்னர் மச்ச வடிவத்திலமைந்த ஆசனத்தினருகே வருகின்றாள். குரலில் மீண்டும் மென்மையும், களிப்பும் கூடுகின்றது.)

அலகா! நீ உன் கனவைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தாய் அல்லவா? ஆமாம், நீ என்ன கண்டாய்? வரண்ட குளம், இலையுதிர்ந்த மரம், தூசி படிந்த வானம்...என்று ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாயே! (அவளைத் தலையிலிருந்து கால் வரை ஏற இறங்கப் பார்த்தபின்) பருவத்தில் மலர்ந் திருக்கும் இக் கட்டிளமைக் கோலம், இதயத்திலோ தூசி படிந்த வானம்! இதற்கேதாவது உபாயம் செய்துதானாக வேண்டும்.

அலகா :—(அவளை நெருங்கி) விடி வேளையில் உறக்கம் கலை யும் முன்னர் கனவு கண்டேன். விடி வேளையில் கண்ட கனவு பொய்ப்பதில்லையல்லவா தேவி!

சுந்தரி :—பலிக்கும் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். இதனுல்தான் இதற்கொரு வழி தேடியாக வேண்டும். இல்லாவிடில் நாளைக்கு நீயும், பிக்ஷுணிக் கோலம் பூண்டுவிடலாம் என நினைக்க வாரம்பித்துவிடக் கூடாதல்லவா ?

அலகா :—நானு ! பிக்ஷுணிக் கோலத்திலா ? இல்லை ! என்னுல் இதைப்பற்றி நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. நாளை...நாளையைப் பற்றி நினைத்தாலே நான் விதிர்விதிர்த்துப் போகிறேன் தேவி ! நாளைக்கு பிக்ஷுணிகோலத்தில் யசோதரா தேவியார் எப்படிக் காட்சி அளிப்பார் ?

சுந்தரி :—(ஆசனத்தை விட்டெழுந்தவாறே) மற்ற பிக்ஷுணிகளெல்லாம் எப்படிக் காட்சி தருகின்றனர் ?

(மதுபான வகைகள் வைக்கப்பட்டிருக்கும் கூடத்திற்கு வந்து கிண்ணத்தில் மதுவை வார்த்தவாறே)

இத்தனை ஆண்டுகள் பிரிவின் துன்பத்தைத் தாங்கிய பின்னும் யசோதரா தேவியார் தனது வேதனையின் சுயாபிமானத்தைத் தற்காத்துக் கொள்ளவில்லை என்பதை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. (மதுவை ஒரு வாய் பருகியபின்) மிகுந்த அனுதாபமும் உண்டாகின்றது.

அலகா :—ஆனுல் தேவி .....

சுந்தரி :—ம்...சொல்லு...ஏன் நிறுத்திவிட்டாய் ?

அலகா :—ஒருக்கால் தேவியார் அவரை முந்திய உறவின் கண் கொண்டு பார்க்காமலிருக்கலாம் அல்லவா ? அவரது உள்ளத்தில் மூண்டிருந்த வேதனை யெல்லாம் அரசகுமாரர் சித்தார்த்தரின்பால்தானே ? ஆனுல் இன்று திரும்பி வந்திருப்பவர், கௌதம புத்தர். அரசகுமாரர் சித்தார்த்தர் அல்ல.

சுந்தரி :—அரசகுமாரர் சித்தார்த்தர்தான் இன்று கௌதம புத்தராய் திரும்பி வந்திருக்கிறார். இந்தப் பெருமை கூட யசோதராவைச் சாரவேண்டியது தான்.

அலகா :—இதன் பெருமை யசோதரா தேவியாருக்கா?

சுந்தரி :—பின் இல்லையா? யசோதரா தேவியின் கவர்ச்சி, அரசகுமாரர் சித்தார்த்தரைத் தன்பால் ஈர்த்து பிணைத்திருக்குமேயானால் இன்று கூட அவர் அரசகுமாரர் சித்தார்த்தராகத்தானே இருந் திருப்பார்?

அலகா :—அப்படிச் சொல்லாதீர்கள் தேவி.

சுந்தரி :—ஏன்? இது உண்மையில்லையா? அரசகுமாரர் சித்தார்த்தர் ஒரு நாள் நடு யாமத்தில் ஒருவரு மறியாது ஏன் அரண்மனை வாழ்வைத் துறந்து சென்றார்? இல்வாழ்வைவிட, வன வாழ்வு அவரைத் தன்பால் கவர்ந்தது ஏன்? விஷயம் மிக சாதாரண மானது அலகா! ஒரு பெண்ணின் வசீகரம்தான் ஒரு ஆண் மகனை ஆண்மையுள்ளவனுக்குகிறது என்றால், அதன் தோல்விதான் அவனை கௌதம புத்தனுக்குகிறது.

(ஒரே மடக்கில் கோப்பையைக் காலி செய்கிறாள்.)

அலகா :—தாங்கள் கூற விரும்புவது...அவர் அடைந் துள்ள ஞானம்...வந்து...

சுந்தரி :—(இடைமறித்து) ஆம். அவர் ஞானம் பெற்று விட்டார். ஆசைகளை வென்றுவிட்டார். ஆனால் நான் அறிய விரும்புவது இதுதான். ஆசைகளை வென்றுவிட வேண்டுமென்பதும் மனத்தின் ஒரு ஆசைதானே? அத்தகைய ஆசை ஒருவர் மனத் தில் ஏன் உண்டாகிறது?

அலகா :—அப்படியென்றால், சிறு குழந்தையிலிருந்து, வயோதிகர்கள்வரை அவர்பால் ஏனிந்த கவர்ச்சி? ஏனிந்த உற்சாகம்? அந்தி வேளை நெருங்கியதுமே, நதிக்கரையை நோக்கி அவரது உபதேசத்தைக் கேட்க, ஏனிப்படி வெள்ளம்போல் திரண்டு செல்லுகின்றார்கள்?

சுந்தரி :—ஏனென்றால், ஒரேமாதிரியான வாழ்க்கையில் மக்களுக்கு தங்களிடமே சலிப்புத் தட்டிவிடுகின்றது. எங்கே, என்ன புதுமை தென்பட்டாலும் அதை நோக்கித் திரண்டுவிடுகின்றனர். அவ்வளவுதான். இந்த உற்சாகமெல்லாம் பால் பொங்குவது போன்றதுதான். நாலு நாட்களில் தானாகவே தணிந்துவிடும்.

(மலர் வனத்திலிருந்து அன்னப்பேடுகளின் இனிய குரலொலி. தொடர்ந்து அவை படபடவென சிறகடித்துக் கொள்ளும் ஓசை)

அலகா :—ஆனால் இதற்கு முன்......இதுபோல்...... என்றேனும்...

சுந்தரி :—இரு......இதைக் கேள்! இருள் பிரிந்து இறங்கி வரும் வேளையில் அன்னப்பேடுகளின் குரலொலி மனத்தை எப்படிக் கவருகின்றது பாரேன்!

அலகா :—(சற்றே பரபரப்புடன்) தங்களுக்கு அப்படித் தோன்றவில்லையா...வந்து...

சுந்தரி :—பேசாதே—மௌனமாய் இதைக் கேளேன். இவ்வினிய ஓசைக்கு இணையாக ஏதுமிருக்கிறதா? பனித்துளிகள் நிறைந்த தாமரை மலர்களிடையே இணையும் பிணையுமாக கிரீடித்துக் கொண்டிருக்கும் இவ்வன்னப்பேடுகள் அழகானவையா, அல்லது அந்த மாலையின் மயக்கத்திலே தொலைவிலிருந்து காதில் விழும் இவற்றின் குரலொலி அழகானதா

என்றே என்ஞல் கூற இயலவில்லே. (மெல்ல நகைக்கின்ருள்) யாரேனும் கௌதம புத்தரிடம் சென்று அவரை இத் தாமரைப் பொய்கைக்கு வந்து, இவைகளுக்கும் நிர்வாணத்தையும், அமரத்வத்தைப் பற்றியும் உபதேசிக்கும்படி கூறுங்கள். அலகோடு அலகிணேய, இணே பொருந்த, இவை வியப்புடன் ஒருமுறை அவரை ஏறிட்டுப் பார்க்கும். பின்னர், சஞ்சலமான அலேகள் எங்கு இழுத்துச் செல்லுகின்றனவோ, அத் திசையில் நீந்திச் சென்று விடும். அந்த ஒருநாள் கௌதம புத்தருக்கு நதிக் கரைக்குச் சென்று உபதேசம் செய்ய மனமில்லாமல் போகலாமென்று நினேக்கிறேன்...அன்று அவர்...

(இதற்கிடையே ஒன்றிரண்டு முறை தண்ணீரில் கற்களே எறியும் ஓசை கேட்கிறது. தொடர்ந்து பல கற்களே அடுத்தடுத்து வீசும் ஓசை கேட்கிறது. இதையடுத்து அன்னப்பேடுகளின் துயர ஓலம். இறக்கைகளேப் படபடவென அடித்துக்கொள்ளும் ஓசை. சுந்தரியின் பேச்சு சட்டெனத் தடைபடுகின்றது. சீற்றத்துடன் மலர் வனத்தின் பக்கம் பார்க்கின்ருள்.)

சுந்தரி :—யாருடைய துணிச்சலான செயல் இது? தாமரைத் தடாகத்தில் கற்களே வீசிக்கொண்டிருப்பவன் யார்?

அலகா :—இந்த ஓசை முன்னரே எனக்குக் கேட்டது. இந்த அகால வேளேயில் காரணமின்றி அன்னப் பேடுகள் குரலெழுப்பாது.

சுந்தரி —நந்தவனத்திற்குச் சென்று யார் இப்படிச் செய்கிருனென்று பார்! நான் அவனே இப்பொழுதே, இங்கே அழைத்ததாகச் சொல்லு.

(அலகா தலே அசைத்துவிட்டு இடதுபுறமாகச் செல்லுகிருள். சுந்தரி அமைதி இழந்தவளாய் ஒப்பனேக் கூடத்தை நோக்கிச் செல்லுபவள், மீண்டும் மேடையினருகேயே வந்துவிடுகிருள்.)

எனக்கொன்றுமே புரியவில்லை. காமவிழா நடக்கும் இன்றைய இரவில், தாமரைப் பொய்கையில் கற்களை எறிவது, அன்னப் பேடுகளைத் தாக்குவதென்பது யதேச்சையாக நிகழ்ந்துவிட்ட ஒரு செயலா...... அல்லது யாராவது வேண்டுமென்றே செய்யும் முயற்சியா! இவ்விதம் நடந்துகொண்டவன் யாரென்பதைப் பொறுத்திருக்கின்றது இது.

(அலகா இடதுபுறமிருந்து சியாமாங்கனுடன் வருகிறாள் சியாமாங்கன் உன்மத்தம் கொண்டவன்போல் காணப்படுகிறான். அவனைக் கண்டதுமே சுந்தரியின் புருவங்கள் உயருகின்றன.)

ஓ...நீ...நீதான் தாமரைப் பொய்கையில் அன்னங்களின் மீது கற்களை எறிந்து கொண்டிருந்தாயா?

சியாமாங்கன் :—அன்னங்களின் மீதல்ல தேவி......

(சுந்தரியை நோக்கி வந்துகொண்டிருந்த அலகா சட்டென்று நின்றுவிடுகிறாள். அவள் முகத்தில் பற்பல பாவங்கள் தோன்றி மறைகின்றன.)

சுந்தரி :—அன்னங்களின் மீதல்ல என்றால் பின் எதன் மீது? தடாகத்தில் பிரதிபலித்த உன் நிழலின் மீதா?

('நிழல்' என்ற சொல்லைக் கேட்டதுமே சியாமாங்கனின் விழிகளில் பயம் மின்னலிடுகின்றது.)

சியாமாங்கன் :—நிழலின் மீது...ஆம்...தேவி...ஆனால் எனது நிழலின் மீதல்ல. அது இன்னுமொரு நிழல், பயங்கரமான நிழல்.

சுந்தரி :—அது...இன்னுமொரு நிழலா? அது எப்படிப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ளலாமா?

சியாமாங்கன் :—அது என்ன நிழலென்று எனக்குத் தெரியாது. இருள் சூழச் சூழ அந்த நிழலும் நீண்டு கொண்டே போயிற்று.

சுந்தரி :—இருட்டிலே அமர்ந்து நிழலைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வேலையில்லையா உனக்கு?

(அலகா ஏதோ கூற வாயெடுப்பவள், ஒன்றும் கூறாமலேயே மேடையை நோக்கிச் செல்லுகின்றாள்.)

சியாமாங்கன் :—வேலையா? தாங்கள்தானே வேலை யொன்றும் செய்ய வேண்டாமெனக் கூறினீர்கள்! அதனால்தான் தாமரைத் தடாகத்தினருகே இருண்ட மூலையிருக்கிறதே, அங்கு அமர்ந்திருக்கலாமென்று சென்றேன். அங்குதான் தடாகத்தின் அலைகளின் மீது அந்த நிழல் பரவிக் கொண்டிருப்பதைக் கண்டேன். தாமரைப் பொய்கை, தாமரை மலர்கள் யாவுமே அந்நிழலில் கரைந்துகொண்டிருந்ததைக் கண்டேன். அக்கரிய நிழல் அவை யாவற்றையுமே பொய்கையில் நீந்திக் கொண்டிருக்கும் அன்னப் பேடுகளைக் கூட விழுங்கிவிடும் என எனக்குத் தோன்றியது. நான் பயந்துவிட்டேன். அந்நிழலின் மீது கற்களை எறியவாரம்பித்தேன்.

சுந்தரி :—நிழலை விரட்டியடிக்க நீ அதன்மீது கற்களை எறியலானாய்...அப்படித்தானே!

சியாமாங்கன் :—ஆம்...ஒரு கல்லை எறிந்தேன். நிழல் சற்றே அசைவதுபோல் தோன்றியது. அது அசைந்ததே தவிர நகரவில்லை. அப்பொழுதுதான் அன்னப்பேடுகள் அந்த நிழலிலிருந்து தப்ப விரும்புவதுபோல் கூச்சலிட, இறக்கைகளைப் பட படவென அடித்துக்கொள்ளவாரம்பித்தன. நான்... நான்வந்து அந்த நிழலைக் குறிபார்த்து கற்களை வீசிக்கொண்டே யிருந்தேன்...நிழல் பல துண்டுக ளாகச் சிதறியது. ஆனால் மீண்டும் முன்போலவே ஒன்றாகிவிட்டது. அது அன்னப்பேடுகளைத் தன் னுள்ளே இறுகப் பிணித்துக்கொள்ளவே அவை ஓலமிடவாரம்பித்து விட்டன.

சுந்தரி :—உன்னுடைய அர்த்தமில்லாத இந்த உளறலை நான் நம்புவேன் என்று நீ நினைக்கிறாயா? காமவிழா நடக்கும் நாளன்று நீ ஏன் இப்படியெல்லாம் செய்தாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இந்த மாளிகையிலேயே இருந்துகொண்டு, இதில் தன்னை ஒருவனாக நினைக்காமல், எப்பொழுது, எப்படி, இம்மாளிகையின் மகிழ்ச்சியைக் குலைக்கலாம் எனத் தருணம் பார்த்துக் கொண்டிருப்பவர்களில் நீயுமொருவன்......

(அலகா ஒருமுறை சுந்தரியை ஏறிட்டுப் பார்ப்பவள் சியாமாங்கனின் அருகே வருகிறாள்.)

அலகா :—உன்னையுமறியாமலேயே தவறு நேர்ந்துவிட்டதென்ற உண்மையை ஏன் சொல்லமாட்டேன் என்கிறாய்? தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டால்......

சியாமாங்கன் :—நிழலை விரட்டி அடித்தது குற்றமா என்ன? அது குற்றமென்று எனக்குத் தெரியாது. உண்மையிலேயே அது குற்றம்தான் என்றால்......

அலகா :—ஏன் மீண்டும் அதையே கூறுகின்றாய்? உன் மனம் வேறெங்கோ இருந்தது. கற்களை எப்பொழுது எடுத்தோம், எப்பொழுது வீசினோம் என்று உனக்கே தெரியாதென்ற உண்மையைத் தெளிவாகச் சொல்லிவிடுவதுதானே?

சியாமாங்கன் :—என் மனம் வேறெங்கோ இருந்ததா? என் மனம் வேறெங்கேயாவது இருந்திருந்தால் நான் நிழலை எப்படிப் பார்த்திருக்க முடியும்?

சுந்தரி :—இல்லை. உன் மனம் வேறெங்குமில்லை. உண்மையிலேயே ஏதோவொரு நிழல்தான் உன்னைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. நீ இங்கு வேலைசெய்து கொண்டிருந்த போதுகூட அதுதான் உன்னைச்

சுற்றிலும் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. எனக்கு இது கொஞ்சம்கூட வியப்பில்லை. இன்று விழாவின் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும்போது அந்த நிழல் உங்களில் யாரையேனும் சூழ்ந்து கொண்டிரா விட்டால்தான் எனக்கு வியப்பேற்பட்டிருக்கும். இனி அந்த நிழலிலிருந்து உன்னைக் காப்பாற்ற இதுதான் உபாயம். கொஞ்ச காலத்திற்கு உன்னைத் தெற்கேயுள்ள பாதாளச் சிறைக்கு அனுப்பிவிட வேண்டும்.

அலகா :—(பதட்டமடைந்தவளாய்) இல்லை...தேவி !

சுந்தரி :—(அவள் கூறுவதைக் கவனியாது) அங்கு உனக்கு நிறைய அவகாசம் இருக்கும். அந்த நிழலும் உன்னருகேகூட நெருங்காது. (வலதுபுறம் பார்த்து) யாரங்கே ! சுவேதாங்கனிடம் நான் அவனை அழைப்பதாகச் சொல்லு ! (சியாமாங்கனிடம்) சுவேதாங்கன் இப்பொழுதே உன்னை, நீ போய்ச் சேர வேண்டிய இடத்தில் சேர்த்துவிடுவான்.

(சுவேதாங்கன் வலதுபுறத்திலிருந்து வருகிறான்)

சுவேதாங்கன் :—(வணங்கி) .....தேவி !

சுந்தரி :—வாசனை திரவியங்களுக்கு ஏற்பாடு செய்தாகி விட்டதா ?

சுவேதாங்கன் :—ஆம் தேவி.

சுந்தரி :—தோரணங்களில் இலச்சினைகளைப் பொறித்தாகி விட்டதா ?

சுவேதாங்கன் :—ஆம் தேவி.

சுந்தரி :—நீ இன்னுமொரு காரியம் செய்யவேண்டும். உன் தோழன் சியாமாங்கனை ஏதோ ஒரு நிழல் பிடித்துக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து இவனை விடுவிக்க...

சியாமாங்கன் :—(இமைகள் படபடக்க) நிழல் அங்கேயில்லை தேவி...தாமரைப் பொய்கையில்தான்...நான் அங்கிருந்து வந்தபொழுதுகூட...அது...

சுவேதாங்கன் :—(சியாமாங்கனை உற்றுப் பார்த்த வண்ணம்) தேவி...எனக்குத் தோன்றுகிறது...

சுந்தரி :—உனக்கென்ன தோன்றுகிறது என்பதைப் பிறகு வந்து சொல். முதலில் இவனை அழைத்துச் சென்று தெற்கேயுள்ள பாதாளச் சிறையில் விட்டு விட்டு வா......ஏன் நிற்கிறாய்? செல். சென்று என் உத்தரவை நிறைவேற்று!

(சுவேதாங்கன் அருகே சென்று சியாமாங்கனின் தோளைப் பற்றுகிறான்)

சுவேதாங்கன் :—சியாமாங்கா...வா...போகலாம்.

சியாமாங்கன் :—சுவேதாங்கா......உன்னிடம் உண்மையைத்தான் சொல்லுகிறேன். நான் எதைப்பற்றியும் சிந்திக்கவேயில்லை. நீ கூறியது எனக்கு நன்றாக நினைவிருந்தது.

சுந்தரி :—இவனை அழைத்துச் செல். இவனது உளறலை நான் இன்னமும் கேட்க விரும்பவில்லை.

(சுவேதாங்கன் சியாமாங்கனை இடதுபுற வாசல் வழியாக வெளியே அழைத்துச் செல்லுகிறான்.)

சுவேதாங்கன் :—(நடந்து கொண்டே) நான் உன்னிடம் எதுவும் கூறவில்லை சியாமாங்கா! நான் ஏதோ கூறியதாக உனக்குத் தோன்றுகிறது. இது வெறும் மனப் பிரமைதான்.

சியாமாங்கன் :—நீ என்னிடம் எதுவுமே கூறவில்லையா? உண்மையாகவே ஒன்றும் கூறவில்லையா? அப்படியென்றால் எனக்கெப்படி தோன்றியது...... நீ வந்து......

(கடைசி வார்த்தை வெளியே காற்றிலே கரைந்துவிடுகிறது. சுந்தரி மீன் வடிவத்தில் அமைந்த ஆசனத்தை நோக்கிச் செல்லுகின்றாள். அலகா துயரத்துடன் தான் நின்ற இடத்திலேயே நிற்கின்றாள்.)

சுந்தரி :—இவனைப் பார்த்தாலே ஏன் குழப்பமுண்டாகின்றதென்றே புரியவில்லை. இவன் ஒரு வேலையும் செய்யாமலிருக்கும்போதுகூட, என் சிந்தனை...... என் செயல்களுக்கு முன்னால் ஒரு கேள்விக்குறியாக வந்து நின்று விடுகிறான்...அவனது பார்வைகூட... (சட்டென, அலகாவின் மீது பார்வை விழுந்ததும்) அலகா! உனக்கென்ன நேர்ந்துவிட்டது? நீ ஏன் இப்படி நிற்கின்றாய்?

அலகா :—(தன்னைச் சமாளித்துக்கொள்ள முயற்சித்தவளாய்) ஒன்றும் நேர்ந்துவிடவில்லை தேவி......நான் ஏதோ......

சுந்தரி :—ஏதோவென்றால் என்ன? உன் முகத்தைப் பார்த்தால்......இங்கே வா...என்னருகே.....

(அலகா நீர் நிறைந்த விழிகளுடன் அவளருகே வருகின்றாள்.)

சொல்லு! என்ன விஷயம்? மீண்டும் அந்த அபசகுனத்தைப்பற்றி யோசிக்க வாரம்பித்து விட்டாயா?

அலகா :—(விழிகளைத் தாழ்த்தி) இல்லை......தேவி!......நான் நினைக்கிறேன். அவர்...வேண்டுமென்றே இதைச் செய்திருக்கமாட்டார்......

சுந்தரி :—ஓ! நீ சியாமாங்கனைப் பற்றிச் சொல்லுகிறாயா?......(சற்றே காரமான குரலில்) அவன் ஏதோ ஒரு நிழலைப் பார்த்தான் என்பதை உண்மையிலேயே நீ நம்புகிறாயா?

அலகா :—இல்லை......நிழலைப்பற்றி நான் நம்பவில்லை... ஆனால் நான் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். பல நாட்களாகவே...அவருக்கு ஏதோ

நேர்ந்துவிட்டது. மெல்ல மெல்லத் தன்வசமிழந்தவ ராக மாறிக்கொண்டே யிருக்கிருர்.

சுந்தரி :—(சிந்தித்தவாறு) சியாமாங்கன் உன்மத்தம் கொண்ட நிலையில்தான் இதைச் செய்திருப்பான் என்று கூற விரும்புகிருயா !

அலகா :—உன்மத்த நிலையில் இல்லையென்ருலும்...... தெரிந்துகொண்டே இதை அவர் செய்யவில்லை... தேவி. நான் எப்பொழுதும் கவனித்துக்கொண்டு வருகிறேன். அவர் உள்ளூரத் தன்வச மிழந்து கொண்டே வருகிருர். அவர் மனத்தில் ஏதோ ஒரு குழப்பம்......இறுக்கம். அதனுல்தான்...அவர் ......தேவி......அவருக்குத் தேவை அனுதாபமும், உபசரணையும்தான்......அவருக்காக......என்னுல் ஏதாவது செய்ய முடியுமானுல்......அது அவருக்கு எவ்வளவோ...உதவியாக......

சுந்தரி :—நீ சொல்ல விரும்புவது......ஆனுல் ..நீ கூறுவதின் நோக்கம் அதுவாக இருக்காது......இல்லை... அதுவாக இருக்க முடியாது...நீ கூற விரும்புவது... ஒருக்கால்...

(சுந்தரி அலகாவின் மோவாயைப்பற்றி முகத்தைத் தன் பால் திருப்புகிருள்.)

சொல்...அவனை நீ காதலிக்கவில்லையே !

(அலகா உதட்டைக் கடித்தவாறு தலையைக் குனிந்துகொள் கிருள்.)

ஓ! நான் நினைக்கவேயில்லை! நீ! நீ யாரையேனும் காதலிக்கிருய் என்ருல் அத்தகைய கனவை எப்படி கண்டிருப்பாய்? சியாமாங்கனைப் போன்றவனைப் போய்...........?........இல்லை......இது அர்த்தமற்ற கேள்வியாக இருக்கலாம்...சற்றுப் பொறு......நான் சற்றே சிந்திக்கவேண்டும்......(ஊஞ்சலை நோக்கி நடந்த

வாறு) உனக்கும் அவனுக்கும் ஏற்பட்டுள்ள உறவைப்பற்றி நான் சிந்திக்கவேண்டும்......(ஊஞ்சலின் அருகே நின்று) அது சரி......இதைக் கேள்......

(அலகா அவளருகே வருகின்ருள்.)

அவனை நீ காதலிக்கிருய் என்பதை நீ உறுதியாக நம்புகிருயா?

(அலகா பதிலேதும் கூற இயலாதவளாய் பார்வையை வேறுபுறம் திருப்பிக்கொள்கிருள்.)

அவன் இவ்விதம் தண்டிக்கப்படக் கூடாதென நீ விரும்புகிருய்......இல்லையா? இதோ பார்! நீ நிராசை அடைவதை நான் விரும்பவில்லை. நான் உன்னை எவ்வளவு நேசிக்கிறேன் என்பது உனக்குத் தெரியும். உனது எண்ணங்களுக்காக... நான்......ஆனல் அலகா......இன்னமும்கூட அவன் வேண்டுமென்றே இதைச் செய்திருக்கமாட்டான் என்பதை என்னுல் நம்ப முடியவில்லையே! இப்பொழுதும் நான் நினைக்கிறேன்......ஒருக்கால் அப்படி நினைப்பது சரியாக இல்லாமலுமிருக்கலாம். (ஊஞ்சலை விட்டு நகர்த்தவாறே) நல்லது......நீ சென்று நந்தவனத்தில் விருந்தினர்களுக்கு ஆசனங்களைப் போடும் முன்னர் ஒருமுறை என்னிடம் வந்து பேசிவிட்டுப் போகும்படி சசாங்கனிடம் சொல்லு. சுவேதாங்கன் திரும்பி வந்ததும் நான் சியாமாங்கனுக்காக மறு உத்தரவு பிறப்பிக்கின்றேன்.

(இலேசாக அவளது தோளில் தட்டிக்கொடுக்கிருள். அலகா தலைகுனிந்தவாறே வலதுபுறமாகச் செல்லுகிருள்.)

ஒரே மனிதனைப்பற்றி வெவ்வேறு உள்ளங்களில் எத்தகைய முரணன எண்ணங்கள் உதிக்கின்றன? அலகா அவனைக் காதலிக்கிருள். ஏன்? அரசகுமாரரின் உள்ளத்தில்கூட அவன்பால்

அன்பும் கனிவும் இருக்கிறது. தனிமையிலிருக்கும் போது அவனை அழைத்து நெடுநேரம் ஏதோ உரையாடிக்கொண்டே இருக்கிறார். ஆனால் ஏன் எனக்கு மட்டும் அவனைப் பார்த்தாலே எரிச்சலாக இருக்கிறது? அவன் ஒரு மனிதனல்ல. இம் மாளிகையின் காற்றிலே வியாபித்து நிற்கும் இரு கண்களுடைய விரும்பத் தகாத ஓர் உருவெளித் தோற்றமென ஏன் தோன்றுகிறது?

(இச்சமயம் நந்தன் எதிர்புறமிருக்கும் வாசல் வழியாக வருகிறான். அவன் மிகவும் சோர்வுடன் காணப்படுகிறான். சுந்தரியை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு மதுபானங்கள் வைக்கப்பட்டிருக்கும் கூடத்தை நோக்கிச் செல்லுகிறான். அவனது வருகையை சுந்தரி அறிவதில்லை.)

இன்று அவனுக்கு ஏற்பட்ட மனக்கலக்கம், உண்மையிலேயே யதேச்சையாக நிகழ்ந்ததுதானா? அலகா அப்படித்தான் நினைக்கிறாள். ஆனால் என் மனம் அதை ஏன் நம்ப மறுக்கின்றது? எனக்கு ஏன் தோன்றுகிறது...வந்து...இல்லை...அலகாவிடம் கூறியாகிவிட்டது. இனி எது எப்படியாயினும் அவனை இங்கு ஏற்றுக்கொண்டுதானாகவேண்டும். இருந்தாலும் ஒன்றைமட்டும் கவனித்துக்கொள்ள வேண்டும்......அதாவது......

(நந்தன் இரண்டொரு வாய் பருகிவிட்டு கோப்பையை வைத்ததும் அவளது கவனம் அங்கு திரும்புகிறது.)

ஓ...நீங்களா? நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்?

நந்தன் :—இப்பொழுதுதான் வந்தேன்.

சுந்தரி :—நான் எத்தனை நேரமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்! நினைத்தேன்—ஒருக்கால்...

நந்தன் :—(அவளை நோக்கி வந்தவாறே) வரமாட்டேன் என்று?

சுந்தரி :—அப்படி எவ்வாறு என்ருல் நினைக்க முடியும்? வேட்டையாடிக்கொண்டே நெடுந்தூரம் சென்று விட்டீர்களோ என நினைத்தேன். அதிதிகள் யாவரும் வர ஆரம்பித்தபின் தாங்கள் கடைசியாக வரும் அதிதியாக இருந்துவிடக் கூடாதேயென பயந்துகொண்டே இருந்தேன்.

நந்தன் :—(தனக்குள்ளே) கடைசியாக வரும் அதிதி! (மேடைக்குச் சென்று களைப்பாற்றிக்கொள்ளும் பாவனையில் அமருகின்ருன்.) நீ எதிர்பார்த்துக் கொண்டிருப்பாயென எனக்குத் தெரியும். அதனுல்தான் நான்........... நான் திரும்பிவரத் தாமதமாகிவிட்டதென்று உண்மையிலேயே உனக்குத் தோன்றியதா?

சுந்தரி :—பின் இல்லையா? அந்தி மாலைக்குள் திரும்பி விடுவேன் எனத் தாங்கள் கூறிவிட்டுச் சென்றீர்களே! (அவனை உற்று நோக்கியவாறு) ஏன் இவ்வளவு களைப்பாகக் காணப்படுகிறீர்கள்?

நந்தன் :—களைத்து வந்திருக்கிறேன். அதனுல்தான். நாள் முழுவதும் ஒரு மானின் பின்ருல் சுற்றிக் கொண்டிருந்தேன். ஆனுல் அது என் கைக்கு அகப்படவில்லை. அது என்ன மாய மானே தெரியவில்லை!

சுந்தரி :—(கவலை மிகுந்த குரலில்) வேட்டை உங்கள் கையிலிருந்து தப்பிச் சென்றதென்பது இதுதான் முதன் முறையென நினைக்கிறேன்.

நந்தன் :—தப்பிச் செல்லவில்லை. உண்மையில் மனதிற்கு ஏற்பட்டுள்ள ஆயாசம் உடலுக்கில்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்த மான் எனது அம்பினுல் அடிபட்டு விழவில்லை என்ற வருத்தத்தை விட, நான் களைத்து, உற்சாகமிழந்து திரும்பிவர முடிவு செய்தபோது வழியில் சற்று தூரத்தில் அது இறந்து கிடந்ததுதான் என்னைப் பாதித்தது.

சுந்தரி :—வேறு யாருடைய அம்பினாலாவது அது அடி பட்டு வீழ்ந்திருந்ததா ?

நந்தன் :—இல்லை. வேறு யாருடைய அம்பினாலும் அது அடிபட்டு விழவில்லை. மிதமிஞ்சிய களைப்பினால் அது இறந்துவிட்டது. அம்புகளினால் துளைக்கப் பட்ட மானைப் பார்க்கும்போது என்றுமே எவ்வித உணர்ச்சியும் ஏற்பட்டதில்லை. அப்படியே ஏற்பட் டாலும் அதை அடைந்துவிட்டோம் என்ற இலே சான பெருமிதம்தான் ஏற்படும். ஆனால் அம்பினால் அடிபட்டு விழாது மிதமிஞ்சிய களைப்பினால் வீழ்ந்து இறந்து கிடந்த மானைக் கண்டதுமே, என் மனம் இன்னதென்றறியாத உணர்ச்சியினால் தாக்கப்பட்டு விட்டது. இதனால்தான் இத்தனை களைப்பாக, மன முடைந்தவனாக நான் உணருகிறேன்.

சுந்தரி :—இன்னும் கொஞ்சம் மதுவருந்துங்கள். மன நிலை சீராகிவிடும்.

நந்தன் :—இல்லை...இது போதும். இனி வேண்டாம். (எழுந்து உலவியவாறே) இறந்துவிட்ட மான்கூட இத்தனை உயிர்ப் பொலிவுடன் இருக்க முடியுமென நான் நினைத்தே பார்த்ததில்லை. கரத்தினால் மெல்லத் தீண்டினாலே, அது அச்சத்தினால் விதிர் விதிர்த்து, உடல் நடுங்க, துள்ளி எழுந்தோடிவிடுமோ எனத் தோன்றியது......வேட்டைக்காரர்கள் அதை இங்கு எடுத்து வரத்தான் விரும்பினார்கள். ஆனால் நான் தடுத்துவிட்டேன். அது அந்த இடத்திலேயே, அப்படியே, உயிரற்று, உயிர்ப் பொலிவுடனிருக் கட்டும் எனக் கூறிவிட்டேன். (சட்டென சுந்தரி தன்னையே நோக்குவதை உணர்ந்தவனாய்) இந்த நேரத்தில் நான் இதையெல்லாம் கூறிக்கொண்டிருக்கக் கூடா தென்று எனக்குத் தெரியும். உனக்குப் பிடிக்காத விஷயத்தைப்பற்றி இன்றிரவு மட்டுமாவது எதுவும்

கூறக்கூடாது என்று வரும்பொழுது நினைத்துக் கொண்டுதான் வந்தேன். (வலிய வரவழைத்துக்கொண்ட புன்னகையுடன்) ஓ...இதற்குமுன் கூட பலமுறை நான் சந்தர்ப்பத்தை அறியாமல் பேசியிருக்கிறேன்...நீயும் அடிக்கடி இதை எனக்குச் சுட்டிக் காட்டியிருக்கிருய்.

சுந்தரி :—நல்லது......இதுவாவது தங்களுக்கு கவனமிருக்கிறதே. (தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு) அதிதிகள் வரும்வரை தாங்கள் சயன அறையில் இளைப்பாற விரும்பவில்லையா ?

நந்தன் :—அதிதிகள் வரும் வரையிலா ?......இல்லை...... (இயல்பாக, சகஜமாக இருக்க முயற்சித்தவாறே) நீதான் முதலிலேயே இன்றிரவு முழுவதும் ஓய்வே இருக்காது என்று கூறினாய் அல்லவா ?

சுந்தரி :—கூறியிருந்தேன். ஆனால் அப்பொழுது நான் நினைக்கவில்லையே, இப்படி...

நந்தன் :—(கனிவுடன்) நீ கூறும் வார்த்தைகள் எனக்கு எத்தனை மகத்துவமுள்ளதாகத் தோன்றுகிறதோ, அத்தனை உனக்கில்லை...இதை நீ அறியமாட்டாய்.

சுந்தரி :—(நந்தனின் கரத்தைப் பற்றித் தன் கரத்தோடு இணைத்தவாறே தன் பார்வையினால் அவனைத் தன்பால் ஈர்க்க முயன்றவளாய்) அறியமாட்டேனா ?

நந்தன் :—அறிந்திருந்தால் அப்படிக் கூறி இருப்பாயா ?

சுந்தரி :—(அவன்பால் சற்றே குனிந்து) இல்லையா !

(வலதுபுறமிருந்து சசாங்கன் வருகிறான். கதவருகில் நின்று லேசாக இருமுகிறான்.)

(குரலில் எஜமானிக்குரிய தோரணையை வரவழைத்துக் கொண்டு)

சசாங்கனா ! வா......இப்படி !

சசாங்கன் :—(வணங்கியபின்) தேவியாரின் உத்தரவின்படி நான்......

சுந்தரி :—ஆம். நான்தான் உன்னைக் கூப்பிட்டனுப்பினேன். மலர் வனத்திலே விருந்தினர்கள் அமர எங்கெங்கே ஆசனங்களை எப்படி அமைக்க வேண்டுமென்பதைப் பற்றிக் கூற விரும்பினேன். ஒவ்வொரு மரத்தினடியிலும், நாலைந்து பேர் தனித் தனியாக அமருவதற்கேற்ப ஆசனங்களை அமைத்து விடு. எல்லோரும் ஒரே இடத்தில் கூட்டமாகக் குவிந்து விடுவதில் எனக்கு விருப்பமில்லை.

நந்தன் :— (அவளைத் தடுக்க விரும்புவன்போல்) இதைக் கேளேன்......

சுந்தரி :—(அவன் கூறுவதை கவனியாது) மதுக்கிண்ணங்கள் எத்தனை இருக்கின்றனவோ அவற்றையெல்லாம்... இதோ பார்! இன்றைக்கெனப் பிரத்யேகமாக மது வகைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன அல்லவா?

சசாங்கன் :—ஆம் தேவி! ஒரு சில நூதனமான மதுக் கலவைகள் இன்றுதான் இம் மாளிகையில் முதன் முறையாக வழங்கப்படும்.

நந்தன் :—(மீண்டும் அதே முயற்சியில்) சுந்தரி! உன்னிடம் நானொன்று சொல்ல விரும்புகிறேன்.

சுந்தரி :—(சசாங்கனிடம் முன்போலவே பேசுகிறாள்) மதுக் கிண்ணங்கள் யாவற்றையுமே, தாமரைப் பொய்கையினருகேயுள்ள மேடையின்மீது வைத்துவிடு. ஒரு சில ஆசனங்களை அங்குமிங்குமாய் பரவலாகப் போட்டுவிடு. ஏற்பாடுகளெல்லாம் முடிந்தபின் என்னிடம் வந்து சொல்.

(சசாங்கன் தலை அசைத்துவிட்டு வலதுபுறம் செல்லுகின்றான். சுந்தரி நந்தனின் பக்கம் திரும்புகிறாள்.)

தாங்கள் ஏதோ சொன்னீர்களே!

நந்தன் :—(சற்றே தடுமாறிய குரலில்) ஆமாம்...ஆமாம்... இல்லை...அப்படியொன்றும் முக்கியமான விஷயமில்லை. அதாவது.. இந்த ஏற்பாடுகளையெல்லாம், மலர் வனத்தில் அல்லாது அறைக்குள்ளே செய்தாலென்ன என்றே கூற நினைத்தேன்.

சுந்தரி :—இங்கே இந்த அறைக்குள்ளா? விருந்தினர்களுக்கெல்லாம் இந்த அறையில் இடமிருக்குமென நினைக்கிறீர்களா?

நந்தன் :—(மதுபானக் கூடத்தை நோக்கிச் சென்றவாறு) அவ்வளவு இடமில்லைதான். இருந்தாலும்......

சுந்தரி :—கொஞ்சம் மது அருந்துகிறீர்களா? நான் கூறியபொழுது......

நந்தன் :—(சமாளித்துக்கொண்டு)...இல்லை...நான் அதற்காக இங்கு வரவில்லை...

(திரும்பி சுந்தரியை நோக்கி வருகிறான்.)

சுந்தரி :—(அவனை உற்று நோக்கியவளாய்) ஏற்பாடுகளைப் பற்றித் தாங்கள் ஏதோ கூறினீர்களே!

நந்தன் :—ஆமாம்...நான் கூற நினைத்தது...ஒருக்கால் நாம் எதிர்பார்ப்பதுபோல் விருந்தினர்கள் வராமலிருந்தாலும் இருக்கலாம் அல்லவா?

சுந்தரி :—அதெப்படி நடக்கும்? கபிலவஸ்துவின் எந்தப் பிரபுவாவது இம் மாளிகையின் அழைப்பை இன்றுவரை புறக்கணித்தது உண்டா? இதைக் தனக்களிக்கப்பட்ட கௌரவமாக அல்லவா கருதுவார்கள்? குறித்த வேளையில் யாரேனும் வராமலிருந்ததுண்டா? ஊரிலில்லா விட்டாலோ, உடல்நலமில்லாவிட்டாலோ வராமலிருப்பது என்பது வேறு விஷயம்.

நந்தன் :—இதே காரணங்களைப் பற்றித்தான் நானும் யோசித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுதுதான்

வரும் வழியில், சோமதத்தன், விசாகதேவனின் இல்லங்களுக்குப் போய்விட்டு வந்தேன்.

சுந்தரி :—(சற்றே ஆவேசத்துடன்) நீங்கள்? நீங்களே அவர்களின் இல்லங்களுக்குப் போய் வந்தீர்களா? ஏன்? எதற்காக? நீங்களே வலியச்சென்று அவர்களை வற்புறுத்தி அழைப்பதென்பது உங்களுடைய தகுதிக்கு ஏற்ற செயல்தானு?

நந்தன் :—இதற்காகவென்று நான் அங்கே செல்லவில்லை. யசோதரா தேவியாரைக் காணச் சென்றிருந்தேன்.

சுந்தரி :—யசோதரா தேவியாரையா? எதற்காக?

நந்தன் :—அவர் சொல்லி அனுப்பி இருந்தார்.

சுந்தரி :—சொல்லி அனுப்பினுரா? எதற்காக?

நந்தன் :—(சஞ்சலத்துடன்) நாளையிலிருந்து அவர் அரண்மனையில் தங்கப்போவதில்லை. வெளியே பிக்ஷுணிகளின் மடத்திற்குப் போய்விடப் போகிருராம். இதற்காக...

சுந்தரி :—இதற்காக?

நந்தன் :—இன்று, அரண்மனையிலுள்ள தன் உறவினர்களையெல்லாம் கடைசி முறையாகச் சந்திக்க விரும்பினுர்.

சுந்தரி :—ஓகோ! அப்படியென்ருல் பந்த பாசங்கள் இன்னும் அவரை விடவில்லை போலும்...

நந்தன் :—இது பந்தபாசங்களைப்பற்றிய விஷயமில்லை. .....ஒருக்கால் அப்படியுமிருக்கலாம்......உன்னையும் அழைத்திருந்தார்.

சுந்தரி :—நீங்கள் சென்று என் சார்பில் மன்னிப்புக் கோரினீர்கள் போலும்.

நந்தன் :—இல்லை......நான் சொன்னேன், இன்று நீ விருந்தினர்களை அழைத்திருக்கிருய், அதனுல்......

சுந்தரி :—(அருகே நெருங்கி) விருந்தினர்களை அழைத்திருக்கிறேன் என்றுமட்டும்தான் கூறினீர்களா! காம விழாவைப்பற்றி ஒன்றுமே கூறவில்லையா?

நந்தன் :—கூறவேண்டிய அவசியமிருக்கவில்லை. அவருக்கு இது தெரியும்.

சுந்தரி :—தெரியுமா? நான் நினைத்தேன். அவருக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்....அவர் என்ன கூறினர்?

நந்தன் :—ஏற்பாடுகளை கவனிக்கவேண்டிய மும்முரத்தில் உன்னுல் வர இயலாமல் போய்விட்டாலும் தனது ஆசியை என் மூலமாக உனக்கனுப்பியுள்ளார்.

சுந்தரி :—(ஊஞ்சலை நோக்கிச் சென்றவாறே) ஆத்ம வஞ்சனைக்கும் ஒரு எல்லையுண்டு. (ஊஞ்சலில் அமர்ந்துகொள்கிருள்.) அதுவும் இன்று தனது ஆசியை வழங்குகிருர்...... அதிலும் எனக்கு! அவர் மனத்தில் என்ன இருக்கிறதென்பது எனக்கு நன்ருகத் தெரியும்.

நந்தன் :—(மன வருத்தத்துடன்) இதோ பார் சுந்தரி! நீ இப்படி...உன் வாயிலிருந்து......

(இடதுபுறமிருந்து சுவேதாங்கன் வருகிருன்.)

சுவேதாங்கன் :—தேவி! தங்களுடைய உத்தரவை நிறைவேற்றியாகிவிட்டது. சியாமாங்கனை நான்...

சுந்தரி :—(இடை மறித்து) சியாமாங்கனின் குற்றத்தை நான் மன்னித்துவிட்டேன். உன்மத்தம் கொண்ட மன நிலையில்தான் அவன் இவ்விதம் செய்திருப்பான் என அலகா நிச்சயமாக நினைக்கிருள். இதனுல், இக்கணமே சென்று அவனைத் திரும்ப அழைத்துவந்து, அவனுக்குத் தேவையான உபசரணைகள் கவனிக்கப்பட வேண்டுமென நான் உத்தரவிடுகின்றேன். அவன் குணமடையும் மட்டும் இங்கேயே இருக்கட்டும். அலகா அவனை கவனித்துக்கொள்ளுவாள்.

சுவேதாங்கன் :—(சற்றே அதிர்ச்சியுடன்) இங்கே அழைத்து வருவதா ?......

சுந்தரி :—மாளிகையின் உட்பகுதியில் பணியாட்கள் தங்கும் விடுதி இருக்கின்றதல்லவா? அதிலேயே ஒரு அறையில் அவன் தங்குவதற்கான ஏற்பாடு களைச் செய்தால் அலகா அவனைக் கவனித்துக் கொள்ள வசதியாக இருக்கும்.

சுவேதாங்கன் :—நான் சொல்ல விரும்புவது...மன்னிக் கவும் தேவியாரே! இன்றிரவு மட்டும்......

சுந்தரி :—(பதட்டமடைந்த குரலில்) நான் கொடுத்த உத் தரவை நிறைவேற்று...நீ போகலாம்.

(தலைகுனிந்தவாறே சுவேதாங்கன் இடதுபுறமாகச் செல்லு கின்றான். நந்தன் ஆழ்ந்த தீவிர நோக்குடன் அவளை நோக்கியவாறே அருகில் வருகிறான்.)

நந்தன் :—சியாமாங்கனுக்கு என்ன நேர்ந்துவிட்டது? அவனுடைய குற்றத்தை......என்று ஏதோ கூறிக் கொண்டிருந்தாயே?

சுந்தரி :—தயவு செய்து அதை எனக்கு மீண்டும் நினைவு படுத்தாதீர்கள். நான் அதை மறக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறேன்

நந்தன் :—அவன் அப்படி என்ன செய்துவிட்டான்? அலகா அவனை உன்மத்தம் கொண்டவனாக நினைக்க வும்......நீ அதற்காக...அவனை...

சுந்தரி :—(ஆத்திரத்துடன்) ஏதோ செய்தான்......அதற்கு தண்டிப்பது அவசியமென நான் கருதினேன். இப்பொழுது நான் அவனை மன்னித்தாகிவிட்டது. விஷயம் இத்துடன் முடிந்துவிட்டதல்லவா ?

நந்தன் :—ஒரு விஷயம் இத்துடன் முடிந்துவிட்டது. ஆனால் அவனது உன்மத்தம் பற்றிய விஷயம் ?

சுந்தரி :— அதற்குரிய ஏற்பாடுகளையும் உங்கள் எதிரி லேயே செய்து முடித்துவிட்டேன். இல்லையா ?

நந்தன் :—நீ சுவேதாங்கனுக்குப் பிறப்பித்த உத்தரவுகள் என் காதில் வீழ்ந்தன. அதனால்தான் கேட்கிறேன். உனக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்... சியாமாங்கனொருவன்தான் இந்த மாளிகையிலுள்ள பணியாட்களில்......

சுந்தரி :—(ஊஞ்சலை விட்டெழுந்து) தங்களது விசேஷமான அன்பிற்குப் பாத்திரமானவன். அவனுடன் உரையாடுவதில் அலாதியான இன்பம் காண்கிறீர்கள். அவனது பேச்சில் தங்களது உள்மனத்தின் உணர்வுகள் பிரதிபலிப்பதுபோல் உணருகிறீர்கள். எனக்குத் தெரியும்.

நந்தன் :—எப்பொழுதும் அவனிடம் ஏனிப்படி கடுமையாக நடந்துகொள்கிறாயோ தெரியவில்லை. என்னைப் பொறுத்த வரையில்...நான் சியாமாங்கனை...

சுந்தரி :—சியாமாங்கன்! சியாமாங்கன்! சியாமாங்கன்! அவனை விட்டால் பேசுவதற்கு வேறு விஷயமே இல்லையா?

(நந்தன் மௌனமாய் ஒருகணம் அவளை நோக்குகின்றான். பின்னர் மெல்ல அருகே வந்து அவளது தோளைப் பற்றுகின்றான்.)

நந்தன் :—தவறாக எடுத்துக்கொண்டு விட்டாயா?

சுந்தரி :—இந்தச் சின்ன விஷயங்களையெல்லாம் நான் பொருட்படுத்துவதே இல்லை.

நந்தன் :—பின் ஏனிப்படி?

சுந்தரி :—எப்படி?

நந்தன் :—(அவள் முகத்தையே இமையாது நோக்கியவனாய்) அதை என்னால்தான் கூற முடியும். உன் முகத்திற்கு நான் தான் கண்ணாடி.

சுந்தரி :—(தன் முகத்தை வேறுபுறம் திருப்பியவளாய்) உஷ்......... விடுங்களேன்......எனக்கு இதெல்லாம் பிடிக்கவே யில்லை.

நந்தன் :—ஆனுல்...இது நான் கூறியதல்ல......நீயே கூறிய வார்த்தைகள்தான். உனக்கு நினைவில்லையா சுந்தரி!

சுந்தரி :—எனக்கு இச்சமயம் எதுவுமே நினைவில்லை.

நந்தன் :—நீ இன்று காம விழாவிற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிருய் என்பதுகூடவா நினைவில்லை? உனது விருந்தினர்களில் ஒரு சிலர் இப்பொழுது வரப்போகிருர்கள் என்பதுகூட...?

சுந்தரி :—ஒரு சிலரா? அழைத்திருப்பவர்கள் யாவரும் வரமாட்டார்களென்பதை அடிக்கடி ஏன் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்? (தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முயன்றவளாய்) நீங்களாகவே தங்களை அழைக்க வந்திருப்பதைக் கண்டு, சோமதேவனும் விசாகதத்தனும் வெட்கப்படவில்லையா?

நந்தன் :—(பார்வையை வேறுபுறம் திருப்பி, வேறு எதிலோ மும்முரமாய் ஈடுபட்டிருப்பவன்போல் பாவித்தவாறு) ஆம்...அதுவும் தாங்கள் வர இயலாமலிருக்கிறதே என்பதற்காக.

சுந்தரி :—வர இயலாதா? ஏன்?

நந்தன் :—இன்று காலையிலேயே தாங்கள் வர இயலாமலிருப்பதைத் தெரிவித்து மன்னிக்கும்படி சேதி அனுப்பி இருந்தார்கள். ஆனுல் அதை அப்பொழுதே உன்னிடம் தெரிவிப்பது எனக்கு உசிதமாகத் தோன்றவில்லை. இது அவசியமில்லை என்றும் நினைத்தேன். நான் வேட்டையிலிருந்து திரும்பும் சமயம் அவர்களையும் உடன் அழைத்து வந்துவிடலாமென்று நினைத்தேன்.

சுந்தரி :—தாங்கள் இதை என்னிடம் கூறியிருந்தால், தங்களை யாருடைய இல்லத்திற்கும் செல்ல அனுமதித்திருக்கமாட்டேன். நான் நடத்தும் விழாவிற்கு, நான் கேட்டுக்கொண்டதினுல் யாரேனும் வருவார்களேயானுல் அவர்கள் வராமலிருப்பதே

நல்லது. அதுவும் இரண்டு பேர் வராமலிருந்து விட்டால் அதனால் என்ன நேர்ந்துவிடப் போகிறது?

(வெளியே காலடி ஓசை கேட்கிறது.)

மக்கள் வர ஆரம்பித்துவிட்டார்கள் போலிருக்கிறது.

(திரும்பி முன் வாசல் கதவு வரை செல்லுகின்றாள். மைத்தி ரேயன் உள்ளே நுழைகின்றான்.)

(வலிய வரவழைத்துக் கொண்ட உற்சாகத்துடன்) ஆரிய மைத்திரேயர்... நம் முதல் அதிதி.

மைத்திரேயன் :—(கம்பீரமான பாவத்துடன் முன்னே நடந்து வந்தவாறே) —...ஆம்...முதல் அதிதி...ஒருக்கால் (நந்தனை நோக்கியவாறு) முதலும் கடைசியுமான ஒரே ஒரு அதிதியாகவுமிருக்கலாம்.

(சுந்தரி இதைச் செவியுற்றதும் நின்ற இடத்திலேயே அசைவற்றுப் போகிறாள்.)

நந்தன் :—(தடுமாற்றத்துடன்) ஒரே ஒரு அதிதியா? அப்படி யானால் மற்றவர்கள்......?

மைத்திரேயன் :—யார் யாரைச் சந்தித்தேனோ அவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் வர இயலாமலிருப்பது குறித்து மன்னிப்புக் கோரினார்கள். ரவிதத்தன், அக்கினிவர்மன், நீலவர்மன், ஈஷானன், ஷைவால், ஏன்! எல்லோருமேதான்.

நந்தன் :—பத்மகாந்தன், ருத்திரதேவன், லோகிதாஸன், சாலிமித்ரன்...?

மைத்திரேயன் :—லோகிதாஸனையும், சாலிமித்ரனையும் நான் சந்திக்கவில்லை. பத்மகாந்தனும், ருத்திர தேவனும் தாங்கள் வர இயலாமலிருப்பது பற்றி தங்கள் சார்பில் மன்னிப்புக் கோரும்படி என்னிடம் கூறிவிட்டார்கள். இவர்களை யெல்லாம் சந்தித்த பின் வேறெங்கும் செல்ல எனக்கு மனமில்லை.

(இதனிடையே சுந்தரியின் முகத்தில் உள்ளத்து உணர்ச்சிகள் டல்வேறு பாவங்களாகத் தோன்றி மறைகின்றன. முடிவில் தன்னை இனியும் கட்டுப்படுத்திக்கொள்ள இயலாதவளாய் அவள் இரண்டடி முன்னே வருகின்ருள்.)

சுந்தரி :—இவர்களிடமெல்லாம் சென்று கேட்கவேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? இவர்கள் வரமாட்டார்களென, முன்னரே தங்களுக்குத் தெரியுமா ?

மைத்திரேயன் :—(இருவரையும் மாறி மாறிப் பார்த்தவனுய்) இதற்கு பதில் இளவரசர் தான் கூற முடியும்.

(மதுபானங்கள் வைக்கப்பட்டிருக்கும் கூடத்திற்குச் செல்லுகிருன். மீன் வடிவ ஆசனததைத் திறந்து கோப்பையில் மதுவை வார்த்துப் பருகுகிருன். சுந்தரி நந்தனை நோக்கி வருகின்ருள்.)

சுந்தரி :—இவர்களெல்லாம், தாங்கள் வர இயலாதெனச் சேதி அனுப்பி இருந்தார்களா ?

நந்தன் :—(அவளது பார்வையைத் தவிர்த்தவனுய்) எல்லோருமில்லை. ஒரு சிலர் அனுப்பியிருந்தார்கள்.

சுந்தரி :—இதைப்பற்றி என்னிடம் கூறுவதுகூட அவசியமில்லை என்பது தங்கள் கருத்து...... இல்லையா ?

நந்தன் :—உன் உற்சாகத்தைத் தடைப்படுத்த நான் விரும்பவில்லை. நான் நேரில் சென்ருல் ஒருவேளை இவர்களில் பெரும்பாலோர் தங்கள் மனத்தை மாற்றிக் கொள்வார்களென்று நினைத்தேன்.

சுந்தரி :—வற்புறுத்தி அழைத்ததால் வந்தவர்களை நான் முன்னின்று வரவேற்க நேர்ந்திருந்தால்...ஓ... எனக்கு எத்தகைய மதிப்பிருந்திருக்கும் ?...தாங்கள் இது பற்றிக் கூட யோசிக்கவில்லையா ?...நான்... நான்... வந்து...

(வெளியே மீண்டும் காலடி ஓசை கேடகின்றது. நந்தன் தன்னேயுமறியாமல் முன் வாசலினருகே செல்லு கிருன். மதுக்கிண்ணத்தை வாயருகில் கொண்டு சென்ற மைத்திரேயன் பருகாமல் அப்படியே நிற் கின்ருன்.)

நந்தன் :—யாரோ வருகிருர்கள் போலிருக்கிறது.

(வாசல் புறத்திலிருந்து சாளரத்தினருகே செல்லுகிருன். சுந்தரி சஞ்சலமிகுந்த விழிகளுடன் அவனேயே பார்த்த வண்ணமிருக்கிருள்.)

சுந்தரி :—யார் வருகிருர்கள் ?

நந்தன்: —(தலே குனிந்தவாறே சாளரத்தை விட்டு நகர்ந்து வருகிருன்.) அதிதிகள் இல்லே.

சுந்தரி :—பின் யார் ?

நந்தன் :—நம் பணியாட்கள்தான். சுவேதாங்கன், பீஜகுப்தன், நாகதாசன்.

சுந்தரி :—இவர்கள் அவரவர்களுக்கிடப்பட்ட பணிகளேச் செய்யவில்லேயா ?

நந்தன் :—செய்து கொண்டிருக்கிருர்கள். சியாமாங் கனே அழைத்து வந்து கொண்டிருக்கின்றனர். சுவேதாங்கனுக்கு நீதானே இந்த உத்தரவிட்டாய் !

சுந்தரி :—(நிராசையுடன்) ஓ...அந்த உத்தரவா ?

(மைத்திரேயன் நந்தனின் அருகே வருகின்ருன்.)

மைத்திரேயன் :—இன்று முழுவதும் உன்னிடம் சொல்லி விட வேண்டுமென்றுதான் நினேத்தேன். ஆனல் சொல்ல முடியவில்லே. நான் நினேப்பது...காம விழாவை இன்று நடத்தாது, நாளேக்கு ஒத்திப் போட்டாலென்ன ?

சுந்தரி :—(வெகுண்டெழுந்து) ஆர்ய மைத்திரேயரே ! காம விழா உள்ளத்தில் பொங்கி வரும் ஆசைகளின் திருவிழா. என்னுடைய இன்றைய ஆசையை

நாளைக்கு ஒத்திப்போடுவதா?......எதற்காக? என்னுடைய ஆசை, என் அந்தராத்மாவின் ஆசை. என் அகத்தினுள்ளேயே அதற்கு நிறைவு காண முடியும். ஒரு சிலர் நினைப்பதுபோல இதற்கு புறச் சாதனங்களோ, சூழ்நிலையோ அத்தனை முக்கியமில்லை.

நந்தன் :—[அவளை நோக்கி வந்து] இதோ பார் சுந்தரி...... இப்படி நிலைகுலைந்துவிடக் கூடாது.

சுந்தரி :—நான் நிலைகுலைந்துவிடவில்லை. யாருடைய எந்த சூழ்ச்சியும் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது.

நந்தன் :—இதில் சூழ்ச்சி எதுவுமில்லை சுந்தரி...

சுந்தரி :—சூழ்ச்சி இல்லாவிடில் வேறென்ன? [மைத்திரேயனை நோக்கி] இந்த சூழ்ச்சிக்குத் தூண்டுதல் எங்கிருந்து வந்திருக்கிறது என்பதுகூட எனக்கு நன்ருகத் தெரியும்.

(மைத்திரேயன் புண்பட்டவனாய் முதலில் அவளையும் பின்னர் நந்தனையும் நோக்குகின்ருன். பின்னர் மதுக்கோப்பையைப் பருகாமல் அப்படியே வைத்து விடுகிருன். நந்தனின் விழிகள் தாழ்ந்துவிடுகின்றன.)

மைத்திரேயன் :—நான் உத்தரவு பெற்றுக்கொள்கிறேன் இளவரசே! மேலும் இங்கே தாமதித்து தங்களது மனக்கிலேசத்திற்குக் காரணமாக நான் விரும்பவில்லை.

நந்தன் :—(நிலைமையை சமாளிக்க விரும்பியவனாய்) நில்...... மைத்திரேயா! சுந்தரியின் மனச்சஞ்சலத்திற்கு உண்மைக் காரணம்...

சுந்தரி :—(தன் வசமிழந்தவளாய்) என்னுடைய மனச் சஞ்சலத்திற்கு உண்மையான காரணம் நானேதான். என்டைய மனநிலைக்குக் காரணமாகும் உரிமையை

நான் எவருக்கும் அளிக்கவில்லை. ஆரிய மைத்தி ரேயர் செல்ல விரும்பினால் அவரை செல்ல அனுமதி யுங்கள். யார் யாரின் இல்லத்திற்குச் சென்று வந்தாரோ, அங்கெல்லாம் இன்னொரு முறை சென்று, அவர்களிடமெல்லாம் எனது மாளிகைக்கு வர அவர்கள் இன்னுமொரு நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம் எனக் கூறட்டும். அவர் களைப் பொறுத்தவரை அந்த 'இன்னொருநாள்' ......வராது. இனி என்றுமே வராது.

(சடாலென இடதுபுறமாகச் செல்லுகிறாள்.)

நந்தன் :—நில்...சுந்தரி...இதைக் கேள்...

(இரண்டொரு அடிகள் அவள் பின்னால் சென்று, பின்னர் நிராசையுடன் தீபப்பதுமையினருகே திரும்பிவந்து நிற்கிறான்.)

(முணுமுணுக்கிறான்)—நீ...கேட்கவே மாட்டாய். எப் பொழுதுமே கேட்கமாட்டாய்.

(விழிகளை மூடியவாறு நிற்கிறான். மைத்திரேயன் மெல்ல வந்து அவனருகே நிற்கிறான்)

மைத்திரேயன் :—என்னை மன்னியுங்கள்.

நந்தன் :—மைத்திரேயா !......!!

மைத்திரேயன் :—எனக்குப் புரிகிறது இளவரசே...... நான் வருகிறேன்......

(துயரத்துடன் தலை அசைத்தவாறே எதிர்ப்புறமுள்ள வாசலின் வழியாகச் செல்லுகின்றான். நந்தனின் விழிகள் தீபமேற்றிய ஆண் பதுமையின் மீது நிலைத் திருக்கின்றன.)

நந்தன்—(லேசான பெருமூச்சுடன்) புரியாது மைத்திரேயா! கொஞ்சம்கூட நீ புரிந்துகொள்ள முடியாது. என்னாலேயே புரிந்துகொள்ள இயலவில்லையே, நீ எப்படி புரிந்துகொள்ள முடியும் ?

(ஆயாசத்துடன் மேடையின் மீதமர்ந்து கொள்கின்றான். ஒளி மெல்லமெல்ல மங்குகின்றது)

அங்கம் 2

(அதே அறை. பின்னிரவு சுந்தரி ஊஞ்சலில் உறங்குகின்றாள். நந்தன் நிம்மதியற்றவனாய் அறையில் உலவுகின்றான். இருளில் அவனுருவம் இங்குமங்கும் அலையும் ஒரு நிழலாய் வரிவடிவமாய்த் தெரிகின்றது.)

(திரைக்குப் பின்னிருந்து சியாமாங்கனின் உன்மத்தப் பிரலாபம் கேட்கின்றது. நந்தன் பேசும்பொழுது அக்குரல் தாழ்ந்தொலிக்கின்றது. சில சமயம் இருவர் பேசுவதும், ஒன்றையொன்று மீறி, இரண்டும் கலந்தொலிக்கின்றது)

சியாமாங்கன் :— (திரைக்குப் பின்) நானெங்கே இருக்கிறேன்? ஏனிங்கே இருக்கிறேன்? என் குரலொலி, நீரிலே எழும்பும் அலை ஓசை...யாவுமே சக்கிரவட்டமாக, சுழலாகச் சுழல்கின்றதே!...ஒரு பருந்து... ஒரு பருந்து யாவற்றையுமே வெட்டெனப் பறித்துக் கொண்டு போகிறதே! அதை நிறுத்துங்கள்!...... நிறுத்துங்கள்.

நந்தன் :— நள்ளிரவிலிருந்து இக்குரல் இன்னமும் ஓயவில்லை. இது சற்று ஓய்ந்தால் நானும் கண்ணயரலாமென நினைத்தேன். இதுவும் ஓயவில்லை, நானும் உறங்கவில்லை. இக்குரல் இவ்விரவை மட்டுமல்ல, எனது சுயப்பிரக்ஞையும் காவல் காத்துக் கொண்டிருக்கிறது.

சியாமாங்கன் :— (திரைக்குப்பின்) பருந்து என்னை தூக்கிக் கொண்டு போகிறதே......எங்கே போகிறதோ தெரியவில்லை. இதைத் தடுத்து நிறுத்துங்கள்...... வேண்டாம். இது பருந்து அல்ல......இதுவொரு நிழல். இருண்ட நிலவறையில் அலையும் நிழல்...... தன்னந்தனியாக......

நந்தன் :—(கணநேரம் சுந்தரியின் ஊஞ்சலினருகே நிற்கின்றான்.) உன் உறக்கம் கலையாதது நல்லதுதான். நீ விழித்துக் கொண்டால் இந்த ஓலத்தை உன்னால் ஒருகணம் கூட தாங்கிக்கொள்ள முடியாது. (அவளிடமிருந்து விலகிவந்தவாறே) எப்படியேனும் இது நிறுத்திவிடப் படவேண்டும் என்பதைத்தான் நீ விரும்புவாய். ஆனால் எந்த உத்தரவினால் இதை நிறுத்துவது?

சியாமாங்கன் :—[திரைக்குப் பின்னாலிருந்து வரும் குரல்] இந்தப் பாதாளக் கிணற்றில் தண்ணீர் இல்லை. இதன் நீரெல்லாம் எங்கே போயிற்று? யார் எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்?......தண்ணீர்...... எனக்குத் தண்ணீர் தாருங்கள்.

அலகா :—[திரைக்கப்பாலிருந்து] இதோ இருக்கிறது தண்ணீர். கொஞ்சம் பருகுங்கள்.

சியாமாங்கன் :—எங்கேயிருக்கிறது தண்ணீர்?...... [மூர்ச்சையடையும் ஒலி] இல்லை......இது தண்ணீர் அல்ல... இது தண்ணீர் அல்ல.

நந்தன் :—[வலதுபுறமுள்ள வாயிலினருகே சென்று நின்றவாறு] அலகா......

அலகா :—[திரைக்குப் பின்னிருந்து] இளவரசே......

நந்தன் :—இங்கே அறையில் இருளாக இருக்கின்றது. தீவர்த்தியைக் கொணர்ந்து தீபங்களை ஏற்று.

அலகா : இதோ வருகிறேன் இளவரசே...

நந்தன் :—[தனக்குள்ளே] குரல் ஓய்ந்துவிட்டது. மூர்ச்சையாகிவிட்டான் போல் தோன்றுகிறது.

[அலகா தீவர்த்தியை எடுத்து வருகிறாள். அவள் தீபப் பதுமைகளை நோக்கிச் செல்ல, நந்தன் தீவர்த்தியை வாங்கிக்கொள்ளத் தன் கரத்தை நீட்டுகின்றான்.]

வேண்டாம். இங்கே கொடு.

அலகா :—இளவரசே! நான் தீபங்களை ஏற்றுகின்றேன்.

நந்தன் :—வேண்டாம். என்னிடம் அளித்துவிடு. [தீவர்த்தியை கரத்தில் வாங்கியவாறு] இரவு முழுவதும் நீ உறங்கவேயில்லை போலிருக்கிறதே! சியாமாங்கன் பிரலாபித்துக்கொண்டே இருந்தானே...

அலகா :—அப்படியென்றால்......தாங்களும் இரவு முழுவதும்...

நந்தன் :—எனக்கு உறக்கம் வரவில்லை...நல்லது... நீ போகலாம். சியாமாங்கனுக்கு உன் தேவை இருக்கும்.

அலகா :—இப்பொழுது அவர் மூர்ச்சையுற்றிருக்கிறார். தேவியார் அவர்கள்...

நந்தன் :—இப்பொழுது அவள் உறங்கிக்கொண்டிருக்கிறாள். நெடுநேரத்திற்குப் பின்தான் அவளுக்கு உறக்கம் வந்தது. அதனால் கண் விழிக்கவும் நேரமாகலாம். நீ போகலாம்.........சியாமாங்கனுக்கு மூர்ச்சை தெளிந்ததும் நீ தேவைப்படுவாய்.

[சிரம் அசைத்துவிட்டு அலகா செல்லுகின்றாள். நந்தன் வலதுபுறமுள்ள தீபங்களை ஏற்றுகிறான். பின்னர் தீவர்த்தியை அணைத்து தீபப் பதுமையின் காலடியில் வைக்கிறான். பிரகாசம் ஏற்பட்டதால் அறையிலுள்ள பொருள்கள் தெளிவாகத் தெரிகின்றன. ஊஞ்சலில் விரித்திருந்த விரிப்புகள் கலைந்து கிடக்கின்றன. இரண்டொரு திண்டுகள் நழுவி விழுந்திருக்கின்றன. ஊஞ்சலில் ஒரு கோணத்தில் திண்டில் முதுகைச் சாய்த்த நிலையில் சுந்தரி சயனித்திருக்கின்றாள். அவளது கால்கள் இடதுபுறவாயிலைப் பார்த்த நிலையில் உள்ளன. மேடையிலும், அதைச் சுற்றிலும் மலர்களும், அறுத்தெறிந்த மாலைகளும் சிதறிக் கிடக்கின்றன. மதுக்கிண்ணமொன்று தரையிலே கவிழ்ந்து கிடக்கின்றது. சுற்றுமுற்றும் உள்ள பொருள்கள் ஏதோ ஆவேசத்தில் வீசி எறியப்பட்டவை போல் தோன்றுகின்றன. அறுபட்டுக் கிடந்ததொரு மாலையைக் கையிலெடுத்து, விரல்களில் கோத்துப் பிணைத்தவாறே]

நந்தன் :—எதுவும் நிற்பதில்லை. நடந்து விடுகிறது. வியாகூலமும் பரபரப்பும்கூட, அது என்னதென்று தெரியாதவரைதான். [சுந்தரியைப் பார்க்கின்றான்.] உறங்கும்முன் இவள் மனத்தில்தான் எத்தனை பதட்டம்! எது எங்கே வீழ்ந்தது, எது உடைந்து சிதறியது என்பதை இவள் சற்றும் பொருட்படுத்தவேயில்லையே!...ஓ!......அக்காட்சிதான் எப்படி இருந்தது! எனக்குத் தோன்றியது...ஆனால் அவளது பதட்டத்திற்கும், ஆத்திரத்திற்கும் காரணமில்லாமலில்லையே. முதலில் விழாவின் ஏற்பாடுகளைக் கவனிக்கும் பரபரப்பு...பின்னர் களைப்பு...முடிவில் அழைத்தவர்கள் எவரும் வராமல் போனதால் ஏற்பட்ட நிராசை. ஆனால் சங்கடமான இந்நிலையைத் தவிர்ப்பதற்காக நான் முயற்சித்தேன் என்பதையும் அவள் சற்றுவது உணர்ந்திருக்கவேண்டும்...உன்மத்தம் கொண்ட மன நிலைகளில் உணர்வின் இழைகளைத் தகர்த்தெறிந்து புயலை எழுப்புவதா? அல்லது கொந்தளிப்பைத் தோற்றுவிப்பதா? எது பயங்கரமானதென்று கூற முடியாது. [மீண்டும் அவளை உற்று நோக்கிய வண்ணம்] உண்மையில் சிற்சில சமயங்களில் மனத்தில் எத்தகைய துயரம் மண்டிவிடுகின்றது! [இலேசான பெருமூச்சுடன்] ஆனால் உன் கருவிழிகளைச் சந்தித்தாலே, துயரத்தின் மூட்டம் எங்கேயோ மாயமாய் விலகிவிடுகின்றதே!......ஒருக்கால் இன்னொருவிதமான உன்மத்தம் என்னுள்ளே இருக்கின்றதோ? ஏதோ ஒன்று என்னுள்ளே மண்டலமிட்டிருக்கும் சர்ப்பம்போல் எனது உணர்வுகளைச் சுற்றி வளையமிட்டு, நான் என்னிலிருந்தே மீள முடியாமல் செய்கின்றது. நான் அதிலிருந்து விடுபடவே விரும்புகிறேன்...ஆனால் உண்மையிலேயே நான் விடுபட்டுவிட விரும்புகிறேனா? நான் என்ன விரும்புகிறேன் என்பதே மனதிற்கு ஏன் தெளி

வாகமாட்டேன் என்கிறது? [மீண்டும் சுந்தரியைப் பார்க்கிறான்.] நீ சீற்றம் கொண்டிருந்தபோது...... எத்தனை உக்ரமாக, கடுமையாக, தீவிரமாகக் காட்சி அளித்தாய்?......இப்பொழுதோ உறக்கத்தில் நீ எத்தனை மென்மையுடன், மாசற்றவளாய், கள்ளம் கபடமின்றி நிராதவராய்க் காட்சி தருகிறாய்? நேற்று நான் வனத்தினிடையே விட்டுவிட்டு வந்தேனே...அந்த மான் போலல்லவோ தோன்றுகிறாய்! எங்களுக்குப் போக்கு காட்டி, அது விரைந்தோடும்போது...அதுதான் எத்தனை துடிப்புடன், ஜீவனுடன் இருந்தது...ஆனால்...அதன் பின்...

[கண நேரம் விழிகளை மூடித் தன்னை சுதாரித்துக்கொள்ள முயற்சிக்கின்றான். லேசாகக் கொட்டாவி விட்டவண்ணம் சுந்தரி கண்விழிக்கின்றாள்.]

சுந்தரி :—தாங்கள் இன்னுமா இங்கிருக்கிறீர்கள்?... இன்னும் பொழுது புலரவில்லையா? [எழுந்திருக்க முயல்கின்றாள்.]

நந்தன் :—இல்லை. ஏன் எழுந்திருக்கின்றாய்?...... படுத்துக்கொள்.

[சுந்தரி இரண்டொரு திண்டுகளின்மீது சாய்ந்த நிலையில் மெல்ல விழிகளைத் திறக்கின்றாள். அவளது பார்வை நாற்புரமும் சுழலுகிறது.]

சுந்தரி :—இந்த தீபங்கள் இரவு முழுவதும் எரிந்து கொண்டா இருந்தன? அவற்றை ஏன் அணைக்கவில்லை?

நந்தன் :—இல்லை......இப்பொழுதுதான் நான் ஏற்றினேன்.

சுந்தரி :—நீங்கள் ஏற்றினீர்களா? ஏன்? பணியாட்கள் எங்கே போய்விட்டனர்?

நந்தன் :—இவ்வறையின் அலங்கோலத்தை யாரும் பார்ப்பதை நான் விரும்பவில்லை.

சுந்தரி :—நீங்கள் உறங்கவில்லையா ?

நந்தன் :—முயற்சித்தேன். முடியவில்லை.

[அவளருகே வருகின்றான். சுந்தரி அவனைத் தன் கரங்களினால் பற்றி இழுத்து தன்னருகே அமர்த்திக் கொள்ளுகிறாள்.]

சுந்தரி :—என்மீது தங்கள் உள்ளத்தில் கோபமிருந்ததா ?

நந்தன் :—கோபமா ? உன் மீதா ? என்னுள்ளத்திலா ? சுந்தரி ! உன்னால் எப்படி அவ்வாறு நினைக்க முடிகிறது ?

சுந்தரி :—சில சமயம் அவ்வாறு நினைப்பதை நான் விரும்புகிறேன். [திண்டை அகற்றிவிட்டு அவன்மீது சாய்ந்து கொண்டு]—தாங்கள் என்மீது ஏன் கோபம் கொள்வதில்லை ? [அவனது கேசத்தை வருடியவாறு] உங்களுக்கு அதற்கு எத்தனை காரணங்கள்...எத்தனை முறைகள் இருக்கவில்லை......இருந்தாலும்...

நந்தன் :—இதையெல்லாம் அனுசரித்துக் கொண்டு போவதுதான் சிறந்த வழியென நான் நினைக்கிறேன் ...[மெல்லத் தன்னை விடுவித்துக்கொண்டு எழுந்திருக்கிறான்.] இவையெல்லாம் தரையில் இப்படித் தாறுமாறாய் கிடப்பதைப் பணியாட்கள் பார்த்தால்......

சுந்தரி :—பார்த்தாலென்ன ? நமது அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி ஏதும் கூற அவர்களுக்கு உரிமையில்லை.

நந்தன் :—[இறைந்து கிடக்கும் பொருள்களை எடுத்து அதனதன் இடத்தில் வைத்தவாறே] கூறுவதற்கு உரிமையில்லாமலிருக்கலாம். ஆனால் நினைக்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

சுந்தரி :—[மெல்லச் சிரித்து] ஓ...எவ்வளவு இனிமையான காட்சி...

நந்தன் :—எது?

சுந்தரி :—நீங்கள் இதையெல்லாம் ஒழுங்குபடுத்துவது... எனக்குத் தோன்றுகிறது...

நந்தன் :—என்ன தோன்றுகிறது?

சுந்தரி :—ஒன்றுமில்லை. [சற்றே குனிந்து கவிழ்ந்து கிடக்கும் மதுக்கிண்ணத்தை எடுக்க முயன்றவாறே] மதுக்கிண்ணம் இங்கே எப்படி வந்தது?

நந்தன் :—உனக்குத் தெரியாதா?

(மதுக்கிண்ணத்தை எடுக்கிறான். சட்டென அவன் கரத்தைப் பற்றிய வண்ணம் சுந்தரி எழுந்திருக்கின்றாள்.)

சுந்தரி :—நான் மிகவும் வருந்துகிறேன்.

நந்தன் :—எதற்காக?

சுந்தரி :—(மதுக்கிண்ணத்தை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு, மதுவகைகள் வைக்கப்பட்டிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றவளாய்) இரவு நான் நடந்துகொண்ட விதத்திற்காக.

(மதுக்கிண்ணத்தை வைத்துவிட்டு அவனை நோக்கித் திரும்பி வருகிறாள். அருகே வந்து அவனது இரு கரங்களையும் தன்னிரு கரங்களினால் பற்றிய வண்ணம்)

உண்மையாகவே மிகவும் வருந்துகிறேன்.

நந்தன் :—நீ வருந்துவதற்கு அர்த்தமில்லை அச் சமயம் உன் மன நிலை சரியாக இல்லை. மிக்க பதட்டமடைந்திருந்தாய். உன் மன நிலையில் நானிருந்தாலும், இப்படித்தான் நடந்துகொண்டிருப்பேன்.

சுந்தரி :—இல்லை. தாங்கள் ஒருபொழுதும் அப்படி நடந்து கொண்டிருக்கமாட்டீர்கள். உங்களை எனக்குத் தெரியாதா?

நந்தன் :—தெரியுமென்றால் இதையெல்லாம் எதற்காகக் கூறுகின்றாய்?

சுந்தரி :—(அவனது விழிகளைச் சந்தித்தவாறு) எதற்காகவென்ருல்...இப்படிப் பேசிக்கொண்டிருப்பது பிடிக்கிறது. சில சமயம் நான் நினைக்கிறேன்......

நந்தன் :—என்ன நினைக்கிருய்?

சுந்தரி :—நீங்கள் என்னிடம் கோபித்துக்கொண்டு இரண்டொரு இரவுகள் என்னறைக்கு வராமலேயே இருந்துவிட்டால்...எப்படி இருக்கும்?

நந்தன் :—நன்ருக இருக்குமா?

சுந்தரி :—ஊஹூம்....இல்லை....ஆனலும் அதற்காக.... ஆவலுள்ளவளாய்......

(திரைக்குப் பின்னிருந்து பொழுது புலர்ந்துவிட்டதற்கு அறிகுறியாக சங்கொலி கேட்கிறது.)

விடிவேளையின் சங்கொலி......அப்படியென்ருல் தாங்கள் இரவு முழுவதையும் உறங்காமலேயே கழித்திருக்கிறீர்கள்? இல்லையா?

நந்தன் :—இதனலென்ன? உறங்குவதற்கு இன்னும் இரவுகள் வராதா என்ன?

(சுந்தரி எழுந்து ஒப்பனைக்கூடத்தை நோக்கிச் செல்லுகின்ருள்.)

சுந்தரி :—வரும்......வராமலென்ன......ஆனல்...

(கணநேரம் கண்ணுடியில் தன்னைப் பார்த்தவாறே)

உறங்கி எழுந்தபின் என்முகம் எப்படி இருக்கிறது?

நந்தன் :—எப்படி இருக்கிறது?

சுந்தரி :—ஒளியற்று, பொலிவிழந்திருப்பதாய் தோன்றுகிறது. தங்களுக்கு அப்படித் தோன்றவில்லையா?

நந்தன் :—இல்லை...எனக்கு அப்படித் தோன்றவில்லை... எனக்கு...உன் முகம்...

(சுந்தரி புருவங்களை உயர்த்தி அவனைப் பார்க்கின்ருள்.)

மேலும் அழகாகவே தோன்றுகிறது.

சுந்தரி :—இதையெல்லாம் சொல்லிக்கொண்டா இருப்பார்கள்?...சரி...நீங்கள் சற்று வெளியே போகிறீர்களா? அலகாவை அழைத்து நான் அலங்காரம் செய்துகொள்ள வேண்டும்...போங்களேன்.

(நந்தன் சற்றும் தயங்காது அவளை நோக்கி வருபவன், அவளது கூந்தலை கலைத்துவிட்டு, சாளரத்தினருகே சென்று வெளியே பார்க்கின்ருன். சுந்தரி கண்ணுடியின் முன் நின்று பல கோணங்களில் தன்னைப் பார்த்துக்கொள்கின்ருள்.)

அலகா......

(வலது புறமிருந்து நீஹாரிகா வருகின்ருள்.)

நீஹாரிகா :—தேவி...

சுந்தரி :—நீஹாரிகாவா? அலகா எங்கே?

நீஹாரிகா :—இப்பொழுதுதான் வெளியே சென்ருள். தங்களுக்கு ஏதும் தேவைப்பட்டால் என்னை கவனித்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு......

சுந்தரி :—அவள் எங்கே போனுள்?

நீஹாரிகா :—கவிராஜரைப் பார்க்கப் போயிருக்கிருள். இரவு முழுவதும் சியாமாங்கன்...

சுந்தரி :—ஓ! சியாமாங்கனு? அவனுக்கு வைத்தியம் செய்வதற்காக அவனை இங்கு அழைத்துவரச் சொன்னதை மறந்தே போனேன்......ஒப்பனை அலங்காரம் செய்துகொள்ள எனக்கு அலகாவின் உதவி தேவை...நீ போகலாம்.

நீஹாரிகா :—நீங்கள் விரும்பினுல் நான் சென்று......

சுந்தரி :—தேவையில்லை. அவள் சியாமாங்கனை கவனித்துக் கொள்ளட்டும். நானே அலங்காரம் செய்துகொள்ளுகிறேன்.

(நீஹாரிகா வலதுபுறமாகச் செல்லுகின்ருள். சுந்தரி தலையைத் திருப்பி நந்தனை ஒருமுறை பார்க்கின்ருள்.

புன்முறுவலுடன் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டே மெல்லிய குரலில் முணு முணுக்கின்றாள்.)

"ஸ ராஜ புத்ர : ப்ரியாயவிஹீன :,
சோகேன, மோஹேன ச பீட்யமான :"

(மீண்டும் நந்தனைப் பார்க்கின்றாள்.) இதைக் கேளுங்களேன். (நந்தனிடமிருந்து பதில் வராததால் மீண்டும் அவனை நோக்கி) யாரோ...வெளியே எதையோ பறிகொடுத்து விட்டார்கள் போலிருக்கிறது.

(நந்தன் சாளரத்தைவிட்டு நகர்ந்து வருகிறான்.)

நந்தன் :—தூரத்திலே தெரியும் அடர்ந்த மரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

சுந்தரி :—ஏன்? பொழுது புலர்ந்ததுமே வேட்டையாடும் உற்சாகம் கிளர்ந்துவிட்டதா?

நந்தன் :—இல்லை. அந்த மானைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். அடர்ந்த மரங்களிடையே கிடந்தது அது.

சுந்தரி :—(மீண்டும் கண்ணாடியின் அருகே வந்து) இங்கே வாருங்களேன்......

நந்தன் :—இரவெல்லாம் அது அங்கேயே கிடந்திருக்கும். இவ் விடிவேளையில் மலினமடைந்திருக்கும். இன்றிரவு......அதைப்போலவே......மென்மையானதாக, உயிரற்றதாய் ஆனால் முழுமையானதாக... எனக்குத் தோன்றுகிறது.

சுந்தரி :—(தன்னில் மூழ்கியவளாய்) இதோ பாருங்கள். அலகா இங்கில்லை......எனது ஒப்பனைகளை நானே தான் செய்துகொள்ள வேண்டும்.

நந்தன் :—(தனது சிந்தனைகளிலேயே லயித்தவனாய்) அடர்ந்து செறிந்த மரங்களிடையே அது என்றுமே இப்படி கிடப்பதாக, தன்னைக் காண்பவர்கள் யாரேனும் தன்னைக் கரங்களிலே வாரி எடுத்துக்கொள்வதை

எதிர்பார்த்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது.

சுந்தரி :—நான் கூறியது காதில் வீழ்ந்ததா ?

நந்தன் :—(சுதாரித்துக்கொண்டு) நீ என்ன கூறினாய்?

சுந்தரி :—அலகா இங்கில்லை. அதனால் நானேதான் என் அலங்காரங்களைச் செய்துகொள்ள வேண்டும் என்று கூறினேன். நீங்கள் இங்கேயே என்னுடனிருந்து எனக்கு உதவி செய்யவேண்டும்.

நந்தன் :—நீதானே இப்பொழுது கூறினாய்...

சுந்தரி :—அது அப்பொழுது......இப்பொழுது நான் சொல்லுவது நீங்கள் இங்கே என்னுடனிருந்து எனக்கு உதவி புரியவேண்டும்.

(நிலைக்கண்ணாடியில் தன்னுருவத்தைப் பார்த்தவாறே கேசத்தை அவிழ்த்து விடுகிறாள்)

நந்தன் :—இன்னும் சற்று நேரத்திற்குப் பிறகு நீ சொல்லுவாய்...வந்து...

(சுந்தரி விரித்த கூந்தல் அலைபுரள, வலது தோள்புறமாகத் திரும்பி மயக்கும் பார்வையை வீசுகின்றாள்.)

சுந்தரி :—ஹூம் என்ன இது......(மீண்டும் கண்ணாடியில் தன்னைப் பார்த்தவாறு) ஒன்று கூறலாமா ?

நந்தன் :—சொல்லேன்.

சுந்தரி :—நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நந்தன் :—நீ சொல்லுவதை நான் எப்பொழுது ஏற்கவில்லை ?

சுந்தரி :—நேற்றிரவு நடந்ததையெல்லாம் அடியோடு மறந்துவிடுவதாக எனக்கு வாக்களியுங்கள்.

நந்தன் :—நேற்று ஏதோ ஒன்று நடந்துவிட்டதாக நீ நினைக்கிறாயா ?

சுந்தரி :—அதைப்பற்றி நீங்கள் யோசிக்கவே கூடாது.

நந்தன் :—நீதான் இன்னமும் அதைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கிருய்...இதை உன்னிடமே ஏன் சொல்லிக்கொள்ளவில்லை?

சுந்தரி :—நீங்கள் எனக்கு அதை நினைவூட்டவே கூடாது.

நந்தன் :—உனக்கு நினைவூட்டக் கூடாது என்பதை நான் நினைவு வைத்துக்கொள்ள வேண்டுமா?

சுந்தரி :—வந்த ...இன்று முழுவதும் சந்தோஷமாக இருக்கவேண்டும்.

நந்தன் :—(முகத்தில் எவ்வித பாவமுமின்றி) நல்லது......ஏன் சந்தோஷமாக இருக்கமாட்டேஞ?

சுந்தரி :—பொழுது புலர்ந்ததும் புலராததுமே அந்த மானைப்பற்றி நினைக்கவாரம்பித்துவிட்டால் எப்படி சந்தோஷமாக, மகிழ்ச்சியாக இருக்க முடியும்?

(நந்தன் அவளருகே வந்து அவளது தோள்களிலே இரு கரங்களையும் வைக்கிருன்)

நந்தன் :—இதோ பார்......ஒரு விஷயத்தைப்பற்றி என்ஞல் ஒரு முடிவிற்கே வரமுடியவில்லை.

சுந்தரி :—அது எதுவோ !

நந்தன் : என்னை உன்பால் அதிகமாகக் கவர்வது உன் அழகா...உன் சாதுர்யமா?

சுந்தரி :—(பொய்க் கோபத்துடன் எழுந்து நிற்கிருள்.) என்னைச் சாதுர்யமுள்ளவள் எனக் கூறுகிறீர்களா?

நந்தன் :—பின் இல்லையா?

சுந்தரி :—(ஏதுமே அறியாத பேதையைப்போன்ற பாவத்துடன் கரங்களைக் கொட்டியவாறே திரும்பி) இல்லை...யில்லை... (தரையில் ஏதோ தேடுவது போன்ற பாவனை) சந்தனக் குழம்பெங்கே? அலகா எங்கே வைத்துவிட்டாளோ...

(நந்தன் கீழே குனிந்து, கீழே கிடக்கும் கிண்ணத்தை எடுத்து அவள் பக்கம் நீட்டுகிருன்.)

நந்தன் :—இதோ...இங்கே இருக்கிறது...இந்தா...

சுந்தரி :—கிண்ணம் காலியாக இருக்கிறதே!—(நிராசையுடன் அதை வாங்கி வைத்து விடுகிறாள்) ஏதோ கொஞ்சமிருப்பதும் உலர்ந்து கிடக்கிறது.

நந்தன் :—நினைவில்லையா? நேற்றிரவு நீதானே...

சுந்தரி :—(விழிகளில் சினம் பொங்க) மீண்டும் நேற்றைய விஷயத்தைப் பற்றிப் பேசவாரம்பித்துவிட்டீர்களா?

நந்தன் :—(சிரித்துக்கொண்டே) இல்லை......இனிப் பேச மாட்டேன்.

சுந்தரி :—ஆனால் இப்பொழுது கூறியதற்காக...... தண்டனை அனுபவிக்க வேண்டும்.

நந்தன் :—தண்டனையா? அது என்னவோ?

சுந்தரி :—தண்டனை......வந்து......வந்து (யோசித்தவளாய்) நீங்கள் இந்தக் கண்ணாடியை எடுத்துக்கொண்டு... அதோ அங்கே நிற்கவேண்டும். இங்கு வெளிச்சமில்லை...அதனால் என்னை சரியாகப் பார்த்துக் கொள்ள முடியவில்லை.

நந்தன் :—இவ்வளவுதானா?

(கண்ணாடியை எடுத்துக்கொள்கின்றான். ஆனால் சுந்தரி தடுக்கின்றாள்.)

சுந்தரி :—இல்லை...இது மட்டுமில்லை...இன்று முழுவதும் நீங்கள் எங்குமே செல்லக்கூடாது. ஆமாம் வேட்டைக்குக் கூடத்தான். என்னுடனேயே, இங்கேயே இருக்கவேண்டும்.

நந்தன் :—நாள் முழுவதுமா?

சுந்தரி :—நீங்கள் ஆட்சேபித்தால் தண்டனை இன்னும் கடுமையாகிவிடும்.

நந்தன் :—நானெங்கே ஆட்சேபித்தேன்?

சுந்தரி :—அப்படியென்றால் கண்ணாடியை எடுத்துக் கொள்ளுங்கள்...இல்லை...வேண்டாம்...பொறுங்கள்

சற்று. (சந்தனக் கிண்ணத்தை கரத்திலெடுத்து) சந்தனக் குழம்பெல்லாம் உலர்ந்து கிடக்கிறதே! எப்படிப் பூசிக்கொள்வேன்? (குழைவுடன் சாகசம் நிரம்பிய பார்வையை வீசியவாறே) இதை ஈரமாக்கிக்கொண்டு வருகிறீர்களா?

நந்தன் :—(உள்ளத்தில் நிமிர்ந்ததொரு எதிர்ப்பை சமாளித்தவனாய்) வராமலென்ன? (பின்னும் சகஜபாவத்துடன்) ஆட்சேபித்தால்...பின்னும்...

சுந்தரி :—மீண்டும் ஆரம்பித்துவிட்டீர்களா?

நந்தன் :—(குழைவுடன்) இல்லை. இனி இதைக்கூட சொல்ல மாட்டேன்.

(கிண்ணத்துடன் வலதுபுறம் செல்லுகிறான். சுந்தரி அவன் செல்வதைப் பார்த்தவாறே முறுவலிக்கின்றாள்.)

சுந்தரி :—(தனக்குள் சிரித்தவாறு) இதைக்கூட சொல்ல மாட்டாராம்...இன்னும் என்னென்ன சொல்ல மாட்டாராம்? (தீபத்தை அணைக்கின்றாள்.)

(வலதுபுறமிருந்து நந்தன் ஒரு குச்சியினால் கிண்ணத்திலுள்ளதைக் கலக்கியவாறே வருகிறான்.)

நந்தன் :—இந்தா...

சுந்தரி :—(கிண்ணத்தை அவன் கரத்திலிருந்து பெற்றுக்கொண்டு) ஊரார் என்ன பேசிக்கொள்கிறார்கள் தெரியுமா?

நந்தன் :—என்ன சொல்லுகிறார்கள்?

சுந்தரி :—நீங்கள் ஒரு யக்ஷிணியைத் திருமணம் செய்து கொண்டிருப்பதாகவும், அவள் தன் மாய மந்திரத்தினால் உங்களை எப்பொழுதும் ஆட்டிவைப்பதாகவும் கூறுகிறார்கள்.

நந்தன் :—இது உண்மையில்லையா?

சுந்தரி :—உண்மையா?

நந்தன் :—நீ யக்ஷிணியோ இல்லையோ, என்னால் கூற முடியாது. ஆனால் நிச்சயமாய் நீயொரு மானிடப்

பெண்ணல்ல. (அவளது மோவாயைப்பற்றி மெல்ல நிமிர்த்தி) எந்த மானிடப் பெண்ணிற்கும் இத்கைய பேரழகு வடிவம் கிடையாது.

சுந்தரி :—உண்மையாகவா ?......மானிடப் பெண்கள் பலரையும் பார்த்திருக்கிறீர்கள்போலும்! (கிண்ணத்தை வைத்துவிட்டு, கண்ணுடியை எடுத்து அவன் கரத்தில் அளிக்கின்ருள்.) இந்தக் கண்ணுடியை எடுத்துக்கொள்ளுங்கள்...போய் அங்கே வெளிச்சத்தில் நில்லுங்கள்.

(நந்தன் கண்ணுடியுடன் சற்றுதூரம் தள்ளிச் சென்று நிற்கிருன்.)

இல்லை அப்படியில்லை.

(அவனருகே சென்று கண்ணுடியை அவனது வலது மார்போடு சாய்த்துவைக்கிருள்.)

இப்படி...

(திரும்பிவந்து கண்ணுடியில் பார்த்தவாறே சந்தனக் கிண்ணத்தை கரத்திலெடுக்கின்ருள்.)

இனி நான் இதைப் பூசிக்கொள்ளுகிறேன்.

[விரலை சந்தனக்குழம்பில் தோய்த்தெடுக்கிருள். நெற்றிக் கருகே கொண்டு போகும்போது—தொலைவில், பிக்ஷு பிக்ஷுணிகளின் ஒருமித்த குரலொலி கேட்கிறது. சுந்தரி அசைவற்றுப் போகிருள். குரலொலி மெல்ல மெல்ல அருகே வருகிறது.]

திரைக்குப்பின்னே [ஒருமித்த குரல்]

தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
புத்தம் சரணம் கச்சாமி

[திரைக்குப்பின் இக்குரல் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கிறது. நந்தனின் முகத்தில் எவ்வித பாவமும் இல்லை. அவன் கரத்தில் கண்ணுடி அசையாமலிருப்பதில்லை. சுந்தரியின் கரம் நெற்றியிலிருந்து அகன்று விடுகின்றது.]

சுந்தரி :—நீங்கள் கண்ணுடியை அசைத்துவிட்டீர்கள். உங்களால் ஒருகணம் அசையாமல் நிற்க முடியாதா ?

[நந்தன் தன்னை சமாளித்துக்கொண்டு கண்ணுடியை அசையாமல் வைத்திருக்க முயன்றவனுய்]

நந்தன் :—இப்பொழுது சரியாக இருக்கிறதா ?

சுந்தரி :—இல்லை...

நந்தன் :—[மீண்டும் முயற்சித்து] இப்பொழுது ?

சுந்தரி :—இல்லை.

நந்தன் :—[தன் கவனத்தையெல்லாம் கண்ணுடியின்மீது செலுத்திய வாறு] இப்பொழுது ?

சுந்தரி :—கொஞ்சம் பரவாயில்லை...இதோ பாருங்கள்... சற்றுக்கூட அசைக்கக்கூடாது.

[மீண்டும் அவள் கரம் நெற்றிக்கு உயருகின்றது. ஆனல் சட்டென நின்றுவிடுகிறது. சீற்றத்துடன் கரத்தை மீண்டும் தொங்கப்போட்டவாறே தன்னிடத்தை விட்டு எழுந்து நந்தனை நோக்கிச்சென்று ஆத்திரத் துடன்]

கண்ணுடியை வைத்துவிடுங்கள்.

நந்தன் :—ஏன் ? என்னவாயிற்று ? இம்முறை கண்ணுடி அசங்கவில்லையே.

சுந்தரி :—அது அசங்கவில்லைதான். ஆனல் உங்களது மூச்சுக்காற்றினுல் அது மலினமடைந்துவிட்டது. வேண்டுமென்றேதான் நீங்கள்...

நந்தன் :—நான் வேண்டுமென்றே செய்யவில்லை. நான் துடைத்துவிடுகிறேன். [உத்தரீயத்தினுல் கண்ணுடியைத் துடைக்கிருன்] நீ சென்று அலங்காரம் செய்துகொள்.

சுந்தரி :—கண்ணுடியை வைத்து விடுங்கள் என்று கூறி னேன் அல்லவா ? நான் அலங்காரம் செய்து

கொள்ளப்போவதில்லை. [அவனைக் கடந்து மேடையை நோக்கிச் செல்லுகின்றாள்.]

நந்தன் :—[கண்ணாடியை அவள் பக்கம் திருப்பி] நீ உன் அலங்காரங்களை முடித்துக்கொள்ளும்வரை, உன்னை இந்த கண்ணாடியின் பிரதிபலிப்புக்கு வெளியே போக விடப்போவதில்லை.

[சுந்தரி கண்ணாடியின் பிரதிபலிப்பிற்கு அகப்படாமலிருக்க முயல முயல, நந்தன் கண்ணாடியை அவள் பக்கமாகத் திருப்பிக்கொண்டே இருக்கிறான்.]

இப்பொழுதும்கூட கண்ணாடியின் பிரதிபலிப்பு உன் மீதும், உனது உருவத்தின் பிரதிபலிப்பு கண்ணாடிக்குள்ளேயும் தானிருக்கிறது.

சுந்தரி :—கண்ணாடியைக் கீழே வைத்துவிடுங்கள். நான் அலங்காரம் செய்துகொள்ளப் போவதில்லை. இல்லை......இல்லை......இல்லை.—[நகர்ந்து செல்லுகிறாள். நந்தன் கண்ணாடியை உயர்த்திப் பிடிக்கின்றான். சட்டென பிக்ஷுக்களின் குரலொலி நின்றுபோவதால், வெளிப்பக்கம் பார்க்கும் நந்தன் பிடியிலிருந்து கண்ணாடியை நழுவவிடுகிறான். அது உடைந்து சிதறுகின்றது.]

[சுந்தரி அப்படியே உறைந்து போகிறாள்.]

கண்ணாடி...உடைந்து விட்டதா ?

[நந்தன் மௌனமாய் ஒருமுறை சுந்தரியை ஏறிட்டுப் பார்க்கிறான். பின்னர் அவன் பார்வை உடைந்து கிடக்கும் கண்ணாடியின்மீது நிலைக்கின்றது. திரைக்குப் பின் பிக்ஷுக்களின் குரல் மீண்டும் ஒலிக்க ஆரம்பிக்கின்றது. மெல்ல மெல்ல விலகிச் செல்கின்றது.]

[திரைக்குப் பின்னிருந்து ஒருமித்த குரலொலி.]

தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
புத்தம் சரணம் கச்சாமி...!

[நந்தன் சிலகணம் தான் நின்றவிடத்திலேயே நிற்கின்றான். பின்னர் சுந்தரியை நோக்கிச் செல்லுகின்றான்.]

நந்தன் :—மன்னித்து விடு சுந்தரி.

[ஒருமித்த குரலொலி மெல்ல மெல்லக் கரைந்து தன்னை இழந்துவிடுகிறது.]

[அவளது தோள்களில் தன் கரத்தை வைத்து]—சுந்தரி!
[சுந்தரி அவனது கரத்தை உதறுகிருள்.]

சுந்தரி :—நீங்கள் உங்கள் அறைக்குச் செல்லலாம். எனக்குச் சற்று தனிமை தேவை.

நந்தன் :—இதோ பார்.

சுந்தரி :—நான் சற்று தனிமையிலிருக்க விரும்புகிறேன் என்று கூறினேன் அல்லவா!

நந்தன் :—எனக்கு இங்கிருந்து செல்ல உரிமையில்லை. நாள் முழுவதும் உன்னுடன் இருப்பதாக வாக்களித்திருக்கின்றேன்.

சுந்தரி :—எனக்கு வாக்களித்திருந்தீர்கள் அல்லவா? இப்பொழுது அதிலிருந்து உங்களுக்கு விடுதலை அளிக்கின்றேன்.

நந்தன் :—ஆனல் நான் எனது வாக்கை மீற விரும்பவில்லை.

[சுந்தரியின் விழிகள் ஒருகணம் மூடிக்கொள்கின்றன. அவள் சில அடிகள் முன்னே நடக்கிருள்.]

[நந்தன் முஷ்டியை இறுக மூடித் திறக்கின்ருன். எப்படியேனும் நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்ற தீவிரத்துடன்] இதைக் கேள் சுந்தரி......உடைந்துபோனது வெறும் பளிங்கு...கண்ணுடித்துண்டு...ஆனல் நீ சொல்வாயே உனது உண்மையான கண்ணுடி......

சுந்தரி :—அதையெல்லாம் நினைவுபடுத்தாதீர்கள்...

நந்தன் :—[அவளது முதுகைத் தொட்டு] வா......அங்கே சென்று உட்காரலாம்.

சுந்தரி :—[அவனது கரத்தை அகற்றியவாறே] எனக்கு ஒரு விஷயம் தெரியவேண்டும்.

நந்தன் [அவளருகே வந்து] அங்கே போகலாம் வா...அங்கு அமர்ந்து பேசலாம். [மென்மையாக ஆனால் உறுதியுடன் அவளைப்பற்றி மீன் வடிவத்திலமைந்த ஆசனத்தை நோக்கி அழைத்துச்சென்று அமரச் செய்கிறான். கதவருகில் சென்று அதை மூடிவிட்டு வருகின்றான்.] சொல்லு?...நீ என்ன தெரிந்துகொள்ள விரும்புகிறாய்?

சுந்தரி :—அக் கண்ணாடி உடைந்தது யதேச்சையாக நிகழ்ந்ததா? அல்லது தங்களுக்குள் திடீரென வேறு நினைவு ஏதேனும் கிளர்ந்துவிட்டதோ?

நந்தன் :—இதைப்பற்றி இத்தனை தாபமா?...இதோ... என் கரத்தினால் உன் நெற்றியில் சந்தனத் திலக மிடுகின்றேன். [ஒப்பனைக் கூடத்தை நோக்கி விரைகின்றான்.]

சுந்தரி :—தாங்கள் என் கேள்விக்குப் பதில் கூற வில்லையே!

நந்தன் :—அச் சமயம் நான் ஏதோ சிந்தனையிலிருந் தேன் என்று நீ எப்படி நினைக்கிறாய்?

சுந்தரி :—ஏதோ சிந்தனையில் அல்ல! யாரோ ஒருத்தி யைப்பற்றி.

நந்தன் :—யாரந்த ஒருத்தி?

சுந்தரி :—இன்று பிக்ஷுணியாக தீக்ஷை பெற்றாளே அவள்.

நந்தன் :—பிக்ஷுக்களின் கூட்டம் அச் சமயம் மாளிகை யின் வாசலில் வந்து நின்றதென்பதனால்...

சுந்தரி :—அவர்களின் குரலொலி சட்டென நின்றதால்.

நந்தன் :—இவையெல்லாம் உன் மனத்தின் பிரமைகள். வேறு ஒன்றுமில்லை. விஷயம் இவ்வளவுதான். நான் கண்ணாடியை உயரத் தூக்கிப் பிடித்தேன். சமாளிக்க முடியவில்லை. நழுவிவிட்டது.

சுந்தரி :—உண்மையாகத்தான் சொல்லுகிறீர்களா?

நந்தன் :—(சற்றே அதிர்ச்சியுடன்) நான் எதற்காக உன்னிடம் பொய் சொல்லவேண்டும் ?

சுந்தரி :—(எழுந்து அவனை நோக்கி வருகிறாள், உள்ளத்தை ஊடுருவும் பார்வையுடன்.) அந்த பிக்ஷுக்களின் கும்பலில் பிக்ஷுணி யசோதராவும் இருந்திருப்பாள், அவள் தங்களின் பிக்ஷை பெறவேண்டி இம் மாளிகையின் வாசலில் வந்து நின்றிருப்பாள் என்றெல்லாம் தாங்கள் நினைக்கவில்லையா ?

நந்தன் :—நான் நினைக்கவில்லை. ஒருக்கால் நீ நினைத்திருக்கலாம். அதனால் உனக்குத் தோன்றியது... நான் கூட...

சுந்தரி :—நான்தான் அப்படி நினைத்துக்கொண்டிருந்தேன் என்று தாங்கள் என்னிடம் கூறுகிறீர்கள். அப்படித்தானே ? ஆமாம்...அந்த நேரத்தில் நான் சிந்திக்கவேண்டிய விஷயம்தானே !

(உடைந்த கண்ணாடிக்கருகே வருகின்றாள்.)

இங்கே வாருங்களேன்.

(நந்தன் வலிய வரவழைத்துக்கொண்ட அமைதியுடன் அவளை நோக்கி வருகிறான். அவன் கரத்தில் சந்தனக் கிண்ணம் இருக்கின்றது.)

இதில் என்னுருவத்தைப் பாருங்களேன்...எனது பின்னமான உருவம் எப்படி இருக்கிறது ?

நந்தன் :—இதில் எதற்காக உன்னைப் பார்க்கவேண்டும்! நேரிலேயே பார்த்துக்கொண்டிருக்கிறேனே ?

சுந்தரி :—நேரிலே நான் இப்படி பின்னமாகத்தான் இருக்கிறேனா ?

நந்தன் :—உடைந்த கண்ணாடியில் உன்னுருவம் மிக நன்றாயிருக்கிறதா ?

சுந்தரி :—நன்றாக இருக்கிறதா? இரு பகுதிகளாகப் பிரிந்த முகம், இரு கூறாகிவிட்ட தலை, பின்னப்பட்டு விட்ட வரி வடிவம்.

நந்தன் :—(அவளை நெருங்கி அவள் முகத்தைத் தன்பால் திருப்பி) உருக்குலையாத பின்னமடையாத உன்னுருவத்தை நீயே உன் கண்களால் பார்க்க முடியுமானால்......

(சுந்தரி இமையாது அவனை நோக்குகின்றாள்.)

சுந்தரி :—தங்கள் கரங்களினாலேயே எனக்கு ஒப்பனை செய்யப்போவதாகத் தாங்கள் கூறினீர்கள் அல்லவா?

நந்தன் :—இங்கேயே அப்படியே அசையாது நில். நான் இப்பொழுதே நொடிப்பொழுதில் உன் நெற்றியில் வானம் முழுவதையுமே சித்திரித்துவிடுகிறேன். மையத்திலே கதிரவன், இருபுறமும் சந்திரனும், பிரகஸ்பதியும், மேலும் கீழுமாக மற்ற நாலு கிரகங்கள்...காதருகில் ராகுவும், கேதுவும்.

சுந்தரி :—என் அலங்காரம் முழுவதையும் தாங்களே செய்வீர்களா? குழலை வாரி முடித்து, உடலுக்கு நறுமணத் தைலம் தடவி...

நந்தன் :—(அவளை விழிகளால் பருகிய வண்ணம்) ஏன் செய்ய மாட்டேனா?

சுந்தரி :—(தன் நெற்றியைக் காட்டுகிறாள்) முதலில் நெற்றியிலிருந்து...

(நந்தன் தன் விரலை சந்தனக் குழம்பில் தோய்க்கெடுத்து அவளது நெற்றியில் திலகமிட ஆரம்பிக்கின்றான். காற்றிலே எதிர்புறத்துக் கதவு திறந்து கொள்கிறது.)

நந்தன் :—(திடுக்கிட்டவனாய்) யாரது?

(வெளியே காற்றின் ஓசை மட்டும் கேட்கிறது.)

சுந்தரி :—ஒருவருமில்லை. வெறும் காற்றுதான்.

நந்தன் :—காலே வேளேயில் இப்படியொரு காற்று?... இரு நான் கதவை மூடிவிட்டு வருகிறேன்.

(கிண்ணத்தை வைத்துவிட்டு, கதவை நோக்கிச் செல்லு கிறன். வெளியே காற்றின் ஓசையுடன்கூட புருக்கள் பல கூடி குர்...குர்...என ஓசை எழுப்புவதுபோன்ற ஒலி கேட்கிறது. அவன் கதவை மூடியதும் ஒலி கேட்பதில்லே)

ஏன் திடீரென இப்படியொரு காற்று?

சுந்தரி :—காற்றுகூட ஒருவருடைய அனுமதி பெற்று வீசவேண்டும்?

நந்தன் :—காற்றின் ஓசையுடன் கூடவே வேறு ஏதோ சத்தம் கேட்டதே!

சுந்தரி :—காற்றைக்கண்டு புருக்கள் பயந்துவிட்டன. இதற்கு முன் அவற்றின் குரலேக் கேட்டதில்லேயா?

நந்தன்:—ஆனல் இன்று அக்குரலில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது...இரு...அதை மீண்டும் கேட்கலாம்......

(மீண்டும் கதவைத் திறக்கின்றன். ஆனல் அந்தச் சத்தம் கேட்பதில்லே. இதற்கு மாருக மாங்கொத்தியொன்று இடைவிடாமல் மரத்தைக் கொத்திக்கொண்டிருக்கும் சத்தம் கேட்பது போலிருக்கிறது)

இதென்ன? திடீரெனக் கேட்ட அச் சத்தம் அதே போல் திடீரென மறைந்துவிட்டதே! அதற்குப் பதிலாக....டௌக்...டௌக்......

சுந்தரி :—நீங்கள் சிந்தனே நுட்பமான உணர்ச்சியுடைய வராக......

நந்தன் :— (அவளே நோக்கி வருகிறன்)
உனக்கு இதில் எதுவுமே அசாதாரணமானதாகத் தோன்றவில்லேயா?

சுந்தரி :—சாதாரண விஷயங்களுக்கு அசாதாரணமான அர்த்தங்களே நான் தேடுவதில்லே.

நந்தன் :—நீயேதான் காதால் கேட்டாயே!......

(தூரத்தில் யாரோ ஓடிவரும் ஓசை கேட்கிறது.)

யாரோ ஓடிவருகிறுர்கள். இவ்வேளையில் அது யாராக இருக்கும்?

சுந்தரி :—யாராகவேனும் இருக்கலாம். (கண்களில் இலேசான வெறுப்பு மின்னலிட அவனையே உற்று நோக்கியவளாய்) நீங்கள் வந்து.........(சில நிமிடங்கள் கழிகின்றன)

(அலகா நிலைகுலைய ஓடிவந்து எதிர்ப்புற வாசலின் வழியே வருகின்றுள்.)

அலகா :—தேவி! இளவரசே!

சுந்தரி :—அலகா! உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? ஏன் இப்படி திகிலடைந்திருக்கிறுய்? சியாமாங்கனின் உடல்நிலை.........

அலகா :—(மூச்சுவாங்க) அவர் அவர்...மயக்கமடைந்திருக்கிறுர் தேவி...நான் தங்களிடம் வந்தது......ஒரு விஷயத்தைச் சொல்வதற்காக...

சுந்தரி :—விஷயம் மிக அவசரமானதோ?

அலகா :—ஆம் தேவி...வைத்தியரின் இல்லத்திலிருந்து நான் திரும்பி வந்துகொண்டிருந்த போது நான் கண்டது...மாளிகையின் முகப்பிலே...பிக்ஷுவின் கோலத்தில் ஒருவர் நின்றுகொண்டிருந்தார். இரு முறை அவர் யாசித்தார் பின்னர் திரும்பி விட்டார். அப்பொழுதுதான் வெளிச்சத்தில் என்னுல் அவரைப் பார்க்கமுடிந்தது. அவர்...அவர் வேறு யாருமில்லை......கௌதம புத்தரேதான்.

(ஒருவரும் சிலநிமிடம் எதுவும் பேசுவதில்லை. ஒருமுறை நந்தனை ஏறிட்டுப் பார்க்கும் சுந்தரி, தீபப் பதுமையை நோக்கி வருகிறுள்.)

சுந்தரி :—நீ போகலாம் அலகா...நீ வந்து கூறியது நல்லதாயிற்று.

நந்தன் :—[அலகாவிடம்] நீ சரியாகப் பார்த்தாயா? அது என்...சகோதரர்....அதாவது....கௌதமபுத்தரே.... பிக்ஷைக்காக வந்திருந்தாரா?

அலகா :—யாரை அடையாளம் கண்டுகொள்ளத் தவறினாலும், அவரை அடையாளம் கண்டுகொள்ளுவதில் தவறு நேராது இளவரசே! அவர் இருமுறை யாசித்த பின்னும் பிக்ஷை அளிக்க எவரும் வராததும், அவர் விழிகளையுயர்த்தி கணநேரம் இந்தச் சாளரத்தை நோக்கினார். பின்னர் சட்டெனத் திரும்பிவிட்டார் பின்னால் ஓடிச்சென்று அவரைத் தடுத்து நிறுத்த என்னுள்ளம் விழைந்தது. ஆனால் தங்கள் உத்தரவின்றி......

சுந்தரி :—நீ போகலாம் அலகா...வாசல்வரை வந்து விட்டு யாரேனும் திரும்பிச்சென்றால் அவர் பின்னாலேயே போகவேண்டிய அவசியமேதுமில்லை. நீ இரவு முழுவதும் உறங்கவில்லை எனக் கேள்விப் பட்டேன். சென்று ஓய்வெடுத்துக் கொள்.

அலகா :—[குழப்பத்துடன் நந்தனைப் பார்த்து] அப்படியென்றால்?

சுந்தரி :—[ஆத்திரத்துடன் அவள் பக்கம் திரும்பி] இதற்குப் பின்னும்கூட ஏதாவது கேட்பது பாக்கி இருக்கிறதா என்ன?

(அலகா வாடியமுகத்துடன் இருவரையும் பார்த்தவாறே தலை குனிந்துகொள்கின்றாள். பின்னர் மௌனமாக வலதுபுறம் செல்லுகின்றாள். சுந்தரி கணநேரம் தன்னிடத்திலேயே நிற்கின்றாள். பின்னர் நந்தனை ஆழ்ந்து நோக்குகின்றாள்.)

என்ன யோசனையோ?......

நந்தன் :—[திரும்பி தடுமாற்றத்துடன்] இல்லை, யோசனை ஒன்றுமில்லை.

[சுந்தரி கையிலே சந்தனக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு அவனருகே வருகிறாள்.]

சுந்தரி :—[கிண்ணத்தை அவன்பால் நீட்டியவாறே] எனது நெற்றியில் திலகமிடமாட்டீர்களா ?

நந்தன் :—[சிந்தனையிலாழ்ந்திருப்பவன் திடுக்கிட்டு] திலகமா ?... ஓ.. ஆமாம்... [கரத்தை நீட்டி]...கொண்டு வா....கொடு என்னிடம்.

சுந்தரி :—[கிண்ணத்தைத் தராமல் தூர வைத்துக்கொண்டு] இந்த மன நிலையிலா ! வேண்டாம். நீங்கள் என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்? முதலில் அதைக் கூறுங்கள்.

நந்தன் :— நான் நினைத்தது......

சுந்தரி :—அவருக்கு எப்படி இருந்திருக்கும், அவர் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டிருப்பார்...... இதுதானே......

நந்தன் :—ஆம். தவிரவும்......

சுந்தரி :—நான் அலகாவை, அவரைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டாமெனத் தடுத்தது சரியல்ல....ம்... அப்புறம்......

[நந்தன் மௌனமாக அவளையே ஒரு கணம் பார்க்கின்றான். பின்னர் இரண்டடி அவளை நோக்கி வருகின்றான்.]

நந்தன் :—நான் அவரிடம் சென்று இதற்காக மன்னிப்புக் கேட்கவேண்டுமென உனக்குத் தோன்றவில்லையா ?

சுந்தரி :—நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா ?

[மௌனம். சுந்தரி திரும்பி தன் ஒப்பனைக் கூடத்தை நோக்கி வருகின்றாள்.]

பின் ஏன் போகவில்லை?

நந்தன் :—[அவளை நோக்கி வந்தவனாய்] நான் நினைக்கிறேன், நான் போவதானால்......

சுந்தரி :—உடனே போய்விடவேண்டும் இல்லையா ? நீங்கள் போகலாம். [திரும்பி அவனைப் பார்க்கின்றாள். நந்தனின் விழிகளில் ஆழ்ந்ததொரு சஞ்சலம் பளிச்சிடுகின்றது.]

எனக்குக் கொடுத்த வாக்கைப் பற்றி சங்கடப் படுகின்றீர்களா? இனி அந்த சங்கடம் இருக்காது.

[நந்தன் மௌனமாய் அவளையே நோக்கியவண்ணம் நிற்கின்முன்.]

நான் அந்த வாக்குறுதியிலிருந்து உங்களுக்கு விடுதலை அளித்துவிடுகின்றேன்.........இன்னுமா சஞ்சலம்?

நந்தன் :—[தன்னுள்ளே போராடியவாறே] இல்லை......சஞ்சலம் எதுவுமில்லை. நீ முழு மனதோடுதான் சொல்லுகிருயா? நான் போகட்டுமா?

சுந்தரி :—முழு மனதோடு இல்லாமல்...பின் எப்படி?

நந்தன் :—நான் அதிகம் தாமதிக்கமாட்டேன். நதிக் கரைவரை சென்றுவர எத்தனை நேரமாகுமோ, அதைவிடச் சற்று நேரமாகும். அவ்வளவுதான்.

சுந்தரி :—[ஆதுரத்துடன் அவன் விழிகளை சந்தித்தவாறு]—நான் எதிர்பார்த்துக்கொண்டே இருப்பேன்.

[நந்தன் இரண்டொரு விநாடி தயங்குகின்றுன். பின்னர் முன் வாசலை நோக்கிச் செல்லுகின்றுன்.]

[சுந்தரி கையில் கிண்ணத்துடன் இரண்டடி அவனை நோக்கி வருகிறுள்.]

சுந்தரி :—இந்தாருங்கள்.

[நந்தன் நின்று அவளை நோக்குகின்றுன். சுந்தரி அருகே வந்துவிடுகின்றுள்.]

வானம் முழுவதையும் அல்ல...ஒரே ஒரு கிரகத்தையாவது என் நெற்றியிலே தீட்டிவிட்டுச் செல்லுங்கள்.

நந்தன் :—[கிண்ணத்தைத் தன் கரத்திலே பெற்றுக்கொண்டு] நான் செல்வது உனக்குப் பிடிக்கவில்லை என்றுல்...நான்...

சுந்தரி :—எனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னேனா? ஒரே ஒரு கிரகத்தை நெற்றியில் தீட்டிவிட்டுப் போகச் சொன்னேன்.

[நந்தன் ஆழ்ந்த நோக்குடன் அவளை நோக்கியவாறே அவளது நெற்றியில் தன் விரலால் ஒரு புள்ளி வைக்கின்றான்.]

இது என்ன கிரகம்?

நந்தன் :—கதிரவன்.

சுந்தரி :—ஓ...கதிரவன்! மற்ற பரிவாரங்களை...தாங்கள் திரும்பி வந்தபின் தீட்டப் போகிறீர்கள். அதுவரை நான் கதிரவனை உலரவிடப் போவதில்லை.

நந்தன் :—அதெப்படி முடியும்? இந்தப் புள்ளி சில விநாடிகளில் உலர்ந்துவிடும்...நான் திரும்பிவர...

சுந்தரி :—இதை உலரவிடப் போவதில்லை என்று கூறினேன் அல்லவா?...இடைவிடாமல் இதை ஈரமாகவே வைத்திருப்பேன்.

[நந்தன் மெல்லப் பார்வையைத் திருப்பிக்கொள்கிறான். கிண்ணத்தைக் கீழே வைக்கின்றான்.]

நீங்கள் திரும்பிவந்த பின்தான் எனது அலங்காரத்தை முடித்துக்கொள்வேன். ஆம் கேசத்தை வாரி முடிப்பது கூடத்தான்.

நந்தன் :—[மெல்லிய புன்னகையுடன்] இனி நீ கூறப் போவது...நான் விரைந்து சென்று சீக்கிரம் திரும்பி வர வேண்டும். இல்லையா?

சுந்தரி :—[அவன் கரத்தைத் தன் கரத்தினால் பற்றியவாறே] தாங்கள்...நேற்றிரவு முழுவதும் உறங்கவே இல்லை... இல்லையா?

நந்தன் :—அதனால்...

சுந்தரி :—அதனால் ஒன்றுமில்லை......நேரம் கழித்து வந்தால் அதற்கு தண்டனையாக உங்களை இன்று

இரவு முழுவதும் உறங்கவிடப் போவதில்லை. உறங்கினால்...மலர்களினால் காதுகளை மெல்ல வருடி எழுப்பிவிடுவேன். மீண்டும் உறங்கவாரம்பித்தால்...வந்து...

[சிரித்துக்கொண்டே அவனது கரத்தை விட்டுவிடுகின்றாள்.]

உறங்கவே விடமாட்டேன்.

நந்தன் :—(தன்னை மறந்தவனாய்) நான் இப்பொழுது... போகாமலிருந்தால்...ஒருவேளை...

சுந்தரி —இல்லை...போக வேண்டுமென்று மனத்தில் தோன்றிவிட்டது. அதனால் இச் சமயம் நீங்கள் போக விரும்பாவிட்டாலும் நான் விடப் போவதில்லை.

நந்தன் :—நீ எதை விரும்புகிறாயோ அதைத்தான் நான் எப்பொழுதுமே செய்யவேண்டும். அதுவும் நீ விரும்புகிற விதத்தில். இல்லையா ?—(அவளது தோளை இலேசாகத் தட்டிவிட்டு வாயிலை நோக்கிச் செல்லுகிறான். அங்கு நின்று ஒருமுறை அவளைப் பார்க்கின்றான். பிறகு வெளியே சென்று மறைகின்றான்.)

சுந்தரி :—(வாயிலை நோக்கியவாறே, தீவிர சிந்தனையுடன் தனக்குள்ளே)

ஏன் என்றால்? உங்களைப்பற்றி உங்களுக்கே தெரியாத விஷயங்கள் நிறைய இருக்கின்றன. நான் மட்டும்தான் அதை அறிவேன்.

(சாளரத்தினருகே செல்லுகின்றாள். வெளியே ஒளி பிரகாசமடைகின்றது. அரங்கத்திலுள்ள ஒளி மங்கலாகின்றது. சுந்தரியின் உருவம் வரி வடிவமாய்த் தெரிகின்றது.)

அங்கம் 3

(அதே அறை. மறு நாளிரவு. அறையில் யாவும் ஒழுங்காக இருக்கின்றன. இருப்பினும் ஏதோ ஒருவித வெறுமை நிலவுகின்றது. அறையில் ஒருவருமில்லை. முன்புறத்துக் கதவு மூடியிருக்கிறது. மலர் வனத்தின் பக்கமிருந்து சுந்தரியும் அலகாவும் உரையாடிய வண்ணம் வருகின்றனர். சுந்தரியின் கூந்தல் இன்னமும் அப்படியே விரிந்துதானிருக்கிறது. நேற்றணிந்திருந்த அதே ஆடைகள்தான். முகத்திலே ஒரு இறுக்கம் தெரிகின்றது. உள்ளே வந்து கதவருகில் நின்று)

சுந்தரி :—இது எப்பொழுது நிகழ்ந்தது என்று யாருக்கும் தெரியாதா ?

அலகா :—இல்லை தேவி.

சுந்தரி :—இது நிகழ்ந்தது இரவிலா, பகலிலா என்று கூடத் தெரியாதா ?

அலகா :—தெரியாது. அங்கிருந்து இப்பொழுதுதான் என்னால் வர முடிந்தது.

சுந்தரி :—என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லையே. இது எப்படி நிகழ்ந்திருக்கக் கூடுமென்பதை என்னால்...

அலகா :—முதலில் அதைக் கண்டதும் என்னாலும் நம்ப முடியவில்லை. ஏதோ தவறான இடத்திற்கு நான் வந்து விட்டேனோ என நினைத்தேன். சுற்றும் முற்றும் பார்த்தபின் நான் சரியான இடத்திற்குத் தான் வந்திருக்கின்றேன் என்பது புரிந்தது. தாமரைக் குளத்தினருகே நான் நின்றதும் அங்கே குடிகொண்டிருந்த வெறுமை என் மனத்தையும் சூழ்ந்துகொண்டு விட்டது. முதலில் இதைத்

தங்களிடம் கூற வேண்டாமென்றுதான் நினைத்தேன். ஆனால் கூறுமலிருக்க என்னுல் முடியவில்லை.

சுந்தரி :—என்னிடம் கூறுமலிருப்பதனால் அவை திரும்பி வந்துவிடப்போவதில்லையே !...இது எப்படி நிகழ்ந்தது என்பதையே என்னுல் இன்னமும் புரிந்துகொள்ள முடியவில்லை. அன்னப்பேடுகள் தாங்களாகவே பறந்து சென்றிருக்கும் என்பதை நம்பமுடியவில்லை. எவரேனும் அவற்றைக் கவர்ந்து சென்றிருக்கவும் முடியாது.

அலகா :—இல்லை...அத்தகைய துணிவு எவருக்கும் ஏற்பட்டிராது.

சுந்தரி :— (ஆழ்ந்த நோக்குடன் எதிரே பார்த்தவாறே) துணிச்சலைப்பற்றி நீ இன்று எதுவும் கூறமுடியாது. ஆனாலும்......அப்படி யாரேனும் துணிந்து இச்செயலில் இறங்கி இருந்தாலும், அது யாராக இருக்க முடியும் ?

அலகா :—(சற்றே சஞ்சலத்துடன்) இதோ பாருங்கள் ! யாரை சந்தேகிக்கலாமோ, அவர் நேற்றிரவிலிருந்து இன்று முழுவதும் அதோ அந்த அறையை விட்டு வெளியே வரவேயில்லை. பெரும்பாலும் அவர் கூடவே நான் இருந்திருக்கிறேன்.

சுந்தரி :—நான் அவனை சந்தேகிக்கவில்லை. அதனால் தான் இது எப்படி நிகழ்ந்திருக்கக் கூடுமென்பதை என்னுல் முடிவுசெய்ய இயலவில்லை அன்னப்பேடுகள் காயமுற்றிருந்தன. அவற்றிலொன்று நிச்சயமாக காயமடைந்திருக்கக்கூடும். தன்னிச்சையாகப் பறந்துசெல்ல அவற்றின் இறக்கைகளுக்கு வலுவிருந்திருக்குமா? அதிலும், இத்தனை நாட்களாய் வாழ்ந்துவரும் இத்தாமரைக் குளத்தின் சூழலை

இதன் கவர்ச்சியை இத்தனை எளிதாகத் துறந்து விடுவது சாத்தியமா?

அலகா :—ஒருக்கால் தாக்கப்பட்டதுதான் அவை பறந்து சென்றுவிடக் காரணமாக இருக்குமோ?

சுந்தரி :—ஓ...காரணம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். (மேடையை நோக்கிச் செல்லுகிருள்.) இதுவாக வும் இருக்கலாம்.

அலகா :—(அவளைப் பின்தொடர்ந்து சென்றவாறே) தேவி......நள் ளிரவிற்கும் மேலாகிவிட்டது. தாங்கள் சற்று இளைப்பாற்றிக் கொள்ளப் போவதில்லையா?

சுந்தரி :—(மேடையின்மீது அமருகின்ருள்.) நாள் முழுவதும் வேறென்ன நான் செய்தேன்? இளைப்பாருமல்?......

அலகா —மௌனமாய் அமர்ந்திருப்பதென்பது இளைப் பாறுவதாகிவிடாது தேவி...நாள்முழுவதும் தாங்கள் எத்தகைய மனநிலையில்......

சுந்தரி :—இதோ பார்......மீண்டும் நான் இதைப்பற்றி விவாதிக்க விரும்பவில்லை.

அலகா :—மீண்டுமா? இதுவரை இதைப்பற்றி ஒரு முறை கூட என்னைப் பேசத் தாங்கள் அனுமதிக்க வில்லையே!

சுந்தரி :—பேசுவதற்கு இன்னமும் எத்தனையோ விஷயங் கள் இருக்கின்றன. நீ உன் விஷயங்களைக் குறித்து பேசலாம்.

அலகா :—நல்லது தேவி. தங்கள் பாதங்களை நறுமண நீரினல் தேய்த்துவிட அனுமதிப்பீர்களா?

சுந்தரி :—வேண்டாம். அதற்கவசியமில்லை.

அலகா :—நான் கூறியதால் அது அவசியமற்றதாகி விட்டதா?

சுந்தரி :—அவசியமில்லை என்று கூறியாகிவிட்டது. நான் கூறுகின்ற ஒவ்வொரு வார்த்தையையும்

எடுத்துக்கொண்டு ஏன் இத்தனை வற்புறுத்து கின்றாய்?

அலகா :—வற்புறுத்துகிறேனா? அதுமட்டும் எனக்கு சாத்தியமாக இருந்தால் இன்று முழுவதும் ஒப்பனை, அலங்காரங்களின்றி இருக்கவிட்டிருப்பேனா? அலங் காரங்கள் ஏதுமின்றித் தங்களது தோற்றம்...

சுந்தரி :—ஏன் இயற்கையாக இல்லையா?

அலகா :—இளவரசர் திரும்பி வந்திருந்தால் தாங்கள் இப்படி இருந்திருப்பீர்களா? நான் எதனால் சொல்லு கிறேன் என்றால், ஒருக்கால் இளவரசர் திரும்பிவர இன்னும் தாமதமாகலாம்.

சுந்தரி :—(நீபப்பதுமையினருகே வந்து மனக் கசப்புடன்) நான் இன்னமும் அவரை எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறேன் என நீ நினைத்துக் கொண்டிருக்கிறாயா? அவரை நான் எதிர்பார்த்திருந்தால் என் நெற்றியில் தீட்டப்பட்டிருக்கும் சந்தன திலகத்தை உலர விட்டிருப்பேனா? நான் தேவைக்கு அதிகமாகவே அதை ஈரப்பசையுடன் வைத்துக் கொண்டிருந்து விட்டேன் என்றுதான் எனக்கு வருத்தம்.

(ஒப்பனைக் கூடத்தினருகே சென்று அங்கிருந்து ஒரு கிண்ணத்தை எடுத்து வருகிறாள்.)

இந்தக் கிண்ணத்தில் நீர் நிறைந்திருந்தது. இதில் இன்னமும் நீர் இருக்கிறது...ஆனால் (கிண்ணத்தைக் கவிழ்த்து நீரைக் கொட்டுகின்றாள்.) நான் இனியும் அவரை எதிர்பார்க்கவில்லை. அவர் எப்பொழுது வேண்டு மானாலும் வரட்டும். நான் அவரிடம் கூற வேண்டியது எதுவுமில்லை. அவர் வருவதற்கு ஏதேனும் தடை இருக்குமானால்......

அலகா :—தடையா?...தங்களால் எப்படி அவ்வாறு நினைக்கமுடிகிறது தேவி!

சுந்தரி :—அதற்கு காரணமிருக்கிறது அலகா! இக் கணம் நினைத்துப்பார்க்க முடியாதவற்றை அடுத்த கணம் நினைக்க முடியலாம். நான் அவரை அனுப்பி வைத்தேன் என்றால், ஒரு நம்பிக்கையுடன் தான் அனுப்பினேன். நான் விரும்பியிருந்தால் அவரைத் தடுத்திருக்கலாம். நான் அவரைத் தடுக்கவில்லை. ஏனென்றால் அது என்னுடைய பலவீனமாக இருந் திருக்கும். ஆனால்...இப்பொழுதோ பலவீனம் எங்கிருந்தாலும் என்னிடம் இல்லை என்பதுபற்றி மகிழ்ச்சி.

[அலகா நறுமண நீர் நிறைந்த கிண்ணத்தை எடுத்துக் கொண்டு வருகிறாள்.]

அலகா :—நான் சொல்வதைக் கேட்பீர்களா?

சுந்தரி :—அதாவது ஏதும் பேசாமல் நான் சயனித்துக் கொள்ளவேண்டும். அதுதானே?

அலகா :—மனம் சற்றே அமைதியடையும். இதனிடையே நான் யாரையேனும் நதிக்கரைக்கு அனுப்பி......

சுந்தரி :—வேண்டாம் அலகா! எவரையும் அங்கு அனுப்பாதே! அவர் திரும்பிவருவதாக இருந்தால் தானே தன்னில்லத்திற்கு வருவார். வரப் போவ தில்லை என்றால்?

அலகா :—இது சாத்தியமில்லை......இது உங்களுக்கே தெரியும். தான் நேரத்தில் வரவில்லையே என்ற தயக்கம்கூட ஒருவேளை அவரது தாமதத்திற்கு காரணமாக இருக்கலாம். அல்லது ஆர்யமைத்தி ரேயருடன் வேட்டைக்குச் சென்றிருக்கலாம்.

சுந்தரி :—வேட்டைக்கா?

அலகா :—அல்லது......சகோதரனிடமிருந்து பிரிந்துவர மனமில்லாமல் இருக்கலாம். அவர்பால் இவருக்கு

எத்தனை மரியாதையும், அன்பு முண்டென்று தாங்கள் அறிவீர்கள்......

சுந்தரி :—அறிவேன்.

அலகா :—அப்படியென்றால் நான் சொல்வதுபோல் சற்றே இளைப்பாறுங்கள். நான் பன்னீரால் தங்கள் நெற்றியைத் தேய்த்துவிட்டால், இரண்டொரு மணி நேரமாவது உறங்குவீர்களோ என்னவோ...

[அவளை மேடையை நோக்கி அழைத்துச் செல்லுகிறாள்.]

சுந்தரி :—உறக்கம் வரவேண்டிய நேரத்தில் தானாக வரும்.

அலகா :—இப்படி நின்றுகொண்டே இருந்தால் அல்ல. சயனித்துக் கொண்டால்தான் வரும் நீங்கள் நான் கூறுவதைத் தட்டமாட்டீர்கள் அல்லவா? இப்பொழுது நான் சொல்வதை சற்றுக் கேளுங்கள்.

[சுந்தரி அவளைக் கடந்து ஊஞ்சலை நோக்கிச் செல்லுகின்றாள்.]

நீ சொல்லுவதைக் கேட்பதற்கா, அல்லது என்னையே மறப்பதற்கா?

[ஊஞ்சலில் அமருகின்றாள். அலகா ஊஞ்சலில் திண்டுகளை வைத்து மெல்ல அவளைப் படுக்கவைக்கின்றாள்.]

இல்லை...யாவற்றையும் மறந்துவிடத்தான். நேற்று, இன்று, நாளை...யாவற்றையும் மறந்துவிடுவதற்காக.

[ஊஞ்சலின் அருகே முழந்தாளிட்டு அமர்ந்தவளாய் வாசனைத் தைலத்தை நெற்றியில் தடவி மெல்ல மெல்லத் தேய்க்கின்றாள். சுந்தரி அவள் கரத்தின்மீது தன் கரத்தை வைக்கின்றாள்.]

சுந்தரி :—அலகா! சில சமயம் நான் நினைக்கிறேன்...

அலகா :—ஒன்றும் பேசாதீர்கள்...பேசாமல் கண்களை மூடிக்கொள்ளுங்கள்.

[சுந்தரி ஒருமுறை விழிகளையுயர்த்தி அவளைப் பார்த்து விட்டு தன்னையே அவள் கரத்தில் ஒப்படைத்துவிட்டது போன்றதொரு பாவத்துடன் விழிகளை மூடிக் கொள்கிறாள்.]

சுந்தரி :—கண்களை மூடிக்கொள்வதால் மட்டும்...

அலகா :—ஒன்றும் பேசாதீர்கள் எனச் சொன்னேன் அல்லவா ?

[நெற்றியை வருடுவதை விட்டுவிட்டு, ஊஞ்சலை மெதுவாக ஆட்டுகின்றாள். சற்று நேரத்திற்குப்பின் குனிந்து பார்க்கிறாள். பின்னர் ஊஞ்சலை ஆட்டுவதை நிறுத்தி விட்டு சத்தமிடாது நடந்து வாயிலை நெருங்கு கின்றாள்.]

(தணிந்த குரலில்)—நீஹாரிகா...நீஹாரிகா...

[நீஹாரிகா அவளை நோக்கி வருகின்றாள். இப்பொழுதுதான் தூக்கத்திலிருந்து விழித்தவள்போல் தோன்றுகிறது.]

நீ தூங்கிவிட்டாயா ?

நீஹாரிகா :—இல்லை...சற்றே கண்ணயர்ந்து விட்டேன்.

அலகா :—மெதுவாகப் பேசு...சுவேதாங்கன் இன்னும் திரும்பிவரவில்லையா ?

நீஹாரிகா :—வந்திருந்தால் வெளியே காத்துக் கொண்டிருப்பான். தேவியின் முன்னிலையில் வந்து ஏதும் கூறவேண்டாமென சொல்லி இருந்தாய் அல்லவா ?

அலகா :—இதோ பார்...அவன் வந்திருந்தால்...அவனை வந்து [ஊஞ்சலின் பக்கம் ஒருமுறை பார்த்து விட்டு] இங்கேயே வரச்சொல். நான் தேவியாரைத் தனியே விட்டு விட்டு வர இயலாது.

[நீஹாரிகா செல்லுகின்றாள். அலகா ஊஞ்சலினருகே வந்து சுந்தரியை ஒருமுறை நோக்குகின்றாள். பின்னர் மெதுவாக ஒரு வஸ்திரத்தை எடுத்துப் போர்த்துகின்றாள். எதிர்புறத்து கதவின் வழியாக சுவேதாங்கன் வருகிறான். அலகா சற்றும் அரவ

மில்லாமல் மெல்ல நடந்து அவனை நெருங்கி, தணிந்த குரலில் பேசும்படி சைகை காட்டுகின்றுள்.]

அலகா :—அவரை சந்திக்க முடிந்ததா ?

சுவேதாங்கன் :—இல்லை.

அலகா :—பார்க்கக்கூட இல்லையா ?

சுவேதாங்கன் :—இல்லை.

அலகா :—அவர் அங்கே இல்லையா ?

சுவேதாங்கன் :—அங்கிருந்து எப்பொழுதோ சென்று விட்டார்.

அலகா :—அவர் தனியாகச் சென்றிருக்கிருரா ? அல்லது ஏதாவது தெரிந்தா ?

சுவேதாங்கன் :—தனியாகத்தான் சென்றிருக்கிருர்.

அலகா :—அங்கிருந்து எங்கே போயிருப்பார் ?

சுவேதாங்கன் :—சரியாகத் தெரியவில்லை.

அலகா :—அவருக்கு அங்கே எதனுல் இத்தனை தாமத மேற்பட்டதென்பதாவது தெரிந்திருக்குமே !

சுவேதாங்கன் :—தெரிந்தது. அவர் அங்கே சென்ற பொழுது ததாகதரை பலர் சூழ்ந்துகொண்டிருந்த தால் அவரை நெருங்கவே முடியவில்லை. மற்றவர் களுடன் அவரும் உட்கார்ந்துவிட்டார். எழுந்திருக் கவோ, வரவோ மனம் வரவில்லை.

அலகா :—பிறகு...

சுவேதாங்கன் :—கடைசியில் ததாகதரை நெருங்கும் வாய்ப்புக் கிட்டியதும் அவர், அவரை வணங்கி, மீண்டுமொருமுறை தனது விருந்தோம்பலை ஏற்றுக் கொள்ளுமாறு பிரார்த்தித்தார்.

அலகா :—மாளிகைக்கா அழைத்தார் ? ததாகதர் அதை ஏற்றுக்கொண்டாரா ?

சுவேதாங்கன் :—இல்லை. அவர் இதற்குப் பதிலேதும் கூறவில்லை. இளவரசர் மனம் கலங்கியவராய், இன்னொருமுறை அவரிடம் ஏதும் கூருமலேயே மௌனமாய் திரும்பிவிட்டார்.

அலகா :—[சுந்தரி விழித்துக்கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு] திரும்பிவிட்டவர் ஏன் இன்னமும் இங்கு வரவில்லை? ததாகதர் அவரைத் தடுத்து நிறுத்தி விட்டாரா?

சுவேதாங்கன் :—இல்லை. வாய் திறந்து அவர் ஏதும் கூறவில்லை. இளவரசரையே மௌனமாய் சில கணங்கள் உற்று நோக்கிய வண்ணமிருந்தார். பின்னர் தன்னைத் தொடர்ந்து வரும்படி கூறிவிட்டு விஹாரத்திற்குச் சென்றுவிட்டார்.

அலகா :—ஓ...இளவரசரின் மனத்திலே அக்கணம் எத்தகைய போராட்டமிருந்ததோ! அவர் விஹாரத்திலே எத்தனை நேரம் தங்கி இருந்தார்?

சுவேதாங்கன் :—நெடுநேரம். ததாகதர் அவருக்கு தருமோபதேசம் செய்து, பிக்ஷு ஆனந்தரிடம் அவருக்கு தீக்ஷை அளிக்கும்படி கூறினாராம்.

அலகா :—[திகைப்புற்று] தீக்ஷையா ?...

சுவேதாங்கன் :—ஆம். அவருக்கு தீக்ஷை அளிக்கப் பட்டுவிட்டது.

அலகா :—அளிக்கப்பட்டுவிட்டதா?...இளவரசர் ஒன்றுமே கூருது அதை ஏற்றுக்கொண்டாரா?

சுவேதாங்கன் :—இல்லை. முதலில் அவர் இதை ஆட்சேபித்தார். ஆனால் காமவயப்பட்டு, அவர் இவ்விதம் கூறுவதாகக் குற்றம் சாட்டப்பட்டதும், அவர் ததாகதரையே நிலைத்த பார்வையுடன் பார்த்தவராய் மௌனமாக நின்றார். அவரது கேசம் மழிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் ததாகதர்—

புலனின்பம், புலனடக்கம், இச்சை, இச்சைகளைத் துறப்பது போன்ற பல விஷயங்களைக் கூறிக் கொண்டே இருந்தார். ஆனால் இளவரசரின் மனத்தில் என்ன இருந்ததென்பது யாருக்கும் தெரியாது. தனது கேசம் மழிக்கப்படுவதை அவர் ஆட்சேபிக்கவுமில்லை, ததாகதர் கூறியவைகளை கவனிக்கவுமில்லை.

அலகா :—இந்தவிதமாய் இளவரசர் தீக்ஷை பெற்று விட்டார்.

சுவேதாங்கன் :—தீக்ஷை அளிக்கப்பட்டபின் ததாகதர் தனது பிக்ஷா பாத்திரத்தை இளவரசருக்கு அளிக்க முன்வந்ததும், அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார்.

அலகா :—மறுத்துவிட்டாரா?

சுவேதாங்கன் :—ஆம். ததாகதரை வணங்காமலேயே விஹாரத்தைவிட்டு வெளியேறிவிட்டார். அச்சமயம் அவரது விழிகளிலே அசாதாரணமானதொரு பாவம் குடிகொண்டிருந்ததாகச் சொல்லுகிறார்கள். நிலைத்த பார்வையுடன், எங்கும் திரும்பாமல் அவர் நேராக நடந்து சென்றதைப் பார்த்தால், அவருக்குத் தன்னிடம் மட்டுமல்ல, ஒவ்வொருவர்பாலும் ஆழ்ந்த வெறுப்பு ஏற்பட்டுவிட்டது போலிருந்ததாம்.

அலகா :—[ஆவலுடன்] அப்புறம்?

சுவேதாங்கன் :—இதற்குப்பின் ஒன்றும் தெளிவாக சரியாகத் தெரியவில்லை. அவர் வனம் சென்று விட்டதாக சிலர் கூறுகிறார்கள்.

அலகா :—வனத்திற்கா? அவரிடம் ஆயுதங்களில்லையே? அவரெப்படி?

சுவேதாங்கன் :—இதனால்தான் உறுதியாக எதுவும் கூற முடியவில்லை. நிராயுதபாணியாய் அவர் வன விலங்குகளிடையே ஏன் சென்றார் என்பது

புரியவில்லை. ஆனால் அவர் விஹாரத்திற்கும் திரும்பி வரவில்லை. அதனால்தான் கவலையாகவும்...

அலகா :— அமங்கலமாக எதையும் நினைக்காதே! நிராயுத பாணியாய் வன விலங்குகளிடையே சென்றாலும் இளவரசருக்கு எதுவும் நேராது.

சுவேதாங்கன் :—இளவரசரைத் தேடுவதில் எனக்குதவுமாறு ஆரிய மைத்திரேயரைக் கேட்கலாமென நினைத்தேன். ஆனால்...

அலகா :—ஆனாலென்ன?

சுவேதாங்கன் :—ஆரிய மைத்திரேயருக்கும் இன்று தீக்ஷை அளிக்கப்பட்டுவிட்டது.

அலகா :—ஆரிய மைத்திரேயருக்குமா?

சுவேதாங்கன் :—ஆம்...இப்பொழுது தேவியார் உத்தரவிட்டால் சில வீரர்களை உடனழைத்துக்கொண்டு, நான் போய்...

அலகா :—வேண்டாம். அவரிடம் இப்பொழுது இது பற்றி ஏதும் கூறாமலிருப்பதே நல்லது.

சுவேதாங்கன் :—கூறாமலிருப்பதும் ஒருவேளை தவறாகி விடலாம் என்பதை நீ உணரவில்லையா அலகா?

அலகா :—சற்றுப் பொறு. ஒருக்கால் நீ கூறுவதும் சரியாக இருக்கலாம். அடர்ந்த காட்டில்...இரவுவேளையில் எது வேண்டுமானாலும் நிகழலாம். நல்லது... நீ வெளியே சென்று காத்திரு...நான் தேவியாரை எழுப்பி, அவரிடம் பேசுகிறேன்.

[சிந்தனை தேங்கிய முகத்துடன் தலை அசைத்துவிட்டு சுவேதாங்கன் இடதுபுறம் செல்லுகின்றான். ஊஞ்சலினருகே வரும் அலகா, சில வினாடிகள் சுந்தரியையே பார்த்த வண்ணம் நிற்கிறாள்.]

இன்னமும் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்துவிடவில்லை...இவரை உறக்கத்திலிருந்து எழுப்ப மனமும்

வரவில்லையே...உண்மையில் ஒரு சில நாட்கள் எத்தனை நிகழ்ச்சிகளைத் தம்முள்ளே சூல் கொண்டிருக்கின்றன! மனம் எத்தனையைத் தாங்கிக் கொள்ள முடியுமோ அதற்கு மேல் தாங்கிக் கொள்ள இயலாத அளவிற்கு! உண்மையை அறிந்தால் தேவியார் எத்தனை மனக் கிலேசமடைவார்! தனது வேதனை யாரிடமும் வெளிப்பட்டு விடக் கூடாது என—ஆம்...என்னிடம் கூடத்தான்... அவர் பெரிதும் முயற்சிப்பார்.—[மெல்லக் குனிந்து] தேவி...[சுந்தரியின் கரத்தை இலேசாகத் தீண்டி] தேவி...

[எதிர்ப்புறமுள்ள வாசல் வழியாக நந்தன் உள்ளே வருகிறான். சென்ற காட்சியில் அணிந்திருந்த அதே உடைதான். ஆனால் தலை மழிக்கப்பட்டிருக்கிறது. ஆடைகள் கசங்கி, கறைபட்டிருக்கின்றன.]

நந்தன் :—அவளை எழுப்பாதே! அவள் உறங்கட்டும்.

[அலகா திடுக்கிட்டவளாய் திரும்பிப் பார்க்கிறாள்.]

அலகா :—இளவரசே...தாங்களா ?...

நந்தன் :—ஆம். நான்தான். நீ போகலாம். அவளை உறங்கவிடு.

அலகா :—ஆனால்...ஆனால்...

நந்தன் :—நீ போகலாம். ஒரு அதிதி என்னுடன் வந்திருக்கின்றார்.

[அலகா தலைகுனிந்த வண்ணம் வலதுபுறம் செல்லுகிறாள். [பின்னால் திரும்பி]

பிக்ஷுவே...உள்ளே வாருங்கள்.

[அலகா உள்ளே வரும் பிக்ஷுவை ஒருமுறை பார்த்த பின் வெளியேறுகின்றாள். உள்ளே வரும் பிக்ஷு ஆனந்தர் கதவருகிலேயே நின்றுவிடுகின்றார்.]

தாங்கள் அமருவதற்கு ஆசனம் கொண்டு வரச் சொல்லட்டுமா ?

பிக்ஷு ஆனந்தர் :—வேண்டாம். நான் அமரப் போவதில்லை.

நந்தன் :—இதுதான் எனது மாளிகை. இது என் மனைவியின் அறை. இவள்தான் என் மனைவி சுந்தரி.

பிக்ஷு ஆனந்தர் :—இதைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அழகிய இல்லம். அழகான அறை.

நந்தன் :—அவ்வளவுதானா? இடத்தைத் தவிரவும் இங்கு பல பொருள்கள் இருக்கின்றனவே. அவற்றைத் தாங்கள் காணவில்லையா? ஒருக்கால் அவற்றைக் காண்பதற்குரிய...பார்வை தங்களிடமில்லையோ!

பிக்ஷு ஆனந்தர் :—அப்படி நினைப்பதில் உனக்கேதேனும் இன்பம் கிட்டுமானால், அதிலிருந்து உன்னை வஞ்சிக்க நான் விரும்பவில்லை. நீ களைப்படைந்திருக்கிறாய். வனத்திலே புலியுடன் போராடி, களைத்து...காயமுற்று...

நந்தன் :—எனக்குத் தெரியும். நீர் நிழல்போல் என்னைத் தொடர்ந்து கொண்டிருக்கிறீர். விஹாரத்திலிருந்து—மாளிகை வரை. நான் வேறெங்கு போனாலும் என் மாளிகைக்குத் திரும்பவும் வரமாட்டேன் என நீர் மனதிற்குள் எதிர்பார்த்திருப்பீர். உம்மை இங்கு அழைத்து வர நான் தயங்குவேன் என நினைத்ததாலோ என்னவோ, எனது மாளிகையைக் காணவேண்டுமென்ற விருப்பத்தை நீர் வெளியிட்டீர். ஆனால் இதோ பார்க்கின்றீர் அல்லவா? என் மனத்தில் எந்தவிதமான தயக்கமோ, அச்சமோ கிடையாது. விஹாரத்திலிருந்து நான் நேராக இங்கு வரவில்லை. ஆனால் இது என்னுடைய விருப்பம். வனத்திடையே சென்று புலியுடன் போராடினேனே......அதுவும் கூட தற்செயலாக நிகழ்ந்ததல்ல. ஆனால் அது என்னுடைய இன்னொரு விருப்பம்.

பிக்ஷு ஆனந்தர் :—இதில் சந்தேகமேயில்லை. ஆனால் இத்தகைய திடீர் விருப்பங்கள் உனக்கு ஏற்படக் கூடுமென்பது ததாகதர் அறியாததல்ல. உன் உள்ளம் அமைதி இழந்திருப்பதை, நீ எதை வேண்டுமானாலும் செய்வாய் எங்கு வேண்டுமானாலும் செல்லுவாய் என்பதை அவரால் அறிய முடிந்திருந்தது. அதனால்தான் ததாகதரின் விருப்பத்தின்படி நான் நிழல்போல் உன்னைத் தொடர்ந்து...

நந்தன் :—பிக்ஷுவே.. ததாகதரின் விருப்பத்தைப்பற்றி நான் இன்னமும் அதிகம் கேட்டுக்கொண்டிருக்க விரும்பவில்லை. அவரது உத்தரவின்படி நீர் என் கேசத்தை மழித்தீர். என் சகோதரனின் பாலுள்ள மரியாதையினால் நான் பலவந்தமாய் உம்மைத் தடுத்து நிறுத்தவில்லை. நான் சற்றும் விரும்பாத இந்த தீக்ஷையைக் குறித்து நான் என்ன நினைக்கிறேன் என்பதை, என் பார்வையிலிருந்து அவர் புரிந்து கொள்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் புரிந்துகொண்டும், அவர் புரிந்துகொள்ள விரும்பவில்லை. அதனால்தான் அவர் அளித்த பிக்ஷா பாத்திரத்தை மறுப்பதின் மூலம், எனது பதிலை அவருக்கு அறிவித்துவிட்டு நான் வெளியேறிவிட்டேன்.

பிக்ஷு ஆனந்தர் :—நீ அவருக்கு பதிலளித்துவிட்டு வந்து விடவில்லை. இன்னமும் பதிலளித்துக் கொண்டிருக்கிறாய். பிக்ஷா பாத்திரத்தை நீ ஏற்றுக் கொள்ளாதது உன் பதிலின் ஒரு பகுதி. நேராக இங்கு மாளிகைக்கு வராது, வனத்திற்குச் சென்று புலியுடன் போராடியது உன் பதிலின் இன்னொரு பகுதி...மூன்றாவது பகுதியாக...

நந்தன் :—இப்படிப் பகுதி பகுதியாக உம் விருப்பம் போல் கூறிக்கொண்டே போம் பிக்ஷு! ஆனால் ததாகதருக்கு நான் என்னுடைய பதிலைப் பூரண

மாகக் கூறிவிட்டு வந்துவிட்டேன் என்பதும் தெரியும்.

பிக்ஷு ஆனந்தர் :—நந்தா...இதை விடவும் அவருக்கு அதிகம் தெரியும். உன்னுடைய எந்த பதிலும் அதுவரை பூரணமான பதிலாக இருக்க முடியா தென்பதை அவர் அறிவார்.

நந்தன் :—எதுவரை ?

பிக்ஷு ஆனந்தர் :—மனத்தின் சஞ்சலம் அமைதி அடையாதவரை.

நந்தன் :—உம்முடைய தீக்ஷையை ஏற்றுக்கொள்வத ஞல் அது அமைதி அடைந்துவிடுமா ?

பிக்ஷு ஆனந்தர் :—இல்லை. தீக்ஷையை ஏற்றுக்கொள்வ தால் மட்டும் அது அமைதி அடையாது.

நந்தன் :—[ஏளனத்துடன்] பின் எப்படி அது அமைதி அடையும் ?

பிக்ஷு ஆனந்தர் :—இதை நீ என்னிடமல்ல...உன்னி டமே கேட்டுக்கொண்டிருக்கிருய்.

நந்தன் :—வேண்டாம் பிக்ஷுவே ! நாம் இனியும் வார்த்தைகளோடு விளையாடிக்கொண்டிருக்க வேண் டாம். சுவர்க்கம், நரகம், வைராக்கியம், விவேகம், சீலம், புலனடக்கம், மேலான சத்யம், புனித வாக்கு...சொற்களின் மாயாஜாலத்திலே நீர் என்னை எதை நோக்கி அழைத்துச்செல்ல விரும்புகிறீர் என்பது எனக்குத் தெரியும். ஆனல் அது எனக் குரிய, எனக்கேற்ற இடமில்லை. ஒருபொழுதும் அது என்னுடைய இடமில்லை.

பிக்ஷு :—இருக்கலாம். ஆனல் அதை நீ தேடிக்கொண் டிருக்கிருய். இச்சஞ்சலம்தான் அத்தேடலின் உண்மையான துவக்கம்.

நந்தன் :—இது இருக்கட்டும் பிக்ஷுவே! நீர் எனது வீட்டைக் காண விரும்பினீர்...இல்லையா? இதோ இதுதான் எனது அறை—அது மலர்வனம்.

பிக்ஷு :—வீட்டைப் பார்க்க விரும்பினேன் நந்தா. அறையையோ, மலர்வனத்தையோ அல்ல. உன்னிடம் அறை இருக்கிறது, மலர்வனமிருக்கிறது. வீடு இல்லை. எதில் உனது ஆத்மாவிற்கு அமைதி கிட்டுமோ அந்த வீடு இல்லை. எனக்கு நேரமாகின்றது. நான் வருகிறேன். [கண நேரம் நந்தன் மீது பார்வையை நிலை நிறுத்தியபின் திரும்பி வாயிலை நோக்கிச் செல்லுகிறார்.]

[வாயிலினருகே நின்று]

செல்லும் முன் எனது விருப்பம் இது. என்றேனும் ஒரு நாள் உனக்கு அந்த அடைக்கலம் கிட்டும். அதுதான் உனது உண்மையான வீடாக இருக்கும்.

[செல்ல யத்தனிக்கின்றார்.]

நந்தன் :—நில்லும்...நீர் போகும் முன் உம்மிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன்.

பிக்ஷு :—கேட்க விரும்புகிறாயா? யாரால் உன்னுடைய எந்தக் கேள்விக்கும் பதிலளிக்கக்கூடுமோ, அந்த ஆள் நானல்ல. எத்தகைய கேள்விக்கும் உரிய விடை உனக்கு ஒரே ஒருவனிடம்தான் கிடைக்கும். அந்த ஒருவனின் பெயர் நந்தன்.

நந்தன் :—போய்வாரும் பிக்ஷு......மீண்டும் அதே வார்த்தை சிலம்பமாட நான் உம்மை நிறுத்திக் கொள்ள விரும்பவில்லை.

[முகத்தைத் திருப்பிக்கொண்டு தீபப்பதுமையை நோக்கிச் செல்லுகிறான்.]

பிக்ஷு :—என்னைத் தடுத்து நிறுத்துவதென்ற பிரச்சனையே இல்லை நந்தா! நீ தடுத்து நிறுத்தியது

இன்னொருவரை. [சென்றுவிடுகிறார். நந்தன் திரும்பிப் பார்க்கின்றான். ஏதோ கூற விரும்புபவன்போல் வாசல் வரை வருகிறான்.]

நந்தன் :—ஆனந்தரே...ஏன் விஷயத்தைக் குழப்புகிறீர்? யாரந்த இன்னொருவர்?

[இடைவெளியைக் கடந்து சாளரத்தினருகே வருகிறான்.]

நான் தடுத்து நிறுத்திய அந்த இன்னொருவர் யார்?

[எந்த பதிலும் வருவதில்லை. நிராசையுடன் திரும்புகின்றான்.]

நல்ல வேளை...நீர் நிற்கவில்லை. நின்றிருந்தால் என்ன பதில் கூறியிருப்பீர் என்று எனக்குத் தெரியும். 'உனக்கு அவனைத் தெரியாதா நந்தா? எனக்கு வியப்பாக இருக்கிறது' என்பீர். ஆனால் சிரித்துக்கொண்டிருக்கும் உமது விழிகள் உங்களுக்கு வியப்பேதுமில்லை என்பதை உணர்த்திவிடும். வியப்பு என்பது வெறும் பரிகாசம். [மச்ச வடிவத்திலமைந்த ஆசனத்தினருகே வருகின். அதைத் திறக்கின்றான். பிறகு மூடிவிடுகிறான்.]

இல்லை...இப்பொழுது நான் மதுவருந்தமாட்டேன். ஆனந்தரே! சிரித்துக் கொண்டிருக்கும் உமது புருவங்கள் உயர்ந்து...'நந்தா! நினைவுகளிடம் உனக்கேன் இத்தனை அச்சம்? உன் நினைவுகளை மதுவின் கிறக்கத்திலே மூழ்கடித்து விட ஏன் விரும்புகிறாய்?' எனக் கேட்கக் கூடாதல்லவா? [திரும்பி வருகிறான்.] இதற்கு என்றால் உமக்கு பதில் கூற முடியும். நான் சொல்லுவேன்—நினைவுகளை மறக்க உம்மைப்போல் நான் மாயைகளைக் கற்பித்துக் கொள்ளவில்லை...அதனால்தான்.

[ஊஞ்சலின் அருகே வந்து நின்று சுந்தரியை இமையாது நோக்குகின்றான்.]

நான் திரும்பி வந்ததுமே உனது கேள்விக் கணைகளை எதிர்நோக்க நேரிடாமற்போனதும் நல்லதுதான். விரைவில் திரும்பி வருகிறேன் என்று கூறினேன். ஆனால் வர இயலவில்லை. இதைக் குறித்து உன் விழிகளில் மிளிர்ந்துவரும் பரிகாசத்திற்கு என்னால் பதில் கூற இயலாமல் போயிருக்கும். [பார்வையை வேறுபுறம் திருப்பி மெல்ல வலதுபுறம் நோக்கித் திரும்பி நடந்து]

நான் உன்னிடம் என்ன கூறி இருப்பேன்? ததாகதரிடமிருந்து எழுந்து வந்தபின் என் உள்ளத்தில் நேற்று கானகத்தில் இறந்து கிடந்த அந்த மானைப் பார்க்கவேண்டுமென்று அடக்க முடியாத இச்சை ஏன் தோன்றியது? என்னால் அவ்விச்சையை ஏன் கட்டுப்படுத்திக்கொள்ள இயலாமல் போயிற்று? மானிற்குப் பதிலாக குதறி எடுக்கப்பட்ட எலும்புக் கூட்டைக் கண்ணுற்றதும் நான் எவ்வித உணர்ச்சிகளின் பாதிப்புகளுக்கு உள்ளானேன் என்பதை உன்னிடம் எப்படி விவரிக் கட்டும்! அல்லது எதிரே உறுமிக்கொண்டு வந்த புலியைக் கண்டதும் நான் ஏன் அதன்மீது பாய்ந் தேன்? எனது மரணத்தை நானே ஏன் வலிய வரவழைத்துக் கொண்டேன், என்னையே காப் பாற்றிக்கொள்ள ஏன் கடுமையாகப் போரிட்டேன் என்பதையெல்லாம் எப்படிக் கூறட்டும்? தன்னைக் காப்பாற்றிக் கொள்வது, தன்னையே அழித்துக் கொள்வது...இவ்விரு பிரவிருத்திகளினிடையே ஒரே சமயத்தில் எவ்வாறு என்னால் இயங்க முடிந்தது? ஏன்? இதனால் நான் அடைந்த இன்பம்தான் என்ன? இன்பத்தின் இவ் விழைவுதான் என்னை உயிருக்காகப் போராடச் செய்ததா?

(எதிரேயுள்ள தீபப்பதுமையை நோக்கி நடந்தவனாய்) அல்லது நம்பிக்கையில்லாமல் ஒரு நம்பிக்கையைத் தன்மீது

ஏற்றிக் கொண்டதால் ஏற்பட்ட மனப் போராட்டமா? அல்லது, அச் சமயம் எனக்கே நான் உண்மையாக இல்லாததனுல்தானு? பிக்ஷு ஆனந்தர் எனது கேசத்தை மழிக்க முற்பட்டபோது......‘ இது என்னுடைய நம்பிக்கையில்லை. உம்முடைய, அல்லது வேறு யாருடைய நம்பிக்கையையோ சுமந்துகொண்டு என்னுல் வாழ முடியாது. நான் அப்படி வாழ விருப்பவில்லை’ என என்னுல் ஏன் கூச்சலிட முடியாமற் போயிற்று?

(நிலைகொள்ளாமல் அறையின் குறுக்கிலும் நெடுகிலும் நடக்கிருன்)

எனக்குத் தெரிந்ததெல்லாம்......வாழ்வதென்பது வாழ்க்கையை மெல்ல மெல்ல எரிப்பதுதான். ஒவ்வொரு முறையும் விழிகள் திறப்பதன் முடிவு அது மூடுவதுதான். காலத்தின் பரப்பினிடையே இந்த விழிகள் திறப்பதும், மூடுவதும் அநித்ய மானவை. நிலையற்றவை. இந்த இன்பம் இன்ப மல்ல. பாசியில் வழுக்கும் பாதங்களின் இலேசான நடுக்கம். மணலிலே மறையும் மழைத் துளியின் வேதனை. ஆனுல் இந்த நடுக்கமும், வேதனையின் ஓலமுமே வாழ்க்கையின் அர்த்தமல்லவோ! வானத்தி லிருந்து தொங்கும் ஒரு கருந்துளி...வெறும் சித்தாந்தம்...எவ்விதம் சாசுவதமானதாய், நித்ய மாய், உண்மையாய் இருக்க முடியும்?

(இங்குமங்கும் உலாவுகிருன். உடைந்த கண்ணுடிக்கு எதிரே நின்று ஒருகணம் தனது பிரதிபிம்பத்தை அதில் பார்க்கின்ருன்.)

அவர் எனது கேசத்தை மழித்துவிட்டார். ஆனுல் அது எனது தோற்றத்தை மேலும் உண்மையான தாக்கிவிட்டதா? நாவைத் துண்டித்துவிட்டால், கால்களையும், கரங்களையும் வெட்டிவிட்டால்

மேலும் சத்யமானதாகிவிடுமா? உண்மையில் பிரமை யாருக்கு? அவருக்கா, எனக்கா? என்று யார் கூற முடியும்? (உடைந்த கண்ணுடியை விட்டகன்று வலதுபறமுள்ள தீபப்பதுமையை நோக்கிச் சென்றவாறே) அவர் கூறினர்: 'நான் நானல்ல. நீ நீயல்ல. அவன் அவனல்ல. ஆனல் யாவுமே ..எல்லாமே... அருவமான ஒரு விரலால் ஆகாசத்தில் தீட்டப்பட்ட சித்திரங்கள். போடப்போட அழிந்துகொண்டே இருக்கும் வடிவங்கள். இவை இருந்தது, இல்லாமலிருப்பது இரண்டிற்கும் வேறுபாடில்லை.' ஆனல் நான் கேட்கிறேன்—இருப்பதற்கும், இல்லாமைக்கும் வேறுபாடில்லை என்ருல் எனது கேசம் ஏன் மழிக்கப்பட்டது? (ஊஞ்சலுக்கும் அதற்குப் பின்னிருக்கும் தீபப்பதுமைக்கும் இடையே வந்து நின்று) இப்பொழுது மழிக்கப்பட்டு விட்டதால் என்ன வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது? இன்னும் சில நாட்களில் அது மீண்டும் வளராதா? எனது இதயம் மாறி இருந்தால் எனது பார்வை மாறி இருந்தால் வித்தியாசம் ஏற்பட்டிருக்கும். (ஊஞ்சலினருகே குனிந்து) என்னுள்ளத்திலே உன்பால் இன்னமும் அதே காதல்தான் நிறைந்து நிற்கின்றது. என் விழிகளில் உன் அழகிய உருவம் இன்னமும் அப்படியேதான் நிழலாடுகின்றது. உனது நெற்றித் திலகம் உலர்ந்துவிட்டதே என்று எனக்கு வருத்தம்தான். இதை இப்பொழுதே ஈரமாக்கிவிடுகிறேன்.

(ஊஞ்சலை விட்டுவிட்டு அருகேயிருக்கும் நறுமண நீர் நிறைந்த கிண்ணத்தை எடுத்து, சுந்தரியின் நெற்றித் திலகத்தை நனைக்க முயற்சிக்கின்ருன். விரல் நெற்றியைத் தீண்டியதுமே சுந்தரி அரைத் தூக்கத்தில் முணுமுணுக்கின்ருள்.)

வேண்டாம் வேண்டாம்...வேண்டாம்.

(நந்தன் திடுக்கிட்டவனாய் சற்றே பின்னால் நகர்ந்து கொள்கிறான். சுந்தரி பரபரப்புடன் எழுந்து உட்காருகின்றாள்.)

சுந்தரி :—(நிகிலுற்ற குரலில்)—யார் ? யாரது?...யார் இது?

(இடதுபுறமிருந்து அலகாவும், வலதுபுறமிருந்து சுவேதாங்கனும் பயந்தோடி வருகின்றனர். நந்தன் தலைகுனிந்தவனாய் தீபப்பதுமைக்குப் பின்னால் சென்றுவிடுகின்றான்)

சுவேதாங்கன் :—தேவி !

அலகா :—தேவி! என்ன நேர்ந்தது? ஏனிப்படி இருக்கிறீர்கள் ?

(தன் கரத்தை சுந்தரியின் தோளின்மீது வைக்கின்றாள். சுந்தரி அதை இறுகப் பற்றிக்கொள்கின்றாள்)

சுந்தரி :—சற்றுப் பொறு! இந்த அறையில்...இச்சமயம் யாரார் இருக்கின்றனர் ?

அலகா :—யாரார்? நீங்கள், நான், சுவேதாங்கன்...... (நந்தனிருக்கும் திசையை நோக்கியபின் மௌனமாகின்றாள்.)

சுந்தரி :—ஒருவருமில்லையா? வெளியார் எவருமில்லையா?

அலகா :—வெளியாரா ? (நந்தன்பாலிருந்து பார்வையைத் திருப்பி சுந்தரியைப் பார்த்தவளாய்) வெளியார் எவரும் இவ்வறைக்குள் எப்படி வரமுடியும் தேவி ?

சுந்தரி :—(ஊஞ்சலிலிருந்து எழுந்தவாறே) பின் எனக்கு ஏன் அப்படித் தோன்றியது? ஏதோ ஒரு கரம் என் நெற்றியைத் தீண்டியதுபோல், நான் விழிகளைத் திறந்ததுமே ஏதோ ஒரு உருவம் என் எதிரேயிருந்து நகர்ந்துவிட்டதுபோல் ஏன் தோன்றியது? அந்த உருவம்தான் எத்தனை விசித்திரமானதாக இருந்தது! எத்தனை பொருத்தமற்றதாய், இயற்கைக்கு முரணானதாய் இருந்தது! மழித்த தலை...பிக்ஷுவைப் போல...உடலெல்லாம் விழுப்புண்களை ஏற்ற வீரனைப்

போல.....உறங்குவதற்குமுன் என் மனநிலை சரியாகவேயில்லை...ஒருவேளை அதனுல்தான் இப்படியொரு பிரமை ஏற்பட்டதோ!......

அலகா :—நேற்றிலிருந்தே தங்கள் மனம் ஒரு நிலையில் இல்லையே தேவி.... (மீண்டும் நந்தனை ஒருமுறை பார்த்தபின்) அதிலும் நேற்று...

சுந்தரி :—இதோ பார்!...நேற்றைப்பற்றி நீ எனக்கு நினைவூட்டக்கூடாது. இன்றுமட்டுமல்ல...என்றுமேதான். நேற்று சென்றவர் இன்னமும் திரும்பிவராமலிருக்கிறுரே, அவரையும்தான்.

(இப்பொழுதுதான் சுவேதாங்சன் நந்தனின் இருக்கையை உணருகின்றுன். தனது மனவெழுச்சியைக் கட்டுப் படுத்திக் கொள்ளும் முயற்சியில்ஒருபுறமாக ஒதுங்கிக் கொள்ளுகின்றுன்.)

அலகா :—ஆனுல் தேவி!...

சுந்தரி :—கழிந்துவிட்ட நேற்றைய நாள் எத்தனை தொலைவிலிருந்தாலும் நல்லதுதான். நான் அவரை மீண்டும் பார்க்க விரும்பவில்லை.

அலகா :—ஆனுல்...தேவி...நான் சொல்ல வந்தது...... வந்து......

(கடைக்கண்ணுல் நந்தனைப் பார்த்ததும் வார்த்தைகள் தொண்டையிலே சிக்கிக்கொண்டு வெளியேவர மறுக்கின்றன. சுந்தரி ஏதும் புரியாதவளாய் அவளையே பார்க்கின்றுள்.)

சுந்தரி :—அலகா? ஏன்? என்ன விஷயம்? உன் உதடுகள் ஏன் நடுங்குகின்றன? என்னை ஏன் இப்படிப் பார்க்கின்றுய்? (ஒரு விஞடி பதிலை எதிர்பார்த்தபின்) நீ ஏதோ சொல்ல விரும்பிஞய் அல்லவா? சொல்... என்ன சொல்ல விரும்பிஞய்?

(அலகாவின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவருவதில்லை. கண்களிலே மிரட்சி கலந்ததொரு திகைப்பு.)

நீ ஏன் மௌனமாக நிற்கின்றாய்? (சுந்தரியின் பார்வை அலகாவிடமிருந்து சுவேதாங்கன்பால் திரும்புகின்றது.)

சுவேதாங்கா! நீயும் ஏன் ஜடமாக நிற்கின்றாய்? (வியாகூலத்துடன்) உங்களிருவருக்குமே என்ன நேர்ந்து விட்டது? உங்களால் வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூடவா பேச முடியவில்லை?

(இருவரையும் மாறிமாறிப் பார்ப்பவள் தானும் மௌனமாகின்றாள். நிலைமை அவளுக்குத் தெளிவாக துலங்கின்றாலும் விழிகள் தனக்குள்ளே ஆழ்ந்துவிடுகின்றன.)

இதன் அர்த்தம்...இந்த அறையில் இச்சமயம் இன்னொருவர் இருக்கிறார். இல்லையா? நான் கண் விழித்ததும்......பார்த்தது... (எனக் கூறும்போதே விழிகள் பின்னாலிருக்கும் நந்தனின் மீது நிலைத்துவிடுகின்றன.) வெறும் பிரமை அல்லவா?

நந்தன் :—(திரும்பி அவளையே உற்றுநோக்கிய வண்ணம்) முற்றிலும் உண்மை.

சுந்தரி :— (திணறியவளாய்) ஓ......(அப்படியே ஊஞ்சலில் அமர்ந்துவிடுகிறாள். விழிகள் மூடிக் கொள்கின்றன. அலகா அருகே சென்று மெல்ல அவள் தோளின் மீது தன் கரத்தை வைக்கின்றாள்.)

அலகா :—தேவி......

(சிரமத்துடன் விழிகளைத் திறந்து, தணிந்த ஆனால் உத்தரவிடும் குரலில்)

நீ போகலாம். சுவேதாங்கா...நீயும்தான்.

(சுவேதாங்கன் தலை அசைத்துவிட்டு செல்ல யத்தனிக்கின்றான்)

அலகா :—(நிலைமையை சமாளிக்கும் முயற்சியில்) சுவேதாங்கா! இளவரசர் மிகவும் களைத்துப் போயிருக்கிறார். அதனால்...தனது அறைக்குச்சென்று ஸ்நானம் செய்துவிட்டு இளைப்பாற விரும்பலாம். நீ சென்று

ஸ்நானத்திற்குரிய ஏற்பாடுகளைக் கவனி. இதோ... நான் வந்து உடைகளை எடுத்து வைக்கிறேன்.

(சுவேதாங்கன் செல்லுகின்றான். அலகா சுந்தரியின் பக்கம் திரும்புகின்றாள். மெல்ல அவள் தோள்களைத் தொட்டு)

தாங்கள்...எழுந்து...அந்த அறைக்கு வருகிறீர்களா தேவி. தங்களது அலங்கார சாதனங்களை எடுத்துக் கொண்டு இதோ நானும் வருகிறேன்.

சுந்தரி :—உன்னை இங்கிருந்து போகச் சொன்னேன் அல்லவா?

அலகா :—இதோ போகிறேன் தேவி. ஆனால் போகும் முன் நான் சொல்ல விரும்புவது......

சுந்தரி :—(பொறுமையிழந்து) இன்னும் நீ சொல்ல விரும்புவது என்னென்ன இருக்கிறது? எதுவும் சொல்லாமல் உன்னால் உடனே போகமுடியாதா?

அலகா :—உங்களது மனநிலையை நானறிவேன் தேவி. ஆனால் இப்பொழுது இளவரசர் திரும்பிவந்து விட்டதால்......

சுந்தரி :—திரும்பிவந்துவிட்டாரா? (ஊஞ்சலிலிருந்து எழுந்து) இல்லை...அவர் திரும்பிவரவில்லை. திரும்பிவந்திருப்பது வேறு யாரோ.

நந்தன் :—வேறு யாரோ! (அவளை நோக்கி வருகிறான்) நீ கூடவா என்னை வேறு யாரோ என்கிறாய்? எனது கேசத்தை யாரோ பலவந்தமாய் மழித்துவிட்டதால் என்னுருவத்தை சற்றே விகாரப்படுத்தி விட்டதாலா இப்படிக் கூறுகின்றாய்? இதனாலெல்லாம் ஒருவன், இன்னொருவன் ஆகிவிடுவானா?

(இதற்கிடையே அலகா ஒப்பனைக்கூடத்திற்கு வந்துகீழே கிடக்கும் உடைந்த கண்ணாடியை அப்புறப்படுத்த முயற்சிக்கின்றாள்.)

சுந்தரி :—அலகா ! நீ இன்னமும் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய் ?

அலகா :—உடைந்த கண்ணாடியை அகற்றிக்கொண்டிருக்கிறேன் தேவி ! இதற்குமுன் என் பார்வையில் இது படவில்லை. அதனால்...

சுந்தரி :—இது இப்படியே இருக்கட்டும். நீ போகலாம். [அலகா சற்றே தயங்கியவளாய் நிற்கிறாள்.] போகலாமென்று கூறினேன் அல்லவா ? இச்சமயம் நான் எனது அறையில் முற்றிலும் தனிமையாக இருக்கவே விரும்புகிறேன்.

(அலகா அக்குரலுக்கு கட்டுப்பட்டவளாய் உடைந்த கண்ணாடியைக்கூட எடுக்காது வலதுபுறமாகச் சென்று விடுகிறாள்.)

நந்தன் :—(ஒருகணம் அவளையே ஆழ்ந்து நோக்கியபின்) முற்றிலும் தனிமையாக ..அதாவது நான்கூட இல்லாத தனிமை...அப்படித்தானே !

சுந்தரி :—நீங்களிருந்தும் இப்பொழுதும் நான் தனிமையில் இல்லையா ?

நந்தன் :—இப்பொழுதும் தனிமையில்......உண்மையில் என்னிலிருந்து நீ தனித்திருப்பதாக உணருகிறாயா?

சுந்தரி :—(நேருக்கு நேர் அவன் விழிகளை சந்தித்தவாறு) தாங்கள் அப்படி உணரவில்லையா ?

நந்தன் :—(பார்வையை வேறுபுறம் திருப்பியவனாய்) நானென்ன உணருகிறேன் என்பதை நீ எப்படிக் கூற முடியும் ?

சுந்தரி :—கூற முடியாதுதான், இல்லாவிடில் நான் எப்படித் தனிமையை உணர்ந்திருக்க முடியும் ?

(இடதுபுறமுள்ள தீபப் பதுமையிடம் வருகிறாள்.)

நந்தன் :—(திரும்பி) நீ கூற விரும்புவது......

சுந்தரி :—இல்லை......நான் எதுவுமே கூற விரும்பவில்லை.

(ஆசனத்தில் அமருகின்ருள். நந்தன் நின்ற இடத்தி லிருந்தே அவளைப் பார்க்கின்ருன். பின்னர் மெல்ல அவளை நெருங்குகிருன்.)

நந்தன் :—ஆனல் நான் சொல்ல விரும்புகிறேன். நான் இங்கிருந்து சென்றதிலிருந்து இதுவரை நடந்ததையெல்லாம் உன்னிடம் கூற நான் ஆசைப் படுகிறேன். எனக்கு நேர்ந்த அநுபவங்கள், நான் அநுபவித்த உணர்ச்சிகள்......இவைகளையெல்லாம் இப்பொழுது என் புறத்தோற்றத்தைக் காண்பதன் மூலம் நீ கற்பனைகூட செய்ய முடியாது.

சுந்தரி :—வெளித் தோற்றத்திற்கும், உள்ளத்தின் யதார்த்த நிலைக்குமுள்ள வேறுபாட்டை என்னல் பார்க்க முடிகின்றது.

நந்தன் :—இன்னமும் நீ பார்க்க முடியாதது எத்த னையோ இருக்கிறது. எனது உடலில் ஏற்பட்டிருக் கும் காயங்களிலிருந்து நான் ததாகதரிடமிருந்து நேராக இங்கு வரவில்லை என்பது உனக்குத் தெரிந் திருக்கலாம். இதனிடையே நான் வனத்திற்குச் சென்று ஒரு புலியுடன் போரிட்டேன். ஆனல் அதன் பின்னும் நான் நேராக இங்கு வந்துவிட வில்லை. சற்று நேரம், முற்றிலும் தனிமையை விரும்பினேன். மனித நிழல்கூட என்னுடன் இல்லாது தனித்திருக்க விரும்பினேன். ஆனல் எனது இந்த விருப்பம் நிறைவேறவில்லை. ஏன் தெரியுமா? ஒருவர் நிழல்போல் இடைவிடாமல் என்னுடனேயே இருந்தார். அந்த நிழலிலிருந்து நான் தப்பித்துக்கொண்டிருக்க முடியும் என்ருலும் இன்னும் எத்தனையோ நிழல்கள் என்னுடனிருக் கின்றனவே! அவற்றில் எனக்கு மிக மிக அண் மையிலிருந்த நிழல்.........நீ......நீதான். இதோ பார்......இன்றுவரை...உன்னிடம் கூருத, கூற முடியாத விஷயங்கள்...........உன்னிடம் கூற

வேண்டியது நிறைய இருக்கின்றன. அதனால்தான் நான் திரும்பி வந்தேன்.

சுந்தரி :—(அவனையே உற்று நோக்கியவளாய்) இல்லாவிடில்...... வந்திருக்கமாட்டீர்கள்...நான் அறிவேன்.

நந்தன் :—(வியாகூலத்துடன்) இல்லை. நீ அறியமாட்டாய். அறிந்திருப்பதாக நம்புகிறாய். அவ்வளவுதான். என்னைப்பற்றிய எந்த உண்மையை இன்று உன்னுடன் பகிர்ந்துகொள்ள நினைத்து வந்திருக்கிறேனோ, அது பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாது.

சுந்தரி :—நான் சற்றும் அறியாத...தங்களைப்பற்றிய அந்த உண்மை எதுவோ!

நந்தன் :—(மீன் வடிவத்திலமைந்த ஆசனத்தை நோக்கி வருகிறான்.) உன்னுடைய இந்த மனப்போக்கு எனக்குப் பிடிக்க வில்லை. (ஆசனத்தின் மேல் பகுதியைத் திறக்கின்றான்.) நீ அப்படி எதுவும் சொல்லிவிடக்கூடாது......என்றுமே என்னை உன்னிடமிருந்து பிரித்துவிடக்கூடியதாய்.. (மதுவை கிண்ணத்திலே நிரப்பிக்கொண்டு, ஆசனத்தை மூடி விட்டு நின்ற நிலையிலேயே) இதோ பார்......இப்பொழுது சொற்கள் என் வசத்தில் இல்லை. நான் ஏதோ சொல்ல விரும்புகிறேன்......எதையோ சொல்லு கிறேன்.

சுந்தரி :—(அவன் பக்கம் திரும்பி) சொற்களினால் வித்தியாசம் ஏற்பட்டுவிடுவதில்லை. தாங்கள் கூற நினைப்பதன் பொருள் எனக்குப் புரியாமலில்லை.

நந்தன் :—(கிண்ணத்தைக் கண் முன்னே உயர்த்தி) எந்தப்பொருளைப்பற்றிப் பேசுகிறாய் என்பது தெரியவில்லை. உனக்குப் புரியாமலில்லை என்கிறாயே...அது என்ன என்பதை நான் அறியலாமா?

சுந்தரி :—எதை மறைப்பதற்காக கிண்ணத்தில் மதுவை நிரப்பி இருக்கிறீர்களோ அது. (அவனை நோக்கி வந்து) ஆனால் இதனால் அதை மறைத்துவிட முடியாது.

நந்தன் :—(தீவிரமான சிந்தனையுடன்—கிண்ணத்தைத் தாழ்த்தி) நான் எதையோ மறைக்க முயல்வதாய் நீ நினைத்தால் நான் கூற விரும்புவது இதுதான்...

சுந்தரி :—கூறுங்களேன்? கூற விரும்புவதைக் கூற இயலவில்லையா?

(நந்தன் தோல்வியுற்றவனாய் கிண்ணத்தைக் கவிழ்க்கின்றான்.)

நந்தன் :—நீ கூறுவது சரிதான். நான் இதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். வந்து...

(கிண்ணத்தை மீன் வடிவ ஆசனத்தின்மீது வைத்துவிடுகிறான். சுந்தரி அவன் மேலே கூறப்போவதை எதிர் பார்ப்பவள்போல் அவனையே இமையாது நோக்கிய வண்ணம் நிற்கின்றாள்.)

இனியும் என்றால் என்னைப்பற்றிய உண்மையை உன்னிடமிருந்து மறைத்துவைக்க முடியாது. அதிலும், இதைப்பற்றி உனக்குத் தெரிந்திருக்கும் நிலையில் நான்...

சுந்தரி :—இப்பொழுதுதான் தெரிந்தது என்பதில்லை... என்றுமே தெரியும்.

(இப்பொழுது நந்தன் அவள் மேலே கூறப்போவதை எதிர் பார்ப்பவன்போல், அவளையே பார்த்தவண்ணம் நிற்கின்றான்.)

சாதாரண மக்களைப்போலவே தாங்கள்கூட சாதாரணமானவர் என்பதை நான் அறிவேன். அவர்களைப்போலவே எதுவும் எளிதில் உங்களிடம் பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பதும் நான் அறிந்ததுதான். வித்தியாசம் இவ்வளவுதான். சாதாரண மக்கள் என்றுவது பாதிக்கப்படுவார்கள். ஆனால், உங்களிடம் அடிக்கடி இவ்வித பாதிப்புகள், அது எதுவாக இருந்தாலும் ஏற்படுத்திவிட

முடியும். தங்களை அங்கு அனுப்பியபோது ஏதோ நேரப்போகிறது என்பதை உள்ளுணர்வு உணர்த்தினலும்......ஏதோவொரு நம்பிக்கையும் இருந்தது. (உணர்ச்சி மிகுதியினுல் செயலிழந்து ஒருகண நேர மௌனத்திற்குப் பின்) முந்திய பாதிப்பிலிருந்து இவ்வளவு விரைவில் விடுபட்டிருக்க மாட்டீர்கள் என்பதே அந்த நம்பிக்கை.

(நந்தன் அவளது சொற்களால் தாக்குண்டவனுய் அசைவற்றுப் போகிறுன். பின்னர் திரும்பி அவளை நோக்கி)

நந்தன் :— நீ அறிந்தது இவ்வளவுதானு? நீ உண்மையை அறிந்துகொண்டு விட்டாய் என்றல்லவா நினைத்தேன்.

(சுந்தரி திடுக்கிட்டவளாய் திரும்புகிறுள்.)

சுந்தரி :— ஆழமானதாக இருக்கலாம் அது. ஆனுல் ஆழம் காண முடியாதது அல்லவே! நான் அறிந்ததைவிட அதிகமாக அறிந்து கொள்ள அதில் ஏதுமில்லை.

(தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள இயலாதவனுய் நந்தன் அவளை நோக்கி வருகிறுன்.)

நந்தன் :— இருக்கிறது. நீ அறிந்திருப்பதைவிட இன்னும் சற்று அதிகம் இருக்கிறது. அதிலும் உனது அறிவாற்றலைப் பற்றி நீ பேசுவதால், இன்னமும் கொஞ்சம் அறிந்துகொள். அதுதான் நல்லது.

(சுந்தரி எதிர்த் திசையில் வெறித்துப்பார்த்த வண்ணம் நிற்கின்றுள்.)

இப்பொழுது நான் ஏன் இங்கு இருக்கிறேன்? நேற்று இங்கே ஏன் இருந்தேன்? இத்தனை ஆண்டுகளாக எதற்காக...ஏனிருந்தேன்?...எதன் பாதிப்பினுலும்...கவர்ச்சியினுலும் அல்ல. உள்ளத்தின் ஒரு உந்துதலால். நேற்றைக்கும், இன்றைக்கும்

இடையே வெளியே இருந்தேனே...அதுவும் யாரு டைய பாதிப்பினலோ அல்ல...என் உள்ளத்தின் இன்ெருரு விழைவு...தேவை.

(அவளைக் கடந்து சென்றவனுய்)

என்ருே எனக்குத் தெரியும்...என் வாழ்க்கை முழு வதையும் இங்கேயே என்னுல் கழித்துவிட முடியாது. (வலது புறமுள்ள தீபப்பதுமையை நோக்கித் திரும்பி) இங்கிருந்து முற்றிலும் என்னை வெட்டிக்கொண்டு, ஒதுங்கிவிடவும் முடியாது. எங்கே...எப்படி, எந்த லட்சியத்திற்கு வாழவேண்டும் என்ற கேள்விக்கு என்னுல் எனக்கே பதில் கூற முடிய வில்லை. எனக்குத் தெரியும்...இதற்கெல்லாம் செவி சாய்த்துக்கொண்டிருக்க நீ விரும்பமாட்டாய். ஏன் தெரியுமா? நீதான் என் உலகம். நான் உனது ஆகர்ஷணத்திற்குட்பட்டு உன்னையே மையமாகக் கொண்டு சுற்றிச் சுற்றி வரும் ஒரு கிரகம் என நீ நினைக்கின்ருய். ஆனுல் நான் என்னை உடைந்துவிட்ட ஒரு கோளமாக நினைக்கிறேன். இதற்கு எந்த வட்டமுமில்லை, மையப் புள்ளியு மில்லை.

(சுந்தரியிடமிருந்து விலகிய அவனது பார்வை எதிரே நிலைக்கின்றது.)

நான் நாற்சந்தி முனையில் நிற்கும் நிர்வாணமான ஒரு மனிதன். திசைகளெல்லாம் என்னைத் தன்னுள்ளே விழுங்கப் பார்க்கின்றன. என்னிடமோ என்னை மூடிக்கொள்ள எந்தவிதமான போர்வையு மில்லை. எந்த திசை நோக்கி நான் அடி எடுத்து வைத்தாலும், அந்த திசையே தனது உறுதியில் ஆட்டம் கொண்டிருப்பதாய் எனக்குத் தோன்றுவ தால், நான் பின் நகர்ந்துவிடுகிறேன்.

(குரலிலும், விழிகளிலும் சோர்வும், வியாகூலமும் வரவர அதிகரித்துக்கொண்டே போகிறது.)

அவரிடம் இருந்தபொழுது என் மனம் இங்கு வர ஏங்கித் தவித்தது. இப்பொழுதோ இங்கே...உன் எதிரே நிற்கின்றேன்; மனம் எங்கோ...எதற்காகவோ ஏங்குகின்றது. இங்கிருந்தாலும் அங்கிருந்தாலும், எல்லா இடத்திலும் நான் என்னை முழுமையற்றவனுய் உணருகின்றேன். நீயாஞலும்...அவராஞலும்...ஒருவராலும் எனது இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த ரூபத்திலோ அல்லது அந்த ரூபத்திலோ...எதனுடனும் இனி என்னை போலியாக இணைத்துக்கொண்டு வாழ முடியாது. ஏன் என்ருல்...நான்தான் இது... அதுவும் நான்தான்......இவ்விரண்டிலும் ஏதோ ஒன்றல்ல நான். நீங்கள் ஒவ்வொருவரும் தனித் தனியே நான் அதுதான் எனக் கருதும், அந்த உண்மை நானல்ல.

(மூச்சிறைக்க மௌனமாகின்ருன்.)

(சற்றே மௌனத்திற்குப் பின் சுந்தரி மெல்லத் திரும்பி அவனை நோக்குகின்ருள்.)

சுந்தரி :—இனி கூறிக்கொள்ளத் தங்களிடம் எதுவுமில்லையே.

(நந்தன் நிராசையுடன் அவளைப் பார்த்தவாறே தலையை ஆட்டுகின்ருன்.)

நந்தன் :—இல்லை......ஒன்றுமில்லை. உண்மையிலேயே ஒன்றுமில்லை.

சுந்தரி :—இன்னும் கொஞ்சம்...சற்றே அதிகமான உண்மையை, அர்த்தத்தை எனக்குக் கூற விரும்பினீர்களே...அது இதைவிட இன்னும் கொஞ்சம் சற்று அதிகமாக இருக்குமென நினைத்தேன். ஆஞல் இருந்தது உண்மையில் மிக...மிக...குறைவு.

நந்தன் :—(தனது உணர்ச்சி வேகத்தை அடக்கிக்கொண்டு) எத்தனை கணக்காக அந்தக் குறைவை எடை போட முடிகிறது உன்னால்!

சுந்தரி :—வேறு எது முடியாவிட்டாலும் உங்களது வார்த்தைகளின் அர்த்தத்தை என்னால் எடை போட முடியும். அந்த அர்த்தமும் இவ்வளவுதான்.

நந்தன் :—ஆம்.......ஆம்........சாதாரணமானதுதான். நான்......நானும் ஒன்றுமில்லை......என் மனப் போராட்டம்? அதுவும் ஒன்றுமில்லை......நான் வெறும்...

சுந்தரி :—தாங்கள் நம்ப மறுத்தாலும் உண்மை இது தான். அதாவது...

நந்தன் :—(தன் வசம் இழந்தவனாய்) ஓ...நான் நம்புகிறேன். நான் இங்கே இருக்கும்வரை, என்னுடைய நோக்கங்கள் தாம் இருந்தபடியேதான் இருக்கும். ஏன் என்றால் நானிங்கே இருக்கும் வரையில், உனது பார்வை அந்த நோக்கங்களை எந்த அளவில் பார்க்க விரும்புகிறதோ அந்த அளவில்தான் பிரதி பலிக்கும். அந்த பரிமாணமுள்ள ஒருவன், வாழ்க்கையில் ஏதோ ஒரு லட்சியத்தைத் தேட விரும்பினாலும்...எத்தனை தூரம் அவனால் செல்ல முடியும்? (கரத்தை உயர்த்தி கட்டை விரலால் சுட்டு விரலைத் தொட்டுக் காட்டி) இவ்வளவு...இவ்வளவு...இவ்வளவேதான்.

சுந்தரி :—(அடக்க முடியாத வெறுப்புடன்) அதற்கு மாறாக... அவ்வளவுகூட இல்லை.

நந்தன் :—நீ...சொல்வது?...(பொறுமை இழந்தவனாய் அவளை நோக்கிச் சென்று அவள் புஜத்தைப் பற்றுகின்றான். சுந்தரி அவன் பிடியை வெடுக்கென உதறிவிட்டு இடதுபுறம் நோக்கி வருகின்றாள்.)

சுந்தரி :—நீங்கள்...! இன்று வரை...உங்கள் வாழ்க்கையில் எத்தனை லட்சியங்களைத் தேடி இருக்கி

றீர்கள் ?....போங்கள்....இன்னுமொரு இலக்கைத் தேடுங்கள் ! எத்தனை எத்தனை வார்த்தைகளால் அந்த லட்சியங்களை மூடியிருக்கிறீர்கள் ?...... இன்னும் கொஞ்சம் வார்த்தைகளைத் தேடுங்கள் ! போங்கள். ஆனால், உம்முடைய அந்த நோக்கங்களெல்லாம் முடிவில் எங்கே நின்றுவிடுகின்றன ? உம்முடைய அந்தச் சொற்களெல்லாம் எங்கே போய்விடுன்றன ? இருந்தும்கூட நீங்கள் ஏன் அப்படியே இருக்கின்றீர்கள் ? (உடைந்து சிதறிவிட்ட தன் மனநிலையை சமாளிக்க முயன்றவளாய்) ஏன் ? ஏன், ஏன் ?

(நந்தன் சில கணம் மௌனமாய் அவளைப் பார்த்தவாறு இருக்கிறான். பின்னர் எதிரேயுள்ள வாசல் வழியே போய்விடுகிறான். திரும்பியும் பாராது நடந்து மறைகின்றான். அவன் செல்லும்வரை தன்னை சமாளித்துக் கொண்டிருந்த சுந்தரி, அவன் மறைந்ததுமே விம்மியவளாய் கரங்களிலே முகத்தைப் புதைத்துக் கொள்ளுகின்றாள்.)

(திரை)

3. குடைகள்

குடைகள்

(பெரியதொரு யந்திரத்தை தள்ளுவதுபோல், சேர்ந்து ஒலிக்கும் பல குரல்கள்)—

இன்றிலிருந்து நாளை, இன்றிலிருந்து நாளை, இன்றிலிருந்து நாளை.

(கிட்டத்தட்ட இருள் கவிழ்ந்திருக்கும் அரங்கத்தில் சிலர், ஒலிக்கும் குரலின் ஒவ்வொரு அதிர்வுக்கும் ஏற்ப சுழல்வது தென்படுகிறது.)

(ஒன்ருய் ஒலிக்கும் பல குரல்களின் பின்னணியில் தனியொரு ஆணின் குரல் :—)

இந்த உருவில் இன்றைய யுகத்தின் நெருக்கடி (எதிரொலிகள்—நெருக்கடி, நெருக்கடி, நெருக்கடி) நம் முன்னே யுள்ளது.

(சுழன்றுகொண்டிருப்பவர்கள் பம்பரம்போல் வேகத்துடன் சுழன்றுகொண்டே அரங்கத்தை விட்டு வெளியேறுகிருர்கள்.)

(அதேகுரல்—முரசம் கொட்டுவதுபோல்.)

நெருக்கடியின் அர்த்தம் மதிப்புக்களைப் பற்றிய பிரச்னை (எதிரொலி; பிரச்னை, பிரச்னை, பிரச்னை) பிரச்னைகளின் அர்த்தம் எண்ணங்களைப் பற்றியிருக்கும் கொடிய நோய். (எதிரொலி: கொடிய நோய், கொடிய நோய், கொடிய நோய்) கொடிய நோயின் அர்த்தம்...

மனிதத் தன்மையிலிருந்து விலகிவிட்ட மனித வாழ்வு. (எதிரொலி: மனித வாழ்வு, மனித வாழ்வு, மனித வாழ்வு) மனித வாழ்வின் அர்த்தம்......

(இடறி விழுந்த ஒரு மனிதன் அரங்கத்துள் தள்ளப்படுகிருன். பின்னர் தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு எழுந்து

நிற்கிறன். முழங்கால்களின் மீது கைகளை ஊன்றிக் கொண்டு இங்குமங்கும் எதையோ தேடுவதுபோல் பார்க் கிறன்.)

(வேகமாய் சொற்களை உதிர்க்கும் இன்னெரு குரல்.)

பார்லிமெண்ட், வட்டித் தொழில், காதி கிராம உத் யோக், விண்வெளிக் கலம், சாவி கொடுத்தால் ஓடும் குரங்கு, நிலவுக் கற்கள், கோதுமை, பிழைப்பு, காக்காய் வலிப்பு......

(முதற்குரல்—அழுத்தத்துடன்)

மக்களாட்சியின் தேர்தல்......

[ஒரு மூலையில் பற்பல வண்ணங்களில் குடைகள் (நாய்க் குடைகள்) ஒளியுடன் திகழ்கின்றன. குடைகள் யாவும் ஒரே மாதிரி 3 அடி உயரத்தில் உள்ளன. அந்த மனிதன் அவற்றை நெருங்கி, அவற்றைச் சுற்றிச் சுற்றி வருகிறன். பின்னர் அவற்றில் சற்றே பெரியதான ஒரு குடையை ஒருமுறை ஆசையுடன் தொடுகிறன்.

அவன் தொட்டவுடனேயே துப்பாக்கி வெடிக்கும் ஓசை கேட்கிறது.

ஒருகணம் அந்த மனிதன் தன் கரத்தை விலக்கிக் கொள்கிறன். பின்னர் குடையைப் பறிக்க முயல்கிறன்.

பல குண்டுகள் வெடிக்கும் ஓசை.

சில கணம் அம்மனிதன் அதைத் தீண்டாமலிருக்கிறன். பின்னர் இரண்டொரு முறை முயற்சி செய்து பார்க்கிறன்.

ஒவ்வொரு முறை அவன் அதைத் தீண்டும்போதும் குண்டுகள் வெடிக்கின்றன.

மனிதன் அதை விட்டுவிட்டு வேறு குடைகளைத் தொட்டுப் பார்க்கிறன். எந்த சத்தமும் கேட்பதில்லை.

சற்றே ஆறுதலடைந்தவனய் திருட்டுத்தனமாய் மீண்டும் அந்தப் பெரிய குடையைத் தொட்டுவிடுகிறன். மீண்டும் குண்டுகள் வெடிக்கின்றன.

நிராசையடைந்த அவன் எப்படியேனும் அந்தக் குடையைப் பறித்துவிட விரும்புகிறன்.

இடைவிடாமல் வெடிக்கும் குண்டுகள் அவன் முயற்சியைத் தோல்வியடையச் செய்துவிடுகின்றன.

சத்தத்திலுல் அவன் ஸ்தம்பித்து நின்றுவிடுகிருன். குண்டு களின் சத்தம் ஓய்ந்தபின்—சில நிமிடம் மௌனம்.

மெல்ல மெல்ல அந்த மனிதனின் கைகால்களில் அசைவு உண்டாகிறது. மெதுவாக, தாள லயத்துடன் அடி எடுத்து வைத்து மீண்டுமொருமுறை அந்தப் பெரிய குடையை நெருங்கி அதைப் பற்றிக்கொள்கிருன்.]

(முணுமுணுக்கும் வசவுகளின் ஒலி.)

அயோக்கியப் பயலே.

(அம் மனிதனின் பிடிக்குள் வந்துவிட்ட குடையை இனிப் பிடுங் குவதைவிட வேறு வழியில்லை. அவன் கரங்களின் லயத் துடன் கூடிய அசைவுகளுக்கேற்ப வசவுகளை முணுமுணுக் கும் ஒலி.)

அயோக்கியப் பயல் அயோக்கியப் பயல்
முட்டாள் பயல் முட்டாள் பயல்
பன்றிப் பயல் பன்றிப் பயல்.

(குடையை இறுகப் பற்றியிருக்கும் மனிதனின் நடுங்கும் கரம் அப்படியே அசைவற்று நின்றுவிடுகிறது. எந்தக் குரலும் கேட்பதில்லை. அந்த மனிதன் குடையைப் பறித்துவிட பெரும் முயற்சி செய்கிருன்.)

(தெளிவான குரல்களில் வசைமாரி பொழியப்படுகிறது.)

உன் பைஜாமாவிலே மரப்பல்லி
உன் முதுகிலே பாம்பு,
உன் தாடியிலே நெருப்பு...

(வசவுகளிலிருந்து தப்பும் முயற்சியில் அம் மனிதனின் கரங்கள் அசைவற்றுப் போய்விடுகின்றன. அவனது நிராசை முன்னைவிட பன்மடங்காகத் தெரிகிறது. நாற்புறமிருந்தும் அவன் மீது வசவுகள் சொல்லம்புகளாய் வீசப்படுகின்றன.)

ஏய்! போய்ப் பார்......உன் வீட்டு குதிரை லாயத் திலே எந்தச் சிறுத்தைப் புலி புல் மேய்ந்துகொண்டிருக் கிறதென்று பார்...போ...

உன் மனைவியின் உள் பாவாடையில் கருங்குரங்கு எச்சமிட்டு இருக்கிறது. நீ முதலில் அதைப் போய்... பார்த்து...

படே பாபுவிடம் அவருடைய மெழுகுவர்த்தியை எந்தக் கிழவியின் குளியலறையில் மறந்து வைத்துவிட்டார் என்று கேள்...

உன்னுடைய வேப்ப மரத்தில் இன்னொருவருடைய உருளைக்கிழங்கு முளைத்திருக்கிறதாம்...

அழுகிற உன் குழந்தைக்கு பக்கத்து வீட்டு நாய்க் குட்டி டாமி விளையாட்டு காட்டிக்கொண்டிருக்கிறது.

சின்ன பாபுவின் உடலிலே கறுப்பும் வெளுப்புமாய் புள்ளிகள் கிளம்பி இருக்கின்றன. தெரியுமா உனக்கு? முதலில் போய் அந்தப் புள்ளிகளைத் தடவிக்கொடுத்து மெழுகையும், கந்தகத்தையும் மாலிஷ் செய்...போ...

(மனிதன் நிராசையின் எல்லையை எட்டிவிட்ட ஆவேசத்தில் உரக்கக் கத்துகிறான். அதே ஆவேசத்துடன் கைகளை உதறுகிறான். பின்னர் வியப்புடன் பார்க்கிறான். குடை ஒடிந்து அவன் கைக்கு வந்துவிடுகிறது.)

(கடைசி வசவின் கடைசி வார்த்தை இசைத்தட்டில் ஊசி ஒரே இடத்தில் நின்று விட்டதுபோல் மீண்டும், மீண்டும் ஒலிக்கின்றது.)

மாலிஷ் செய்.....மாலிஷ் செய்.....மாலிஷ் செய்...... மாலிஷ் செய்...மாலிஷ் செய்...

[திருப்பித் திருப்பிச் சொல்லப்படும் வார்த்தைகளால் அலுப்புற்று மனிதன் தன் கரத்திலிருக்கும் குடையை கீழே எறிகின்றான்.]

குரல்கள் ஒலிப்பதில்லை.

குடையை எறிந்துவிட்டோமே என வருத்தப்படும் மனிதன் உட்கார்ந்து அக்குடையை மெல்ல விரல்களால் வருடுகிறான்.

நாலா பக்கங்களிலிருந்தும் வரும் காலடி ஓசைகள் வரவர அதிகரித்துக்கொண்டே போகின்றன.

மனிதன் அச்சத்துடன் குடையை எடுத்துக்கொண்டு எழுந்து நிற்கிறுன்.

காலடி ஒசைகள் மெல்ல மெல்லத் தேய்ந்து மறைந்துவிடுகின்றன.

மனிதன் பயத்துடன் நாற்புறமும் பார்க்கிறுன். பின் ஒரு பக்கம் ஒடுகிறுன்.

அங்கு பலபேர் சேர்ந்து சிரிக்கும் ஒலி வந்து மோதுகிறது.

அவன் இன்னெரு திசையை நோக்கி ஓட முயற்சிக்கிறுன்.

ஒவ்வொரு திசையிலும் அதே சிரிப்பொலி கேட்கிறது.

சிலகணம் அம்மனிதன் பம்பரம்போல் சுழன்று அரங்கத்தின் நடுவே வந்து நின்றுவிடுகிறுன்.

வெகு வேகமாய் ஒன்றன்பின் ஒன்ருய் கேட்கும் குரல்கள்.]

தனியொரு மனிதன். அவனது தனிப்போராட்டம்.

துண்டு பிரசுரங்கள், போஸ்டர்கள்—பத்திரிகைகளின் விளம்பரங்கள்.

மனிதனும் யந்திரமும்.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்.

இலக்கியப் போராட்டங்கள்.

பொருளாதார ஏற்றத்தாழ்வு.

மதக் கிளர்ச்சிகள்.

கூட்டங்கள்.

மாநாடுகள்.

ஊர்வலங்கள்.

வாக் அவுட்.

மறியல்.

கேரோ.

ஆனல் உண்மையான விஷயம்—மிகப் பெரிய விஷயம் மனிதனின் இச்சாசக்தி...அவனது முடிவு.

இவை யாவற்றையும் எதிர்க்கும் முடிவு.

அவற்றையெல்லாம் எதிர்க்க, இவற்றையெல்லாம் எதிர்க்கிறன்.

[தன் கையிலிருக்கும் குடை கையைவிட்டுப் பறந்து போய்விட விரும்புவதுபோல் மனிதனுக்குத் தோன்றுகிறது. அதைப் பிடித்து வைத்துக்கொள்ளப் போராடுகிறன்.]

[ஒரு குழந்தையின் மகிழ்ச்சிகரமான சிரிப்பு—தன் கையை விடுவித்துக்கொண்டு ஓட விரும்புவது போன்ற சிரிப்பு. சிரிப்பில் குறும்புத்தனத்தின் தொனி அதிகரித்துக் கொண்டே போகிறது.]

[மனிதன் குடையைப் பிடித்து வைத்துக்கொள்ள முயன்று முடிவில் அதைத் தன் வசப்படுத்திக் கொள்கிறன். சிரிப்பு அழுகையாக மாறிவிடும் போலிருக்கிறது.]

[மனிதன் குடையை அடிக்கிறன்.]

[குழந்தை அழுகின்றது.]

[மனிதன் குடையைத் தடவிக்கொடுத்து சமாதானப்படுத்துகிறன்.]

[குழந்தையின் அழுகை கேவலாகமாறி அடங்கிவிடுகின்றது. மனிதன் குடையைத் தன்னேடு அணைத்துக்கொண்டவன் திடீரென, அது கடித்துவிட்டதுபோல் சிணுங்குகிறன்.]

[உடுக்கையின் ஒலி]

[மனிதன் குடையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயல்கின்றன். ஆனல் வெற்றி பெறுவதில்லை. அவனது செயல்கள் சர்க்கஸில் வரும் கோமாளியின் செயல்கள் போலிருக்கின்றன. முடிவில் எப்படியோ குடையைத் தன்னிடமிருந்து தூர எறிந்துவிடுகிறன். அதைத் தன் காலால் நசுக்குகிறன்.]

[சிங்கம் உறுமுகின்ற ஓசை.]

[மனிதன் பயந்துபோய் குடையைப் பார்க்கிறன். அதன்மீது பாய்கிறன். இரண்டு பேருக்குமிடையே குஸ்தி யுத்தம் நடக்கிறது.]

[உறுமும் ஓசை மேலும் மேலும் உரத்துக் கேட்கிறது.]

[மனிதன் குஸ்தியில் தோற்றுப் போனவனய் தரையில் வீழ்ந்து விடுகிறன். குடை இப்பொழுது அவன் மார்பின்மீது ஏறி அமர்ந்துகொள்கிறது.]

[உறுமலின் ஒலி குறையக் குறைய பின்னணியில் போட்டி போட்டுக்கொண்டு வரும் குரல்கள்.]

நினைப்பு—விருப்பம்.

விருப்பம்—நினைப்பு.

நினைப்பிலிருந்து வேறுபட்டது விருப்பம்.

விருப்பத்திலிருந்து வேறுபட்டது நினைப்பு.

இருப்பினும் உள் மனத்தின் அகவயப்பட்ட எதிரொலிகளின்படி.

இதன் பொருள்—உள் மனத்தின் அகவயப்பட்ட எதிர் விளைவுகளின்படி.

அதாவது உள் மனத்தின் அகவயப்பட்ட எதிர் விளைவுகளின்படி.

மனிதன் ஆத்ம...ஆத்ம...ஆத்ம
ஆத்ம சந்தோஷம்.
இல்லை.
ஆத்ம சங்கோஜம்.
இல்லை.
ஏதோவொரு ஆத்ம...
மாபெரும் சக்திகளால் சூழப்பட்ட
பின்னாலிருக்கும் சக்திகள்.
முன்னாலிருக்கும் சக்திகள்.
இடதுபுறமிருக்கும் சக்திகள்.
வலதுபுறமிருக்கும் சக்திகள்.
கீழேயிருக்கும் சக்திகள்.
மேலேயிருக்கும் சக்திகள்
சக்திகள்—சக்திகள்.
சக்திகள்—சக்திகள்.

[பல ஆண்களும் பெண்களுமாய் அரங்கிற்குள் வந்து குடைகள் பிடுங்க ஆரம்பிக்கிறார்கள். கை பட்டதுமே யாவும் முறிந்து விடுகின்றன. மனிதன் வெறிக்க வெறிக்கப் பார்த்தவாறு நிற்கிறான்.]

[நடன இசை மெட்டு—]

[யாவரும் குடையை எடுத்துக்கொண்டு ஆடுகின்றனர்.] மனிதன் தன் குடையைப் பிடித்துக்கொண்டு எழுந்து நிற்கிறான். மற்றவர்களின் குடையைப் பார்த்து அவனுக்குப் பொறாமையாக இருக்கிறது. அவனும் மற்றவர்களின் பாதங்களின் தாளத்திற்கேற்ப நடனமாட முயற்சிக்கிறான். ஆனால் அவன் கால்கள் லயத்திற்கேற்ப ஆடுவதில்லை.]

[ஆடல் பாடலை மீறிக்கொண்டு விமானத் தாக்குதலின் அறிகுறியாக சைரனின் ஒலி.]

[யாவரும் அவரவர் குடைகளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு இங்குமங்கும் ஒளிந்துகொண்டு விடுகிறார்கள். மனிதன் ஒளிந்துகொள்ள இடம் தேடுகிறான். ஆனால் சரியான இடம் ஏதும் கிடைப்பதில்லை.]

[பலத்த ஓசை.]

[தர்மோபதேசத்தின் குரல்.]

பற்றின்மை...மிக முக்கியமானது பற்றின்மை. மன அமைதியின் மறுபெயர் இதுதான். மனத்தின்கண் அமைதியிருக்குமானால் வெளியே சிதறிக்கிடப்பன யாவும்...ஒன்றாகக் குவிந்து, அதாவது...துண்டுகள் யாவையும் ஒன்றாகி...ஒன்றுபட்டு...

[ரேடியோவில் அனௌன்சரின் குரல்.]

ஒரு மிக முக்கியத்துவம்வாய்ந்த தேசிய ஒலிபரப்பு... இந்த ஒலிபரப்பில் மிக முக்கியமான தேசியப் பிரச்னைகள், தேசிய கண்ணோட்டத்துடன் நாட்டின் முன்னே வைக்கப்படும். நாட்டை தேசிய நெருக்கடியிலிருந்து மீட்பதற்காக எத்தகையதொரு தேசிய சங்கற்பம் தேவையோ...மன்னிக்கவும்...வேறு எதுவும் கூறுவதற்கு அவகாசமில்லை...ஒலிபரப்பு ஆரம்பமாகி

விட்டது. ஆரம்பமாகிவிட்டது தேசிய நிகழ்ச்சியின் ஒலிபரப்பு...

[யாவரும் கூர்ந்து கேட்கும் பாவனையில் நிற்கிருர்கள். இந்த ஒரு மனிதனுக்கு மட்டும் அதைக் கேட்க வசதியான வாய்ப்புக் கிட்டுவதில்லை.]

அனௌன்சர் :—நீங்கள் தேசிய நிகழ்ச்சியின் ஒலிபரப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்...தயவு செய்து இன்னும் சில நிமிடங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருங்கள்.

[மனிதன் தன் குடையை காதோடு வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிடுகிருன்.]

அனௌன்சர் :—நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது தேசிய நிகழ்ச்சியின் ஒலிபரப்பு. இன்னும் சற்று நேரம் எதிர்பார்த்துக் கொண்டிருங்கள் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

[அந்த 'மனிதனைத் தவிர மற்றவர்கள் அமைதியை இழக்கின்றனர்.]

அனௌன்சர் :—தேசிய ஒலிபரப்பு தற்பொழுது ஆரம்பமாகிறது. உங்களிடம் மீண்டுமொருமுறை .. இல்லை...இல்லை...கேட்டுக் கொள்ளப்படவில்லை...இதோ தேசிய நிகழ்ச்சி நடக்கிறது...தேசிய நிகழ்ச்சி...

[தவருன வேகத்தில் இயங்கும் டேப் ரிகார்டரின் சத்தம்.]

[ஏதோ மாபெரும் விஷயமெல்லாம் தங்களுக்குப் புரிந்துவிட்டது போல் மக்கள் தலையாட்டுகின்றனர். அந்த ஒரு மனிதன் மட்டும் திகைத்துப்போய், ஒவ்வொருவரையும் பார்க்கிருன்.]

[டேப் ரிக்கார்டர் சரியான முறையில் இயங்கத் துவங்குகிறது.]

நாம் இந்த விஷயங்களை நம்முடைய கவனத்தில், நம் புத்தியில், நம் மூளையில் வைத்துக்கொண்டு நடக்க வேண்டும். நாம் உயிரோடிருப்பது சில கொள்கைகளுக்காக. சில சித்தாந்தங்களின் காரணத்திற்காகத்

தான். ஏன் என்றால், யுத்தமென்றாலும்—அமைதியென்றாலும் அறிவும் அச்சமும் வற்புறுத்துவது எதுவென்றால்—நாம்...

[மக்கள் முணுமுணுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அந்த மனிதன் கவனமாகக் கேட்க முயல்கிறான். ஆனால் மக்களின் முணுமுணுப்பில் அவன் காதில் எதுவுமே விழுவதில்லை.]

[தவறாக இயங்கும் டேப் ரிகார்டர் துரித கதியில் கர்-புர்ரென்ற ஓசையை எழுப்புகிறது]

[மக்கள் மறுபடியும் கவனமாகக் கேட்கின்றனர். ஆனால் அந்த மனிதனுக்கு எதுவுமே புரிவதில்லை. டேப் ரிக்கார்டர் பழையபடி சரியாக இடங்கத் துவங்குகிறது.]

பற்பல பிரச்னைகள் முன்னே வருகின்றன. அவற்றில் ஒவ்வொரு பிரச்னையும் வேறு பல பிரச்னைகளுக்கு நம்மை இட்டுச் செல்லுகின்றது. பிரச்னைகள் ஒவ்வொன்றும் முக்கியமானவை. ஆனால் காலத்தின் தேவையானது இப்பிரச்னைகள் எல்லாவற்றையும் விட முக்கியமானது. அந்தத் தேவை என்ன, அது எதைப் பொறுத்தது என்பது பற்றித்தான் நாம் இப்பொழுது முக்கியமாக கவனம் செலுத்தவேண்டும். ஏன் என்றால் நமது உண்மையான தேவை எதுவென்று நாம் புரிந்து கொண்டுவிட்டால், பல்வேறு பிரச்னைகளுக்கு விடை தானாகவே கிடைத்துவிடும். இதனால் இப்பொழுது நாம் கவனிக்க வேண்டியது இன்றையத் தேவை. இன்றையது மட்டுமல்ல...அடுத்து வரப்போகும் நாளையின் தேவை. அதன்பின் வரப்போகும் நாட்களின் தேவை...

[மக்களின் கவனம் மீண்டும் கலைந்துவிடுகிறது. அந்த மனிதன் உரக்கக் கூச்சலிட்டு தன் எதிர்ப்பைத் தெரிவிக்கிறான். மக்கள் அவனைப் பரிகசித்து சிரிக்கின்றனர். ஆவேசம் கொண்ட மனிதன் அவர்களிலொருவனை குடையால் அடிக்கிறான். அரங்கம் முழுவதும் அடிதடி ஆரம்பமாகிவிடுகின்றது. கண் தலை தெரியாமல் மக்கள் குடைகளை வீசுகிறார்கள்.]

[சண்டையின் லயத்திற்கு அப்பாற்பட்டு மிக மெதுவான தாழ்ந்த லயத்தில் பஜனை]

ஹரே ராமா ஹரே ராமா
ராமா ராமா ஹரே ஹரே
ஹரே கிருஷ்ணு ஹரே கிருஷ்ணு,
கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே...

[சண்டையின் லயம் மேலும் மேலும் குறைந்துகொண்டே வருகிறது.]

[பாட்டின் லயம் அதிகரித்துக்கொண்டை போகிறது.]

[சண்டை திரைப் படம்போல் ஸ்லோ மோஷனில் நடக்கிறது.]

[ஒரு பைத்தியத்தின் உளறல்.]

அடித்தான்...அடித்தான்...அடித்தான்.
வந்து வந்து அடித்தான்.
இன்று அடித்தான், நேற்று அடித்தான்.
இங்கே அடித்தான், அங்கே அடித்தான்.
இங்கே தோற்ருன், அங்கே தோற்ருன்.
தோற்ருன் அடித்தான், அடித்தான் தோற்ருன்.
அடித்தான் தோற்ருன், தோற்ருன் அடித்தான்.

[சண்டை செய்த மக்கள் அவரவர் இடத்திலே உறைந்து போகிருர்கள்.]

[பைத்தியத்தின் உளறல் மேலும் தீவிரமடைகின்றது.]

நேற்று அடித்தான், இன்று அடித்தான்.
நேற்று தோற்ருன், இன்று தோற்ருன்.
நேற்று இன்று தோற்ருன் அடித்தான்.
பெயரையும் அடித்தான், வேலையையும் அடித்தான்.
பெயரையும் வேலையையும் தோற்ருன் அடித்தான்.

[உறைந்து போய்விட்டிருந்த மனிதர்களை அந்த மனிதன் சுற்றிச் சுற்றி வருகிருன்.]

[சவுக்கடி கொடுக்கும் ஓசை. பைத்தியம் கத்துகிருன்.]

அடித்தான் — அடித்தான் — அடித்தான் — அடித் தான்.

அடித்தான் — அடித்தான் — அடித்தான் — அடித் தான்.

அடிக்கவில்லை — அடிக்கவில்லை — அடிக்கவில்லை — அடிக்கவில்லை.

அடிக்கவில்லை — அடிக்கவில்லை — அடிக்கவில்லை — அடிக்கவில்லை.

[தான் சவுக்கடி படுவதுபோல் அந்த மனிதன் அவஸ்தைப்படுகிறான். ஆனால் குடையைத் தன் பிடியிலிருந்து நழுவ விடுவதில்லை.]

[கூச்சல் போடும் ஊர்வலத்தினரின் குரல்கள்.]

இன்கலாப்
ஜிந்தாபாத்
எங்களது கோரிக்கைகளை
நிறைவேற்று.

[எல்லோருடைய ஒரே குரல்.]

ரொட்டி, துணி, வீடு...

[அடிபட்ட மனிதனுக்கு மூச்சிறைக்கின்றது.]
[ஊர்வலத்தினரின் குரல்கள்.]

தங்கம், வெள்ளி.
ஐயோ, ஐயோ.
ஆண்டான் - அடிமை
ஐயோ - ஐயோ.
கிழக்கும் - மேற்கும்
வடக்கும் - தெற்கும்
ஐயோ - ஐயோ...

[அந்த மனிதன் உறைந்து போயிருக்கும் ஒவ்வொருவருடைய காலையும் கையையும் அசைத்து அசைத்து சலனத்தை ஏற்படுத்த முயல்கின்றான். ஆனால் வெற்றி பெறுவதில்லை. அவன் அசைத்தால் அவை அதன்படி அசைகின்றன. அவ்வளவுதான். ஆனால் அவன் எவ்வளவு முயற்சித்தும், குடையை அவர்களின் பிடியிலிருந்து விடுவிக்க முடிவதில்லை.]

[ஊர்வலத்தினரின் குரல்கள்.]

ஹாய்...ஹாய்...ஹாய்,
ஹாய்...ஹாய்...ஹாய்...

[அந்த மனிதன் உறைந்து கிடக்கும் மனிதர்களையே சுற்றிச் சுற்றி வருகிறான்.]

[நாற்புறங்களிலிருந்தும் போலீசாரின் விசில் சத்தம்.]

[உறைந்து கிடக்கும் உடல்களில் திடீரென அசைவு உண்டாகின்றது. அவர்கள் ஒரு குறுகிய வட்டமாக அந்த மனிதனைச் சுற்றி சூழ்ந்துகொள்கிறார்கள். அவர்களுக்கு நடுவில் மனிதன் தன்னை கேரோ செய்யப்பட்டவனாய் உணர்கின்றான்.]

[மைக்கில் குரல் :—]

ஒன்—டு—த்ரி—டெஸ்டிங்...டெஸ்டிங்...டெஸ்டிங்.

[அந்த மனிதன் அந்த சூழலிலிருந்து எத்தனைக்கெத்தனை வெளியேற முயற்சிக்கிறானோ அத்தனைக்கத்தனை தடுக்கப் படுகிறான்.]

[மைக்கில் குரல் :—]

எங்கள் குரல்...டெஸ்டிங்...டெஸ்டிங்...இருளில் ஒரு கூச்சல்...இது ஒரு கூச்சல்...டெஸ்டிங்...டெஸ்டிங்... டெஸ்டிங்......இருளின் நெஞ்சத்தைப் பிளந்து......... டெஸ்டிங்...டெஸ்டிங்...டெஸ்டிங்......

புதியதொரு ஒளியைக் கொணர முடியும். இன்றைய தினத்திற்குப் பின்னர்கூட இத்தகையதொரு கூச்சல் எழுந்தபோதெல்லாம், டெஸ்டிங்...டெஸ்டிங்...டெஸ்டிங் ...இருளின் வலிமையை இது...டெஸ்டிங்...டெஸ்டிங்...

டெஸ்டிங்...இது தகர்த்தெறிந்து வந்திருக்கிறது...டெஸ் டிங்...டெஸ்டிங்...டெஸ்டிங்......இதனால் அந்த பயங்கர மான சக்திகள் என்றுமே இக்குரலை...டெஸ்டிங்...டெஸ் டிங்...டெஸ்டிங்.. இக் கூக்குரலை...டெஸ்டிங்...அடக்கி விடுவதிலேயே முனைப்பாக இருக்கின்றன. ஆனால் இன்று நாம் அந்த சக்திகளை...டெஸ்டிங்...டெஸ்டிங்... டெஸ்டிங்...எச்சரிக்க விரும்புகிறோம்......இன்று எங்க ளுடைய இந்தக் குரல்...எங்களுடைய இந்தக் கூச்சல்... ஒலிக்கும்போது.....டெஸ்டிங்.... டெஸ்டிங்.....மாபெரும் பூகம்பத்தையே தோற்றுவிக்காமல்...டெஸ்டிங்...டெஸ் டிங்.....ஒரு பிரளயத்தையே தோற்றுவிக்காமல்.....ஒன், டூ...த்ரீ...டெஸ்டிங்...டெஸ்டிங்.

[வட்டம் மேலும் மேலும் இறுகி, ஒரு புதர்போலாகிவிடுகிறது. ஒவ்வொருவரும் அதிலிருந்து விடுபடத் தவிக்கின்றனர். தன்னுடைய சுமையைத் தாங்காது வட்டம் தானாகவே சரிந்துவிடவே, ஒவ்வொருவராக ஊர்ந்துகொண்டே அதி லிருந்து வெளியே வருகின்றனர்.]

[பள்ளிக்கூடத்து மணி அடிக்கும் ஓசை. கூடவே ஆஜர் பட்டியலில் பெயர் குறிக்கப்படுகிறது.]

[ஊர்ந்து வந்தவர்கள் மணி ஓசை கேட்டதும் ஒரே வரிசையில் நிற்கின்றனர். ஒவ்வொருவராக ஆஜர் பட்டியலின் பெய ருக்கு பதில் கொடுக்கின்றனர். அந்த மனிதன் மட்டும் இன்னும் இங்குமங்கும் பார்த்தவண்ணம் முன்போலவே ஊர்ந்துகொண்டிருக்கிறான். ஆஜர் எடுத்து முடித்ததும் மீண்டும் பள்ளிக்கூட மணி அடிக்கிறது.]

[யாவரும் தங்கள் குடைகளை இங்குமங்கும் வீசிவிட்டு அரங் கத்திலிருந்து வெளியேறிவிடுகின்றனர். அந்த மனிதன் மட்டும் திகைப்புற்றவனாய் சுற்றுமுற்றும் பார்க்கிறான்.]

[மனிதன் பதட்டத்துடன்]

என் பெயர்?

[மீண்டும் உரக்க]

என் பெயர்?

[வெவ்வேறு திசைகளிலிருந்து குரல்கள்]

இவனுடைய பெயர்?
இவனுடைய பெயர்?
இவனுடைய பெயர்?
இவனுடைய பெயர்?
இவனுடைய பெயர்?

[சுற்றுமுற்றும் சிதறிக் கிடக்கும் குடைகளைப் பார்த்து அந்த மனிதனின் விழிகள் மலர்கின்றன. அவை யாவற்றையும் தன் கரங்களில் திரட்டி எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறன்.]

[மனிதன் ஒவ்வொரு குடையாக எடுத்து]

இதன் பெயர்? இதன் பெயர்? இதன் பெயர்? இதன் பெயர்?

[துரிதமாக நடைபோடும் ஒரு பொம்மலாட்ட பொம்மையின் குரல்.]

இத்துடன் எமது இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. இந்த நிகழ்ச்சியில் விசிலடிக்கவும், கோஷங்கள் எழுப்பவும், சொற்பொழிவாற்றவும் யார் யார் பங்கேற்றனரோ அவர்களுக்கெல்லாம் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் யாருடைய இந்தத் தோட்டத்தில் இத்தகைய நாய்க் குடைகள், வண்ண வண்ணமாக முளைத்தெழுகின்றனவோ அந்தத் தோட்டத்தின் சொந்தக்காரனுக்கு நான் மற்றவர்களைவிட அதிகமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் எனில் இந்தக் கண்கவர் குடைகள் இல்லாவிடில் இந்த அபிநயம் நிறைவு பெற்றிருக்க முடியாது. இத் தோட்டத்தின் சொந்தக்காரரின் இப் பெருந்தன்மை இனியும் இருக்கும்; குடைகளின் இந்த விளையாட்டு இதுபோல நடக்கும் என்றே நம்புகிறேன்.

[மனிதனின் கரங்களுக்குள் எல்லா குடைகளும் அடங்குவதில்லை. அவற்றை எப்படியோ திரட்டி வைத்துக்கொள்ள அவன் பெரிதும் முயற்சி செய்யவேண்டியிருக்கிறது.]

[பரத வாக்கியம்]

மொழியில்லை—சொற்கள் இல்லை...பாவங்கள் இல்லை.
ஒன்றுமேயில்லை.
நான் ஏன் இருக்கிறேன்? நான் என்ன?
என்ற கேள்விகள் எழுகின்றன அடிக்கடி.
எதுவரை? எதுவரை? எதுவரை—இப்படியே?
ஏன் கூடாது? வேறு எந்தவிதமாகவும் ஏன் கூடாது?
உருவமற்று—பெயரற்று...
எப்படி சகிப்பேன்? எதுவரை சகிப்பேன்?
இந்த அர்த்தமற்ற தன்மையை.
வாழ்க்கையை ஏமாற்றி...வாழ்க்கையால் ஏமாற்றப் பட்டுவிட்டேன்.
எப்படி வாழ்வேன்? எதுவரை வாழ்வேன்?
தான்தோன்றியாக முளைத்த நாயுருவி போலவா?
இன்றுவரை அறிந்தவர் என்னை யாருமிலர்.
உருண்டுவரும் மண்ணுங்கட்டிபோல்...
கீழே...கீழே...மேலும் கீழ்நோக்கி...
நான் யார்? நான் ஏனிருக்கிறேன்?
மொழியில்லை...
சொற்களில்லை.
பாவமில்லை...
ஒன்றுமேயில்லை......

[மனிதன் குடைகளை சுமந்துகொண்டு நிற்கிறான். கடைசி வரிகள் சொல்லப்படும்போது குடைகள் அவன் கரங்களிலிருந்து நழுவி ஒவ்வொன்றாகக் கீழே விழுகின்றன.]

(திரை)

இந்தத் தொகுப்பில்

மோகன் ராகேஷ் எழுதிய மூன்று முழு நீள நாடகங்களில் இரண்டையும், அவருடைய சோதனை பூர்வமான ஓரங்க நாடகங்களில் ஒன்றையும் இந்தத் தொகுப்பில் சேர்த்திருக்கிறோம்.

அரையும் குறையும் (ஆதே அதுரே) என்ற நாடகம் இன்றைய வாழ்வில் நம் நாட்டில் மத்தியதர வகுப்பைச் சேர்ந்த ஒரு குடும்பத்தின் பிரச்னைகளை கருப்பொருளாகக் கொண்டது. கணவன்—மனைவி உறவில் ஏற்படும் சிக்கல்கள் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களை பாதிப்பதும், சம்பந்தப் பட்ட எல்லோரும் தங்களுடைய நிலையிலிருந்து தப்ப முடியாத அவல நிலையும் இந்த நாடகத்தில் சித்திரிக்கப்படுகின்றன. ஹிந்தியில் எழுதப்பட்ட இந்த நாடகத்தின் தமிழாக்கத்தைப் படிக்கும்போது, நம் நாட்டில் எந்தப் பகுதியிலும் நடைபெறும் குடும்ப சம்பவங்களைப் பற்றியே ராகேஷ் பேசுகிறார் என்பதை அறியலாம்.

ராகேஷின் மற்ற இரண்டு முழுநீள நாடகங்களில் 'ஆஷாத் கா ஏக் தின்' (ஆவணியில் ஒருநாள்) என்பதுதான் அவருடைய முதல் முயற்சி. 1958ஆம் ஆண்டின் மிகச் சிறந்த ஹிந்தி நாடகம் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த நாடகத்திற்கு சாகித்ய அகாதெமி பரிசு வழங்கப்பட்டது. கவிஞன் காளிதாசன் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட இந்த நாடகம் ஹிந்தி நாடக இலக்கியத்தில் ஒரு பெரும் திருப்பத்தை உண்டாக்கிற்று. நமது நாட்டின் தொன்மை மிக்க பண்பாட்டைச் சித்திரிக்கும் இந்த நாடகத்தில் கலை, காதல், படைப்புத்திறன், சூழ்நிலை போன்ற அம்சங்களுக்கிடையே தோன்றும் முரண்பாடுகள், இன்றைய வாழ்வின் அனுபவத்தில் காணப்படுபவைகூட, இழையோடுகின்றன.

இரண்டாவது நாடகம் 'அலைகளிலே அன்னம்' (லெஹ்ரோன் கா ராஜ்ஹம்ஸ்). அஸ்வகோஷ் எழுதிய சௌந்தரானந்த் என்ற சம்ஸ்கிருத நூலைப் படித்ததன் விளைவாக, தம் உள்ளத்தில் தோன்றிய ஒரு உருவகத்தை ராகேஷ் இந்த நாடகமாக எழுதினார். ஆஷாத் கா ஏக் தின் எழுதுவதற்கு முன்பே இந்த நாடகத்தை எழுத ஆரம்பித்தார் என்றாலும் பல ஆண்டுகளாக இதற்கு முழு உருவம் கொடுக்கவில்லை. 1963ல் தான் இதை எழுதி முடித்தார். பின்னர் பலமுறை இந்த நாடகத்தின் காட்சிகளை அவர் திருத்தி எழுதினார். நமது பண்பாட்டின் பழம்பெரும் அம்சங்கள் சிலவற்றை இதிலும் ராகேஷ் விளக்குகிறார். எனினும் மனிதனின் நிலையற்ற தன்மையை இன்று நாம் உணரும் வகையிலும் இந்த நாடகத்தில் ராகேஷ் கையாண்டிருக்கிறார். கௌதம புத்தரின் துறவினால் அவருடைய நெருங்கிய உறவினர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டார்கள் என்பதைக் கருப்பொருளாகக் கொண்ட இந்த நாடகத்தில், கணவன், மனைவி என்ற இரண்டு முக்கிய பாத்திரங்களின் முரண்பாடான மனப்போக்கை ராகேஷ் அற்புதமாக எடுத்துக் காட்டுகிறார். மண்ணுலக வாழ்க்கையின் இன்பத்திற்கும், ஆத்ம விசாரணையின் நிம்மதிக்கும் இடையே சிக்கித் தவிக்கும் மனிதன் இவ்விரண்டு வழிகளில் ஒன்றை மட்டும் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் நாடக ரீதியில் ஆராயப்படுகிறது. நாடக உருவக உத்தி இதில் மிகவும் நன்றாகக் கையாளப்பட்டுள்ளது. கருப்பொருளின் தன்மையிலும், பாத்திரங்களின் வியாபகத்திலும் உரையாடல்களின் கம்பீரத்திலும் சிறந்து விளங்கும் இந்த நாடகம் மனிதனின் உள்ளத்தில் நடைபெறும் போராட்டம் எந்தக் கால கட்டத்திற்கும் பொருந்தும் என்பதை நிரூபிக்கிறது. ஆகவே, நமது பண்பாட்டைச் சித்திரிக்கும் 'ஆவணியில் ஒருநாள்' 'அலைகளிலே அன்னம்' என்ற இரண்டில் இதை இத் தொகுப்பில் சேர்த்திருக்கிறோம்.

'அரையும் குறையும்' என்ற நாடகத்தின் ஹிந்தி மூலம் அனைத்திந்திய மொழிகளிலும் சிறந்த நாடகம் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு 10,000 ரூபாய் பரிசு பெற்றிருக்கிறது. நம்முடைய பண்பாட்டின் தொன்மையையும், பெருமையை

யும் விளக்கும் புராணங்களையும் வழிவழிக் கதைகளையும் மற்ற இரண்டு நாடகங்களுக்கும் உபயோகித்த ராகேஷ், ‘அரையும் குறையும்’ என்ற நாடகத்தில் இன்றைய வாழ்வைப் பொருளாக எடுத்துக்கொண்டது பற்றி இவ்வாறு கூறுகிறார். ‘இன்றைய வாழ்வின் உண்மைகளை நாடகத்தில் நேரடியாக உணரமுடியும். பழங் கதைகள் நாடகம் பார்ப்போரின் கவனத்தைக் கலைத்துவிடும்’ என்று எனக்குத் தோன்றிற்று. மற்றொரு காரணம்: ராகேஷ் போன்ற நாடக ஆசிரியர்கள் இன்றைய வாழ்வை நாடகத்தில் எடுத்துக் காட்ட இயலாதவர்கள்; ஆகவே பழைய கதைகளை நாடுகிறார்கள் என்று சில விமர்சகர்கள் குறிப்பிட்டதை ஒரு அறைகூவலாக எடுத்துக்கொண்டது.

குடைகள் என்ற சிறு நாடகம் குறியீட்டு உத்தியைப் பயன்படுத்தி ராகேஷ் எழுதிய சோதனை நாடகங்களில் ஒன்று. நாடக இலக்கியத்தில் அவர் மேற்கொண்ட பரிசோதனைகளைப் பற்றி மேலும் புரிந்துகொள்வதற்கு இந்த சிறு நாடகம் உதவும்.

இந்த மொழிபெயர்ப்புத் தொகுப்பு, தமிழில் நாடகங்கள் எழுதுபவர்களுக்கும் நாடக இலக்கியங்களைப் படிக்கும் ரசிகர்களுக்கும் பயன்படும் என்று நம்புகிறோம்.

பதிப்பாளர்